T-UN-259

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ஆண்டாள் மாலை.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்க வெளியீடு-11

சங்கக் காரியாலயம். } 42-ஏ-வெங்கடரங்கம் பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி.

27—7—41

31146

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ஆண்டாள் மாலை.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்க வெளியீடு-11

இது

விஷு வருஷம் திருவாடித் திருப்பூரத் திருவிழாவில்

"கோதை பிறந்தவூர் கோவிந்தன் வாழுமூர்
சோதி மணிமாடந் தோன்றுமூர்—நீதியார்
நல்லபத்தர் வாழுமூர் நான்மறைகள் ஓதுமூர்
வில்லிபுத்தூர் வேதக்கோ னூர்."

என்று போற்றப் பெறும் ஸ்ரீவில்லிபுத்தூரில்
ஸ்ரீ ஆண்டாள் திருவடிவாரத்தில்
இடப்பெற்ற காணிக்கை.

பதிப்பாசிரியன் :

பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி

ரெ. திருமலை அய்யங்கார்.

27—7—1941.

KABEER PRINTING WORKS
195, HIGH ROAD, TRIPLICANE

ஸ்ரீ:

உள்ளுறை.

			பக்கம்
முன்னுரை		...	v
[ஸ்ரீ, பி. எஸ். திருமலை அய்யங்கார்]			
முகவுரை		...	vii
[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலை அய்யங்கார், தமிழ் வித்துவான், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.]			
ஸ்ரீ ஆண்டாள் துதி	ஸ்ரீ வேதாந்த தேசிகர்	...	xi
திருப்பாவை	ஸ்ரீ ஆண்டாள்	...	1
தையொரு திங்கட்பாமாலை	ஷை	...	9
கோதாஸ்துதி	ஸ்ரீ வேதாந்த தேசிகர்	...	33
கோதாஸ்துதி	ஷை		
(வடமொழி தமிழ் செய்தது)		...	40
[ஸ்ரீ. அநுமந்தன் பட்டி மதுரகவி ஸ்ரீநிவாஸையங்கார்.]			
திருப்பாவை	பொழிப்பு	...	44
கோதாஸ்துதி	ஷை	...	55
கோதாதத்துவம்		...	61
[ஸ்ரீ. ஆர். கேசவய்யங்கார், தலைவர், திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம், பத்திராசிரியர், வகுளமாலை, அட்வொகேட்.]			
ஆண்டாள் வைபவம்		...	82
[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலை அய்யங்கார், தமிழ் வித்துவான், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.]			
வேதாந்த குரு விஜயம்	ஷை	...	95
ஆண்டாள் கவி		...	118
[ஸ்ரீ. ரா. ஸ்ரீநிவாஸ தேசிகமய்யங்கார், எம். ஏ.,]			
"வெள்ளி யெழுந்தது"		...	123
[ஸ்ரீ. குருச்சி சே. ஸ்ரீநிவாஸ வேதாந்தாசாரியார், எம். ஏ., எல். எல். பி.]			

பக்கம்

கோதையாரும் ஸ்ரீபாஞ்சசன்னியமும் ... 129

[ஸ்ரீ. வியாகரண வித்யாப்ரவீணர் பாதூர் புராணம் ராகவாசாரியார்.]

ஆண்டாள் திருமணம் ... 131

[ஸ்ரீ. பண்டித சிந்தாமணி கோபாலாசாரியார், சங்க மஹா வித்து வான், திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம், பாடியது.]

ஸ்ரீ அழகிய சிங்கர் அநுக்ரஹித்த ஸ்ரீமுகம் ... 135

சங்கமாலைப் புகழுரை ... 137

சித்ர படங்கள்.

ஸ்ரீ. பி. டி. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி ... v

(ஸ்ரீ ஆண்டாள் மாலை வள்ளலாரின் திருத்தகப்பனார்.)

ஸ்ரீ ஆண்டாள் ... xi

ஸ்ரீ வேதாந்த தேசிகர் ... 95

ஸ்ரீ. பி. டி. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி

ஸ்ரீ:

முன்னுரை.

அடியேன் தமக்கையார் மாப்பிள்ளையும், எனது நண்பரும் ஆகிய ஸ்ரீமான் ப. ரெ. திருமலை அய்யங்கார் அவர்கள் காரியதரிசியாக இருந்து நடத்திவரும் திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தின் பல அரிய வெளியீடுகளைப் பார்வையிட்டதின் மூலமாக பல்லாண்டுகளாக எண்ணியிருந்த ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது. அதாவது, ஸ்ரீ ஆண்டாள் அருளிச்செய்த திருமொழிகளையும், ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் திருவாய் மலர்ந்தருளிய கோதாஸ்துதியையும், இருவருடைய வைபவங்களையும் சேர்த்து ஒரு மாலையாக்கி அவளுக்கு ஸமர்ப்பிக்க வேண்டுமென்பதுதான் அந்நோக்கம். சங்கத்தின் ஏழாவது வெளியீடான "தோத்திரமாலை"யைக் கண்ணுற்றதும் அவ்வெண்ணம் முற்றியது. பெருமாள் கோயிலில் நேரில் அநுபவித்த "கம்பர்மாலை மஹோத்ஸவம்" அதனை உடனே பூர்த்திசெய்ய மிகவும் உபகரித்தது. எனது விருப்பத்தை "ஸ்ரீ ஆண்டாள் மாலை" வெளியீடாகப் பிரசுரித்து முற்றுவித்த திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்திற்கு எனது நன்றி என்றும் உரியதாகும்.

எனது தந்தையார் ஸ்ரீ. பி. டி. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி, ஸ்ரீ ஆண்டாளிடம் வைத்திருந்த பக்தியின் ஞாபகார்த்தமாக இம்மாலை விளங்கி, அன்பர்கள் முடிமேல் வீற்றிருப்பதே அடியேன் வேண்டுவது. கோதை தமிழ் வாழ்க. தேசிக மாலை வாழ்க. வாழ்க உலகெலாம்.

விருதுநகர்,
27-7-41.

பி. எஸ். திருமலை.

*

ஸ்ரீ:

முகவுரை.

பூவுலாவு பூவையோன்
தேவுகாதல் சீரியோன்
ஆவியோரு மன்பனுய்த்
தாவு பாதந்தரிப்பொமே. (1)

அன்றுமூல மாதியே
என்றுவேழ மேத்திட
நன்றுவந்து நல்கினீர்
இன்று இங்கு அருளுமே. (2)

ஒருபத மடித்தொருபதம் பொற்றேர்மிதித்
தொருகையிற் குசைகசை யொருகை ஞானமாய்ப்
பொருகைவில் விசயனைப்புரிந்து நோக்கிமெய்
தருபொருளுரைத் தவர்சரணம் போற்றுவாம். (3)

நிலமகடன் கலையாக வில்லிபுத்தூ ராழ்வார்
நெடிய நந்தவனந்தனிற் பைந்துளவினடிதனிலே
கலிமுதற் கால்வருமாடிப் பூரமதிலுதித்தாள்
கண்ணனையே திருவாராதனம் புரிவாளன்றேன்
உலவுதிருப்பதி நூற்றெட்டினு முடனங்கிருப்பாள்
ஒண்டமிழ் மார்கழிதை நூற்றெழுபதின் மூன்றுரைத்தாள்
குலவுமலர் மாலையரங்கருக்கு முன்றான்சூடிக்
கொடுத்தாளெந் தமைத்தடுத்தாள் கோதைபதம் பணிவாம். (4)

வேயர்புகழ் வில்லிபுத்தூர் வந்துதித்து
வேதக்கோன் பட்டர்பிரான் மகிழும்வண்ணம்
தூயதமிழ் மறைபாடித் தந்ததன்றி
துழாய்மாலை முடிசூடிக் கொடுத்தமாதே!
நேயமுடன் நீயுரைத்த மாலைதன்னை
நேயமுட னுரைப்பவர்கள் நெடுமால்தாளில்
ஆயவன்பு அடைவாக வுடையராகி
அகிலாண்டந்தனை வென்றுமகிழ் வார்தாமே. (5)

" திருப்பாவை யென்னத் திருந்தியற்பாத்தந்த
திருப்பாவை வில்லிபுத்தூர்ச் செல்வி "

என்றபடி 'அழகையுடைய நோன்பென்று சொல்லுவதாகிய நிரம்பிய இலக்கணத்தையுடைய பாட்டை யுலகமீடேறப் பாடித்தந்த திருப்பாவை

யென்னுந் திருநாமத்தையுடைய ஸ்ரீவில்லிபுத்தூர்த் திருவுடையாளே' ஸ்ரீ **ஆண்டாள்**. இவளே **கோதை**. இவளே **சூடிக்கொடுத்த நாச்சியார்**. இவள் ஆராய்ந்து அருளிச் செய்ததே **திருப்பாவை**. 'பாவை' யென்பது தமிழில் ஒரு வகையின் வகுத்துரைக்கப்பட்ட பதினோராடல்களில் ஒன்று.

"திருவாடல் பாவையதற் குறுப்புத்தேரின்
ஒருவாதிரண்டுட னொன்று."
"செருவெங் கோலமவுணர் நீங்கத்
திருவின் செய்யோளாடிய பாவையும்."

என்பனவற்றால் இறைவன் திருமார்பில் "அகலகில்லேன் இறையும்" என்று உறைபவராகிய அலர்மேல்மங்கை, அவுணர் செருவெங்கோல நீங்க பாவையென்னும் நாடகமாடினர் என்பதுபோதரும். பெண்கள் தாம் வழி படும் கடவுளை நோக்கி நோன்பு நோற்றுத் தாம் விழைந்த பயனைப் பெறு தலே பாவை என்னும் நூலின் பொதுப் பொருள். பாவை என்னு நாடக நூற்களுள் இப்பொழுது முற்றும் கிடைக்கப்பெற்றுள்ளவை இரண்டே. அவை ஸ்ரீ கோதையார் அருளிச் செய்த திருப்பாவையும், ஸ்ரீ மாணிக்க வாசக சுவாமிகளது திருவெம்பாவையுமாகும். இவற்றுள், வேதமனைத்துக் கும் வித்தானதும், பாதகங்களைத் தீர்ப்பதும், பரமனடிகாட்டுவதும், உப நிடதமென உத்தமவாசாரியரால் போற்றப்பெற்றதுமாகிய திருப்பாவை யின் திறத்தினைத்தேர்ந்து தெளிவதே திருவுடையார் செயல். திருப்பாவை கோதாஸ்துதி. ஆயினும் அத்திரு நாமந்தாங்கிய தோத்திரமாலையை, கோதா தத்துவத்தை நன்குணர்ந்து, அநுபவித்தவாறே கூறுமியல்வினராகிய **தூப்புற்கோன்** யாத்துள்ளார். ஆண்டாள் பாமாலைகளையும், கோதாஸ்துதி யையும், ஆக்கியோரின் வைபவங்களையும் நற்றமிழுலகு நன்கோதி நலம் பெற்றுய்தற்பொருட்டு "**ஸ்ரீ ஆண்டாள் மாலை**" என்ற பெயருடன் திகழ் வதே இத்தனி வெளியீடாகும்.

இச்சீரிய மாலை வெளியீட்டிற்குப் பூரணவுதவிபுரிந்த **வள்ளலாரின்** பெருந்தகைமையை அறிந்துகொள்ள வேண்டியது அத்யாவசியகம். தென் பாண்டி நன்னாட்டின் கண் விளங்கும் இராமநாதபுரம் சமஸ்தானத்திலுள்ள தர்மாசனம் **பந்தல்குடி** என்ற அக்கிரகாரம் தொன்றுதொட்டு சான்றோ ரிருப்பிடம் என்ற பெற்றிபெற்றது. அதில் **ஆராதூர்** பழங்குடியில் **வாதூல கோத்திர** முயாவந்தவர் **ஸ்ரீ. பி. டி. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமியாவர்**. "முயற்சி திருவினையாக்கும்" என்ற முப்பால் முதுமொழிக்கு முற்றிலக்கே இவர் என்பது முழுதுணர் நீர்மையினோர் கண்ட உண்மை. இவர் பந்தல் குடி ஸீனியர் புரொப்ரைட்டராகவும், பர்மாஷெல் கம்பெனி தென் ஜில்லாக் களின் ஏஜண்டாகவும் திகழ்ந்தார். இவரது பேராற்றல், பேரன்பு, பேரொழுக்கம், பேரருள் முதலியன உவமையற்றன. பந்து பரிபாலனம் என்பது இவரிடம் பூரணமாய் விளங்கிய பெருஞ்செயல். இவரது வாழ்க்கைத் துணைவி அருந்ததியனைய **ஸ்ரீ ரங்கநாயகி அம்மையார்**. இவ்

விருவரும் கருத்தொருமித்து நடாத்திய இல்லறமே நல்லறம். இம்மங் கையர்க்கரசி அடியேனுடைய திருத்தகப்பனாரான **பந்தல்குடி பாரத் வாஜ மாடபூசி ஸ்ரீ. ரெங்கய்யங்கார் ஸ்வாமியின் அத்தான் ஸ்ரீ. செல்லமய் யங்கார் ஸ்வாமியின்** அருமைப் புதல்வி. எனது தந்தையாரின் அத்தையான **'சூடி'**யின் அன்பில் வளர்ந்தவரே தாம் என்பதை அடியேனுடைய பிதா அடிக்கடி கூறி மகிழ்வர். நன்றி மறவாமையன்றோ சான்றோர்க்கணி? எமது தந்தையாரிடம் பால்யம் முதற்கொண்டே அளவு கடந்த அன்புடையவரே ஈண்டுச் சிறப்பிக்கும் **ஸ்ரீநிவாஸய்யங்கார்.** அதன்பயனே அவரது திருமக ளாரின் திருச் செல்வி அடியேனுக்கு இல்லக்கிழத்தியாய் அமைந்தனள் போலும். அய்யங்காரவர்களிடம் எனது அன்னைக்கும் விசேட நன்மதிப் புண்டு. எமது தாயின் திருமணத்தை முற்றுவித்தவர் இச்சீரியோரெனின் அன்னவரிடம் உள்ள ஆராத காதல் மிகுதியே அடியேனை இத்திருமாலைப் பணியில் இசைவித்தது ஒரு கைம்மாறாகுமோ? அய்யங்காரவர்கள் தென் னாட்டுத் திலகமாய் நின்று அவ்வப்போதாற்றிய அருஞ்செயல்கள் அளவு கடந்தவை. வெள்ளக்கேட்டாலலைப் புண்டலமாந்து நின்ற மக்களுக்கு "அம் பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும்", என்ற கணக்கிலே நல்லுதவி யளித்துக்காத்த நல்லோரே இவர். இவரது இன்சொல்லும், வேடிக்கையாக வினவும் கேளிக்கையும், அன்னதானப் பெருமையும், ஆடம்பர மற்ற வாழ்க் கையும், குழந்தைகளைக் கொண்டாடும் நீர்மையும், ஆச்சர்யமான ஆசார்ய பக்தியும், உதாரத்துவமும், உலகியலறிவும் எவரையும் ஆட்படுத்த வல்ல வை. சுருங்கக்கூறின் இவர் அன்பின் வடிவினராய் அமைந்திருந்தாரென்ப தோர் பேருண்மை. இவரது ஞாபகார்த்த வெளியீடே இவ் **"ஆண்டாள் மாலை".**

இம்மாலையிற் பொலிந்து நிற்கும் கட்டுரைகளை நல்கிய கண்ணியர்கட்கு இச்சங்கத்தாரது நன்றி உரியதாகுக.

ஸ்ரீ ஆண்டாள் மாலைப்பணியிலெம்மையேவி, நற்றமிழ் நற்றொண் டாற்றப் பூரண உதவி புரிந்து, தமது வள்ளற்றிறத்தை நாடறிய வளித்த ஷை அய்யங்காரவர்களின் முதற் புதல்வரும், எமது வேட்டகத்து மாமா வும் ஆகிய **ஸ்ரீ பி. எஸ். திருமலை அய்யங்காரும்,** அவரது சகோதர சகோ தரிகள் முதலான சகல பந்து மித்திரர்களும் **ஸ்ரீ ஆண்டாளின் திருவருள்** பெற்றின்புறுமாறு அன்னவளடிபணிந் தேத்துவோம். நற்றமிழ் வாழ்க. நல் லார் வாழ்க. பொங்கும் மங்கலம் எங்குந்தங்குக.

"சூடிக்கொடுத்த சுடர்க்கொடியே தொல்பாவை
பாடியருளவல்ல பல்வளையாய்—நாடிநீ
வேங்கடவற் கென்னைவிதி யென்றவிம்மாற்றம்
நாங்கடவா வண்ணமே நல்கு."

ஸ்ரீரங்க விலாசம்,
திருவல்லிக்கேணி,
27—7—41.

ப. ரெ. திருமலை அய்யங்கார்,
காரியதரிசி.

பெரியாழ்வார் ஸ்ரீ ஆண்டாள் ரெங்கமன்னார் கெருடன்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



ஸ்ரீ ஆண்டாள் துதி.

வேயர்புகழ் வில்லிபுத்தூ ராடிப்பூரம்
 மேன்மேலும் மிகவிளங்க விட்டுசித்தன்
தூய திருமகளாய் வந்தரங்கனூர்க்குத்
 துழாய் மாலை முடிசூடிக் கொடுத்தமாதே!
நேயமுடன் திருப்பாவைப் பாட்டாறைந்தும்
 நீயுரைத்த தையொருதிங்கட் பாமாலை
ஆய புகழ்நூற்று நாற்பத்துமூன்றும்
 அன்புடனே யடியேனுக் கருள்செய்நீயே.

—தேசிகமாலை. பிரபந்தசாரம்.

ஸ்ரீ:



திருப்பாவை.

மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர்! போதுமினோ நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச்சிறுமீர்காள்!
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன்குமரன்
ஏரார்ந்த கண்ணியசோதை யிளஞ்சிங்கம்
கார்மேனிச்செங்கண் கதிர்மதியம்போல் முகத்தான்
நாராயணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப்படிந்தேலோ ரெம்பாவாய். 1

வையத்துவாழ்வீர்காள்! நாமும் நம்பாவைக்குச்
செய்யும் கிரிசைகள்கேளீரோ பாற்கடலுள்
பையத்துயின்ற பரமனடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலேநீராடி
மையிட்டெழுதோம் மலரிட்டு நாம்முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமாறெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய். 2

ஓங்கியுலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச்சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும்மாரி பெய்து
ஓங்குபெருஞ் செந்நெலூடு கயலுகள
பூங்குவளைப்போதில் பொறி வண்டுகண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்தமுலைபற்றி
வாங்கக்குடம் நிறைக்கும்வள்ளற் பெரும்பசுக்கள்
நீங்காதசெல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய். 3

ஆழிமழைக்கண்ணா ! ஒன்று நீகைகரவேல்
ஆழியுட்புக்கு முகந்துகொ டார்த்தேறி
ஊழிமுதல்வனுருவம் போல் மெய்கறுத்துப்
பாழியந்தோளுடைப் பற்பநாபன்கையில்
ஆழிபோல்மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதேசார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழஉலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 4

மாயனை மன்னுவடமதுரை மைந்தனைத்
தூயபெரு நீர்யமுனைத் துறைவனை
ஆயர்குலத்தினில் தோன்று மணிவிளக்கைத்
தாயைக்குடல் விளக்கம்செய்த தாமோதரனைத்
தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித்தொழுது
வாயினல்பாடி மனத்தினல்சிந்திக்கப்
போயபிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய். 5

புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளைவிளி சங்கின்பேரரவம் கேட்டிலையோ ?
பிள்ளாய்! எழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச்சகடம் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத்தரவில் துயிலமர்ந்தவித்தினை
உள்ளத்துக்கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரியென்றபேரரவம்
உள்ளம்புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். 6

கீசுகீசென்றெங்கும் ஆனைச்சாத்தன் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ ? பேய்ப்பெண்ணே !
காசும்பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழலாய்ச்சியர் மத்தினல்
ஓசைபடுத்த தயிரரவம் கேட்டிலையோ ?
நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன்மூர்த்தி
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ ?
தேசமுடையாய்! திறவேலோ ரெம்பாவாய். 7

கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தன காண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப் போகாமல் காத்துன்னைக்
கூவுவான் வந்துநின்றோம் கோதுகலமுடைய
பாவாய்! எழுந்திராய் பாடிப்பறைகொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதிதேவனைச் சென்று நாம் சேவித்தால்
ஆவாவென் றாராய்ந்தருளேலோரெம்பாவாய். 8

தூமணிமாடத்துச் சுற்றும் விளக்கெரியத்
தூபம் கமழத்துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே! மணிக்கதவம்தாள் திறவாய்
மாமீர்! அவளையெழுப்பீரோ? உன் மகள்தான்
ஊமையோ? அன்றிச்செவிடோ? அனந்தலோ?
ஏமப்பெருந்துயில் மந்திரப்பட்டாளோ?
மாமாயன் மாதவன் வைகுந்த னென்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய். 9

நோற்றுச்சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ? வாசல் திறவாதார்
நாற்றத்துழாய்முடி நாராயணன் நம்மால்
போற்றப்பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்
கூற்றத்தின்வாய் வீழ்ந்த கும்பகரணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில் தான்தந்தானோ?
ஆற்ற அனந்தலுடையாய்! அருங்கலமே!
தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய். 10

கற்றுக்கறவைக்கணங்கள் பலகறந்து
செற்றார்திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன்றில்லாத கோவலர்தம் பொற்கொடியே!
புற்றரவல்குல் புனமயிலே! போதராய்
சுற்றத்துத்தோழிமாரெல்லாரும் வந்து நின்
முற்றம் புகுந்து முகில் வண்ணன் பேர்பாடச்
சிற்றாதேபேசாதே செல்வப் பெண்டாட்டி! நீ
எற்றுக்குறங்கும் பொருளேலோரெம்பாவாய். 11

கனைத்திளங்கற்றெருமை கன்றுக்கிரங்கி
நினைத்துமுலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்!
பனித்தலை வீழ நின்வாசற் கடைபற்றி
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச்செற்ற
மனத்துக்கினியானைப் பாடவும் நீவாய் திறவாய்
இனித்தானெழுந்திராய் ஈதென்னபேருறக்கம்!
அனைத்தில்லத்தாரும் அறிந்தேலோரெம்பாவாய். 12

புள்ளின்வாய் கீண்டானைப்பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்ப்
பிள்ளைகளெல்லாரும் பாவைக்களம்புக்கார்
வெள்ளியெழுந்து வியாழ முறங்கிற்று
புள்ளும்சிலம்பினகாண் போதரிக்கண்ணினாய்!
குள்ளக்குளிரக் குடைந்து நீராடாதே
பள்ளிக்கிடத்தியோ? பாவாய்! நீ நன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய். 13

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர்வாய் நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினகாண்
செங்கல்பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய் நாணாதாய்! நாவுடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக்கண்ணானைப்பாடேலோ ரெம்பாவாய். 14

எல்லே! இளங்கிளியே! இன்னம் உறங்குதியோ?
சில்லென் றழையேன்மின்! நங்கைமீர்! போதர்கின்றேன்
வல்லை உன்கட்டுரைகள் பண்டே உன்வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானேதானாயிடுக
ஒல்லை நீ போதாய் உனக்கென்ன வேறுடையை
எல்லாரும் போந்தாரோ? போந்தார் போந்தெண்ணிக்கொள்
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப்பாடேலோ ரெம்பாவாய். 15

நாயகனாய்நின்ற நந்தகோபனுடைய
கோயில் காப்பானே ! கொடித்தோன்றும் தோரண
வாயில் காப்பானே ! மணிக் கதவம் தாள்திறவாய்
ஆயர்சிறுமியரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்
தூயோமாய்வந்தோம் துயிலெழப்பாடுவான்
வாயால் முன்ன முன்னம் மாற்றாதேஅம்மா ! நீ
நேயநிலைக்கதவம் நீக்கேலோரெம்பாவாய். 16

அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும்
எம்பெருமான் ! நந்தகோபாலா ! எழுந்திராய் !
கொம்பனார்க்கெல்லாம் கொழுந்தே ! குலவிளக்கே !
எம்பெருமாட்டி யசோதாய் ! அறிவுறாய்
அம்பரமூடறுத் தோங்கி உலகளந்த
உம்பர்கோமானே ! உறங்காதெழுந்திராய்
செம்பொற்கழலடிச்செல்வா ! பலதேவா !
உம்பியும் நீயும் உறங்கேலோரெம்பாவாய். 17

உந்துமதகளிற்றன் ஓடாத தோள்வலியன்
நந்தகோபாலன் மருமகளே ! நப்பின்னாய் !
கந்தம்கமழும்குழலீ ! கடைதிறவாய்
வந்தெங்கும்கோழி அழைத்தனகாண் மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தார்விரலி ! உன்மைத்துனன் பேர்பாடச்
செந்தாமரைக் கையால் சீரார்வளையொலிப்ப
வந்துதிறவாய் மகிழ்ந்தேலோரெம்பாவாய். 18

குத்துவிளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்சசயனத்தின்மேலேறி
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக்கிடந்த மலர் மார்பா ! வாய்திறவாய்
மைத்தடங்கண்ணினாய் ! நீ உன்மணாளனை
எத்தனைபோதும் துயிலெழவொட்டாய்காண்
எத்தனையேலும் பிரிவாற்றகில்லாயால்
தத்துவமன்று தகவேலோரெம்பாவாய். 19

முப்பத்துமூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்
செப்பமுடையாய்! திறலுடையாய்! செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய்
செப்பன்னமென்முலை செவ்வாய் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்
உக்கமும் தட்டொளியும் தந்துன் மணாளனை
இப்போதே எம்மை நீராட்டேலோரெம்பாவாய். 20

ஏற்றகலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதேபால் சொரியும் வள்ளற்பெரும் பசுக்கள்
ஆற்றப்படைத்தான் மகனே! அறிவுறாய்
ஊற்றமுடையாய்! பெரியாய்! உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே! துயிலெழாய்
மாற்றார் உனக்குவலி தொலைந்து உன்வாசற்கண்
ஆற்றாது வந்து உன்னடி பணியுமாபோலே
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோரெம்பாவாய். 21

அங்கண்மாஞாலத்தரசர் அபிமான
பங்கமாய்வந்து நின்பள்ளிக்கட்டிற்கீழே
சங்கமிருப்பார்போல் வந்துதலைப்பெய்தோம்
கிங்கிணிவாய்ச்செய்த தாமரைப் பூப்போலே
செங்கண்சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ?
திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல்
அங்கணிரண்டுங்கொண் டெங்கள்மேல் நோக்குதியேல்
எங்கள்மேல் சாபம் இழிந்தேலோரெம்பாவாய். 22

மாரிமலை முழைஞ்சில் மன்னிக்கிடந்துறங்கும்
சீரியசிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரிமயிர்பொங்க எப்பாடும்பேர்ந்துதறி
மூரிநிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலே நீ பூவைப்பூவண்ணா! உன்
கோயில் நின்றிங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
சீரியசிங்காசனத்திருந்து யாம் வந்த
காரியம்ஆராய்ந்தருளேலோரெம்பாவாய். 23

அன்றிவ்வுலகம் அளந்தாய்! அடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்ருய்! திறல்போற்றி
பொன்றச்சகடம் உதைத்தாய்! புகழ்போற்றி
கன்றுகுணிலா எறிந்தாய்! கழல்போற்றி
குன்றுகுடையா எடுத்தாய்! குணம்போற்றி
வென்றுபகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி
என்றென்றுன்சேவகமே ஏத்திப்பறை கொள்வான்
இன்றுயாம் வந்தோம் இரங்கேலோ ரெம்பாவாய். 24

ஒருத்தி மகனய்ப்பிறந்து ஓரிரவில்
ஒருத்தி மகனய் ஒளித்துவளர
தரிக்கிலானகித்தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம் பறைதருதியாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 25

மாலே! மணிவண்ண! மார்கழி நீராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தையெல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்துன் பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பாடுடையனவே
சாலப்பெரும்பறையே பல்லாண்டிசைப்பாரே
கோலவிளக்கே கொடியேவிதானமே
ஆலினிலையாய்! அருளேலோ ரெம்பாவாய். 26

கூடாரைவெல்லும் சீர்க்கோவிந்தா! உன்தன்னைப்
பாடிப்பறைகொண்டு யாம்பெறு சம்மானம்
நாடுபுகழும் பரிசினல் நன்ருகச்
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடையுடுப்போம் அதன்பின்னே பாற்சோறு
மூடநெய்பெய்து முழங்கை வழிவாரக்
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். 27

கறவைகள் பின்சென்று கானம் சேர்ந்துண்போம்
அறிவொன்றுமில்லாத ஆய்க்குலத்துன் தன்னைப்
பிறவிபெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்றுமில்லாத கோவிந்தா! உன்தன்னேடு
உறவேல் நமக்கிங்கு ஒழிக்க ஒழியாது
அறியாத பிள்ளைகளோம் அன்பினல் உன்தன்னைச்
சிறுபேரழைத்தனவும் சீறியருளாதே
இறைவா! நீதாராய் பறையேலோ ரெம்பாவாய். 28

சிற்றஞ்சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்
பொற்றாமரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல்போகாது
இற்றைப்பறை கொள்வானன்றுகாண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னேடு
உற்றோமேயாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநங்காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய். 29

வங்கக்கடல்கடைந்த மாதவனைக்கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப்பறை கொண்டவாற்றை அணிபுதுவைப்
பைங்கமலத்தண் தெரியல்பட்டர்பிரான் கோதைசொன்ன
சங்கத்தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கிப்பரிசுரைப்பார் ஈரிரண்டுமால்வரைத்தோள்
செங்கட்டிருமுகத்துச் செல்வத்திருமாலால்
எங்கும் திருவருள்பெற்று இன்புறுவ ரெம்பாவாய். 30

ஸ்ரீ:

தையொரு திங்கட்பாமாலை.

I

[மணிவண்ணற்கு வகுத்திடக் காமவேளைப் பணிதல்.]

தையொருதிங்களுந் தரைவிளக்கித்
தண்மண்டலமிட்டு மாசி முன்னாள்
ஐயநுண்மணற் கொண்டு தெருவணிந்து
அழகினுக் கலங்கரித்தநங்கதேவா!
உய்யவுமாங் கொலோ வென்று சொல்லி
உன்னையுமும்பியையுந் தொழுதேன்
வெய்யதோர் தழலுமிழ் சக்கரக்கை
வேங்கடவற்கென்னை விதிக்கிற்றியே. 1

வெள்ளைநுண்மணற் கொண்டு தெருவணிந்து
வெள்வரைப்பதன் முன்னந்துறை படிந்து
முள்ளுமில்லாச் சுள்ளி யெரிமடுத்து
முயன்றுன்னை நோற்கின்றேன் காமதேவா!
கள்ளவிழ் பூங்கணை தொடுத்துக்கொண்டு
கடல்வண்ண னென்பதோர் பேரெழுதி
புள்ளினைவாய் பிளந்தா னென்பதோர்
இலக்கினிற் புகவென்னை எய்கிற்றியே. 2

மத்த நன்னறுமலர் முருக்கமலர் கொண்டு
முப்போது முன்னடி வணங்கி
தத்துவ மிலியென்று நெஞ்செரிந்து
வாசகத்தழித்துன்னை வைதிடாமே
கொத்தலர்பூங்கணை தொடுத்துக்கொண்டு
கோவிந்தனென்பதோர் பேரெழுதி
வித்தகன் வேங்கட வாணனென்னும்
விளக்கினிற்புகவென்னை விதிக்கிற்றியே. 3

சுவரில் புராண ! நின்பேரெழுதிச்
சுறவநற் கொடிக்களுந் துரங்கங்களும்
கவரிப்பிணைக்களுங் கருப்பு வில்லும்
காட்டித் தந்தேன் கண்டாய் காமதேவா !
அவரைப் பிராயந் தொடங்கி யென்றும்
ஆதரித்தெழுந்தவென் தடமுலைகள்
துவரைப் பிரானுக்கே சங்கற்பித்துத்
தொழுதுவைத்தேனொல்லை விதிக்கிற்றியே. 4

வானிடை வாழு மவ்வானவர்க்கு
மறையவர் வேள்வியில் வகுத்தவவி
கானிடைத் திரிவதோர் நரிபுகுந்து
கடப்பதும் மோப்பதுஞ் செய்வதொப்ப
ஊனிடையாழிசங் குத்தமர்க்கென்று
உன்னித்தெழுந்தவென் தடமுலைகள்
மானிடவர்க் கென்று பேச்சுப்படில்
வாழகில்லேன் கண்டாய்மந் மதனே ! 5

உருவுடையாரிளையார்கள் நல்லார்
ஒத்துவல்லார்களைக் கொண்டு வைகல்
தெருவிடை எதிர்கொண்டு பங்குனிநாள்
திருந்தவே நோற்கின்றேன் காமதேவா !
கருவுடைமுகில் வண்ணன் காயாவண்ணன்
கருவிளை போல் வண்ணன் கமலவண்ணத்
திருவுடை முகத்தினிற்றிருக் கண்களால்
திருந்தவே நோக்கெனக் கருள்கண்டாய். 6

காயுடைநெல் லொடு கரும்பமைத்துக்
கட்டியரிசி யவலமைத்து
வாயுடை மறையவர் மந்திரத்தால்
மந்மதனே ! யுன்னை வணங்குகின்றேன்
தேசமுன்னளந்தவன் திரிவிக்கிரமன்
திருக்கைகளாலென்னைத் தீண்டும் வண்ணம்
சாயுடைவயிறு மென்தடமுலையும்
தரணியில் தலைப்புகழ் தரக்கிற்றியே. 7

மாசுடை யுடம் பொடுதலையுலறி
வாய்ப்புறம் வெளுத்தொருபோது முண்டு
தேசுடைத்திற லுடைக்காமதேவா!
நோற்கின்ற நோன்பினைக் குறிக்கொள் கண்டாய்
பேசுவதொன்றுண்டிங்கெம்பெருமான்!
பெண்மையைத் தலையுடைத்தாக்கும் வண்ணம்
கேசவநம்பியைக் கால்பிடிப்பா
ளென்னுமிப்பேறெனக்கருள் கண்டாய். 8

தொழுதுமுப்போது முன்னடிவணங்கித்
தூமலர்தூய்த்தொழுதேத்துகின்றேன்
பழுதின்றிப் பார்க்கடல் வண்ணனுக்கே
பணிசெய்து வாழப் பெறாவிடில் நான்
அழுதழுதலமர்ந்தம் மாவழங்க
ஆற்றவமுதுவுனக்குறைக்குங் கண்டாய்
உழுவதோரெருத்தினை நுகங்கொடுபாய்ந்து
ஊட்டமின்றித் துரந்தாலொக்குமே. 9

கருப்புவில் மலர்க்கணைக் காமவேளைக்
கழலிணைபணிந் தங்கோர்கரியலற
மருப்பினை யொசித்துப் புள்வாய் பிளந்த
மணிவண்ணற் கென்னை வகுத்திடென்று
பொருப்பன்ன மாடம் பொலிந்து தோன்றும்
புதுவையர் கோன் விட்டு சித்தன் கோதை
விருப்புடையின்றமிழ் மாலை வல்லார்
விண்ணவர்கோனடி நண்ணுவரே. 10

II

[ஆயர் சிறுமியர் சிற்றில் சிதைக்க வேண்டா வென்று கண்ணபிரானை வேண்டுதல்.]

நாமமாயிரமேத்த நின்ற நாராயணா! நரனே! யுன்னை
மாமிதன்மகனாகப் பெற்றாலெமக்குவாதை தவிருமே
காமன் போதருகால மென்று பங்குனி நாள்கடைபாரித்தோம்
தீமை செய்யுஞ் சிரீதரா! வெங்கள் சிற்றில் வந்து சிதையேலே. 1

இன்று முற்றும் முதுகுநோவ இருந்திழைத்த விச்சிற்றிலை
நன்றுங்கண்ணுறநோக்கி நாங்கொளுமார்வந்தன்னைத்தணிகிடாய்
அன்று பாலகனாகி யாலிலைமேற்று யின்ற வெம்மாதியாய்!
என்று முன்றனக்கெங்கள் மேலிரக்க மெழாத தெம்பாவமே. 2

குண்டு நீருறைகோளரீ! மதயானை கோள்விடுத்தாய்! உன்னைக்
கண்டுமாலுறு வோங்களைக் கடைக்கண்களாலிட்டு வாதியேல்
வண்டல் நுண்மணற்றெள்ளியாம் வளைக்கைகளால் சிரமப்பட்டோம்
தெண்டிரைக் கடற்பள்ளியாய்! எங்கள் சிற்றில் வந்து சிதையேலே. 3

பெய்யுமா முகில் போல் வண்ணா! உன்றன் பேச்சுஞ் செய்கையுமெங்களை
மையலேற்றி மயக்கவுன் முகம்மாய மந்திரந்தான் கொலோ?
நொய்யர் பிள்ளைகளென்பதற்குன்னை நோவநாங்க ளுரைக்கிலோம்
செய்ய தாமரைக் கண்ணினாய்! எங்கள் சிற்றில் வந்து சிதையேலே. 4

வெள்ளை நுண்மணற்கொண்டு சிற்றில் விசித்திரப் பட வீதிவாய்த்
தெள்ளி நாங்களிழைத்த கோலமழித்தியாகிலுமுன்றன்மேல்
உள்ள மோடியுருகலல்லாலு ரோடமொன்று மிலோங் கண்டாய்
கள்ளமாதவா! கேசவா! வுன்முகத்தன கண்களல்லவே. 5

முற்றிலாத பிள்ளைகளோம் முலை போந்திலா தோமை நாடொறும்
சிற்றில் மேலிட்டுக்கொண்டு நீசிறிதுண்டு திண்ணெனநாமது
கற்றிலோம் கடலை யடைத்தரக்கர்குலங்களை முற்றவும்
செற்றிலங்கையைப் பூசலாக்கிய சேவகா! வெம்மைவாதியேல். 6

பேதநன்கறிவார்களோ டிவைபேசினல் பெரிதின்சுவை
யாது மொன்றறியாத பிள்ளைகளோமை நீநலிந்தென்பயன்?
ஓத மாகடல் வண்ணா! உன்மண வாட்டி மாரொடு சூழறும்
சேதுபந்தந் திருத்தினாய்! எங்கள் சிற்றில் வந்து சிதையேலே. 7

வட்டவாய்ச் சிறுதூதையோடு சிறுசுளகு மணலுங் கொண்டு
இட்டமாவிளையாடு வோங்களைச் சிற்றிலீடழித்தென்பயன்?
தொட்டுதைத்து நலியேல் கண்டாய் சுடர்ச்சக்கரங்கையிலேந்தினாய்!
கட்டியும் கைத்தால் இன்னாமை யறிதியே கடல் வண்ணனே! 8

முற்றத்தூடு புகுந்து நின்முகம் காட்டிப் புன்முறுவல் செய்து
சிற்றிலோடெங்கள் சிந்தையுஞ் சிதைக்கக் கடவையோ? கோவிந்தா!
முற்ற மண்ணிடம் தாவிவிண்ணுற நீண்டளந்து கொண்டாய்! எம்மைப்
பற்றிமெய்ப்பிணக்கிட்டக்கால்இந்தப்பக்கம்நின்றவர் என்சொல்லார்? 9

சீதைவாய முதமுண்டாய்! எங்கள் சிற்றில் நீ சிதையேலென்று
வீதிவாய் விளையாடும் ஆயர்சிறுமியர் மழலைச் சொல்லை
வேதவாய்த் தொழிலார்கள் வாழ்வில்லிபுத்தூர் மன் விட்டுசித்தன்தன்
கோதைவாய்த்தமிழ் வல்லவர் குறைவின்றி வைகுந்தஞ்சேர்வரே. 10

III

[கரியபிரானைக் கன்னியர் கவர்ந்த கூறைகளை இரத்தல்.]

கோழியழைப்பதன் முன்னம் குடைந்து நீராடுவான் போந்தோம்
ஆழியஞ் செல்வனெழுந்தான் அரவணைமேல் பள்ளிகொண்டாய்!
ஏழைமை யாற்றவும் பட்டோம் இனியென்றும் பொய்கைக்குவாரோம்
தோழியும் நானும் தொழுதோம் துகிலைப் பணித்தருளாயே. 1

இதுவென் புகுந்ததிங்கு அந்தோ! இப்பொய்கைக்கெவ்வாறு வந்தாய்?
மதுவின்றுழாய் முடிமாலே! மாயனே! யெங்களமுதே!
விதியின்மையாலது மாட்டோம் வித்தகப்பிள்ளாய்! விரையேல்
குதிகொண்ட ரவில்நடித்தாய்! குருந்திடைக் கூறைபணியாய். 2

எல்லே! ஈதென்ன இளமை? எம்மனைமார் காணிலொட்டார்
பொல்லாங்குஈதென்று கருதாய் பூங்குருந்தேறியிருத்தி
வில்லாலி லங்கையழித்தாய்! நீ வேண்டியதெல்லாந் தருவோம்
பல்லாரும் காணமே போவோம் பட்டைப் பணித்தருளாயே. 3

பரக்கவிழித்தெங்கும் நோக்கிப் பலர் குடைந்தாடும் சுனையில்
அரக்கநில்லா கண்ணநீர்கள் அலமருகின்ற வாபாராய்
இரக்கமேலொன்றுமிலாதாய்! இலங்கை யழித்தபிரானே!
குரக்கரசாவதறிந்தோம் குருந்திடைக் கூறைபணியாய். 4

காலைக்கது விடுகின்ற கயலோடு வாளைவிரவி
வேலைப்பிடித்தென்னை மார்களோட்டில் என்னவிளையாட்டோ?
கோலச்சிற்றாடை பலவும் கொண்டு நீயேறியிராதே
கோலங்கரிய பிரானே! குருந்திடைக் கூறைபணியாய். 5

தடத்தவிழ்தாமரைப் பொய்கைத்தாள்கள் எம் காலைக்கதுவ
விடத்தேளெறிந்தாலே போல வேதனையாற்றவும் பட்டோம்
குடத்தையெடுத்தேற விட்டுக் கூத்தாடவல்ல எங்கோவே!
படிற்றையெல்லாம் தவிர்ந்து எங்கள் பட்டைப் பணித்தருளாயே. 6

நீரிலே நின்று அயர்க்கின்றோம் நீதியல்லாதன செய்தாய்
ஊரகஞ் சாலவுஞ் சேய்த்தால் ஊழியெல்லாம் உணர்வானே!
ஆர்வமுனக்கே யுடையோம் அம்மனைமார் காணிலொட்டார்
போரவிடாயெங்கள் பட்டைப் பூங்குருந்தேறியிராதே. 7

மாமிமார் மக்களே யல்லோம் மற்றுமிங்கெல்லாரும் போந்தார்
தூமலர்க்கண்கள் வளரத்தொல்லை யிராத்துயில்வானே!
சேமமேலன்றிது சாலச்சிக்கென நாம் இது சொன்னோம்
கோமளவாயர் கொழுந்தே! குருந்திடைக் கூறை பணியாய். 8

கஞ்சன் வலைவைத்தவன்று காரிருளெல்லில் பிழைத்து
நெஞ்சுதுக்கஞ் செய்யப் போந்தாய் நின்ற இக்கன்னியரோமை
அஞ்சவுரப்பாள சோதை ஆணாட விட்டிட்டிருக்கும்
வஞ்சகப் பேய்ச்சி பாலுண்ட மசிமையிலீ! கூறைதாராய். 9

கன்னியரோடெங்கள் நம்பிகரியபிரான் விளையாட்டை
பொன்னியல் மாடங்கள் சூழ்ந்த புதுவையர் கோன்பட்டன் கோதை
இன்னிசையால் சொன்னமாலை ஈரைந்தும் வல்லவர்தாம்போய்
மன்னியமாதவனோடு வைகுந்தம் புக்கிருப்பாரே. 10

IV

[கூடலிழைத்தல்.]

தெள்ளியார் பலர் கைதொழுந்தேவனார்
வள்ளல் மாலிருஞ் சோலைமணாளனார்
பள்ளிகொள்ளுமிடத்து அடிகொட்டிடக்
கொள்ளுமாகில் நீ கூடிடு கூடலே. 1

காட்டில் வேங்கடம் கண்ணபுரநகர்
வாட்டமின்றி மகிழ்ந்துறை வாமனன்
ஓட்டராவந்து என் கைப்பற்றி தன்னொடும்
கூட்டுமாகில் நீ கூடிடு கூடலே. 2

பூமகன் புகழ்வானவர் போற்றுதற்
காமகன் அணிவாணுதல் தேவகி
மாமகன் மிகுசீர் வசுதேவர்தம்
கோமகன் வரில் கூடிடு கூடலே. 3

ஆய்ச்சி மார்களும் ஆயரும் அஞ்சிட
பூத்தநீள் கடம்பேறிப்புகப் பாய்ந்து
வாய்த்த காளியன் மேல் நடமாடிய
கூத்தனார் வரில் கூடிடு கூடலே. 4

மாடமாளிகை சூழ் மதுரைப்பதி
நாடி நந்தெருவின் நடுவே வந்திட்டு
ஓடை மாமதயானை யுதைத்தவன்
கூடுமாகில் நீ கூடிடு கூடலே. 5

அற்றவன் மருதம் முறிய நடை
கற்றவன் கஞ்சனை வஞ்சனையில்
செற்றவன் திகழும் மதுரைப்பதி
கொற்றவன் வரில் கூடிடுகூடலே. 6

அன்று இன்னாதன செய்சிசு பாலனும்
நின்றநீள் மருதும் எருதும் புள்ளும்
வென்றிவேல் விறல் கஞ்சனும் வீழமுன்
கொன்றவன் வரில்கூடிடு கூடலே. 7

ஆவலன் புடையார் தம்மனத் தன்றி
மேவலன் விரைசூழ் துவராபதிக்
காவலன் கன்று மேய்த்து விளையாடும்
கோவலன் வரில்கூடிடு கூடலே. 8

கொண்ட கோலக் குறளுருவாய்ச் சென்று
பண்டுமாவலிதன் பெரு வேள்வியில்
அண்டமும் நிலனும் அடியொன்றினால்
கொண்டவன் வரில் கூடிடுகூடலே. 9

பழகு நான்மறையின் பொருளாய் மத
மொழுகு வாரணமுய்ய வளித்த எம்
அழகனார் அணியாய்ச் சியர் சிந்தையுள்
குழகனார்வரில் கூடிடு கூடலே. 10

ஊடல் கூடல் உணர்தல் புணர்தலை
நீடுநின்ற நிறை புகழாய்ச்சியர்
கூடலைக்குழற் கோதைமுன் கூறிய
பாடல் பத்தும் வல்லார்க்கு இல்லை பாவமே. 11

V

[கடல் வண்ணனைக் கூவுமாறு குயிலுக்குக் கூறுதல்.]

மன்னு பெரும் புகழ் மாதவன்
　　மாமணி வண்ணன் மணிமுடி மைந்தன்
தன்னை உகந்தது காரணமாக
　　என் சங்கிழக்கும் வழக்குண்டே ?
புன்னை குருக்கத்தி ஞாழல் செருந்திப்
　　பொதும்பினில் வாழுங் குயிலே!
பன்னி எப்போது மிருந்து விரைந்து என்
　　பவள வாயன் வரக் கூவாய். 1

வெள்ளை விளிசங்கிடங் கையில் கொண்ட
　　விமலனெனக் குருக்காட்டான்
உள்ளம் புகுந்தென்னை நைவித்து
　　நாளுமுயிர் பெய்து கூத்தாட்டுக் காணும்
கள்ளவிழ் செண்பகப் பூமலர் கோதிக்
　　களித்திசை பாடுங் குயிலே !
மெள்ளவிருந்து மிழற்றி மிழற்றாது என்
　　வேங்கடவன்வரக் கூவாய். 2

மாதலிதேர் முன்புகோல் கொள்ள
　　மாயனிராவணன் மேல் சரமாரி
தாய்தலை அற்றற்று வீழத் தொடுத்த
　　தலைவன் வரவெங்குங் காணேன்
போதலர் காவில் புதுமணம் நாறப்
　　பொறிவண்டின் காமரம் கேட்டு உன்
காதலியோடுடன் வாழ்குயிலே ! என்
　　கருமாணிக்கம் வரக் கூவாய். 3

என்புருகி இனவேல் நெடுங்கண்கள்
　　இமை பொருந்தா பல நாளும்
துன்பக் கடல்புக்கு வைகுந்த னென்பது ஓர்
　　தோணி பெறாது உழல்கின்றேன்
அன்புடையாரைப் பிரிவுறு நோ
　　யதுநீயு மறிதி குயிலே !
பொன்புரை மேனிக்கருளக் கொடியுடைப்
　　புண்ணியனை வரக் கூவாய். 4

மென்னடை யன்னம் பரந்து விளையாடும்
வில்லி புத்தூ ருறைவான்றன்
பொன்னடி காண்பதோ ராசையினால் என்
பொருகயற் கண்ணிணை துஞ்சா
இன்னடிசி லொடு பாலமு தூட்டி
எடுத்தவென் கோலக் கிளியை
உன்னொடு தோழமை கொள்ளுவன் குயிலே!
உலகளந்தான் வரக் கூவாய். 5

எத்திசையு மமரர் பணிந் தேத்தும்
இருடீ கேசன் வலிசெய்ய
முத்தன்ன வெண்முறுவல் செய்ய வாயும்
முலையும்அழ கழிந்தேன் நான்
கொத்தலர் காவில் மணித்தடங் கண்படை
கொள்ளும் இளங்குயிலே! என்
தத்துவனை வரக் கூகிற்றியாகில்
தலையல்லால் கைம்மா றிலேனே. 6

பொங்கிய பாற்கடல் பள்ளி கொள்வானைப்
புணர்வதோ ராசையினால் என்
கொங்கை கிளர்ந்து குமைத்துக் குதுகலித்து
ஆவியை யாகுலஞ் செய்யும்
அங்குயிலே! உனக் கென்ன மறைந்துறைவு?
ஆழியும் சங்குமொண் தண்டும்
தங்கியகையவனைவரக் கூவில் நீ
சாலத் தருமம் பெறுதி. 7

சார்ங்கம் வளைய வலிக்கும் தடக்கைச்
சதுரன் பொருத்த முடையன்
நாங்கள் எம்மிலிருந் தொட்டியகச் சங்கம்
நானு மவனும் அறிதும்
தேங்கனிமாம் பொழில் செந்தளிர் கோதும்
சிறுகுயிலே! திருமாலை
ஆங்கு விரைந் தொல்லைக் கூகிற்றியாகில்
அவனை நான் செய்வன காணே. 8

பைங்கிளி வண்ணன் சிரீதர னென்பதுஓர்
பாசத் தகப்பட் டிருந்தேன்
பொங்கொளி வண்டிரைக்கும் பொழில்வாழ் குயிலே!
குறிக்கொண் டிதுநீ கேள்
சங்கொடு சக்கரத்தான் வரக் கூவுதல்
பொன்வளை கொண்டு தருதல்
இங்குள்ள காவினில் வாழக் கருதில்
இரண்டத் தொன்றேல் திண்ணம் வேண்டும். 9

அன்று லகமளந்தானை யுகந்து
அடிமைக் கணவன் வலிசெய்ய
தென்றலுந் திங்களு மூடறுத்து
என்னை நலியு முறைமை யறியேன்
என்றும் இக்காவி லிருந்திருந்து
என்னைத் ததர்த்தாதே நீயும் குயிலே!
இன்று நாராயணனை வரக் கூவாயேல்
இங்குத்தை நின்றும் துரப்பன். 10

விண்ணுற நீண்டடி தாவி யமைந்தனை
வேற்கண் மடந்தை விரும்பி
கண்ணுற வென்கடல் வண்ணனைக் கூவு
கருங்குயிலே! என்ற மாற்றம்
பண்ணுறுநான் மறையோர் புதுவை மன்னன்
பட்டர்பிரான் கோதை சொன்ன
நண்ணுறு வாசக மாலை வல்லார்
நமோ நாராயணாய வென்பாரே. 11

VI

[கோவிந்தனைத்திருமணஞ் செய்து கொள்வதாகத்தான் கண்டகனவினைத்தலைவி தோழிக்குக் கூறுதல்.]

வாரணமாயிரம் சூழவலஞ் செய்து
நாரண நம்பி நடக்கின்றா னென்றெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான். 1

நாளை வதுவை மணமென்று நாளிட்டு
பாளை கமுகு பரிசுடைப் பந்தற்கீழ்
கோளரி மாதவன் கோவிந்த னென்பானோர்
காளைபுகுதக் கனாக்கண்டேன் தோழீ! நான். 2

இந்திர னுள்ளிட்ட தேவர்குழாமெல்லாம்
வந்திருந் தென்னை மகட்பேசி மந்திரித்து
மந்திரக் கோடியுடுத்தி மணமாலை
அந்தரி சூட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான். 3

நால்திசைத் தீர்த்தம் கொணர்ந்து நனிநல்கி
பார்ப்பனச் சிட்டர்கள் பல்லாரெடுத் தேத்தி
பூப்புனை கண்ணிப் புனிதனோடென் தன்னை
காப்பு நாண்கட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான். 4

கதிரொளி தீபம் கலசமுட னேந்தி
சதிரிள மங்கையர் தாம்வந்தெதிர் கொள்ள
மதுரையார் மன்னன் அடிநிலை தொட்டு எங்கும்
அதிரப் புகுதக் கனாக்கண்டேன் தோழீ! நான். 5

மத்தளங் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத்தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பிமது சூதன் வந்து என்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீ! நான். 6

வாய்நல்லார் நல்ல மறையோதி மந்திரத்தால்
பாசிலைநாணல் படுத்துப் பரிதிவைத்து
காய்சின மாகளிறன் னான்என் கைப்பற்றி
தீவலஞ் செய்யக் கனாக்கண்டேன் தோழீ! நான். 7

இம்மைக்கு மேழேழ் பிறவிக்கும் பற்றாவான்
நம்மை யுடையவன் நாராயணன் நம்பி
செம்மை யுடைய திருக்கையால் தாள்பற்றி
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீ! நான். 8

வரிசிலை வாள்முகத்து என்னை மார்தாம் வந்திட்டு
எரிமுகம் பாரித்து என்னை முன்னே நிறுத்தி
அரிமுக னச்சுதன் கைம்மே லென்கை வைத்து
பொரிமுகந் தட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான். 9

குங்கும மப்பிக் குளிர்சாந்தம் மட்டித்து
மங்கல வீதிவலஞ் செய்து மணநீர்
அங்கவ னோடும் உடன் சென்றங் கானைமேல்
மஞ்சன மாட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான். 10

ஆயனுக்காகத் தான்கண்ட கனாவினை
வேயர்புகழ் வில்லிபுத்தூர்க் கோன் கோதைசொல்
தூயதமிழ்மாலை ஈரைந்தும் வல்லவர்
வாயு நன்மக்களைப் பெற்று மகிழ்வரே. 11

VII

[பாஞ்சசன்னியத்தைப் பற்பநாபனோடு பெருஞ்சுற்றமாக்குதல்.]

கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ?
மருப்பொசித்த மாதவன் தன்வாய்ச் சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே! 1

கடலில் பிறந்து கருதாது பஞ்ச சனன்
உடலில் வளர்ந்துபோய் ஊழியான் கைத்தலத்
திடரில் குடியேறித் தீய வசுரர்
நடலைப்பட முழங்கும் தோற்றத்தாய் நற்சங்கே! 2

தடவரையின் மீதேசரற்கால சந்திரன்
இடையு வாவில்வந்து எழுந்தாலேபோல நீயும்
வடமதுரையார் மன்னன் வாசுதேவன் கையில்
குடியேறி வீற்றிருந்தாய் கோலப் பெருஞ்சங்கே! 3

சந்திர மண்டலம்போல் தாமோதரன் கையில்
அந்தர மொன்றின்றி ஏறியவன் செவியில்
மந்திரம் கொள்வாயே போலும் வலம்புரியே!
இந்திரனு முன்னோடு செல்வத்துக் கேலானே. 4

உன்னோடுடனே ஒருகடலில் வாழ்வாரை
இன்னாரினையாரென்று எண்ணுவா ரில்லைகாண்
மன்னாகி நின்றமதுசூதன் வாயமுதம்
பன்னாளு முண்கின்றாய் பாஞ்ச சன்னியமே! 5

போய்த்தீர்த்த மாடாதே நின்ற புணர்மருதம்
சாய்த்தீர்த்தான் கைத்தலத்தே ஏறிக்குடிகொண்டு
சேய்த் தீர்த்தமாய் நின்ற செங்கண்மால் தன்னுடைய
வாய்த் தீர்த்தம் பாய்ந்தாட வல்லாய் வலம்புரியே! 6

செங்கமல நாண்மலர்மேல் தேனுகருமன்னம்போல்
செங்கண் கருமேனி வாசுதேவனுடைய
அங்கைத்தலமேறி அன்னவசஞ் செய்யும்
சங்கரையா! உன் செல்வம் சாலவழகியதே. 7

உண்பது சொல்லில் உலகளந்தான் வாயமுதம்
கண்படை கொள்ளில் கடல் வண்ணன் கைத்தலத்தே
பெண்படை யாருன்மேல்பெரும் பூசல் சாற்றுகின்றூர்
பண்பல செய்கின்றூய் பாஞ்சசன்னியமே! 8

பதினுருமாயிரவர் தேவிமார் பார்த்திருப்ப
மதுவாயில் கொண்டாற் போல்மாதவன் தன்வாயமுதம்
பொதுவாக உண்பதனைப்புக்கு நீயுண்டக்கால்
சிதையாரோ! உன்னேடு செல்வப்பெருஞ்சங்கே! 9

பாஞ்சசன்னியத்தைப் பற்ப நாபனேடும்
வாய்ந்த பெருஞ்சுற்றமாக்கிய வண்புதுவை
ஏய்ந்த புகழ்ப்பட்டர் பிரான்கோதை தமிழீரைந்தும்
ஆய்ந்தேத்தவல்லாரவரு மணுக்கரே. 10

VIII

[மேக விடுதூது.]

விண்ணீல மேலாப்பு விரித்தாற்போல் மேகங்காள்!
தெண்ணீர் பாய்வேங்கடத்து என்திருமாலும் போந்தானே?
கண்ணீர்கள் முலைக்குவட்டில் துளிசோரச் சோர்வேனை
பெண்ணீர்மை யீடழிக்கும்இது தமக்கோர் பெருமையே. 1

மாமுத்த நிதிசொரியும் மாமுகில்காள்! வேங்கடத்துச்
சாமத்தினிறங்கொண்ட தாளாளன் வார்த்தை யென்னே!
காமத்தீயுள் புகுந்துகதுவப்பட்டி டைக்கங்குல்
ஏமத்தோர் தென்றலுக்கு இங்கிலக்காய்நானிருப்பேனே. 2

ஒளிவண்ணம் வளைசிந்தை உறக்கத்தோடிவை யெல்லாம்
எளிமையாலிட் டென்னை ஈடழியப் போயின வால்
குளிரருவிவேங்கடத்து என் கோவிந்தன் குணம்பாடி
அளியத்தமேகங்காள் ! ஆவிகாத்திருப்பேனே. 3

மின்னாகத் தெழுகின்ற மேகங்காள் ! வேங்கடத்துத்
தன்னாகத்திருமங்கை தங்கிய சீர்மார்வர்க்கு
என்னாகத்திளங் கொங்கை விரும்பித்தாம் நாள்தோறும்
பொன்னாகம்புல் குதற்கு என்புரிவுடைமை செப்புமினே. 4

வான்கொண்டுகிளர்ந்தெழுந்த மாமுகில்காள் ! வேங்கடத்துத்
தேன்கொண்ட மலர்சிதறத் திரண்டேறிப் பொழிவீர்காள் !
ஊன்கொண்ட வள்ளுகிரால் இரணியனையுடலிடந்தான்
தான்கொண்ட சரிவளைகள் தருமாகில் சாற்றுமினே. 5

சலங்கொண்டு கிளர்ந்தெழுந்த தண்முகில்காள் ! மாவலியை
நிலங்கொண்டான் வேங்கடத்தே நிரந்தேறிப் பொழிவீர்காள் !
உலங்குண்ட விளங்கனிபோல் உள்மெலியப்புகுந்து என்னை
நலங்கொண்ட நாரணற்கு என்நடலைநோய் செப்புமினே. 6

சங்கமாகடல் கடைந்தான்தண் முகில்காள் ! வேங்கடத்துச்
செங்கண்மால் சேவடிக்கீழ் அடிவீழ்ச்சி விண்ணப்பம்
கொங்கைமேல் குங்குமத்தின் குழம் பழியப்புகுந்து ஒருநாள்
தங்குமேல் என்னாவிதங்குமென்றுரையீரே. 7

கார்காலத்தெழுகின்ற கார்முகில்காள் ! வேங்கடத்துப்
போர்காலத்தெழுந்தருளிப் பொருதவனார் பேர்சொல்லி
நீர்காலத்தெருக்கின்அம் பழவிலைபோல் வீழ்வேனை
வார்காலத்தொருநாள் தம்வாசகந்தந்தருளாரே. 8

மதயானைபோலெழுந்த மாமுகில்காள் ! வேங்கடத்தைப்
பதியாக வாழ்வீர்காள் ! பாம்பணையான் வார்த்தை என்னே !
கதியென்றும் தானாவான்கருதாது ஓர்பெண்கொடியை
வதைசெய்தானென்னும் சொல்வையகத்தார் மதியாரே. 9

நாகத்தினணையானை நன்னுதலாள் நயந்து உரைசெய்
மேகத்தை வேங்கடக் கோன் விடுதூதில் விண்ணப்பம்
போகத்தில் வழுவாத புதுவையர்கோன் கோதைதமிழ்
ஆகத்துவைத்துரைப் பாரவர் அடியாராகுவரே. 10

IX

[திருமாலிருஞ் சோலைச் சுந்தரனை வழிபடுதல்.]

சிந்துரச் செம்பொடிப்போல் திருமாலிருஞ்சோலையெங்கும்
இந்திர கோபங்களே எழுந்தும் பரந்திட்டனவால்
மந்தரம் நாட்டி அன்று மதுரக்கொழுஞ்சாறுகொண்ட
சுந்தரத்தோளுடையான் சுழலையில் நின்றுய்துங்கோலோ ? 1

போர்க்களிறு பொரும்மாலிருஞ்சோலையம் பூம்புறவில்
தார்க்கொடிமுல்லை களும்தவளநகை காட்டுகின்ற
கார்க்கொள் படாக்கள் நின்றுகழறிச் சிறிக்கத் தரியேன்
ஆர்க்கிடுகோ ? தோழீ ! அவன்தார் செய்த பூசலையே. 2

கருவிளை யொண்மலர்காள் ! காயாமலர்காள் ! திருமால்
உருவொளிகாட்டுகின்றீர் எனக்குய் வழக்கொன்றுரையீர்
திருவிளையாடுதிண்டோள் திருமாலிருஞ்சோலை நம்பி
வரிவளையில் புகுந்து வந்திபற்றும் வழக்குளதே. 3

பைம்பொழில் வாழ்குயில்காள் ! மயில்காள் ! ஒண்கருவிளைகாள் !
வம்பக்களங்கனிகாள் ! வண்ணப் பூவைநறுமலர்காள் !
ஐம்பெரும் பாதகர்காள் ! அணிமாலிருஞ்சோலை நின்ற
எம்பெருமானுடையநிறம் உங்களுக்கு என் செய்வதே ? 4

துங்கமலர்ப் பொழில்சூழ் திருமாலிருஞ் சோலைநின்ற
செங்கட்கரு முகிலின் திருவுருப்போல் மலர்மேல்
தொங்கிய வண்டினங்காள் ! தொகுபூஞ்சுனைகாள் ! சுனையில்
தங்கு செந்தாமரைகாள் ! எனக்கோர் சரண்சாற்றுமினே. 5

நாறுநறும்பொழில் மாலிருஞ்சோலை நம்பிக்கு நான்
நூறுதடாவில் வெண்ணெய் வாய்நேர்ந்து பராவிவைத்தேன்
நூறுதடாநிறைந்த அக்காரவடிசில் சொன்னேன்
ஏறுதிருவுடையான் இன்றுவந்திவை கொள்ளுங்கொலோ ? 6

இன்றுவந்தித்தனையும் அமுது செய்திடப்பெறில் நான்
ஒன்று நூறாயிரமாக் கொடுத்துப் பின்னுமா ளுஞ்செய்வன்,
தென்றல் மணங்கமழும் திருமாலிருஞ்சோலை தன்னுள்
நின்றபிரான் அடியேன் மனத்தேவந்து நேர்படிலே. 7

காலை யெழுந்திருந்து கரிய குருவிக் கணங்கள்
மாலின் வரவு செல்லி மருள்பாடுதல் மெய்ம்மைகொலோ?
சோலை மலைப் பெருமான் துவராபதி யெம்பெருமான்
ஆலினிலைப் பெருமான் அவன் வார்த்தை யுரைக்கின்றதே. 8

கோங்கலரும் பொழில்மாலிருஞ் சோலையில் கொன்றைகள் மேல்
தூங்கு பொன்மாலைகளோடு உடனாய் நின்று தூங்குகின்றேன்
பூங்கொள் திருமுகத்து மடுத்தூதிய சங்கொலியும்
சார்ங்கவில் நாணொலியும் தலைப்பெய்வ தெஞ்ஞான்று கொலோ? 9

சந்தொடு காரகிலும் சுமந்து தடங்கள் பொருது
வந்திழியுஞ் சிலம்பாறுடை மாலிருஞ் சோலை நின்ற
சுந்தரனைச் சுரும்பார் குழல் கோதை தொகுத்துரைத்த
செந்தமிழ்ப் பத்தும் வல்லார் திருமாலடி சேர்வர்களே. 10

X

[தலைவி பிரிந்த நிலையில் வருந்திக் கூறுதல்.]

கார்க்கோடல் பூக்காள்! கார்க்கடல் வண்ணனென்மேல் உம்மைப்
போர்க்கோலஞ் செய்து போரவிடுத்தவ னெங்குற்றான்?
ஆர்க்கோவினி நாம் பூசலிடுவது? அணிதுழாய்த்
தார்க்கோடும் நெஞ்சந்தன்னைப் படைக்க வல்லே னந்தோ! 1

மேல்தோன்றிப் பூக்காள்! மேலுலகங்களின் மீதுபோய்
மேல்தோன்றுஞ் சோதி வேத முதல்வர் வலங்கையின்
மேல்தோன்று மாழியின் வெஞ்சுடர் போலச்சுடாது எம்மை
மாற்றாலைப் பட்டவர் கூட்டத்து வைத்துக் கொள்கிற்றிரே. 2

கோவை மணாட்டி! நீஉன் கொழுங்கனிகொண்டு எம்மை
ஆவிதொலைவியேல் வாயழகர்தம்மை யஞ்சுதும்
பாவியேன் தோன்றிப் பாம்பணை யார்க்கும் தம் பாம்புபோல்
நாவுமிரண்டுள வாய்த்து நாணிலியேனுக்கே. 3

முல்லைப் பிராட்டி! நீஉன் முறுவல்கள்கொண்டு எம்மை
அல்லல் விளைவியேல் ஆழி நங்காய்! உன்னடைக்கலம்
கொல்லை யரக்கியை மூக்கரிந்திட்ட குமரனார்
சொல்லும் பொய்யானால் நானும் பிறந்தமை பொய்யன்றே. 4

பாடுங்குயில்காள்! ஈதென்னபாடல்? நல் வேங்கட
நாடர் நமக்கு ஒரு வாழ்வுதந்தால் வந்துபாடுமின்
ஆடும்கருளக் கொடியுடையார் வந்தருள் செய்து
கூடுவராயிடில் கூவிநும் பாட்டுக்கள் கேட்டுமே. 5

கணமாமயில்காள்! கண்ணபிரான் திருக்கோலம் போன்று
அணிமாநடம் பயின்றாடுகின்றீர்க்கு அடி வீழ்கின்றேன்
பணமாடரவணைப் பற்பல காலமும் பள்ளிகொள்
மணவாளர் நம்மை வைத்த பரிசிது காண்மினே. 6

நடமாடித் தோகைவிரிக்கின்ற மாமயில்காள்! உம்மை
நடமாட்டங் காணப்பாவியேன் நானோர் முதலிலேன்
குடமாடு கூத்தன் கோவிந்தன் கோமிறைசெய்து எம்மை
உடைமாடு கொண்டான் உங்கட்கினி யொன்று போதுமே? 7

மழையே! மழையே! மண்புறம்பூசி உள்ளாய் நின்று
மெழுகூற்றினாற்போல் ஊற்று நல் வேங்கடத்துள் நின்ற
அழகப் பிரானார்தம்மை என்னெஞ் சத்தகப்படத்
தழுவிநின்றென்னைத்ததைத்துக்கொண்டூற்றவும் வல்லையே. 8

கடலே! கடலே! உன்னைக்கடைந்து கலக்குறுத்து
உடலுள் புகுந்து நின்றூற லறுத்தவற்கு என்னையும்
உடலுள் புகுந்து நின்றூற லறுக்கின்றமாயற்கு என்
நடலைகளெல்லாம் நாகணைக்கே சென்றுரைத்தியே. 9

நல்லவென் றோழி! நாகணை மிசை நம்பரர்
செல்வர் பெரியர் சிறுமானிடவர் நாம் செய்வதென்?
வில்லிபுதுவை விட்டு சித்தர் தங்கள் தேவரை
வல்ல பரிசு வருவிப்பரேல் அது காண்டுமே. 10

XI

[தலைவி மாயவன் செய்கைக்கு மனம் பொருது தாய்மார் முதலியோரை நோக்கி வருந்திக் கூறுதல்.]

தாமுகக்கும் தங்கையில் சங்கமே போலாவோ?
யாமுகக்கு மெங்கையில் சங்கமுமேந்திழையீர்!
தீமுகத்து நாகணைமேல் சேரும் திருவரங்கர்
ஆ! முகத்தை நோக்காரால் அம்மனே! அம்மனே! 1

எழிலுடைய அம்மனைமீர்! என்னரங்கத் தின்னமுதர்
குழலழகர் வாயழகர் கண்ணழகர் கொப்பூழில்
எழுகமலப் பூவழக ரெம்மானார் என்னுடைய
கழல்வளையைத் தாமும் கழல்வளையே யாக்கினரே. 2

பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும்
அங்காதுஞ் சோராமே ஆள்கின்ற வெம்பெருமான்
செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார்
எங்கோல் வளையால் இடர்தீர்வ ராகாதே? 3

மச்சணிமாட மதிளரங்கர் வாமனனார்
பச்சைப்பசுந் தேவர்தாம் பண்டு நீரேற்ற
பிச்சைக் குறையாகி என்னுடைய பெய்வளைமேல்
இச்சையுடையரேல் இத்தெருவே போதாரோ? 4

பொல்லாக் குறளுருவாய்ப் பொற்கையில் நீரேற்று
எல்லாவுலகும் அளந்துகொண்ட வெம்பெருமான்
நல்லார்கள் வாழும் நளிரரங்க நாகணை யான்
இல்லா தோம்கைப் பொருளும் எய்து வானொத்துளனே. 5

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரிநீர்
செய்ப்புரளவோடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்குமெய்தாது நான்மறையின்
சொற்பொருளாய்நின்று ஆரென்மெய்ப்பொருளும்கொண்டாரே. 6

உண்ணாது றங்காது ஒலிகடலை யூடறுத்துப்
பெண்ணாக்கை யாப்புண்டு தாமுற்ற போதெல்லாம்
திண்ணார் மதிள்சூழ் திருவரங்கச் செல்வனார்
எண்ணாதே தம்முடைய நன்மைகளே எண்ணுவரே. 7

பாசிதூர்த்துக் கிடந்த பார்மகட்கு பண்டொருநாள்
மாசுடம்பில் நீர்வார மானமிலாப் பன்றியாம்
தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனார்
பேசியிருப்பனகள் பேர்க்கவும் பேராவே. 8

கண்ணாலங் கோடித்துக் கன்னிதன்னைக் கைப்பிடிப்பான்
திண்ணார்ந்திருந்த சிசுபாலன் தேசழிந்து
அண்ணாந்திருக்கவே ஆங்கவளைக் கைப்பிடித்த
பெண்ணாளன் பேணுமூர்பேரு மரங்கமே. 9

செம்மையுடைய திருவரங்கர்தாம் பணித்த
மெய்ம்மைப் பெருவார்த்தைவிட்டு சித்தர் கேட்டிருப்பர்
தம்மை யுகப்பாரைத் தாமுகப்பரென்னும் சொல்
தம்மிடையே பொய்யானல் சாதிப்பா ராரினியே? 10

XII

[தலைவி கண்ணனுள்ள விடத்தில் தன்னை உய்த்திடுமாறு உற்றுரை வேண்டுதல்.]

மற்றிருந்தீர்கட்கு அறியலாகா
மாதவ னென்பதோ ரன்புதன்னை
உற்றிருந் தேனுக்கு ரைப்பதெல்லாம்
ஊமையரோடு செகுடர் வார்த்தை
பெற்றிருந்தாளை யொழியவே போய்ப்
பேர்த்தொரு தாயில் வளர்ந்த நம்பி
மற்பொருந்தாமற் களமடைந்த
மதுரைப்புறத் தென்னை யுய்த்திடுமின். 1

நாணி யினியோர் கருமமில்லை
நாலயலாரு மறிந்தொழிந்தார்
பாணியா தென்னை மருந்து செய்து
பண்டு பண்டாக்க வுறுதிராகில்
மாணியுருவா யுலகளந்த
மாயனைக் காணில் தலைமறியும்
ஆணையால் நீரென்னைக் காக்கவேண்டில்
ஆய்ப்பாடிக்கே யென்ணை யுய்த்திடுமின். 2

தந்தையும் தாயுமுற்றாரும் நிற்கத்
தனிவழி போயினு ளென்னும் சொல்லு
வந்த பின்னைப் பழிகாப்பரிது
மாயவன் வந்துருக் காட்டுகின்றான்
கொந்தள மாக்கிப் பரக்கழித்துக்
குறும்பு செய்வானோர் மகனைப் பெற்ற
நந்தகோபாலன் கடைத்தலைக்கே
நள்ளிருட்கணென்னை யுய்த்திடுமின். 3

அங்கைத் தலத்திடை யாழிகொண்டா
னவன்முகத் தன்றி விழியேனென்று
செங்கச்சுக் கொண்டு கண்ணுடையார்த்துச்
சிறுமானிட வரைக்காணில் நாணும்
கொங்கைத் தலமிவை நோக்கிக் காணீர்
கோவிந்தனுக் கல்லால் வாயில் போகா
இங்குத்தை வாழ்வை யொழியவே போய்
யமுனைக் கரைக்கென்னை யுய்த்திடுமின். 4

ஆர்க்குமென் னோயிதறிய லாகாது
அம்மனைமீர்! துழதிப் படாதே
கார்க்கடல் வண்ணனென்பா னொருவன்
கைகண்ட யோகம் தடவத்தீரும்
நீர்க்கரை நின்ற கடம்பை யேறிக்
காளிய னுச்சியில் நட்டம் பாய்ந்து
போர்க்களமாக நிருத்தம் செய்த
பொய்கைக் கரைக்கென்னை யுய்த்திடுமின். 5

கார்த்தண் முகிலும் கருவிளையும்
காயா மலரும் கமலப் பூவும்
ஈர்த்திடுகின்றன வென்னை வந்திட்டு
இருடீகேசன் பக்கல் போகேயென்று
வேர்த்துப் பசித்து வயிறசைந்து
வேண்டடிசி லுண்ணும்போ தீதென்று
பார்த்திருந்து நெடுநோக்குக் கொள்ளும்
பத்த விலோசநத் துய்த்திடுமின். 6

வண்ணந்திரிவும் மநங்குழைவும்
மானமிலாமையும் வாய்வெளுப்பும்
உண்ண லுறுமையு முள்மெலிவும்
ஓதநீர்வண்ண னென்பானொருவன்
தண்ணந்துழாயென் னும் மாலைகொண்டு
சூட்டத்தணியும் பிலம்பன்றன்னைப்
பண்ணழியப் பலதேவன் வென்ற
பாண்டி வடத்தென்னை யுய்த்திடுமின். 7

கற்றினம் மேய்க்கவும் மேய்க்கப் பெற்றான்
காடுவாழ் சாதியுமாகப் பெற்றான்
பற்றியுரலிடை யாப்புமுண்டான்
பாவிகாள்! உங்களுக்கேச்சுக்கொலோ?
கற்றன பேசி வசவுணாதே
காலிகளுய்ய மழைதடுத்துக்
கொற்றக் குடையாக வேந்திநின்ற
கோவர்த்தனத் தென்னை யுய்த்திடுமின். 8

கூட்டிலிருந்து கிளி எப்போதும்
கோவிந்தா! கோவிந்தா! என்றழைக்கும்
ஊட்டக்கொடாது செறுப்பனாகில்
உலகளந்தான்! என்று உயரக்கூவும்
நாட்டில் தலைப்பழி யெய்தி உங்கள்
நன்மையிழந்து தலையிடாதே
சூட்டுயர் மாடங்கள் சூழ்ந்து தோன்றும்
துவராபதிக் கென்னை யுய்த்திடுமின். 9

மன்னுமதுரை தொடக்கமாக
வண்துவராபதி தன்னளவும்
தன்னைத் தமருய்த்துப் பெய்யவேண்டித்
தாழ்குழலாள் துணிந்த துணிவை
பொன்னியல்மாடம் பொலிந்து தோன்றும்
புதுவையர்கோன் விட்டுசித்தன் கோதை
இன்னிசையாற் சொன்ன செஞ்சொல்மாலை
ஏத்தவல்லார்க்கிடம் வைகுந்தமே. 10

XIII

[தலைவி பெருமான் அணிந்த ஆடை முதலியவற்றால் தன் வாட்டத்தைத் தணிக்க வேண்டுதல்.]

கண்ணனென்னும் கருந்தெய்வம் காட்சிப் பழகிக் கிடப்பேனை
புண்ணிற் புளிப்பெய்தாற் போலப்புற நின்றழகு பேசாதே
பெண்ணின் வருத்தமறியாத பெருமானரையிற் பீதக
வண்ண வாடைகொண்டு என்னை வாட்டந்தணிய வீசீரே. 1

பாலாலிலையில் துயில்கொண்ட பரமன்வலைப் பட்டிருந்தேனை
வேலால் துன்னம் பெய்தாற்போல் வேண்டிற்றெல்லாம் பேசாதே
கோலால் நிரைமேய்த் தாயனாய்க் குடந்தைக் கிடந்த குடமாடி
நீலார் தண்ணந்துழாய் கொண்டு என்னெறி மென்குழல்மேல் சூட்டீரேல். 2

கஞ்சைக் காய்ந்த கருவில்லிக் கடைக்கணென்னும் சிறைக்கோலா
நெஞ்சூடுருவவே வுண்டுநிலையுந் தளர்ந்து நைவேனை
அஞ்சேலென்னா னவனொருவன் அவன் மார்பணிந்த வனமாலை
வஞ்சியாதே தருமாகில் மார்பில் கொணர்ந்து புரட்டீரே. 3

ஆரேயுலகத்தாற்றுவார்? ஆயர்பாடி கவர்ந்துண்ணும்
காரேறுழக்க உழக்குண்டு தளர்ந்தும் முறிந்தும் கிடப்பேனை
ஆராவமுத மனையான்றன் அமுதவாயிலூறிய
நீர்தான் கொணர்ந்து புலராமே பருக்கி யிளைப்பை நீக்கீரே. 4

அழிலுந் தொழிலு முருக்காட்டான் அஞ்சேலென்னானவனொருவன்
தழுவி முழுசிப் புகுந்தென்னைச் சுற்றிச் சுழன்று போகானால்
தழையின் பொழில்வாய் நிரைப்பின்னே நெடுமாலூதி வருகின்ற
குழலின் தொளைவாய் நீர் கொண்டு குளிரமுகத்துத் தடவீரே. 5

நடையொன்றில்லா வுலகத்து நந்தகோபன் மகனென்னும்
கொடிய கடியதிருமாலால் குளப்புக் கூறுகொளப் பட்டுப்
புடையும் பெயரகில்லேன் நான்போட்கன் மிதித்தவடிப் பாட்டில்
பொடித்தான்கொணர்ந்துபூசீர்கள்போகாவுயிரென்னுடம்பையே.6

வெற்றிக்கருளக் கொடியான்றன் மீமீதாடா வுலகத்து
வெற்ற வெறிதே பெற்றதாய் வேம்பேயாக வளர்த்தாளே
குற்றமற்ற முலைதன்னைக் குமரன் கோலப் பணைத்தோளோடு
அற்றகுற்ற மவைதீர அணைய வமுக்கிக் கட்டீரே. 7

உள்ளேயுருகி நைவேனை உளளோ இலளோ வென்னாத
கொள்ளை கொள்ளிக் குறும்பனைக் கோவர்த்தனனைக் கண்டக்கால்
கொள்ளும் பயனொன்றில்லாத கொங்கை தன்னைக் கிழங்கோடும்
அள்ளிப்பறித்திட்டவன்மார்விலெறிந்துஎன்னழலைத்தீர்வேனே. 8

கொம்மை முலைகளிடர் தீரக்கோவிந்தற்கோர்குற்றேவல்
இம்மைப் பிறவி செய்யாதே இனிப்போய்ச்செய்யுந்தவந்தானென்?
செம்மையுடைய திருமார்வில் சேர்த்தானேனுமொரு ஞான்று
மெய்ம்மை சொல்லி முகம்நோக்கி விடைதான் தருமேல் மிகநன்றே. 9

அல்லல் விளைத்த பெருமானை ஆயர்பாடிக் கணிவிளக்கை
வில்லிபுதுவை நகர் நம்பி விட்டுசித்தன் வியன்கோதை
வில்லைத் தொலைத்த புருவத்தாள் வேட்கையுற்று மிகவிரும்பும்
சொல்லைத்துதிக்க வல்லார்கள் துன்பக்கடலுள் துவளாரே. 10

XIV

[விருந்தாவனத்தே பரந்தாமனைக் கண்டமை கூறல்.]

பட்டிமேய்ந் தோர்காரேறு பலதேவற் கோர்கீழ்க்கன்றாய்
இட்டீறிட்டு விளையாடி இங்கே போதக்கண்டீரே?
இட்டமான பசுக்களை இனிது மறித்து நீரூட்டி
விட்டுக்கொண்டு விளையாட விருந்தா வனத்தே கண்டோமே. 1

அனுங்கவென்னைப் பிரிவுசெய்து ஆயர்பாடி கவர்ந்துண்ணும்
குணுங்குநாறிக் குட்டேற்றைக் கோவர்த்தனனைக் கண்டீரே?
கணங்களோடு மின்மேகம் கலந்தாற்போல வனமாலை
மினுங்க நின்று விளையாட விருந்தாவனத்தே கண்டோமே. 2

மாலாய்ப் பிறந்த நம்பியை மாலேசெய்யும் மணாளனை
ஏலாப் பொய்களுரைப்பானை இங்கே போதக் கண்டீரே?
மேலாற் பரந்தவெயில் காப்பான் வினதை சிறுவன் சிறகென்னும்
மேலாப்பின் கீழ்வருவானை விருந்தாவனத்தே கண்டோமே. 3

கார்த்தண் கமலக்கண்ணென்னும் நெடுங்கயிறு படுத்தி என்னை
ஈர்த்துக் கொண்டு விளையாடும் ஈசன்றன்னைக் கண்டீரே?
போர்த்த முத்தின் குப்பாயப் புகர்மால்யானைக் கன்றேபோல்
வேர்த்து நின்று விளையாட விருந்தா வனத்தே கண்டோமே. 4

மாதவனென் மணியினை வலையில் பிழைத்த பன்றிபோல்
ஏதுமொன்றுங் கொளத்தாரா ஈசன்றன்னைக் கண்டீரே?
மீதகவாடை யுடைதாழப் பெருங்கார் மேகக் கன்றேபோல்
வீதியார வருவானை விருந்தா வனத்தே கண்டோமே. 5

தரும மறியாக்குறும் பனத்தங்கை சாரங்க மதுவேபோல்
புருவ வட்டமழகிய பொருத்த மிலியைக் கண்டீரே?
உருவு கரிதாய்முகம் செய்தாய் உதயப் பருப்பதத்தின்மேல்
விரியுங்கதிரே போல்வானை விருந்தா வனத்தே கண்டோமே. 6

பொருத்தமுடைய நம்பியைப் புறம்போ லுள்ளும் கரியானை
கருத்தைப் பிழைத்துநின்ற அக்கருமாமுகிலைக் கண்டீரே?
அருத்தித் தாராகணங்களால் ஆரப்பெருகுவானம்போல்
விருத்தம் பெரிதாய் வருவானை விருந்தாவனத்தே கண்டோமே. 7

வெளியசங் கொன்றுடையானைப் பீதகவாடை யுடையானை
அளிநன்குடைய திருமாலை ஆழியானைக் கண்டீரே? [மேல்
களிவண்டெங்குங்கலந்தாற்போல்கமழ்பூங்குழல்கள் தடந்தோள்
மிளிரநின்று விளையாட விருந்தாவனத்தே கண்டோமே. 8

நாட்டைப் படையென்று அயன் முதலாத் தந்த நளிர் மாமலருந்தி
வீட்டைப் பண்ணி விளையாடும் விமலன் றன்னைக் கண்டீரே?
காட்டை நாடித் தேனுகனும் களிறும் புள்ளுமுடன் மடிய
வேட்டையாடி வருவானை விருந்தாவனத்தே கண்டோமே. 9

பருந்தாட் களிற்றுக் கருள்செய்த பரமன்றன்னை பாரின்மேல்
விருந்தா வனத்தே கண்டமை விட்டுசித்தன் கோதைசொல்
மருந்தாமென்று தம்மனத்தே வைத்துக்கொண்டு வாழ்வார்கள்
பெருந்தாளுடைய பிரானடிக்கீழ்ப் பிரியாதென்று மிருப்பாரே. 10

𑌗𑍋𑌦𑌾𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌃

கோதாஸ்துதி.

𑌶𑍍𑌰𑍀𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌚𑌿𑌤𑍍𑌤𑌕𑍁𑌲𑌨𑌨𑍍𑌦𑌨𑌕𑌲𑍍𑌪𑌵𑌲𑍍𑌲𑍀𑌂
𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑌰𑌾𑌜𑌹𑌰𑌿𑌚𑌨𑍍𑌦𑌨𑌯𑍋𑌗𑌦𑍃𑌶𑍍𑌯𑌾𑌂 ।
𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌕𑍍𑌷𑌮𑌾𑌂 𑌕𑌰𑍁𑌣𑌯𑌾 𑌕𑌮𑌲𑌾𑌮𑌿𑌵𑌾𑌨𑍍𑌯𑌾𑌂
𑌗𑍋𑌦𑌾𑌮𑌨𑌨𑍍𑌯𑌶𑌰𑌣𑌃 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥ 1

ஸ்ரீவிஷ்ணுசித்த குலநந்தந கல்பவல்லீம்
ஸ்ரீரங்கராஜ ஹரிசந்தந யோகத்ருச்யாம் ।
ஸாக்ஷாத் க்ஷமாம் கருணயா கமலாமிவாந்யாம்
கோதாமநந்ய சரணச் சரணம் ப்ரபத்யே ॥ 1

𑌵𑍈𑌦𑍇𑌶𑌿𑌕𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌗𑌿𑌰𑌾𑌮𑌪𑌿 𑌭𑍂𑌯𑌸𑍀𑌨𑌾𑌂
𑌵𑌰𑍍𑌣𑍇𑌷𑍁 𑌮𑌾𑌤𑌿 𑌮𑌹𑌿𑌮𑌾 𑌨𑌹𑌿 𑌮𑌾𑌦𑍃𑌶𑌾𑌂 𑌤𑍇 ।
𑌇𑌤𑍍𑌥𑌂 𑌵𑌿𑌦𑌨𑍍𑌤𑌮𑌪𑌿 𑌮𑌾𑌂 𑌸𑌹𑌸𑍈𑌵 𑌗𑍋𑌦𑍇
𑌮𑍌𑌨𑌦𑍍𑌰𑍁𑌹𑍋 𑌮𑍁𑌖𑌰𑌯𑌨𑍍𑌤𑌿 𑌗𑍁𑌣𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌦𑍀𑌯𑌾𑌃 ॥ 2

வைதேசிகச் ச்ருதிகிராமபி பூயஸீநாம்
வர்ணேஷு மாதி மஹிமா நஹி மாத்ருசாம் தே ॥
இத்தம் விதந்தமபி மாம் ஸஹஸைவ கோதே
மௌநத்ருஹோ முகரயந்தி குணாஸ் த்வதீயாஃ ॥ 2

𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑍇𑌯𑌸𑌃 𑌶𑍍𑌰𑌵𑌣𑌯𑍋𑌰𑌮𑍃𑌤𑌾𑌯𑌮𑌾𑌨𑌾𑌂
𑌤𑍁𑌲𑍍𑌯𑌾𑌂 𑌤𑍍𑌵𑌦𑍀𑌯𑌮𑌣𑌿𑌨𑍂𑌪𑍁𑌰𑌶𑌿𑌞𑍍𑌜𑌿𑌤𑌾𑌨𑌾𑌂 ।
𑌗𑍋𑌦𑍇 𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌜𑌨𑌨𑌿 𑌤𑍍𑌵𑌦𑌭𑌿𑌷𑍍𑌟𑌵𑌾𑌰𑍍𑌹𑌾𑌂
𑌵𑌾𑌚𑌂 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌮𑌧𑍁𑌰𑌾𑌂 𑌮𑌮 𑌸𑌂𑌵𑌿𑌧𑍇𑌹𑌿 ॥ 3

த்வத் ப்ரேயஸச்ச்ரவணயோ ரம்ருதாயமாநாம்
துல்யாம் த்வதீயமணிநூபுரசிஞ்ஜிதாநாம் ।
கோதே த்வமேவ ஜநநி த்வதபிஷ்டவார்ஹாம்
வாசம் ப்ரஸந்நமதுராம் மம ஸம்விதேஹி ॥ 3

𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌨𑍍𑌵𑌯𑍇𑌨 𑌦𑌧𑌤𑍀𑌂 𑌯𑌮𑍁𑌨𑌾𑌨𑍁𑌭𑌾𑌵𑌂
𑌤𑍀𑌰𑍍𑌥𑍈𑌰𑍍𑌯𑌥𑌾𑌵𑌦𑌵𑌗𑌾𑌹𑍍𑌯 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌂 𑌤𑍇 ।
𑌗𑍋𑌦𑍇 𑌵𑌿𑌕𑌸𑍍𑌵𑌰𑌧𑌿𑌯𑌾𑌂 𑌭𑌵𑌤𑍀𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍
𑌵𑌾𑌚𑌃 𑌸𑍍𑌫𑍁𑌰𑌨𑍍𑌤𑌿 𑌮𑌕𑌰𑌨𑍍𑌦𑌮𑍁𑌚𑌃 𑌕𑌵𑍀𑌨𑌾𑌮𑍍 ॥ 4

க்ருஷ்ணான்வயேந தததீம் யமுநாநுபாவம்
தீர்த்தைர் யதாவதவகாஹ்ய ஸரஸ்வதீம் தே ।
கோதே விகஸ்வரதியாம் பவதீகடாக்ஷாத்
வாசஸ் ஸ்புரந்தி மகரந்தமுசஃ கவீநாம் ॥ 4

𑌅𑌸𑍍𑌮𑌾𑌦𑍃𑌶𑌾𑌮𑌪𑌕𑍃𑌤𑍌 𑌚𑌿𑌰𑌦𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌨𑌾𑌮𑍍
𑌅𑌹𑍍𑌨𑌾𑌯 𑌦𑍇𑌵𑌿 𑌦𑌯𑌤𑍇 𑌯𑌦𑌸𑍌 𑌮𑍁𑌕𑍁𑌨𑍍𑌦𑌃 ।
𑌤𑌨𑍍𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌂 𑌨𑌿𑌯𑌮𑌿𑌤𑌸𑍍𑌤𑌵 𑌮𑍌𑌲𑌿𑌦𑌾𑌮𑍍𑌨𑌾
𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍀𑌨𑌿𑌨𑌾𑌦𑌮𑌧𑍁𑌰𑍈𑌶𑍍𑌚 𑌗𑌿𑌰𑌾𑌂 𑌨𑌿𑌗𑍁𑌮𑍍𑌭𑍈𑌃 ॥ 5

அஸ்மாத்ருசாம் அபக்ருதௌ சிரதீக்ஷிதாநாம்
அஹ்நாய தேவி தயதே யதஸௌ முகுந்தஃ ।
தந் நிச்சிதம் நியமிதஸ் தவ மௌளிதாம்நா
தந்த்ரீநிநாதமதுரைச்ச கிராம் நிகும்பைஃ ॥ 5

𑌶𑍋𑌣𑌾𑌧𑌰𑍇𑌽𑌪𑌿 𑌕𑍁𑌚𑌯𑍋𑌰𑌪𑌿 𑌤𑍁𑌙𑍍𑌗𑌭𑌦𑍍𑌰𑌾
𑌵𑌾𑌚𑌾𑌂 𑌪𑍍𑌰𑌵𑌾𑌹𑌨𑌿𑌵𑌹𑍇𑌽𑌪𑌿 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀 𑌤𑍍𑌵𑌮𑍍 ।
𑌅𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑍈𑌰𑌪𑌿 𑌰𑌸𑍈𑌰𑍍𑌵𑌿𑌰𑌜𑌾 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌾𑌤𑍍
𑌗𑍋𑌦𑌾𑌪𑌿 𑌦𑍇𑌵𑌿 𑌕𑌮𑌿𑌤𑍁𑌰𑍍𑌨𑌨𑍁 𑌨𑌰𑍍𑌮𑌦𑌾𑌸𑌿 ॥ 6

சோணாதரேபி குசயோரபி துங்கபத்ரா
வாசாம் ப்ரவாஹவிபவேபி ஸரஸ்வதீ த்வம் ।
அப்ராக்ருதைரபி ரஸைர் விரஜாஸ் ஸ்வபாவாத்
கோதாபி தேவி கமிதுர் நநு நர்மதாஸி ॥ 6

𑌵𑌲𑍍𑌮𑍀𑌕𑌤𑌃 𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍋 𑌵𑌸𑍁𑌧𑌾𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑍇
𑌜𑌾𑌤𑍋 𑌬𑌭𑍂𑌵 𑌸 𑌮𑍁𑌨𑌿𑌃 𑌕𑌵𑌿𑌸𑌾𑌰𑍍𑌵𑌭𑍌𑌮𑌃 ।
𑌗𑍋𑌦𑍇 𑌕𑌿𑌮𑌦𑍍𑌭𑍁𑌤𑌮𑌿𑌦𑌂 𑌯𑌦𑌮𑍀 𑌸𑍍𑌵𑌦𑌨𑍍𑌤𑍇
𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑌮𑌕𑌰𑌨𑍍𑌦𑌨𑌿𑌭𑌾𑌃 𑌪𑍍𑌰𑌬𑌨𑍍𑌧𑌾𑌃 ॥ 7

வல்மீகதச் ச்ரவணதோ வஸுதாத்மநஸ் தே
ஜாதோ பபூவ ஸமுநிஃ கவிஸார்வபௌமஃ ।
கோதே கிமத்புதமிதம் யதமீ ஸ்வதந்தே
வக்த்ராரவிந்தமகரந்தநிபாஃ ப்ரபந்தாஃ ॥ 7

𑌭𑍋𑌕𑍍𑌤𑍁𑌂 𑌤𑌵 𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑌮𑌂 𑌭𑌵𑌤𑍀𑌵 𑌗𑍋𑌦𑍇
　　𑌭𑌕𑍍𑌤𑌿𑌂 𑌨𑌿𑌜𑌾𑌂 𑌪𑍍𑌰𑌣𑌯𑌭𑌾𑌵𑌨𑌯𑌾 𑌗𑍃𑌣𑌨𑍍𑌤𑌃 ।
𑌉𑌚𑍍𑌚𑌾𑌵𑌚𑍈𑌰𑍍𑌵𑌿𑌰𑌹𑌸𑌙𑍍𑌗𑌮𑌜𑍈𑌰𑍁𑌦𑌨𑍍𑌤𑍈𑌃
　　𑌶𑍃𑌙𑍍𑌗𑌾𑌰𑌯𑌨𑍍𑌤𑌿 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌗𑍁𑌰𑌵𑌸𑍍𑌤𑍍𑌵𑌦𑍀𑌯𑌾𑌃 ॥ 8

போக்தும் தவ ப்ரியதமம் பவதீவ கோதே
　　பக்திம் நிஜாம் ப்ரணயபாவநயா க்ருணந்தஃ ।
உச்சாவசைர் விரஹ ஸங்கமஜைருதந்தைஃ
　　ச்ருங்காரயந்தி ஹ்ருதயம் குரவஸ் த்வதீயாஃ 8

𑌮𑌾𑌤𑌃 𑌸𑌮𑍁𑌤𑍍𑌥𑌿𑌤𑌵𑌤𑍀𑌮𑌧𑌿𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌚𑌿𑌤𑍍𑌤𑌂
　　𑌵𑌿𑌶𑍍𑌵𑍋𑌪𑌜𑍀𑌵𑍍𑌯𑌮𑌮𑍃𑌤𑌂 𑌵𑌚𑌸𑌾 𑌦𑍁𑌹𑌾𑌨𑌾𑌮𑍍 ।
𑌤𑌾𑌪𑌚𑍍𑌛𑌿𑌦𑌂 𑌹𑌿𑌮𑌰𑍁𑌚𑍇𑌰𑌿𑌵 𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌮𑌨𑍍𑌯𑌾𑌮𑍍
　　𑌸𑌨𑍍𑌤𑌃 𑌪𑌯𑍋𑌧𑌿𑌦𑍁𑌹𑌿𑌤𑍁𑌃 𑌸𑌹𑌜𑌾𑌂 𑌵𑌿𑌦𑍁𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌮𑍍 ॥ 9

மாதஸ் ஸமுத்திதவதீமதிவிஷ்ணுசித்தம்
　　விச்வோபஜீவ்ய மம்ருதம் வசஸா துஹாநாம் ।
தாபச்சிதம் ஹிமருசேரிவ மூர்த்திமந்யாம்
　　ஸந்தஃ பயோதிதுஹிதுஸ் ஸஹஜாம் விதுஸ்த்வாம் ॥ 9

𑌤𑌾𑌤𑌸𑍍𑌤𑍁 𑌤𑍇 𑌮𑌧𑍁𑌭𑌿𑌦𑌃 𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌲𑍇𑌶𑌵𑌶𑍍𑌯𑌾𑌤𑍍
　　𑌕𑌰𑍍𑌣𑌾𑌮𑍃𑌤𑍈𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌶𑌤𑍈𑌰𑌨𑌵𑌾𑌪𑍍𑌤𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍍 ।
𑌤𑍍𑌵𑌨𑍍𑌮𑍌𑌲𑌿𑌗𑌨𑍍𑌧𑌸𑍁𑌭𑌗𑌾𑌮𑍁𑌪𑌹𑍃𑌤𑍍𑌯 𑌮𑌾𑌲𑌾𑌂
　　𑌲𑍇𑌭𑍇 𑌮𑌹𑌤𑍍𑌤𑌰𑌪𑌦𑌾𑌨𑍁𑌗𑍁𑌣𑌂 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌮𑍍 ॥ 10

தாதஸ்து தே மதுபிதஸ் ஸ்துதி லேசவச்யாத்
　　கர்ணும்ருதைச் ச்ருதிசதை ரநவாப்த பூர்வம் ।
த்வந் மௌளிகந்த ஸுபகாமுபஹ்ருத்ய மாலாம்
　　லேபே மகத்தர பதாநுகுணம் ப்ரஸாதம் ॥ 10

𑌦𑌿𑌕𑍍 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌪𑌿 𑌪𑌰𑌿𑌪𑌕𑍍𑌤𑍍𑌰𑌿𑌮𑌪𑍁𑌣𑍍𑌯𑌲𑌭𑍍𑌯𑌾𑌤𑍍
　　𑌸𑌰𑍍𑌵𑍋𑌤𑍍𑌤𑌰𑌾 𑌭𑌵𑌤𑌿 𑌦𑍇𑌵𑌿 𑌤𑌵𑌾𑌵𑌤𑌾𑌰𑌾𑌤𑍍 ।
𑌯𑌤𑍍𑌰𑍈𑌵 𑌰𑌙𑍍𑌗𑌪𑌤𑌿𑌨𑌾 𑌬𑌹𑍁𑌮𑌾𑌨𑌪𑍂𑌰𑍍𑌵𑌂
　　𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌲𑍁𑌨𑌾𑌪𑌿 𑌨𑌿𑌯𑌤𑌂 𑌨𑌿𑌹𑌿𑌤𑌾𑌃 𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑌾𑌃 ॥ 11

திக் தக்ஷிணுபி பரிபக்த்ரிம புண்யலப்யாத்
　　ஸர்வோத்தரா பவதி தேவி தவாவதாராத் ।
யத்ரைவ ரங்கபதிநா பஹுமாநபூர்வம்
　　நித்ராளுநாபி நியதம் நிஹிதாஃ கடாக்ஷாஃ ॥ 11

𑌪𑍍𑌰𑌾𑌯𑍇𑌣 𑌦𑍇𑌵𑌿 𑌭𑌵𑌤𑍀𑌵𑍍𑌯𑌪𑌦𑍇𑌶𑌯𑍋𑌗𑌾𑌤𑍍
𑌗𑍋𑌦𑌾𑌵𑌰𑍀 𑌜𑌗𑌦𑌿𑌦𑌂 𑌪𑌯𑌸𑌾 𑌪𑍁𑌨𑍀𑌤𑍇 ।
𑌯𑌸𑍍𑌯𑌾𑌂 𑌸𑌮𑍇𑌤𑍍𑌯 𑌸𑌮𑌯𑍇𑌷𑍁 𑌚𑌿𑌰𑌂 𑌨𑌿𑌵𑌾𑌸𑌾𑌤𑍍
𑌭𑌾𑌗𑍀𑌰𑌥𑍀𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌯𑍋𑌽𑌪𑌿 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌃 ॥ 12

ப்ராயேண தேவி பவதீவ்யபதேசயோகாத்
கோதாவரீ ஜகதிதம் பயஸா புநீதே ।
யஸ்யாம் ஸமேத்ய ஸமயேஷு சிரம் நிவாஸாத்
பாகீரதீப்ரப்ருதயோபி பவந்தி புண்யாঃ ॥ 12

𑌨𑌾𑌗𑍇𑌶𑌯𑌸𑍍𑌸𑍁𑌤𑌨𑍁 𑌪𑌕𑍍𑌷𑌿𑌰𑌥𑌃 𑌕𑌥𑌂 𑌤𑍇
𑌜𑌾𑌤𑌸𑍍𑌸𑍍𑌵𑌯𑌂𑌵𑌰𑌪𑌤𑌿𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌪𑍁𑌰𑌾𑌣𑌃 ।
𑌏𑌵𑌂𑌵𑌿𑌧𑌾𑌸𑍍𑌸𑌮𑍁𑌚𑌿𑌤𑌂 𑌪𑍍𑌰𑌣𑌯𑌂 𑌭𑌵𑌤𑍍𑌯𑌾𑌃
𑌸𑌨𑍍𑌦𑌰𑍍𑌶𑌯𑌨𑍍𑌤𑌿 𑌪𑌰𑌿𑌹𑌾𑌸𑌗𑌿𑌰𑌸𑍍𑌸𑌖𑍀𑌨𑌾𑌮𑍍 ॥ 13

நாகேசயஸ் ஸுதநு பக்ஷிரதঃ கதம் தே
ஜாதஸ் ஸ்வயம்வரபதிঃ புருஷঃ புராணঃ ॥
ஏவம்விதாஸ் ஸமுசிதம் ப்ரணயம் பவத்யாஸ்
ஸந்தர்சயந்தி பரிஹாஸகிரஸ் ஸகீநாம் ॥ 13

𑌤𑍍𑌵𑌦𑍍𑌭𑍁𑌕𑍍𑌤𑌮𑌾𑌲𑍍𑌯𑌸𑍁𑌰𑌭𑍀𑌕𑍃𑌤𑌚𑌾𑌰𑍁𑌮𑍌𑌲𑍇𑌃
𑌹𑌿𑌤𑍍𑌵𑌾 𑌭𑍁𑌜𑌾𑌨𑍍𑌤𑌰𑌗𑌤𑌾𑌮𑌪𑌿 𑌵𑍈𑌜𑌯𑌨𑍍𑌤𑍀𑌮𑍍 ।
𑌪𑌤𑍍𑌯𑍁𑌸𑍍𑌤𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌿 𑌮𑌿𑌥𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌘𑌾𑌤𑌲𑍋𑌲𑌾𑌃
𑌬𑌰𑍍𑌹𑌾𑌤𑌪𑌤𑍍𑌰𑌰𑍁𑌚𑌿𑌮𑌾𑌰𑌚𑌯𑌨𑍍𑌤𑌿 𑌭𑍃𑌙𑍍𑌗𑌾𑌃 ॥ 14

த்வத்புக்தமால்யஸுரபீக்ருதசாருமௌளேঃ
ஹித்வா புஜாந்தரகதாமபி வைஜயந்தீம் ।
பத்யுஸ் தவேச்வரி மிதঃப்ரதிகாதலோலাঃ
பர்ஹாதபத்ரருசிமாரசயந்தி ப்ருங்காঃ 14

𑌆𑌮𑍋𑌦𑌵𑌤𑍍𑌯𑌪𑌿 𑌸𑌦𑌾 𑌹𑍃𑌦𑌯𑌙𑍍𑌗𑌮𑌾𑌪𑌿
𑌰𑌾𑌗𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌪𑌿 𑌲𑌲𑌿𑌤𑌾𑌪𑌿 𑌗𑍁𑌣𑍋𑌤𑍍𑌤𑌰𑌾𑌪𑌿 ।
𑌮𑍌𑌲𑌿𑌸𑍍𑌰𑌜𑌾 𑌤𑌵 𑌮𑍁𑌕𑍁𑌨𑍍𑌦𑌕𑌿𑌰𑍀𑌟𑌭𑌾𑌜𑌾
𑌗𑍋𑌦𑍇 𑌭𑌵𑌤𑍍𑌯𑌧𑌰𑌿𑌤𑌾 𑌖𑌲𑍁 𑌵𑍈𑌜𑌯𑌨𑍍𑌤𑍀 ॥ 15

ஆமோதவத்யபி ஸதா ஹ்ருதயங்கமாபி
ராகாந்விதாபி லளிதாபி குணோத்தராபி ।
மௌளிஸ்ரஜா தவ முகுந்தகிரீடபாஜா
கோதே பவத்யதரிதா கலு வைஜயந்தீ ॥ 15

𑌤𑍍𑌵𑌨𑍍𑌮𑍌𑌲𑌿𑌦𑌾𑌮𑌨𑌿 𑌵𑌿𑌭𑍋 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌗𑍃𑌹𑍀𑌤𑍇
𑌸𑍍𑌵𑌚𑍍𑌛𑌨𑍍𑌦𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌪𑍀𑌤𑌿𑌰𑌸𑌪𑍍𑌰𑌮𑍋𑌦𑌾𑌃 ।
𑌮𑌞𑍍𑌜𑍁𑌸𑍍𑌵𑌨𑌾 𑌮𑌧𑍁𑌲𑌿𑌹𑍋 𑌵𑌿𑌦𑌧𑍁𑌃 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌤𑍇
𑌸𑍍𑌵𑌾𑌯𑌂𑌵𑌰𑌂 𑌕𑌮𑌪𑌿 𑌮𑌙𑍍𑌗𑌲𑌤𑍂𑌰𑍍𑌯𑌘𑍋𑌷𑌮𑍍 ॥ 15

த்வந்மௌளிதாமநி விபோ சிரஸா க்ருஹீதே
ஸ்வச்சந்தகல்பிதஸபீதிரஸப்ரமோதா: ।
மஞ்ஜுஸ்வநா மதுலிஹோ விததுஸ் ஸ்வயம் தே
ஸ்வாயம்வரம் கமபி மங்களதூர்யகோஷம் ॥ 16

𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌯𑌮𑌾𑌨𑌰𑌜𑌸𑌾 𑌕𑌮𑌲𑍇𑌨 𑌨𑌾𑌭𑍌
𑌵𑌕𑍍𑌷𑌃𑌸𑍍𑌥𑌲𑍇 𑌚 𑌕𑌮𑌲𑌾𑌸𑍍𑌤𑌨𑌚𑌨𑍍𑌦𑌨𑍇𑌨 ।
𑌆𑌮𑍋𑌦𑌿𑌤𑍋𑌽𑌪𑌿 𑌨𑌿𑌗𑌮𑍈𑌰𑍍𑌵𑌿𑌭𑍁𑌰𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌯𑍁𑌗𑍍𑌮𑍇
𑌧𑌤𑍍𑌸𑍇 𑌨𑌤𑍇𑌨 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌤𑌵 𑌮𑍌𑌲𑌿𑌮𑌾𑌲𑌾𑌮𑍍 ॥ 17

விச்வாயமாநரஜஸா கமலேந நாபௌ
வக்ஷஸ்தலேச கமலாஸ்தந சந்தநேந ।
ஆமோதிதோபி நிகமைர் விபுரங்க்ரி யுக்வே
தத்தே நதேந சிரஸா தவ மௌளிமாலாம் ॥ 17

𑌚𑍂𑌡𑌾𑌪𑌦𑍇𑌨 𑌪𑌰𑌿𑌗𑍃𑌹𑍍𑌯 𑌤𑌵𑍋𑌤𑍍𑌤𑌰𑍀𑌯𑌂
𑌮𑌾𑌲𑌾𑌮𑌪𑌿 𑌤𑍍𑌵𑌦𑌲𑌕𑍈𑌰𑌧𑌿𑌵𑌾𑌸𑍍𑌯 𑌦𑌤𑍍𑌤𑌾𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌾𑌯𑍇𑌣 𑌰𑌙𑍍𑌗𑌪𑌤𑌿𑌰𑍇𑌷 𑌬𑌿𑌭𑌰𑍍𑌤𑌿 𑌗𑍋𑌦𑍇
𑌸𑍌𑌭𑌾𑌗𑍍𑌯𑌸𑌂𑌪𑌦𑌭𑌿𑌷𑍇𑌕𑌮𑌹𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌮𑍍 ॥ 18

சூடாபதேந பரிக்ருஹ்ய தவோத்தரீயம்
மாலாமபி த்வதளகைரதிவாஸ்ய தத்தாம் ।
ப்ராயேண ரங்கபதிரேஷ பிபர்த்தி கோதே
ஸௌபாக்யஸம்பதபிஷேகமஹாதிகாரம் ॥ 18

𑌤𑍁𑌙𑍍𑌗𑍈𑌰𑌕𑍃𑌤𑍍𑌰𑌿𑌮𑌗𑌿𑌰𑌃 𑌸𑍍𑌵𑌯𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌾𑌙𑍍𑌗𑍈𑌃
𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌗𑌨𑍍𑌧 𑌇𑌤𑌿 𑌸𑌾𑌦𑌰𑌮𑍁𑌦𑍍𑌵𑌹𑌨𑍍𑌤𑌿 ।
𑌆𑌮𑍋𑌦𑌮𑌨𑍍𑌯𑌮𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌮𑌾𑌲𑌿𑌕𑌾𑌭𑌿𑌃
𑌸𑍋𑌽𑌪𑌿 𑌤𑍍𑌵𑌦𑍀𑌯𑌕𑍁𑌟𑌿𑌲𑌾𑌲𑌕𑌵𑌾𑌸𑌿𑌤𑌾𑌭𑌿𑌃 ॥ 19

துங்கை ரக்ருத்ரிமகிரஸ் ஸ்வயமுத்தமாங்கைர்
யம் ஸர்வகந்தஇதி ஸாதர முத்வஹந்தி ।
ஆமோதமந்யமதிகச்சதி மாலிகாபிஸ்
ஸோபித்வதீய குடிலாலக வாஸிதாபி: ॥ 19

𑌧𑌨𑍍𑌯𑍇 𑌸𑌮𑌸𑍍𑌤𑌜𑌗𑌤𑌾𑌂 𑌪𑌿𑌤𑍁𑌰𑍁𑌤𑍍𑌤𑌮𑌾𑌙𑍍𑌗𑍇
𑌤𑍍𑌵𑌨𑍍𑌮𑍌𑌲𑌿𑌮𑌾𑌲𑍍𑌯𑌭𑌰𑌸𑌂𑌭𑌰𑌣𑍇𑌨 𑌭𑍂𑌯𑌃 ।
𑌇𑌨𑍍𑌦𑍀𑌵𑌰𑌸𑍍𑌰𑌜𑌮𑌿𑌵𑌾𑌦𑌧𑌤𑌿 𑌤𑍍𑌵𑌦𑍀𑌯𑌾-
𑌨𑍍𑌯𑌾𑌕𑍇𑌕𑌰𑌾𑌣𑌿 𑌬𑌹𑍁𑌮𑌾𑌨𑌵𑌿𑌲𑍋𑌕𑌿𑌤𑌾𑌨𑌿 ॥ 20

தந்யே ஸமஸ்த ஜகதாம் பிதுருத்தமாங்கே
த்வந் மௌளிமால்ய பரஸம்வரணேந பூய: ।
இந்தீவரஸ்ரஜமிவாததி த்வதீயாந்
யாகேகராணி பகுமாந விலோகிதாநி ॥ 20

𑌰𑌙𑍍𑌗𑍇𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌤𑌵 𑌚 𑌪𑍍𑌰𑌣𑌯𑌾𑌨𑍁𑌰𑍋𑌧𑌾𑌤𑍍
𑌅𑌨𑍍𑌯𑍋𑌨𑍍𑌯𑌮𑌾𑌲𑍍𑌯𑌪𑌰𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌮𑌭𑌿𑌷𑍍𑌟𑍁𑌵𑌨𑍍𑌤𑌃 ।
𑌵𑌾𑌚𑌾𑌲𑌯𑌨𑍍𑌤𑌿 𑌵𑌸𑍁𑌧𑍇 𑌰𑌸𑌿𑌕𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌕𑍀𑌂
𑌨𑍍𑌯𑍂𑌨𑌾𑌧𑌿𑌕𑌤𑍍𑌵𑌸𑌮𑌤𑌾𑌵𑌿𑌷𑌯𑍈𑌰𑍍𑌵𑌿𑌵𑌾𑌦𑍈𑌃 ॥ 11

ரங்கேச்வரஸ்ய தவச ப்ரணயாநுரோதாத்
அந்யோந்யமால்ய பரிவ்ருத்திமபிஷ்டுவந்த: ।
வாசாலயந்தி வஸுதே ரஸிகாஸ் த்ரிலோகீம்
ந்யூநாதிகத்வ ஸமதாவிஷயைர் விவாதை: ॥ 21

𑌦𑍂𑌰𑍍𑌵𑌾𑌦𑌲𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌯𑌾 𑌤𑌵 𑌦𑍇𑌵𑌿 𑌕𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌾
𑌗𑍋𑌰𑍋𑌚𑌨𑌾𑌰𑍁𑌚𑌿𑌰𑌯𑌾 𑌚 𑌰𑍁𑌚𑍇𑌨𑍍𑌦𑌿𑌰𑌾𑌯𑌾𑌃 ।
𑌆𑌸𑍀𑌦𑌨𑍁𑌜𑍍𑌝𑌿𑌤𑌶𑌿𑌖𑌾𑌵𑌲𑌕𑌣𑍍𑌠𑌶𑍋𑌭𑌂
𑌮𑌾𑌙𑍍𑌗𑌲𑍍𑌯𑌦𑌂 𑌪𑍍𑌰𑌣𑌮𑌤𑌾𑌂 𑌮𑌧𑍁𑌵𑍈𑌰𑌿𑌗𑌾𑌤𑍍𑌰𑌮𑍍 ॥ 22

தூர்வாதளப்ரதிமயா தவ தேவி காந்த்யா
கோரோசநாருசிரயாச ருசேந்திராயா: ।
ஆஸீதநுஜ்ஜித சிகாவளகண்டசோபம்
மாங்கள்யதம் ப்ரணமதாம் மதுவைரிகாத்ரம் ॥ 22

𑌅𑌰𑍍𑌚𑍍𑌯𑌂 𑌸𑌮𑌰𑍍𑌚𑍍𑌯 𑌨𑌿𑌯𑌮𑍈𑌰𑍍𑌨𑌿𑌗𑌮𑌪𑍍𑌰𑌸𑍂𑌨𑍈𑌃
𑌨𑌾𑌥𑌂 𑌤𑍍𑌵𑌯𑌾 𑌕𑌮𑌲𑌯𑌾 𑌚 𑌸𑌮𑍇𑌧𑌿𑌵𑌾𑌂𑌸𑌮𑍍 ।
𑌮𑌾𑌤𑌶𑍍𑌚𑌿𑌰𑌂 𑌨𑌿𑌰𑌵𑌿𑌶𑌨𑍍𑌨𑌿𑌜𑌮𑌾𑌧𑌿𑌰𑌾𑌜𑍍𑌯𑌂
𑌮𑌾𑌨𑍍𑌯𑌾 𑌮𑌨𑍁𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌯𑍋𑌽𑌪𑌿 𑌮𑌹𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌸𑍍𑌤𑍇 ॥ 23

அர்ச்யம் ஸமர்ச்ய நியமைர் நிகமப்ரஸூநைர்
நாதம் த்வயா கமலயாச ஸமேதிவாம்ஸம் ।
மாதச்சிரம் நிரவிசந் நிஜமாதிராஜ்யம்
மாந்யா மநுப்ரப்ருதயோபி மஹீக்ஷிதஸ் தே ॥ 23

𑌆𑌰𑍍𑌦𑍍𑌰𑌾𑌪𑌰𑌾𑌧𑌿𑌨𑌿 𑌜𑌨𑍇𑌪𑍍𑌯𑌭𑌿𑌰𑌕𑍍𑌷𑌣𑌾𑌰𑍍𑌥𑌂
𑌰𑌙𑍍𑌗𑍇𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌰𑌮𑌯𑌾 𑌵𑌿𑌨𑌿𑌵𑍇𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑍇 ।
𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌪𑌰𑌤𑍍𑌰 𑌭𑌵𑌤𑍀 𑌯𑌦𑌿 𑌤𑌤𑍍𑌰 𑌨𑌾𑌸𑍀𑌤𑍍
𑌪𑍍𑌰𑌾𑌯𑍇𑌣 𑌦𑍇𑌵𑌿 𑌵𑌦𑌨𑌂 𑌪𑌰𑌿𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 ॥ 24

ஆர்த்ராபராதிநி ஜநேப்யபிரக்ஷணார்த்தம்
ரங்கேச்வரஸ்ய ரமயா விநிவேத்யமாநே ।
பார்ச்வே பரத்ர பவதீ யதி தத்ர நாஸீத்
ப்ராயேண தேவி வதநம் பரிவர்த்திதம் ஸ்யாத் ॥ 24

𑌗𑍋𑌦𑍇 𑌗𑍁𑌣𑍈𑌰𑌭𑌯𑌂 𑌪𑍍𑌰𑌣𑌤𑌾𑌪𑌰𑌾𑌧𑌾𑌨𑍍
𑌭𑍍𑌰𑍂𑌕𑍍𑌷𑍇𑌪 𑌏𑌵 𑌤𑌵 𑌭𑍋𑌗𑌰𑌸𑌾𑌨𑍁𑌕𑍂𑌲𑌃 ।
𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌬𑌨𑍍𑌧𑌫𑌲𑌦𑌾𑌨𑌰𑌤𑌸𑍍𑌯 𑌭𑌰𑍍𑌤𑍁𑌃
𑌸𑍍𑌵𑌾𑌚𑍍𑌛𑌨𑍍𑌦𑍍𑌯𑌦𑍁𑌰𑍍𑌵𑍍𑌯𑌸𑌨𑌮𑌰𑍍𑌮𑌭𑌿𑌦𑌾𑌨𑌿𑌦𑌾𑌨𑌂 ॥ 25

கோதே குணைரபயங் ப்ரணதாபராதாந்
ப்ரூக்ஷேப ஏவ தவ போகரஸாநுகூலஃ ।
கர்மாநுபந்தபலதாநரதஸ்ய பர்த்துஸ்
ஸ்வாச்சந்த்ய துர்வ்யஸநமர்மபிதாநிதாநம் ॥ 25

𑌰𑌙𑍍𑌗𑍇 𑌤𑌡𑌿𑌦𑍍𑌗𑍁𑌣𑌵𑌤𑍋 𑌰𑌮𑌯𑍈𑌵 𑌗𑍋𑌦𑍇
𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌮𑍍𑌬𑍁𑌦𑌸𑍍𑌯 𑌘𑌟𑌿𑌤𑌾𑌂 𑌕𑍃𑌪𑌯𑌾 𑌸𑍁𑌵𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌾 ।
𑌦𑍌𑌰𑍍𑌗𑌤𑍍𑌯𑌦𑍁𑌰𑍍𑌵𑌿𑌷𑌵𑌿𑌨𑌾𑌶𑌸𑍁𑌧𑌾𑌨𑌦𑍀𑌂 𑌤𑍍𑌵𑌾𑌂
𑌸𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯 𑌶𑌮𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑌚𑌿𑌰𑍇𑌣 𑌤𑌾𑌪𑌾𑌨𑍍 ॥ 26

ரங்கே தடித்குணவதோ ரமயைவ கோதே
க்ருஷ்ணாம்புதஸ்ய கடிதாம் க்ருபயா ஸுவ்ருஷ்ட்யா ।
தௌர்கத்ய துர்விஷவிநாசஸுதாநதீம் த்வாம்
ஸந்தஃ ப்ரபத்ய சமயந்த்யசிரேண தாபாந் ॥ 26

𑌜𑌾𑌤𑌾𑌪𑌰𑌾𑌧𑌮𑌪𑌿 𑌮𑌾𑌮𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑍍𑌯 𑌗𑍋𑌦𑍇
𑌗𑍋𑌪𑍍𑌤𑍍𑌰𑍀 𑌯𑌦𑌿 𑌤𑍍𑌵𑌮𑌸𑌿 𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑌿𑌦𑌂 𑌭𑌵𑌤𑍍𑌯𑌾𑌃 ।
𑌵𑌾𑌤𑍍𑌸𑌲𑍍𑌯𑌨𑌿𑌰𑍍𑌭𑌰𑌤𑌯𑌾 𑌜𑌨𑌨𑍀 𑌕𑍁𑌮𑌾𑌰𑌂
𑌸𑍍𑌤𑌨𑍍𑌯𑍇𑌨 𑌵𑌰𑍍𑌧𑌯𑌤𑌿 𑌦𑌷𑍍𑌟𑌪𑌯𑍋𑌧𑌰𑌾𑌪𑌿 ॥ 27

ஜாதாபராதமபி மாமநுகம்ப்ய கோதே
கோப்த்ரீ யதி த்வமஸி யுக்தமிதம் பவத்யாஃ ।
வாத்ஸல்யநிர்பரதயா ஜநநீ குமாரம்
ஸ்தந்யேந வர்த்தயதி தஷ்டபயோதராபி ॥ 27

𑌶𑌤𑌮𑌖𑌮𑌣𑌿𑌨𑍀𑌲𑌾 𑌚𑌾𑌰𑍁𑌕𑌲𑍍𑌹𑌾𑌰𑌹𑌸𑍍𑌤𑌾
𑌸𑍍𑌤𑌨𑌭𑌰𑌨𑌮𑌿𑌤𑌾𑌙𑍍𑌗𑍀 𑌸𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑌾𑌤𑍍𑌸𑌲𑍍𑌯𑌸𑌿𑌨𑍍𑌧𑍁𑌃 ।
𑌅𑌲𑌕𑌵𑌿𑌨𑌿𑌹𑌿𑌤𑌾𑌭𑌿𑌃 𑌸𑍍𑌰𑌗𑍍𑌭𑌿𑌰𑌾𑌕𑍃𑌷𑍍𑌟𑌨𑌾𑌥𑌾
𑌵𑌿𑌲𑌸𑌤𑍁 𑌹𑍃𑌦𑌿 𑌗𑍋𑌦𑌾 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌜𑌾 𑌨𑌃 ॥ 28

சதமகமணிநீலா சாருகல்ஹாரஹஸ்தா
ஸ்தநபர நமிதாங்கீ ஸாந்த்ரவாத்ஸல்ய ஸிந்துः ।
அலகவிநிஹிதாபிஸ் ஸ்ரக்பி ராக்ருஷ்டநாதா
விலஸது ஹ்ருதி கோதா விஷ்ணுசித்தாத்மஜா நः ॥ 28

𑌇𑌤𑌿𑌵𑌿𑌕𑌸𑌿𑌤𑌭𑌕𑍍𑌤𑍇𑌰𑍁𑌤𑍍𑌥𑌿𑌤𑌾𑌂 𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑍇𑌶𑌾𑌤𑍍
𑌬𑌹𑍁𑌗𑍁𑌣𑌰𑌮𑌣𑍀𑌯𑌾𑌂 𑌵𑌕𑍍𑌤𑌿 𑌗𑍋𑌦𑌾𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌂 𑌯𑌃 ।
𑌸 𑌭𑌵𑌤𑌿 𑌬𑌹𑍁𑌮𑌾𑌨𑍍𑌯𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍋 𑌰𑌙𑍍𑌗𑌭𑌰𑍍𑌤𑍁𑌃
𑌚𑌰𑌣𑌕𑌮𑌲𑌸𑍇𑌵𑌾𑌂 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑍀𑌮𑌭𑍍𑌯𑍁𑌪𑍈𑌷𑍍𑌯𑌨𑍍 ॥ 29

இதிவிகஸிதபக்தேருத்திதாம் வேங்கடேசாத்
பஹுகுணரமணீயாம் வக்தி கோதாஸ்துதிம் யः ।
ஸ பவதி பஹுமாந்யஶ்ரீமதோ ரங்கபர்த்துஸ்
சரணகமலஸேவாம் சாச்வதீமப்யுபைஷ்யந் ॥ 29

ஸ்ரீ:

கோதாஸ்துதி.

பட்டர்பிரா னென்னும் படப்பையருங் கற்பகத்தின்
இட்டு வளர் கொடியா யிந்திரையாய்—கட்டழகின்
மண்டலமாய் வண்பொறையின் மாலுக்கே மாலளிக்குந்
தண்டமிழ்செய் கோதாய் சரண். 1

கோதற்ற செந்தமிழ்தேர் கோதாயுன் சீரனைத்தும்
ஓதற்கு மூங்கையனு யுற்றவெனைச்—சீதத்
தொடைக்கவிதை பாடச் சுரந்ததுநின் செய்ய
கடைக்கணருளேக்கன்றோ காண். 2

கண்ணன் செவிக்கினிமை காட்டுனது காற்சிலம்பின்
பண்ணமையுமோசையினிற்பல்லணிகொண்-டெண்ணறுநின்
சீரெலா மோதவருள் செய்வாய் திருக்கோதை
யேருலா மின்னே யெனக்கு. 3

யாதவர்கோ னுடலினுன் யாமுனேயை நேருனது
நாதவிசை வாணிதனே நன்முறையா—யோதியளேங்
தாடுவோர் கோதா யதிமதுர நாற்கவிகள்
பாடுவா ராவர்சுயம் பா. 4

நாறுமலர்க் கோதாயு னுதனெனேப் போலறத்தி
னுறறியா வாதர்க் கருள் புரிதல்—தேறு நின்பா
மாலேயினும் வண்குழல்சேர் வாடற் பழஞ்சருகு
மாலேயினுங் கொண்ட மயக்கு. 5

சுத்தவிதழ்ச் சோணேயினுற் றெய்யிற் றனத்துங்க
பத்திரையாய் வாணிநிறை பாணியாய்—முத்தி
விரசையாய்க் கோதையாய் விண்டுவுக்கே யானுய்
சரசமுறு நர்மதையாய்ச் சார்ந்து. 6

புவிமகளா நின்செவியிற் போந்தமுனி நுங்கோன்
கவிமகனுய் வாழ்ந்து களித்தான்—சவிமருவு
நீதா னியற்றுகவி நேசமுற மாலேவைத்தாய்
கோதாய் வியப்பென்னே கூறு. 7

ஆழ்வார்க ளுங்கோ னருளழகிற் பெண்மையவாய்
வாழ்வா ரகங்கனிந்து மால் பெருகி — நாழோரா
மாலாகிக் கோதாயுன் வாக்குமது வுண்டு நின்மான்
மேலாத லென்னே வியப்பு. 8

மன்கலேதேர் விண்டுசித்த மால்பெறவே வந்ததினுல்
மன்கலேயாற் ரூபமெலா மாற்றுவதால்—மென்கலேயார்
மற்ருேர் மதிநிகர்நீ வார்கடல்வாய் வந்தவள்பின்
புற்ரு ளெனவுரைப்பா மோர்ந்து. 9

மாகர்துதிக் கெட்டா மணவாள னின்றமப்ப
னுகுமவன் பாட்டுக் கருள்புரிதல்—நாகிளம்பூஞ்
சோலேசூழ் வில்லிபுத்தூர்த் தோகாய்நீ சூடியருண்
மாலேயா லன்ரூே மகிழ்ந்து. 10

பொன்னேக்குங் கோதாய்நீ போந்ததிசை மாலரங்கன்
தன்னேக்க மெய்துந் தரத்தினன்—மன்னேக்கு
மண்ணிற் பயனளிக்கும் வண்மையினன் மாமுனிவர்
எண்ணுத் தரதிசை யாயிற்று. 11

கோதா யுனதுபெயர் கொண்டதனு லன்றேவக்
கோதா வரிதனது கோளகற்றித்—தீதோடச்
சார்ந்தார் பவமுந் தரங்கிணியின் றன்பவமுந்
தீர்ந்தோடச் செய்யுமென்பர் தேர்ந்து. 12

பணியிற் படுத்தான் பறவைதனை யூர்ந்தான்
அணியிற் றிகழ்கிழவ னன்பன்—மணியிற்பூஞ்
சேடுலவுங் கோதையெனச் சேடியர்கண் மெல்ல நகைத்
தாடுமொழிக் குள்ளமகிழ் வாய். 13

வண்டினமான் மார்பின் வனமாலை கைவிட்டு
மண்டிநீ சூடியருண் மாலைமுடி—யண்டி
யடையச் சுழலுதனி னன்புடையோர் பீலிக்
குழைநிழலி லாள்தல்குறிக் கும். 14

மல்லிநா டாளு மயிலே வனமாலை
மெல்லியலு நன்மணமு மேவுகினும்—அல்லனையான்
வேலைநிகர் மார்பமுற வேய்ந்தளக நீதரும்பொன்
மாலைமுடி மன்னியதம் மா. 15

மாலாகி மாலணிதல் வண்கோதாய் வண்டினங்கள்
மாலா முனது குழல்வனைந்த—மாலையெனச்
சீர்த்தவிசை செய்தல் திருவேங்கின் மன்றலிசை
வாத்தியத்தி னன்முழக்க மாம். 16

மாலுந்தி யந்தா மரைமணத்தின் மன்னகலஞ்
சாலுங் களபத் தனி மணத்தின்—காலடிசேர்
கோல மறை மணத்திற் கோதாயுன் குந்தளஞ்சேர்
மாலையன்றே மேலா மணம். 17

பாலார் கடற்றுயின்று பாரநெடுஞ் சோலைமலை
மேலாகி வேங்கடத்து மேவியே—மாலானேன்
சேட்டு முலைக்கலிங்கஞ் செல்வியுன தைம்பாற்பொன்
சூட்டணிந்து மேன்மையுறுந் தொட்டு. 18

தேசுறுநி னண்பன் றிருவே திகழ்சருவ
வாசனையா னென்று மறையோத—மாசற நீ
சூடிக் களைந்த மலர்த் தொங்கன் மிகு கந்தமெனக்
கோடிக்குந் தன்முடிமேற் கொண்டு. 19

நாடுபுகழ் வில்லிபுத்தூர் நங்காயு னதன்முடி
சூடித் தரப்புனைந்த தொங்கலந்தார்—நீடியபொன்
மாவடுநேர் கட்பார்வை மன்னுதலால் வாய்மலர்ந்த
காவிமலர் மாலை யொக்குங் காண். 20

தென்னரங்கன் றன்னொடுநீ சேர்ந்து திருக்கோதாய்
மன்னு மணமாலை மாற்றுங்காற்—பன்னறிஞர்
நும்மி லெவர்பெரியோ ரென்றுநுவல் வாதவுரை
விம்முகட லென்ன மிகும். 21

புட்பந் தனிலுறையும் பொன்னொளிசேர் பூமாது
நிட்களங்கப் பச்சையொளி நீயுமாய்—நட்பின்
இருபாலும் வைகுதலா லெம்மோய்மான் மஞ்ஞைத்
திருவா ரெருத்துறழுஞ் சேர்ந்து. 22

அன்ன வயல்சூ ழயோத்தி நகராளு
மன்னரிக்கு வாகுமுதன் மாந்தாதா—பொன்னை
யரிந்தமனைக் கோதையுனை யன்பாகப் பூசை
புரிந்தன்றோ பெற்றார் புகழ். 23

சாலத் தவறிழைத்தோர் சார்ந்துசர ணென்றுரைப்ப
மாலுக் கருகு வலப்புறமாய்க்—கோலப்பொன்
மாற்றுகெனக் கோதாய்நீ வாமபா கத்திலையே
லேற்றமிவர்க் கென்று மிலை. 24

சக்கரஞ்சேர் கையான் சரண்புகுந்தோர் தங்கள்வினை
யொக்க வுணர்ந்திதுவென் றோர்ந்துதவுந்—துக்கசுக
மீரப் பனிமலர்க்க ணெம்மோ யிரிந்திடுமுன்
பூருச் சிலைவளைந்த போது. 25

மின்னனைய பூவையொடு மேகமென வீற்றிருக்குந்
தென்னரங்கன் தன்னடியார் சேமமுறத்—துன்னியமுத்
தாபமெலா மாற்றல் தடங்கோதாய் நீ நோக்கு
மாபலத்தா லன்றோ மகிழ்ந்து. 26

தெளிந்துந் தெளியாதுஞ் செய்தபிழை யெல்லாங்
களங்கமறக் கோதாய் களைவாய்—பளிங்கனபால்
தன்னை யருந்துந் தனங்கடித்தாற் றன்குழந்தை
யன்னை முனியாண்மற் றூங்கு. 27

மால்விரும்பு மாலை மலர்க்குழலு மாமணிநேர்
மாலுருவுஞ் செங்கு வளைக்கரமுங்—கோலமுலை
வன்பொறையாற் சற்று வளையுடலு மாங்கோதை
தன்சரண நெஞ்சுறையுஞ் சார்ந்து. 28

மேதினியெ லாம்புகழும் **வேதாந்த தேசிகன்**சொல்
மாதர் செயுங்**கோதா மான்மிய**த்தை—யாதரவாய்ப்
போற்றினோர் பட்டர்பிரான் போலப் புகழ்மருவி
வீற்றிருப்பர் வைகுந்த மேல். 29

திருப்பாவை.

பொழிப்பு.

1. விலக்ஷணமான ஆபரணங்களை யணிந்தவர்களும், செல்வம் நிறைந்துள்ள திருவாய்ப்பாடியில் கைங்கரிய ஸ்ரீயால் நிறைந்த இளம் பருவமுடையவர்களுமாகிய பெண்காள்! மாதங்களிற் சிறந்த மார்க்கழித் திங்களாய், பூர்ண சந்திரோதயத்தையுடைய சுக்கில பக்ஷத்திய மங்கள தினமாக நமக்கு வாய்த்திரா நின்றது. கிருஷ்ணனையும் நம்மையும் சேரவொட்டாத கோபவிருத்தர்கள் தாங்களே கொண்டாடும்படி இங்நோன்பிலே ஊற்றத்தை யடைந்து கிருஷ்ண ஸம்ச்லேஷமாகிற நீராட்டத்தைச் செய்ய விருப்பமுடையீர்! வாருங்கள். ஏனெனில், வடித்துக் கூர்மையாக்கின வேலாயுதத்தை யுடையவனும், கிருஷ்ணனை நலிய வரும் சிறிய ஜந்துக்களையுங்கூட குரூரமாக தண்டிக்கும் தொழிலைச் செய்பவனுமான ஸ்ரீ நந்தகோபருடைய திருமகனுய், அழகு நிறைந்த கண்களையுடைய யசோதைப் பிராட்டிக்கு சிங்கக்குட்டி போன்றவனுய், காளமேகத்தோடொத்த திருமேனியையும், செந்தாமரை மலர்போலச் சிவந்த திருக்கண்களையும், சூரியனையும், சந்திரனையும் போன்ற திருமுகமண்டலத்தையு முடையவனுயுமுள்ள ஸ்ரீமந்நாரா

யணன்றுனே ‘ அவனாலே பேறு’ என அவன் கைபார்த்திருக்கிற நமக்கே நம்முடைய அபேக்ஷிதத்தைக் கொடுக்குமவனா யிராநின்றான்.

2. இப்பூவுலகில் வாழப்பிறந்தவர்களே! திருப்பாற்கடலில் அவதானத்துடன் யோக நித்திரை செய்யும் பரமபுருஷனுடைய திருவடிகளை ஏத்தி, அவன் வருமளவும் அவனாலேயே பேறு என்றிருக்கும் நாங்கள் நெய் புசியாதவர்களாயும், பால் அமுது செய்யாதவர்களாயும், வைகறையில் முழுகிக் குளித்து கண்களுக்கு அஞ்சனமிட்டு அலங்கரியாதவர்களாய், நறுமண முள்ள பூக்களைக் குழலிற்றரியாதவர்களாய், முன்னோர் அநுட்டியாதவற்றைச் செய்யாதவர்களாய், தீமையை விளைக்கத்தக்க பொய்ம்மொழிகளை ஒருவரிடமும் போய் சொல்லாதவர்களாய், யோக்கிய விஷயத்திற் கொடுக்கும் பொருளையும், பிரம்மசாரி, சந்நியாசிகட்குக் கொடுக்கும் பொருளையும், இனி கேட்போரில்லை யென்னுமளவும் கொடுத்து, இப்படிகளாலே ஈடேறும் வழியை மனோரதித்துக் களித்து நாங்களும் நம்முடைய நோன்புக்கு அங்கமாகச் செய்யவேண்டிய முறைமைகளைக் காது கொடுத்துக் கேளுங்கள்.

3. மஹாபலி வார்த்த நீர் கையில் விழுந்தவாறே, அவன் திருநாமத்தைச் சொல்லாவிடில் தரிக்கமாட்டாத நாங்கள் ஆகாசத்தளவும் உயர வளர்ந்து, மூன்றுலகங்களையும் தன் திருவடிகளாலே அளந்து கொண்டு அமரர் இடரைக் கடிந்த புருஷோத்தமனான ஸ்ரீமந் நாராயணனுடைய திருநாமங்களை பக்தியுடன் பாடி, எங்கள் நோன்புக்காக சங்கற்பித்துக்கொண்டு நீராடினால், தேசமெங்கும், வியாதி, வெள்ளக்கேடு, வறட்கேடு முதலான குறைவுகளெல்லாம் நீங்கி மாதந்தோறும் மும்மாரிபெய்திட, அதனால் நீங்காத செல்வம் நிறைந்திடும்படி கயல் மீன்கள் ஆகாயத்தளவும் வளர்ந்து பருத்த செந்நெற் பயிரினுள்ளே போக இடம் பெறாமையாலே துள்ளவும், புள்ளிகளையுடைய அழகிய வண்டுகள் மலர்ந்திருக்கிற நெய்தல் மலரிலே உறங்கவும், பெருந்தன்மையுடையவாய் பெரிய பசுக்கள் ஏங்காமல் பால் கறப்போர் கறக்க ஒருப்பட்டு ஒரு நிலையாக மாட்டுத்தொழுவிற் புகுந்து உட்கார்ந்துகொண்டு பசுக்களின் பருத்த முலைகளை இருகைகளாலும் அணைத்து இழுக்க பால் வெள்ளத்தாலே குடங்களை நிறையச்செய்யும்.

4. கடல்போல கம்பீரமான சுபாவத்தையுடைய பர்ஜந்யனே! நீ அற்பமும் உன்கொடையில் ஒளியாதொழியவேணும். நடுக்கடலுட் புகுந்து, அங்குள்ள நீரையெல்லாம் மொண்டு கொண்டு, பெரு முழக்கமிட்டு, ஆகாயமெங்கும் பரவி, காலம் முதலிய ஸகல பதார்த்தங்கட்குங் காரணபூதனான திருமாலின் திருமேனிபோல உடம்புகறுத்தும், இடமுடைத்தாய், அழகும் பெருமையும் பொருந்திய திருத்தோள்களையுடையனாய், திருநாபிக் கமலத்தையுடையனுமான எம்பெருமானுடைய வலத்திருக்கையில் எழுந்தருளியிருக்கிற திருவாழி யாழ்வானைப்போல பிரகாசித்துக்கொண்டும், இடத்தி

ருக்கையில் வர்த்திக்கிற திருவாழியாழ்வானைப்போல ஆகாயத்தில் நிலை நின்று முழங்கியும், உலகத்தாரனைவரும் வாழும்படியாகவும், கண்ணபிரானோட்டைக் கலவிக்கு நோன்பு நோற்கின்ற நாங்களும் மார்கழி நீராட்டம் செய்யும்படியாகவும் கால விளம்பமின்றி சடக்கென ஸ்ரீசார்ங்க மென்னும் வில்லிற்பூட்டி எய்த பாண வர்ஷம்போல மழைபெய்யவேணும்.

5. ஆச்சரிய குணசேஷ்டிதனும், பகவத் சம்பந்தம் நித்யமாகப் பெற்றுள்ள வடமதுரையில் திரு வவதரித்த மிடுக்குடையவனும், பரிசுத்தமாய் ஆழம் மிக்க தீர்த்தத்தையுடைய யமுனைத் தீரவாசி யானவனும், நந்த கோகுலத்தில் திருவவதரித் தருளினதாக விளங்கும் சிலாக்கியமான இரத்தின தீபம்போன்றவனும், யசோதைப் பிராட்டியின் திருவயிற்றை விளங்கச் செய்தவனுமான ஸ்ரீ கண்ணபிரானை அடிச்சியோமாகிய நாம் பரிசுத்தராய் வந்து கிட்டி, பவித்திரமான புஷ்பங்களைத் தூவி, வணங்கி, வாயாரப்பாடி, மனமார தியானம் பண்ண, நல்ஞானம் பிறக்கு முன் செய்த பாவங்களும், பின்பு நம்மை அறியாமல் நேரிடத்தக்க பாபங்களும் நெருப்பிலிட்ட பஞ்சு போல் உருமாய்ந்துபோம். ஆதலின் அப்பகவானின் திருநாமங்களை அநுஸந்தானம் பண்ணு.

6. காலமுணர்த்த உணரும் பறவைகள் கூட இரைதேடுவதற்காக எழுந்து கூவிக்கொண்டு செல்கின்றன பார். பறவைக் கரசனான பெரிய திருவடிக்கு சுவாமியான சர்வேசுவரனுடைய கோயிலிலே திருப்பள்ளி யெழுச்சிக்கு ஊதுகிற வெண்மை நிறமுடையதும், அனைவரையும் அழைக்கைக்கு உறுப்பாய் நிற்பதுமான சங்கின் பேரொலியையும் கேட்கவில்லையோ? பகவத் விஷயரஸ மறியாச் சிறு பெண்ணே! சடக்கென எழுந்திரு. அன்னையுருக்கொண்டு வந்த பூதனையின்விடம் நிறைந்த முலைவழியே அவளது ஆவியை வாங்கி, வஞ்சனையாய் வந்த சகடாசுரனைக் கட்டழிந்து சிதறும்படியாக திருவடிகளை நிமிர்த்து முடித்து, திருப்பாற் கடலில் திருவனந்தாழ்வான் மீது திருக்கண் வளர்ந்தருளுகிற ஜகத்காரண பூதனான எம்பெருமானை மாசில் மனந்தெளி முனிவர்களும், யோகிகளும், தமது இதயத்தில் அமர்த்தித் தியானித்து, பையதுயில் நீத்து, எழுந்து, 'அரிஅரி' என்ற பேரொலியானது எங்கள் நெஞ்சிற் புகுந்து ஆநந்தமாகக் குளிர எழுந்திராய்.

7. வலியன் என்னும் பாரத்வாஜ பக்ஷிகள் ஒன்றோடொன்று கூடிக்கொண்டு 'கீசுகீசு' என்ற ஒலியுடன் எல்லாத் திசைகளிலும் விடிவுக் கடையாளமாகக் கூவின குரலின் ஆரவாரத்தை நீ கேட்கவில்லையோ? மதிகெட்ட மாதே! மிக்க பரிமளம் கூடிய கூந்தலையுடைய இடைப்பெண்கள் கண்ணன் கண்ணழகில் ஈடுபட்டுப் பாடுகின்ற தொனியும், கழுத்திற் பூணும் அச்சுத் தாலியும், முளைத்தாலியும் கலகல வென்று சப்திக்கும்படியாக கைசலிக்கு

மாறு மத்தினுற் கடைகிற தயிரோசையும் உன் செவியிற் பட்டதில்லையோ? பெண்களுக்கெல்லாம் இறைவியே! ஸ்ரீ வைகுந்தபதியான ஸ்ரீமந் நாராயணன் வாத்ஸல்யத்தால் அனைவர்க்கும் ரக்ஷகனுய், ஸௌசீல்யத்தால் கண்ணனுக வந்து திருவவதரித்தவனுய், கேசியை நிரஸித்தாற்போல நமது விரோதிகளைப் போக்கவல்ல சர்வேசுவரனை நாங்கள் பாடிப் புகழவும், நீ அப்பாட்டைக் கேட்டுக்கொண்டே சும்மா படுத்து உறங்குகின்றனையோ? மிக்க தேஜஸ்ஸை யுடையவளே! நீயே எழுந்து வந்து கதவைத் திறந்துவிடாய்.

8. கீழைத் திசையில் ஆகாசமானது வெளுத்தது. மேதிகள் பனிப் புல் மேய்கைக்காக சிறு தோட்டங்களிற் சென்று புக்கன. திருமலை யாத்திரை போல போகையையே பலமாகக் கொண்டுபோகின்ற உன்னை யொழிந்த இடைப் பெண்களைப் போகாதபடி தடுத்து உன்னை அழைத்தற்காய் உன் மாளிகை வாசலில் யாம் வந்து காத்து நிற்கின்றோம். அகக்களிப்பு மிகுதியும் உடைய நங்காய்! அடியோங்களுடன் கூடுவதற்காக படுக்கையை விட்டு எழுந்திரு. குதிரை வடிவ மெடுத்துவந்த கேசி என்ற அசுரனுடைய வாயைக் கீண்டெறிந்தவனை, மல்லர்களை மாளச்செய்த அமரர்கட் கதிபதியை ஏத்தி, அவன் அருளும் புருஷார்த்தத்திற்கு அவனை அணுகி அடிபணிதலாகிய நோன்பைக் கொண்டு சேவித்தால் நமது நிலைமையைத் திருவுள்ளத்துக்கொண்டு மிக இரக்கத்துடன் அருள் செய்குவன்.

9. தூயமாணிக்கங்க ளிழைத்துச் சமைத்த மாளிகையில் கண்ட விடமெங்கும் விளக்குகள் மங்களார்த்தமாகப் பிரகாசிக்கவும், அகில் முதலியவற்றின் நறும்புகை மணம் வீசவும், எப்போதும் நித்திரை செய்விக்கும் மென்மையான பஞ்சுப் படுக்கையின்மேல் நித்திரை செய்யாநின்ற அம்மான் பெண்ணே! மாணிக்கக் கதவுகளின் மணித்தாள்களைத் திறப்பாயாக. உமது மகள்தான் வாய் பேசாதவளோ? அல்லது காது கேட்காதவளோ? சோம்பலுடன் பேருறக்கம் உடையவளாய்த் தூங்குகின்றனளோ? காவலிடப்பட்டாளோ? பேருறக்கம் கொள்ளுமாறு மந்திரத்தாற் கட்டப்பட்டாளோ? அளவிறந்த ஆச்சரிய குணசேஷ்டிதன், பூமகள் கேள்வன், ஸ்ரீ வைகுண்டநாதன், என்று பலகால் அவன் ஆயிரந் திருநாமங்களையும் வாயாரச் சொல்லி மாமிமாரே! உம் மகளை எழுப்பலாகாதோ?

10. கிருஷ்ணநுபவத்துக்கு நோன்பு நோற்று சுகத்தை இடைவிடாது அநுபவிக்கிற நாயகப்பிள்ளாய்! வாசற் கதவைத் திறவாதவர் ஒரு பேச்சாகிலும் பேசாரோ? முன்னொரு காலத்திலே யமன் வாயில் இரையாக விழுந்தொழிந்த கும்பகாணனும் உனக்குத் தோற்றுப்போய் தனது பேருறக்கத்தையும் உனக்கே தான் கொடுத்துவிட்டானே? நறுமணங் கமழும் திருத்துழாய் மாலையைத் திருமுடியிலுடைய, எங்கும் வியாபித்து எல்லாருக்கும் ரக்ஷகனுக திருநாரணனை கண்ணன் நம்மால் மங்களாசாஸநம்

பண்ணும்படி கைங்கர்யமாகிற புருஷார்த்தத்தை அருளும் தருமமூர்த்தி. ஆதலால், மிக்க சோம்பலை யுடையவளே! எங்களுக்கு பூஷணம் போன்றவளே! தெளிந்துவந்து கதவைத் திறந்திடு.

11. கன்றுகளாயிருக்கிற அநேக பசுக்கூட்டங்களைக் கறப்பவர்களாய், கஞ்சன் தொடக்கமான சத்துருக்களுடைய வலிமை அழியும்படி அவர்களிருந்த விடங்களிற் சென்று போர் செய்யுமவர்களாய், குற்றமுமில்லாதவர்களான கோபாலர்களுடைய குடியிற் பிறந்த பொற்கொடி போன்றவளே! புற்றிற் கிடக்கும் பாம்பின் படம் போன்ற நிதம்பத்தையும், காட்டிலிஷ்டப்படி திரியும் மயில் போன்ற சாயலையு முடையவளே! செல்வமுள்ள பெண்பிள்ளாய்! புறப்பட்டுவாராய். பந்துக்களான தோழிகளான நாங்கள் எல்லாரும் திரண்டுவந்து உன் திருமுற்றத்திற் புகுந்து கார்மேகவண்ணனை கண்ணபிரானுடைய திருநாமங்களைப் பாடச்செய்தேயும், கிருஷ்ண சம்ச்லேஷமாகிற சம்பத்தையுடைய நீ அசையாமலும், ஒன்றும் பேசாமலும் உறங்குவது என்ன பிரயோஜனத்திற்காகவோ?

12. இளங்கன்றுகளையுடைய எருமைகள், பால் கறப்பாரில்லாமையால் முலை கடுத்து, கதறிக்கொண்டு தங்கள் கன்றுகள் பக்கல் இரக்கமுற்று, அவற்றை நினைத்து, அந்நினைவினால் முலை வழியாக பால் இடைவிடாது பெருக, அப்பெருக்கினால் அகங்களனைத்தையும் ஈரமாக்கி, துகைத்துச் சேருகச் செய்கின்ற நற்செல்வத்தை யுடையவனுடைய தங்கையே! எங்கள் தலையில் பனிவிழ உனது மாளிகையின் வாசற்காலில் தண்டியத்தைப் பற்றிக்கொண்டு, சீதாதேவியைப் பிரித்தான் என்னுஞ் சீற்றத்தினால் வனப்புமிக்க தென் திசை இலங்காபுரிக்கு அதிபதியான இராவணனைச் செற்றவனும், மனத்துக்கினியனுமான இராகவனை நாங்கள் பாடச்செய்தேயும், நீ வாய் திறந்து பேசுகிறிலை. ஊரிலுள்ளாரெல்லாரும் துயிலுணர்ந்த பின்பும் இஃதென்ன பெருந்தூக்கம்? இனியாவது எழுந்திருப்பாயாக.

13. பறவை யுருக்கொண்டுவந்த பகாசுரனுடைய வாயைப் பிளந்தவனும், பொல்லாங்கனைத்தையுஞ் செய்து திரிந்த இராவணனுடைய பத்துத் தலைகளையும் கிள்ளிக் களைந்தொழித்தவனுமான தாசரதியினுடைய வீர சரிதங்களை எல்லாப் பெண் பிள்ளைகளும் பாடிக்கொண்டு சென்று நோன்பு நோற்பதற்காகக் குறித்த இடத்திற் புகுந்தனர். சுக்கிரோதயமாகி வியாழனும் அஸ்தமித்தான். அன்றியும், பறவைகளுங்கூட இரை தேடுகைக்காகக் கூவிச் செல்லா நின்றன. பூவையும் மானையும் ஒத்த கண்ணழகை யுடையவளே! பதுமைபோன்றவளே! நீ, கண்ணனும் நாமும் கூடுகைக்கு வாய்த்ததான இந்த நல்ல நாளில் அவனுடைய குணசேஷ்டிதங்களை நினைத்துத் தனியே கிடக்கையாகிற கபடத்தை விட்டு, எங்களோடு சேர்ந்து, உடம்பு வவ்வலிடும்படி படிந்து நீராடாமல் படுக்கையிற் கிடந்து உறங்குகின்றாயோ? எழுந்திராய்.

14. உங்கள் வீட்டுப் புழைக்கடைத் தோட்டத்திலிருக்கிற தடாகத்தி லுள்ள செங்கழுநீர் மலர்கள் விகஸித்து கருநெய்தல் மலர்கள் மொட்டித் தனகாண். அன்றியும், செங்கற் பொடியிற் றோய்த்த ஆடை உடுத்தவர் களும், தாம்பூலந் தரியாமையால் வெளுத்த பற்களையுடையவருமான ஸாத் விகரான ஸந்நியாசிகள் தங்கள் திருக்கோயில்களில் திருவாராதநம் பண்ணு கைக்காக வாரா நின்றார்கள். கோழியழைப்பதன் முன்னம் குடைந்து நீராட விருக்கிற எங்களை முந்தி வந்து எழுப்புவதாக வாயாற் சொல்லிச் செய்யா தொழிந்த நங்கையே! சொன்னபடி செய்யா தொழிந்தோமே என்னும் வெட்கமுமில்லாதவளே! பேச்சிலினிமை யுடையவளே! வலத் திருக்கையில் திருவாழி யாழ்வானையும், இடத்திருக்கையில் திருச்சக்கரத் தாழ்வானையும் பூவேந்தினாற்போல தரியா நின்றுள்ள நீண்ட திருக்கைகளை யுடையவனும், தாமரைப் பூப்போன்ற திருக்கண்களை யுடையவனுமான திருமாலைப் பாடுகைக்கு எழுந்திரு.

15. இளமை தங்கிய கிளிமொழியாளே! உன் பேச்சினினிமை இருந்தபடி என்னே! நாங்கள் திரண்டு வந்து நின்ற பின்பும் தூங்குகின் றாயோ? என்று உணர்த்த வந்தவர்கள் கேட்க, பெண்காள்! சிலுகு சிலுகு என்று அழையாதேயுங்கள். இதோ புறப்பட்டு வருகிறேன் என்று உறங்குகிறவள் விடை பகர, வல்லமையுடைய உனது கட்டிச் சொல்லுஞ் சொற்களையும் உன் வாயையும் முன்னமே நாங்கள் அறிவோம் என்று உணர்த்த வந்தவர்கள் கூற, நீங்களே நாவீறுடையீர். அன்றேல், நான் தானே பேசுந்திறமுடையளாகுக. உங்கட்கு நான் செய்ய வேண்டுவதென்? என்று உள்ளுறங்குமவள் வினவ, நீ சடக்கெனப் புறப்பட்டு எங்கள் குழுவினிற் புகுரவேணும். உனக்கு மட்டும் நீ வேறு என்ன பிரயோஜ நத்தை யுடைத்தா யிருக்கிறாய்? என்று உணர்த்த வந்தோர் கேட்க, பெண்க ளனைவரும் வந்தனரோ? என்று மறுமாற்றமாக வினவ, எல்லாரும் வந்தனர். நீ எழுந்துவந்து எண்ணிக்கொள் என்று அவர்கள் பதிலிறுக்க, என்னை எதற்காக அழைக்கிறீர் என்று அவள் கேட்க குவலயாபீடமென்னும் வலிய யானையைக் கொன்றவனும், சத்துருக்களான கம்ஸாதிகளை, 'நம்மை வெல்லவல்லாரில்லை' என்கின்ற மிடுக்கை அழிக்கைக்கு சமர்த்தனும் அற்புதனுமான கண்ணபிரானைப் பாடுகைக்காக ஒல்லை நீ போதாய் என்றனர்.

16. எங்களுக்கு நாயகனாய் நிற்கிற ஸ்ரீ நந்தகோபருடைய திரு மாளிகையைக் காக்குமவனே! துகிற்கொடிகள் விளங்கா நிற்கப்பெற்ற தோரணங்கள் கட்டியிருப்பதான திருவாசலைக் காக்குமவனே! அழகிய கதவினுடைய தாழ்ப்பாளைத் திறந்து எங்களை உள்ளே புகுரவிடவேணும். ஆயர் சிறுமியரான எமக்கு, ஆச்சரியச் செயல்களை யுடையவனும், நீலமணி போன்ற திருநிறத்தையுடையவனுமான கண்ணபிரான் நேற்றே ஒலிசெய்யும்

பறையைத் தருவதாகத் திருவாய் மலர்ந்தருளினன். அவ்வெம்பெருமான் துயிலினின்றும் எழுந்திருக்கும்படி திருப்பள்ளியெழுச்சி பாடுகைக்கு அநந்ய ப்ரயோஜநராய் அடியோங்கள் வந்திருக்கின்றோம். சுவாமி! முதல் முதலிலே உமது வாயினல் மறுக்காதொழியவேணும். அன்றியும், கண்ணன் பக்கல் பரிவுற்றிருக்கும் நிலைமையை யுடைய கதவை நீயே நீக்கவேணும்.

17. வஸ்த்ரங்களையே, குளிர்ந்த தீர்த்தத்தையே, அந்நத்தையே, ஒரு பயனை விரும்பாது தருமமாக அளிக்கின்ற, எங்களுக்கு சுவாமியான ஸ்ரீநந்தகோபரே! எழுந்திருக்கவேணும். வஞ்சிக்கொம்பை யொத்த மாதர்க்கெல்லாம் முதன்மையானவளே! நந்தகுலத்துக்கு மங்கள விளக்கா யிருப்பவளே! என் தலைவியே! அசோதைப் பிராட்டியே! நீ உணர்ந்து எழுந்திருக்கவேணும். ஆகாயமெங்கும் இடைவெளியாக்கிக்கொண்டு பரமபதத்தளவும் செல்ல வளர்ந்து, அகில உலகங்களையும் அளந்தருளின அமரர்கட்கதிபதியே! இனித்திருக்கண் வளர்ந்தருளாமல் எழுந்திருக்கவேணும். செம்பொன்னற் செய்த வீரக்கழலை அணிந்துள்ள திருவடிகளை யுடைய செல்வனே! பலதேவனே! உன் தம்பியான கண்ணனும் நீயும் உறங்காது எழுந்திருக்கவேணும்.

18. மதஜலத்தைப் பெருகவிடா நின்றுள்ள யானைகளை யுடையவனும், அமர்க்களத்தில் புறங்காட்டி ஓடாத புஜபலத்தையுடையவனுமான ஸ்ரீ நந்தகோபருடைய மருமகளே! நப்பின்னைப் பிராட்டியே! பரிமளம் வீசா நின்றுள்ள கூந்தலை யுடையவளே! வாயிலைத் திறந்திடு. கோழிகள் நாற்புறத்திலும் வந்து சூழ்ந்துகொண்டு கூவாநின்றனகாண். அன்றியும் குருக்கத்திக் கொடிகளாலாகிய பந்தலின்மேல் உறங்குகின்ற குயில்கள் கூட்டங்கூட்டமாக இடைவிடாமற் கூவாநின்றனகாண். கண்ணனோடு விளையாடுகைக்கு உபகரணமான பந்து பொருந்திய விரல்களை யுடையவளே! உன் பக்கலில் நாங்கள் நின்று அவனும் நீயும் மைத்துனமையாடி ஒருவருக்கொருவர் இட்டீடு கொள்ளும்போது அவன் பேர்களைப் பழித்துப் பாடும்படிக்கீடாக சீர்மைபொருந்திய உன் வளைகள் ஒலிக்கும்படி நடந்து வந்து செந்தாமரை மலர்போன்ற உன் கையினல் எங்கள்மீது மகிழ்ச்சிகொண்டு கதவைத் திறக்கவேணும்.

19. நிலைவிளக்குகள் நாற்புறமும் எரியாநிற்க, யானைத் தந்தங்களினற் செய்த கால்களையுடைய கட்டிலின்மேலே, அழகு, குளிர்த்தி, மென்மை, பரிமளம், வெண்மை என்னும் ஐந்துவித குணங்களையுடைத்தான திருப்பள்ளியின்மீதேறி, கொத்துக் கொத்தாக அலரா நின்றுள்ள மலர்களை யணிந்த திருக்குழலை யுடையளான நப்பின்னைப் பிராட்டியின் திருமுலைத் தடங்களின் மேலே வைத்துக்கொண்டுத் திருக்கண் வளர்ந்தருளுகின்ற அகன்ற திருமார்பையுடைய பிரானே! வாய்திறந்து ஒரு வார்த்தை அருளிச் செய்யவேணும். அஞ்சனமிட்டு அலங்கரிக்கப்பெற்றதும், அகன்றுள்ளதுமான

அங்கண்ணையுடைய நப்பின்னைப் பிராட்டியே! நீ உனக்குக் கணவனான கண்ண பிரானை ஒரு நொடிப்பொழுதும் தூக்கத்தைவிட்டு எழுந்திருக்க வொட்டுகிறு யில்லை. அவனை அகன்று தரித்திருக்க ஸஹிக்கமாட்டாய். நீ இப்படி இருப்பது உன் ஸ்வரூபத்துக்கும் சேராது; உன் ஸ்வபாவத்துக்கும் சேராது.

20. முப்பத்து முக்கோடி தேவர்கட்குத் துன்பம் வருவதற்கு முன்னமே அவர்கள் நினைத்த இடத்திற்கு எழுந்தருளி, அவர்களுடைய நடுக்கத்தை நீக்கியருளவல்ல மிடுக்குடையவனே! திருப்பள்ளி யுணர்ந்துவர வேணும். ஆச்ரிதரக்ஷணத்தில் செவ்வியனயிருக்கும் நற்றன்மையுடையவனே! ஆச்ரிதவிரோதிகளை யடக்கும் வலிமையுடையவனே! ஆச்ரிதவிரோதிகட்குத் துன்பத்தையே அளிக்கவல்ல அமலனே! துயிலெழுந்து வர வேணும். பொற்கலசத்தை யொத்த மிகமெல்லிதான முலைகளையும், பவளம் போற் சிவந்த வாயையும், நுண்ணிதான இடையையு முடைய பூர்ணியையான நப்பின்னைப் பிராட்டியே! பெரிய பிராட்டியாரே! துயிலொழிந்து வந்து எங்கள் நோன்புக்குப் பரிகரமான ஆலவட்டத்தையும், கண்ணுடியையும் கொடுத்து உன் மணவாளனான கண்ணபிரானை விரகதாபத்தால் மெலிந்த சரீரத்தையுடைய எங்களையும் இந்த க்ஷணத்திலேயே ஸம்ச்லேஷிக்கும் படி செய்யவேணும்.

21. சுரந்த பாலை ஏற்றுக்கொண்ட கலங்களெல்லாம் எதிரே பொங்கி மேலே வழியும்படியாக இடைவிடாமல் பாலைச் சொரிகின்ற, பெண்களும் பேதைகளும் கூட அணையலாம்படி உதார சீலத்தையுடைய பெரும் பசுக்களை விசேஷமாக உடையரான ஸ்ரீநந்தகோபர் பெற்ற பிள்ளையானவனே! திருப்பள்ளி யுணரவேணும். வேதப்ரதி பாத்யனுகிற திண்மையையுடையவனே! அவ்வேதத்தாலும் அறிய வொண்ணுத பெருமையையுடையவனே! இவ்வுலகத்திலே ஆச்ரித பக்ஷபாதம் விளங்கும்படி ஆவிர்ப்பவித்த தேஜோரூபனுனவனே! துயிலொழிந்து வரவேணும். சத்துருக்கள் உன் வலிமையைக் கண்டு தங்கள் வலிமாண்டு போய் தங்கள் எளிவரவை நினைத்துப் பொறுக்க மாட்டாமல் தேவரீர் திருவடிகளில் சரணுகதி பண்ணிக் கிடப்பதுபோல் அடியோங்களான நாங்கள் உன்னைத் துதித்து உனக்கு மங்களா சாஸநம் பண்ணிக் கொண்டு வந்து ஆச்ரயித்தோம்.

22. அழகியதாய் விசாலமாய்ப் பெரிதாயுள்ள பூமியை யாண்ட மன்னர்கள் தங்களுடைய அபிமாந மடங்கி வந்து, உன் சிங்காதனத்தின் கீழ் திரள்திரளாக வந்து ஓலக்கமாக இருப்பதுபோல நாங்களும் கீழ் பட்ட வருத்த மெல்லாம் தீரும்படி உன் இருப்பிடத்தேற விடைகொண்டு கிட்டப் பெற்றோம். கிண்கிணியின் வாய்போல் சிறிது மலர்ந்த செந்தாமரைப் பூப்போன்ற சிவந்த திருக்கண்கள் கொஞ்சங் கொஞ்சமாக ஆச்ரிதர்களான எங்கள் பக்கல் விழிக்கலாகாதோ? சந்திரனும் சூரியனும் உதித்தாற்போல

அழகிய இரண்டு திருக்கண்களினாலும், எங்களுடைய அநுபவித்தே கழிய வேண்டும் பாவம் கழிந்து விடும்படி எங்களைத் திருக்கண் நோக்குவாயாக.

23. மழைக் காலத்தில் மலையின்கணுள்ள குகைகளில் பேடையும் தானும் ஒன்று என்னலாம்படி பொருந்திப் படுக்கையிற் கிடந்து உறங்கா நின்ற வீரத்தன்மையாகிற சீர்மையையுடைய சிங்கமானது உணர்ந்தெழுந்து நெருப்புப் பொறிகள் பறக்கும்படி கண்களை விழித்து, நறுமணங் கமழும் உளை மயிர் சிலும்பும்படி நாற்புறங்களிலும் புடை பெயர்ந்தும், உடம்பை உதறிக் கொண்டும், பெருமை தோன்ற உடல் நிமிர்ந்து கொண்டும், பெரு முழக்கஞ் செய்து கொண்டும் குகையினின்றும் வெளிக் கிளம்பி வருகிறது போல் காயாம்பூப் போன்ற திருநிறத்தையுடையவனே! நீ உன்னுடைய திருக்கோயிலினின்றும் இந்தத் திருமணி மண்டபத்துக்கு எழுந்தருளி, பல வகை வேலைப்பாடுகள் பொருந்தி யிருத்தலை யுடைய சீர்மையுடைத்தான அரியாதனத்தின் மீது எழுந்தருளியிருந்து அநந்யப்ர யோஜநைகளான நாங்கள் வந்த காரியத்தை விசாரித்து கிருபை செய்யவேணும்.

24. தன் விபூதியை மஹாபலி அபகரிக்க, அமரர்கள் அலமாந்து நின்ற அக்காலத்தில் இந்த லோகங்களை மகாபலிபக்கல் இரந்து நீரேற்று இரண்டடியால் அளந்தருளினவனே! உன் திருவடிகட்கு மங்களமுண்டாகக் கடவது. பிராட்டியைப் பிரித்த தசமுகன் இருக்குமிடத்திற் போய் அவனுடைய நகரமாகிய அழகிய இலங்காபுரியை அழித்தருளினவனே! உன் திருத்தோள் வலிக்கு மங்களமுண்டாகக்கடவது. சகடாசுரன் கட்டுக் குலைந்து உருமாய்ந்து போம்படி உதைத்தருளினவனே! உன் திருப்புகழுக்கு மங்களமுண்டாகக்கடவது. கன்று வடிவு கொண்டு வந்த வத்ஸாஸுரனை எறிதடியாகக் கொண்டு விளாவின் வடிவாய் நின்ற கபித்தாசுரன் மீது எறிந்தருளினவனே! உன் திருவடிகளுக்கு மங்களமுண்டாகக்கடவது. கோவர்த்தன கிரியைகுடையாக எடுத்தளித்தவனே! உன் தண்ணளிக்கு மங்களமுண்டாகக்கடவது. விரோதிகளை வேரோடே யழிக்கின்ற உனது திருக்கையிலுள்ளவேல் வாழ்க. என்றிந்தப்படி பலவாறாக மங்களாசாஸநம் பண்ணிக்கொண்டு உனது வீர சரிதத்தையே துதித்து உன்னை யநுபவிக்கைக்காக அடியோங்கள் இப்போது எங்களாற்றாமையாலே வந்தோம். கிருபை பண்ணியருள்.

25. ஒப்பற்ற தேவகிப் பிராட்டிக்குப் பிள்ளையாய்த் திருவவதரித்து, அவதார காலமாகிய அன்றிரவிலே அத்விதீயமான யசோதைப் பிராட்டிக்குத் திருமகனாக ஏகாந்தமாக வளருங்காலத்தில் தன்னை யறியாமல் இவன் வளர்ந்தருளுகிற படியைக்கேட்டு பின்னால் படப்புகுகிறது அறியாததான் அங்ஙனம் வளர்வதைப் பொறாதவனாய் இவனை எப்படியாகிலும் கொல்ல வேணும் என்ற தீங்கை நினைத்திருந்த கம்ஸனுடைய எண்ணத்தை வீணாக்கி அக்கஞ்சனுடைய வயிற்றில் நெருப்புபோல் அழலும்படி நின்ற ஆச்ரிதர்

பக்கல் பெரும்பித்தனுனவனே! உன் பக்கத்தில் புருஷார்த்தத்தை இரந்து வந்தோம். எங்களுடைய மநோரதத்தை நிறைவேற்றித் தருவாயாகில், பிராட்டி ஆசைப்படத்தக்க உனது சம்பத்தையும், அத்தைக் காத்தூட்ட வல்ல வீர்யத்தையும், நாங்கள் உகப்புடன் பாடி உன்னைப் பிரிந்துபடும் துயரம் நீங்கி மகிழ்ந்திடுவோம்.

26. அடியார்பக்கலில் வியாமோஹ முடையவனே? நீல மணி போன்ற வடிவையுடையவனே! பெரியோர்களால் அநுஷ்டிக்கப்பட்டவற்றுட்சேர்ந்த மார்கழி நீராட்டத்தைச் செய்யும்பொருட்டு வேண்டியவற்றைக் கேட்பாயாகில் அவற்றைக் கூறுகிறேம். பூமியெல்லாம் நடுங்கும்படி சப்திப்பனவாய், பால்போன்ற நிறத்தையுடையனவாய், உன்னுடைய ஸ்ரீபாஞ்ச ஜந்யத்தை யொத்தனவான சங்கங்களையும், மிக்க பெருமையுடையனவும் மிகவும் பெரியனவுமான வாத்தியங்களையும், திருப்பல்லாண்டு பாடுமவர்களையும், மங்கள தீபங்களையும், த்வஜங்களையும், மேற்கட்டிகளையும், ஆகிய இவற்றை, பிரளயகாலத்தில் ஆலந்தளிரிற்பள்ளி கொள்பவனே! கிருபை செய்தருளவேணும்.

27. தன்னடிபணியாதவர்களை வெல்லுகின்ற குணங்களையுடைய கோவிந்தனென்னும் திருநாமத்தையுடையவனே! கோபீஜந வல்லபனுன உன்னை வாயாரப்பாடி உன்னிடத்து யாம் வேண்டுகின்ற பிராப்யத்தைப் பெற்று பின்னும் நாங்கள் பெறும் சம்மானமாவது நாட்டார் புகழும்படியாக கையிலணியும் ஆபரணமான சூடகங்களும், தோளுக்கிடும் ஆபரணமான பாஹு வலயங்களும், காதுக்கிடும் அணியான தோடும், கர்ணப்பூவும், காலுக்கிடும் ஆபரணமானபாடகமும், என்று சொல்லப்படும் இவ்வாபரணங்கள் போன்ற இதரபல ஆபரணங்களும் நீயும் நப்பின்னைப் பிராட்டியுமாக இருந்து பூட்ட நாங்கள் நன்ருக அணிவோம். திருப்பரியட்டங்களை நீ உடுத்த உடுப்போம். அதற்குப் பின்பு பாற்சோறுனது மூடும்படி நெய் பரிமாறி முழங்கையால் வழியும்படியாக உண்டு, பிரிந்து பட்ட துயரமெல்லாம் தீரும்படி நீயும் நாங்களுமாகக் கூடியிருந்து குளிரவேணும்.

28. புல்லுள்ள இடந்தேடி மேய்க்கைக்காக பசுக்களின் பின்னே போய் காட்டிலே பொருந்தி வர்த்தித்து சரீர போஷணமே பண்ணித்திரியுமவர்களாயும், சற்றேனும் அறிவில்லாத இடைக்குலத்தில் உன்னை ஸஜாதீயனுய்ப் பெறுவதற்குத் தக்க புண்ணிய முடையவர்களாயிரா நின்றேம். ஒருவகைக் குறையும் இல்லாதவனுய் கோவிந்த னென்னும் திருநாமத்தையுடையவனுய் ஸர்வஸ்வாமியானவனே! உன்னோடு எங்களுக்குண்டான உறவானது இங்கே உன்னாலும் எங்களாலும் ஒழிக்க ஒழிய மாட்டாது. உலக வழக்கம் ஒன்றும் அறியாத சிறுபெண்களான நாங்கள் உன்பக்கலுண்டான வன்பினல் உன்னை நாராயணன் என்ற சிறிய பேராலே நாங்கள் அழைத்

தகைக் குறித்து அடியார்க் கருள்புரியும் அண்ணலான நீ கோபித்தருளாமல் அபேக்ஷிதத்தைத் தந்தருளவேணும்.

29. அத்யந்தம் பிராதக்காலத்தில் தேவரீர் வர இருக்கக்கடவ நாங்கள் இவ்விடத்தேற வந்து, தேவரீரைத் தண்டனிட்டு, தேவரீருடைய அழகிய திருவடித்தாமரைகளை மங்களாசாஸநம் பண்ணுகைக்குப் பிரயோஜநத்தைக்கேட்டருளவேணும். பசுக்களை வயிறுற மேய்த்து பின்பு தாங்களுண்கிற இடைக்குலத்திற்றிருவவதரித்து தேவரீர் அந்தரங்ககைங்கரியங்கள் எங்களால் திருவுள்ளம் பற்றி யருளாமலிருத்தல்தகாது. பசுக்களை ரக்ஷித்தவரே! இன்றைக்கு ஒரு பிரயோஜநங்கொண்டு அகலுகைக்கு அன்றுகாண் என்ன, ஆனால் உங்கள் கருத்துதான் என்? என்ன, காலமுள்ளதனையும், தேவரீருடைய எல்லா அவதாரங்களிலும் தேவரீரோடேஉறவு உடையவர்களாகக்கடவோம். தேவரீருக்கே நாங்கள் அடிமை செய்யக்கடவோம். எங்களுடைய இதர விஷய விருப்பங்களைத் தவிர்த்தருளவேண்டும்.

30. கப்பல்களையுடைய திருப்பாற்கடலைக் கடைந்து தேவர்களுக்கு அமிருதம் தந்தருளின ஸ்ரீய : பதியும், அயனுக்கும் அரனுக்கும் தலைவனாக இருப்பவனை பூர்ண சந்திரனை யொத்த அழகிய முகத்தையும் செவ்விதமான ஆபரணங்களுமுடைய ஆய்ச்சிகள் சென்று மங்களாசாஸநம்பண்ணிஅத்திருவாய்ப் பாடியில் நாட்டுக்குப் பறையென்றொரு வ்யாஜத்தையிட்டு அடிமையைக் கைக்கொண்ட அந்த விருத்தாந்தத்தை அழகிய ஸ்ரீவில்லிபுத்தூரில் திருவவதரித்த பசுமை பொருந்திய புதிய தாமரை மலர்களினாலான குளிர்ந்த மாலையையுடைய பெரியாழ்வார் திருமகளாரான ஆண்டாள் அருளிச் செய்த திரள்திரளாக அநுபவிக்கவேண்டிய தமிழ்மாலையாகிய இம்முப்பது பாசுரங்களையும் தப்பாமல் இந்த சம்ஸாரத்திலே இப்பாசுர மாத்திரத்தை ஓதுமவர்கள் பெரியமலையை யொத்த நான்கு திருத்தோள்களை உடையவனும், சிவந்த திருக்கண்களையுடைய திருமுகத்தை உடையவனும், நித்யவிபூதியும் லீலாவிபூதியுமாகிற ஐச்வர்யத்தை உடையவனும், ஸ்ரீய : பதியான எம்பெருமானாலே எல்லாவிடத்தும் அவனுடைய திருவருளைப் பெற்றுப்பரும்மாநந்தயுக்தரா யிருக்கப் பெறுவார்கள்.

ஸ்ரீ:

கோதாஸ்துதி.

பொழிப்பு.

1. ஸ்ரீவிஷ்ணுசித்தரென்னும் பெரியாழ்வாரது திருவம்சிசமாகிய நந்தனவனத்துக்குக் கற்பகக் கொடி போன்றவளும், திருவரங்க மன்னனாராகிய அரிச்சந்தனமெனும் தருவின் சேர்க்கையால் சேவிக்கத் தகுந்த அழகுடையவளும், பொறுமையே உருவெடுத்து வந்தாற் போன்றவளும், கருணையின் மிகுதியால் மற்றோர் அலர்மேன் மங்கையை யனையவளுமான பரிமளம் விருத்தியடைகின்ற திருக்குழற் கற்றையினையுடைய கோதையென்னும் சூடிக்கொடுத்த நாச்சியாரைப் புகலொன்றில்லா வடியேன் சரணமாக அடைகின்றேன்.

2. ஒளி மிளிர் கோதையே! எண்ணருஞ் சுருதி வாக்கியங்களுக்கும் துதிக்க முடியாதபடி வெகுதூரத்திலிருக்கிற உன்னுடைய மகிமையானது அடியேனை யனைய அற்ப அறிவுடையோரது தோத்திரத்தில் அடங்காததே. இவ்வாறு நன்றாய் அறிந்து வாயடங்கியிருக்கும் அடியேனையும், அனைவருங் கொண்டாடும்படியான மௌநவிரோதிகளான உமது கலியாண குணங்கள் அடியேனை வாய்திறக்கச் செய்கின்றன.

3. வாக்கருளும் கோதையே! அன்னையே! உமது ஒளியை வீசுகின்ற தேவரீர் திருவடிகளில் அணிந்த மணிச்சிலம்பின் மேதகு தொனியைப் போல இன்னிசையுடையதும், உமது பேரன்பு பூணும்திருவரங்கச் செல்வனாரது திருச் செவிகளுக்கு அமுதம் போன்றதும், தேவரீரைத் துதிக்கத் தகுதியானது மாகிய அன்புறுவாக்கை அடியேற்கு அருளல் வேண்டும்.

4. வாக்கன்னாய்! (யதுகுலாதிபதியான) கண்ணபிரானுடைய சம்பந்தத்தினால் காளிந்தி எவ்வாறு தூய்மையையும் மேன்மையையும் அடைந்திருக்கின்றதோ அதுபோல கண்ணன் விஷயமாகப் பாடப்பட்டிருப்பதால் சிறப்படைந்துள்ள தேவரீர் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாவை முதலிய திப்பிய பிரபந்தங்களைக் குருமுகமாக முறையில் ஓதியுணர்ந்து தேவரீர் கடைக்கண் நோக்கத்தாலே தெளிவையுடைய ஞானவான்களாகிய கவிகள் இனிய மதுரவாக்கையுடையவர்களாக விளங்குகின்றனர். (கண்ணன் அன்போடு கோபிகைகளுடன் நீர் விளையாட்டைச் செய்தருளியதனாலே யமுனைபோல பாதகம் போக்கிப் பரன்பத முதவும் பான்மையைக் கொண்டிருக்கும் சரச்சுவதி நதியை இறங்கு துறைவழியே ஸ்நான விதியிற் கூறி

யாங்கு நாடி நீராடுபவர்க்குஅதனாலே சிலாக்கியமான ஞானம் பொருந்திய மதுரமாகக் கவிபாடும் வல்லமை யுண்டாகும்).

5. உலகிலுள்ள ஜீவன்களுக்குச் சிறிதும் நன்றி செய்ய அறியாது பொல்லாங்கையே ஆற்றிடும் அடியேனைப் போன்றவர்களிடத்தில் இத்திருவரங்க மன்னனார் நிக்கிரகிக்காமல் இன்னருள் சுரப்பதற்குக் காரணம் தேவரீர் திருக்குழற் கற்றையிற் சூடிக்கொடுத்த பூமாலையில் அவர் வைத்திருக்கும் பிரியத்தாலும், பாபத்தாற் பிணைக்கப்பட்டு வருந்துகிற அன்பர்களிடம் தேவரீர் கொண்டுள்ள அருண்மையால் பகவானிடத்தில் எடுத்து இயம்பும் இனிய மொழியிலும் அவர்கட்டுண்ணலால் என்பது நிச்சயம்.

6. தேவியாரே! தேவரீர் சோணநதியா யிருந்தும் துங்கபத்திரா நதியாகவும், சரச்சுவதி நதியாயிருந்தாலும், விரஜை நதியாகவும், கோதாவரியாயிருந்தாலும், நருமதை என்னும் நதியாகவும் ஆகிறீர். எவ்வாறெனில், திருப்பவளத்தில் செந்நிற முடையவளாயும், திருமுலைத் தடங்களில் பெருமையும் பேரழகும் உடையவளாயும், வாக்கின் பெருக்காகிய வைபவத்தில் கலைமகளாயும், பிரகிருதி சம்பந்தமில்லாத பகவத் பக்திரசத்தினால் இராஜசதாமத குணங்களற்றவளாயும், இயல்பிலே கோதையாயிருந்தும் பகவானுக்கு விளையாட்டுக் காரணபூதையாய் நின்று இன்பத்தை விளைப்பவராகுகின்றீர்.

7. தாயே! பூதேவியின் உருவமாகிற தேவரீரது திருக்காதுகளென்று சொல்லப் பெறுகிற புற்றினின்றுந் தோன்றிய அந்த வான்மீகி மகாமுனிவன் கவிசார்வ பௌமனெனக் கொண்டாடப்படுங் கௌரவத்தைப் பெற்றானென்றால், சாக்ஷாது தேவரீருடைய திருமுகத் தாமரையினின்றும் பெருகுகிற தேனுக்கொப்பான இந்தத் திருப்பாவை முதலிய திவ்ய ப்ரபந்தங்கள் பகவானாலும் பாகவதர்களாலும் நன்கு அநுபவிக்கப்பட்டு கொண்டாடப் பெறுவது என்ன அற்புதம்?

8. அன்னையே! தேவரீர் அருள் பெற்றவர்களான ஆழ்வாராசாரியர்கள் தேவரீருடைய அன்பனான அழகிய மணவாளனை தேவரீரைப் போல் இன்பம் நுகரவேண்டு மென்று தங்கள் புனித பக்தியினைக் கணவனிடத்தில் காதலிக்குள்ள அன்பு போல வைத்துக் கொண்டு அநேக விதங்களான பிரிதல், புணர்தல் முதலியவற்றால் உண்டாகும் கோவைத் துறைகளால் மனதினைச் சிற்றின்ப ரசம் உடையது போலச் செய்கின்றனர்.

9. தாயே! பரமசாதுக்கள் தேவரீரைச் சந்திரனைப் போல இலக்குமியின் சகோதரி என்று கூறுகிறார்கள். அஃதெவ்வாறெனின், (i) தேவரீர் விஷ்ணு சித்தரிடத்தில் பிறந்தவர். சந்திரனும் விஷ்ணு சித்தத்திற் பிறந்தவன் (விஷ்ணு சித்தர் - பெரியாழ்வார்; விண்டுவின் மனதில் பிறந்தவன்; மதி என்பது மறை); (ii) தேவரீர் உலகுய்ய அமுதத்துக்கொப்பான

இனிமை வாய்ந்த திவ்யப்ரபந்தங்களை திருவாக்கினுல் அருளிச் செய்தவர். திங்கள் உலகிலுள்ள அகில ஜீவர்கட்கும் தனது கிரணங்களால் அமுதத்தை அளிக்கிறுன் ; (iii) தேவரீர் கருணையால் பாகவதர்களுடைய தாபத்திரயங்களையும் போக்குகிறீர். மதி உலகில் ஜீவர்கள் அடைந்த வெய்யில் முதலிய வற்ருலுண்டாகிய வெப்பத்தை யெல்லாம் போக்குகிறுன். பார்வைக்கும் வேறு சந்திரன் என்று சொல்லும்படியான உருவமுடையவர் தேவரீர். ஆகலான் அமுதமதன காலத்து திருப்பாற் கடலிற் பிறந்தமையால் சந்திரன் எப்படித் திருவின் சகோதரனே அப்படியே தேவரீரும் இலக்குமியின் சகோதரியாவீர் என்மனுர் புலவர்.

10. நாய்ச்சியாரே! தேவரீருடைய திருத்தமப்பனுரான பெரியாழ்வாருங்கூட உமது அற்பத் துதியினுல் சர்வ சுவாதீனனு யிருக்கிற பகவானிடத்திலிருந்து காதுகளுக்கு அமுதம் போன்ற பல நூறு துதிகளாலேயும் முன்பு அடையக் கூடாததான மகத்தர பதத்துக் கநுகுணமாகிய மேலான அநுக்கிரகத்தை தேவரீர் திருக்குழற் கற்றையிற் சூட்டி வாச மூட்டிக் கொடுத்ததிரு மாலையைக் கொண்டு போய்ப்பகவானுக்குக் கொடுப்பதனுலேயே அடைந்தாரல்லவா?

11. தக்க சீர்க்கோதாய்! தேவரீர் திருவவதரித்த திக்குத் தென்றிசையாயினும் பயனைத் தரத்தகுதியான அநேகம் பிறவிகள் தோறும் இயற்றப்பட்ட நற்கருமங்களால் அடையத் தகுந்ததான உமது அவதாரத்தை அடைந்தமையால் எத்திசையினும் உத்தர திசையாயிற்று. (மேலான திசை, வடதிசை). அன்றியும், என்றும் அறிதுயிலமர்ந்தருளுகின்ற அழகிய மணவாளராலே தேவரீர் திருவவதரித்த திசையென்கிற பிரியத்தினுலே சந்ததமும் எந்ததிக்கானது கடாக்ஷ வீக்ஷணத்திற்குப் பாத்திரமாக அடையப் பெற்றதோ அக்காரணத்தினுல் அத்திசை உத்தரதிசையாயிற்று.

12. தேவியே! கோதாவரி யென்னும் நதியானது தேவரீருடைய திருநாம சம்பந்த மாத்திரத்திலேயே தன்னுடைய தீர்த்தத்தினுலே இம் மண்ணுலகத்தைப் பரம பவித்திரமாகச் செய்கின்றது. இது மாத்திரமோ? கங்கை, யமுனை முதலிய மகாநதிகளும் பருவகாலங்கடோறும் இக் கோதாவரி நதியில் வந்து வந்து தங்குதலாலேயே தம்மில் வந்து நீராடுகின்றவர்களையெல்லாம் நீண்டகாலமாகப் புனிதவான்களாகச் செய்ய வல்லமை யுடையனவாயின.

13. மல்லி நாடாளும் மெல்லியலீர்! உமக்கு வலிய பாம்பின்மீது எப்பொழுதும் துயில் பயில்வோனும், பறவை ஏறிச் செல்பவனும், புராண புருஷனுமான ஒருவனை எங்ஙனம் கணவனுகத்தானே வரித்துக்கொண்டீரோ என்று உமது உயிர்த்தோழியர்கள் சொல்லும் பரிகாச மொழிகள் மிகவும் விருப்பத்தைத் தருகின்றன.

14. அகிலாண்ட நாயகியாரே! அநுதினமும் தேவரீர் பூங்கோதையிற் சூடிக்கொடுத்த பூமாலையினாலே பரிபூர்ணமான பரிமளத்தையுற்ற மனோகரமான திருக்குழலையுடைய தேவரீருடைய கணவனுடைய திருமார்பை அடைந்து நறைபெய்வைசயந்தியையும் விட்டு, வண்டினங்கள் அமலனது மௌலி மருவிய சுகந்தத்தை அங்கடைந்து அநுபவிக்க விருப்புற்று எல்லாம் ஒன்றாக மேலே கிளம்பும்பொழுது சிறைகளின் நெருக்கடியினாலே திருமுடியிலிறங்கி மொய்க்கவும் முடியாமல் விலகிப்போகவும் கூடாமல் அத்திருமுடியின்மேல் இடைவிடாமல் ஒரு வட்டவடிவமாய்ச் சுற்றிக்கொண்டேயிருத்தலாலே பகவானது திருமுடிக்கு மயிற்றோகையாற் செய்த குடையினது காந்திபோலும் ஒளியைச் செய்யாநிற்கும்.

15. கோதற்ற கோதாய்! திருத்துழாய்மாலையானது நறுமணம் புணர்ந்ததாயினும், எம்பெருமானது திருமார்வைவிட்டு அகலாததாயிருந்தாலும், செவ்விய இளந்தளங்களை யியைந்திருந்தும், மேன்மை யுடையதாயினும், நன்னாரோடு நன்றாகத் தொடுக்கப்பட்டதாயினும் பகவானுடைய திருமுடியை அடைந்துள்ள தேவரீருடைய பூங்குழற்கோதையால் கீழாக்கப்பட்டதல்லவா? வநமாலிகை என்னும் பூங்கோதை சிரித்த முகத்தையுடையவளாயினும், எம்பெருமானால் விரும்பப்பட்டவளாயினும், பகவானிடத்தில் தான் நல்லன்புடையவளாயினும், நல்ல இனிய தன்மை யுடையவளாயினும், நற்குணங்களெல்லாம் நன்கு அமையப்பெற்றவளாயினும், பகவானுடைய திருமுடியை அடைந்திருக்கிற தேவரீரைச் சேர்ந்தவளான தலையி லணியப்பெற்ற பெண் என்பவளால் தள்ளப்பட்டாள்.

16. ஜகந்நாதனாகிய திருவரங்கேசனுடைய திருமுடியிலே தரிக்கப்பட்ட தேவரீர் சூடிக்கொடுத்த திருமாலைகளிலிருந்து பெருகிவருகிற மதுவைத் தம் மனம்போனபடி பானம் பண்ணிக் களித்து அதனாலே மதுகரமானதொனியையுடைய மதுகரங்கள் தேவரீரது ஒளி மிளிரும் முத்துடைத் தாம நிரைதாழ்ந்த திருமணப் பந்தலில் முழங்கும் மங்கல கீதத்தைப்போல முழங்கும்.

17. பூங்கொடி போன்றவரே! சர்வஜகத்காரணனும் நியந்தாவுமான திருவரங்கச் செல்வன் அகிலாண்டங்களாகவும் பரிணமிக்கத்தக்க மகரந்தங்களையுடைய செங்கமல மலரினால் திருநாபியிலும், அலர்மேல்மங்கையுடைய திருமுலைத் தடங்களி லணிந்துள்ள சந்தனக் குழம்பினால் திருமார்பிலும், மறைமலரால் உபய பாதாரவிந்தங்களிலும், மிக சிலாக்கியமான நறுமணங் கமழ்ந்து கொண்டிருந்தாலும் தேவரீர் சிரமேற் சூடிக்கொடுத் தருளிய திருமாலையை அன்பினால் வணங்குதலைப் பெற்ற திருவபிஷேகத்தால் அணிந்து கொள்ளுகிறார்.

18. ஒண்புகழ்க்கோதாய்! எவரினுமுயர்ந்த இந்தத் திருவரங்கமன்னனார் தேவரீருடைய தனங்களிற் புனைந்துதந்த உத்தரீயத்தையும்,

குழலிற் சூட்டிப் பரிமளம் ஊட்டிப்பரிந்து அருளுகிற மலர்மாலையையும், உத்தமாங்கமான திருமுடியிலணிந்து கொண்டதனுற்றான் சகல சௌபாக்கிய சம்பத்துக்குச் சார்வபௌமனுகத் திருமுடி புனைதற்குரிய பெருந்தகைமையைச் சார்ந்தனர்.

19. வேயர் பயந்த விளக்கே! அபௌருஷேயங்களான மெய்ம் மறைகள் உயர்ந்த தங்கள் முடிகளென்னும் உபநிடதங்களால் மிக்க அன்போடு எந்த பகவானை சருவகந்தனென்று கொண்டாடுகின்றனவோ, அந்த பசுந்துழாய் முகுந்தனுன அழகிய மணவாளனே தேவரீரது சுருண்ட திருக்குழற் கற்றையினுல் மணமூட்டப் பெற்றவைகளான மலர் மாலைகளால் பிறிதொரு திவ்விய பரிமளத்தை அடைகிருர்.

20. அன்னவயற்புதுவை ஆண்டாளே! தேவரீர் கோதையிற் புனைந்து தந்தருளிய கோதையை விரும்பி நன்ருகச் சிரமேற்றரித்தலால் மிக்க நற்பேறுபெற்றிலகும் ஆதியம் பகவனுடைய திருவபிடேகத்தின்மேல் வெகு மதிப்போடு தேவரீர் பல பகுமானங்கள் செய்ததுபோல் காதல் விளங்கும் ஆகேகாரமென்னும் கடைக்கண்ணுல் நோக்கிக்கொண்டிருத்தல் அத்திருமுடியின்மேலே மற்ருெரு குவளை மலர்மாலையைப் புனைந்திடுதல் போலாம்.

21. ஏ வசுதையே! திருவரங்கநாதனும் தேவரீரும் கேண்மையினுலே மாற்றிக்கொள்ளும் மாலை மாற்றுதலைக் குறித்துப் புகழ்ந்தும் பேசுகின்ற பரம ரசிகர்களில் தேவரீரிடத்தில் பக்தியுள்ளவர்கள் பகவானை மயக்கும் படியான அதிக சுந்தரமுள்ளவள் கோதையாதலால் அவள் உயர்வுடையவள் என்றும், பகவானிடத்தில் அதிக பக்தியுடையோர், அவன் நாயகனுகவும், இவள் நாயகியாகவும் இருப்பதால் எவ்வாற்ருனும் பகவானே உயர்ந்தவர் என்றும், தடஸ்தர்கள் பலர் இருவருக்கும் உண்டான பிரணயத்தினுலே மாலை மாற்றப்பட்டதாதலால் இருவரும் ஒப்புமையுடையவர் என்றும், பேசிக்கொள்ளுகிற பூர்வபக்ஷ சித்தாந்த ரூபமான வியவகார மொழிகளாலே மூன்றுலகங்களையும் ஒப்பற்ற முழக்கத்தையுடையனவாகச் செய்கிருர்கள்.

22. பூதேவியாரே! திருவடி தொழும் அடியார்கட்கு மங்களத்தை நல்குகிற மதுசூதனனுகிய பகவானுடைய திவ்விய திருமேனியானது தூர்வா எனும் அறுகம்புல்லின் நிறம்போன்ற பசுமை நிறமுடைய தேவரீருடைய திருமேனியின் காந்தியினுலும், கோரோசனையின் வர்ணம் போன்ற பொன்னிறமுடைய ஸ்ரீதேவியின் சோபையினுலும், விட்டு நீங்காமலிருக்கிற நல்ல மயூரத்தின் கழுத்திலுள்ள பொன்னிறங் கலந்த பச்சைவர்ணத்தை யுடைய மயிலின் கயிலிலுள்ளவண்ணம் போலாயிற்று.

23. அன்னையே! வைவச்சுதமநு முதல் சக்கிரவர்த்தித் திருமகன் வரையுள்ள சூரிய வமிசத்தவர்களாலும், அனைவராலும் ஆராதிக்கப்

பட்டவர்களாயும் உள்ள அரசர்களும் பூரூபியாயிருக்கிற தேவரீருடனும் பொன்னியான பெரிய பிராட்டியுடனும் நன்றாய்க் கூடிக்கொண்டிருப்பவ ராயும், எல்லாராலும் அருச்சிக்கத் தக்கவராயும், சகலலோக நாதனுயும், உள்ள பகவானே நிகமங்களிற் கூறிய நியமங்களாலே நன்றாக ஆராதனை புரிந்து தம்முடைய பூமண்டலாதிபத்தியத்தை சந்திர சூரியர் உள்ள வரை யில் நெடுங்காலம் ஆண்டு அநுபவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

24. பகவானிடத்தில் அநேக விதமான அபராதங்களை அப்பொழுது தான் செய்திருந்த போதிலும் தன்னைச் சரணமடைந்தவர்களான பக்த கோடிகள் ஸம்சார தாபத்திரயங்களினின்றும் கரையேறும்பொருட்டு மாமல ராளால் அரங்கநகரப்பனுக்கு தன்னைச் சரணமடைந்தோருக்கு ஒருவித குறையுமின்றி அவர் செய்த பிழைபொறுத்துக் காப்பாற்றவேண்டுமென்று அறிவித்துக்கொண்டிருக்கையில் வெறுப்பால் அமலன் திருமுகம் அயற் பக்கம் திரும்ப அந்தப் பக்கத்தில் தேவரீர் இல்லாமலிருந்தால் அந்தத் திரு வரங்க நாதனுடைய திருமுகமானது இடதுபக்கம் திரும்பியபடியே இருக்கும்.

25. கோதா தேவியே! போகரஸாதிகளை அநுபவிப்பதற்கு அநுகூல மாயும், பகவானுடைய திருவுள்ளத்தைத் தன் வசப்படுத்தும்படி விவித விலாச ரூபமான வாத்ஸல்யாதி குணங்களாலே தன்னைச் சரணம் புக்கவர் அபராதங்களனைத்தையும் செய்தவர்கட்கு யாதொரு தீங்கும் நேராதபடி அவற்றை நீக்கிக்கொண்டு மிருக்கிற தேவரீரது நற்புருவங்களின் அசைவு தானே கருமங்களாலே நன்றாய்க் கட்டப்பட்டவர்களுக்கு அந்தந்த கருமங் களுக்குத் தக்க பலனைக் கொடுக்கவேணுமென்கிற எண்ணமுடைய விருப்பு மிகும் நாயகனின் சுவாதந்தரியத்தினுடைய பொறுக்க முடியாத உயிர்நிலை யைப்பிளப்பதில் ஆதி காரணமாக ஆகின்றது.

26. சூடிக்கொடுத்த சுடர்க்கொடியே! பொன்னையேய் புனிதரான பெரியோர்கள் திருவரங்கத்திலுள்ளவரும், பெரிய பிராட்டியாகிய மின்னற் கொடியுடன் கூடியவருமாகிற கருமைவாய்ந்த மேகம்போன்ற அரங்கச் செல்வனின் கருணை மாமழையால் பெருகி விளங்குவதும், சம்சாரமாகிற கொடிய கெட்ட விஷத்தைப் போக்கடிப்பதில் அமுத நதியாகிய தேவ ரீரைப் படிந்து சம்சார தாபத்திரயங்களையும் அதிவிரைவில் போக்குகின் றனர்.

27. அகிலாண்டம் அவாவும் அன்னையே! தேவரீர் அடியேன் அறிந் தும் அறியாமலும் செய்துள்ள அநேக விதமான அபராதங்களை உடையவ னாகப் பிறந்திருந்தாலும், அடியேனை தேவரீர் அருளுக்கு ஆளாக்கி அளித்து அருளுபவராக ஆவீரேயானால் இவ்விரட்சண காரியம் சகல லோகஜநநி யாகிய தேவரீருக்கு மிகவும் உசிதமே. எனெனில் வருந்திப் பெற்று வளர்த்த தாயானவள் தன் குழவி தன் தனங்களை நன்றாய்க் கடித்துவிட்டா

லும் அக்குழந்தையினிடத்துள்ள வன்பினுல் அதைத் தன் அமுதூட்டி அதனுலே காப்பாற்றுகிருளன்ருே?

28. இந்திர நீலமணியைப்போல் விளங்குகிற நீலமான தேகாந்தி யுடைய வரும், செங்கழுநீர் மலரால் அலங்கரிக்கப்பட்ட அழகிய திருக் கையை யுடையவரும், அந்தனபரத்தால் சிறிது வளைந்துதோன்றுந் திரு மேனியை யுடையவரும், அடியார்க்கருளும் கருணையங்கடலாளராயும் தான் குழற் கற்றையிற் சூடிய மாலையால் ஜகந்நாதனைத் தன் வசமாக்கியவராயும், தண்டமிழ்ப் புதுவை விட்டு சித்தன் திருமகளாராகிய கோதாதேவி அடி யார்களாகிய நம்முடைய இதய கமலத்தில் வீற்றிருந்து விளங்கக்கடவர்.

29. தென்புதுவைப் பட்டர்பிரான் பூங்கோதையார் பாதாரவிந்தத் தில் ஈடுபட்ட பக்தனுன ஸ்ரீ வேதாந்த மகாதேசிகனிடத்தில் புருஷப் பிரயத்தனமின்றித் தானுய் உண்டானதும், பலவிதமான காவியகுணங்க ளால் மனேக்கியமானதுமான கோதாஸ்துதியை அன்போடு அநுதினமும் பாராயணம் செய்பவர் திருமாமகளோடிலங்கும் திருவரங்க நாயகனுடைய திருவடித் தாமரையில் பக்தியைப் பூர்ணமாக அடைந்து இம்மையிலும் விட்டு சித்தரைப்போல யாவராலும் மதிக்கப்பெற்று மறுமையிலும் மோட் சத்தையும் அடைந்து இன்புறுவர்.

ஸ்ரீ:

கோதா தத்துவம்.

[ஸ்ரீ. ஆர். கேசவய்யங்கார், தலைவர், திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம், பத்திராசிரியர், வகுளமாலை, அட்வொகேட்.]

உன்னுமறை மன்னனுர மின்னுதிரு வென்னும்
பொன்னுருவ மன்னுபுகழ் பொங்கவுல கெங்கும்
இன்னமுத மென்னுமவள் மின்னணிசி லம்பத்
தன்னவளெ னப்புதுவை யன்னவளு தித்தாள். 1

ஆடியொரு பூரமிவ ணுடிவரு நன்னுள்
நாடுயர வீடுநடு நீடுசுனை யாடிப்
பாடியெழு மாதமிது மாதவனை யின்னுள்
சூடியுடன் மாலையிடு கையுதவும் தையே. 2

பூதங்களோடு புனலாடி நீடு புகழோங்க வோங்கு பெரியோர்
வேதங்க ளோதி விரதங்க ளேறி விசயங்கள் கூறி யெழுநா
நாதங்க ளூடு நடனங்கொ ணூடு நகரங்க ணீடு நலனே
யீதெங்கு மேவி யிதயங்க டாவி யிசைபாடு திங்களிதுவே. 3

உலகங்க ளொன்று சுளகங்கொ ளன்று மூதரங்கொ
[ணன்றியுளவாய்ப்
புலகங்க ளிப்ப வவையுந்த வுந்தி யுமிழ்கந்த முந்து மவனென்
றலகங்க ளிப்ப வலர்கந்த மாலை யவள்சூடி முந்தி யருளும்
திலகங்கொள் கோதை தருமாலை சூடு திருமான் முதன்மை
[தெரிவாம். 4

குழலூதி மாத ருயிர்கள்ளு மாய னமுதூறு கோவை யுமிழும்
சுழலாழி சூழு மகவாழி யாழு மொழியாழி மூரி யெழுமோர்
முழுகாம வெள்ள மிழுகாதல் விள்ளு முழுதாவுகொள்ளு
[குணமாய்க்
கழலாளு மண்ண லருளாழி நீத்த வவளார நீதி தருவாம். 5

தாவரந் தேவ ராகும் நாவரந் தாவி நல்கும்
பாவரும் புனித வாய்மைப் பழமறைச் சிகரச் செவ்வி
நாவருங் கிளவி நாற நாரண னுகரு மின்பக்
கோவையே சூடி யன்னன் குனியவே கொடுத்தாள் கோதை. 6

தாவியே யவியெனத் தன்னுவியே சொரிய வன்பார்
கோவையே காவிவண்ணர்க் காயுடன் கனியுமின்பப்
பாவையே கூவியம்பூங் குயிலெனப் பயிலுங்கோதா
தேவியே திருவனைத்தும் திருவெனத் தருவள்தானே. 7

பாவளம் பொலிய நாளும் தாமரைக் கோயிலாளே
கூவிளங் குயிலெனப்பூங் கோதையாய்க் கவித்த கூந்தல்
பூவளம் பொதிய முந்திப் புகழ் புரிந்துமிழ்ந்த மாலை
பூவிளம் பவள வாயன் பூத்தனன் முறுவல் சூடி. 8

பூத்தனன் முறுவல் முன்னே புதுமணப் பதுமநாபன்
கோத்தன னெண்ணித்தானே கோவலன் காதற் கண்ணி
நீத்தனன் தன்னைத்தானே யிருத்திநீ யொருத்தி யென்றே
காத்தனன் நீத்தமாலைக் கோதைபாற் காதல்மாற்றி. 9

தேனிளந் துளவமாந்தும் தாளரும் புனிதமுந்தன்
மானுட மடங்கலாயே மங்கல மிலங்க யாங்கும்
தானுட னுவந்துகோதை சூடியே கொடுத்தமாலை
வானிடை முழங்க வேத மாமுடி புனைந்தான் மன்னே. 10

பூவரும் புனலுதிக்கும் புண்ணியன் பாதமூத
நாவருந் தேனுகுக்கும் நாரணன் நாமமூறக்
காவருங் கனக மோலிக் கேசவன் தேசுவீசப்
பாவருங் கோவை கூவிக் கூடலொன் றிழைத்தாள் கோதை.

காரணப் பழமை சாலுங் காரியப் புதுமை பூக்கும் [11
நாரணப் பெரிய நாமம் நாமிசைப் பொலியு நல்லார்
தோரணப் புதுவை வந்தோர் திருமணத் தரும மேறும்
வாரணப் பதிகம் கண்ட கோதைதா ளோது வாமே. 12

எண்ணியே யுய்யவைய மெண்பெருக்கந் நலத்தாள்
நண்ணியே யெண்ணுதிண்ண நாரண நாமச் செம்மல்
பண்ணியே சூடமுந்திப் பணியவே கொடுக்க வேந்தும்
கண்ணியே மிலைந்த சென்னிக் கழிபெருந் தெய்வம் கண்டாம்.

பழம்படு முடிக்கடி படிப்படி வெடிப்பக் [13
கிழங்கொடு வழங்கிடு மிளங்கொடி கனக்க
முழங்கிடு மருங்கலை முகர்ந்தொரு முகுந்தன்
விழுங்கிட வெழுந்தவனு வந்ததி துரைப்பாம். 14

வளத்திரு வுளப்பெறு வனப்பினி லினிப்பே
அளப்பரு வளத்திரு வுளப்பெரு நலத்தாள்
வளர்ப்பெனு முவப்புறு நலத்திரு நிலத்தாள்
கொளப்பெறு மறைப்பொரு ளுளத்திரு விளக்காம். 15

தங்கு திங்கள் துலங்கு முகத்திரு
மங்கலத் துல கங்கள் மகிழ்ந்திடச்
சங்கமீதிவள் செந்தமிழூ திடச்
சிங்க மாரி முழங்கி விழித்தனன். 16

ஊடலூடுயிர் கூடலுடன் பயன்
கோடலூது குழல் கமழ் கேசவன்
கூடல் பாடிய கோதைவிழுத் தமிழ்த்
தேடி வந்து திகழ்ந்தது செப்புவாம். 17

தாளமிடத் தோழியராம் தூமறைக ளூடிக்
காளையெனத் தாவியொரு கோளரியே யென்றன்
தோள் வலியின் மிக்கதுன தாள்வலியென் றோதிக்
காளமெழ விம்மியவ ளம்மிமிதிக் கொண்டான். 18

கோழியெழு முன்னமொழி கூவியெழு மன்னம்
ஆழிமழை வண்ணனடி தோழியுடன் பாடி
வாழுமணம் சூடியுடன் கோதையிடு மாலை
ஆழியவ னுவியெழு காதன் முடிக்கொண்டான். 19

தலைவி ஏசல்.

நட்ட நடுப்படு நாரணனே
அட்ட கரத்திரு வக்கரனே
வட்ட மிடத்தனி நம்மிடையே
கொட்டுமினே சிகை கொட்டுமினே. 20

கள்ளவனே முனம் குள்ளவனுய்க்
கள்ளவ ளந்துல கள்ளுவனே
நள்ளிரு ணம்மள வாட நடம்
கொள்ளு மினேயடி கொள்ளுமினே. 21

கூடு பெடை யூடுபடும் கேடுளதோ கள்வா
நாடடைய வாடிவரும் நாளுளதோ கள்வா
கோடுதனித் தீடுபடும் கோவுளதோ கள்வா
ஓடியிவ ணூடுவதென் கோணமுடிக் கள்வா. 22

ஆடு நடைக்கொரு நாடகனே ஆடுக ஆடுக ஆடுகவே
பாடு மறைக்கொரு பாவலனே பாடுக பாடுக பாடுகவே
நாடு நெறிக்கொரு நாயகனே நாடுக நாடுக நாடுகவே
கூடு நிரைக்கொரு கோவலனே கூடுக கூடுக கூடுகவே. 23

தோழி ஏசல்

ஏறுவதும் தேரெனவே ஏவலரும் சேவல்
ஆறுவதும் யோகெனவே நாகணையின் போகம்
ஊறுவதும் மூதுகருப் பூரமுமிழ் கொப்பூழ்
தேறுவதென் கன்னியுனக் கிக்கிழவன் தோழீ ! 24

தலைவி மொழி.

ஊழியரி மஞ்சமுகம் கொஞ்சுமொரு சேவல்
ஏழையர் பால் தோழமையே கூவிவரும் சேவல்
ஆழியருண் மாரியெழில் காணுமணிச் சேவல்
ஊழியமீ தேழுலகும் வாழவரும் சேவல். 25

முன்னவனு மன்னவனே மின்னவரும் சேவல்
பின்னவனு மன்னவனே பின்னவரும் சேவல்
என்னவனு மன்னவனே யெண்ணவரும் சேவல்
பன்னவரும் பொன்னுருவச் சேவலடீ பெண்ணே! 26

நாளைவது வைமணமென் றூடுமண வாளன்
காளையெனக் கொள்ளுமனக் கள்ளழகன் தோழீ!
ஆளரியென் றண்டமெலாம் தண்டனிடும் தேவன்
நாளுமவன் நற்பவளம் நாறுமணம் தோழீ! 27

மாபத்தி யீருத்தி யாறேறு மாறே
யாபத்திலாதென்று மாட்கொள்ளு மாற்கே
தோபத் திருப்பாவை யோதேறு போதச்
சீபத்திரக் கோதை சூடிக்கொடுத்தாள். 28

மாபத்திவிண் பாடியாடும் புராணர்
தோபத் திறம்தேறி யோதச் சிறக்கும்
கோபத்தி நாவூற வூறும் சருப்ப
தோபத்திரம் நண்ணு வண்ணம் தொடுப்பாம். 29

சருப்பதோபத்திரம்.

பூமாதாமா மாதாமாபூ
மாபூ மாரா ராமா பூமா
தாமா நாமா மாநா மாதா
மாரா மாவா வாமா ராமா. 30

கோமூத்திரிகை.

கோதா மாயா காயா மேயா
நாதா நீதா னேதா யாதா
வேதா காயா மாயா நேயா
பாதா மோதா நீதானேதா. 31

மாலைமாற்று.

மாதா வாயே தாதா நா
கோதா நாதா சீதாமா
மாதா சீதா நாதா கோ
நாதா தாயே வாதாமா. 32

அடிமாலைமாற்று.

கோதா நாதா தாநா தாகோ
நீதானேவா வானே தா நீ
பூதா கோதா தாகோ தாபூ
வேதா நீதா தாநீதாவே. 33

வேறு.

திணைநெறி தெளிபணி யணையொளி மிளிரும்
இணையறமுணர்தரு விணையுறு பிணையல்
குணமண முரசொலி தருமொருகுரவர்
கணகண வெனமறை யிறையறை மணியே. 34

பேதப்படு வாதப்படை சேதப்பட வீரன்
சோதித்தொரு வேதத்திரு நீதித்திறனோர
ஓதற்கரு வேதக்கவி வாதிக்கொரு சீயம்
போதத்திரு நாதத்தெழு கோதைப் பொருள்
[கொள்வாம். 35

வேதாயிரமீ தெபொலி பாதாயிர வீரன்
மூதாரிய மாவேங்கட நாதாரிய னூதும்
கோதாதுதி யீதாமொரு கோதாவரி யென்றே
போதாயவிழ் நாதாவிய மேதாவிகள் புக்கார். 36

தந்தையென் றோதநின்ற வெந்தைபால் சிந்தை தந்த
முந்தையோர் மரபு வாழும் மும்மறை யிறைமை சான்ற
சந்தமீ துந்துசிங்க நாதமாய் வந்த தூப்புல்
செந்தமிழ் தந்த கோதை விழுப்பொருள் விளக்குவாமே. 37

விளக்கம்பரத்தே விளங்கத் தெளிக்கும்
ஒளிக்கம்பனென்னும் வளக்கோளரிக்கே
கொளக்கொம்பனென்றே வளக்காதல் விள்ளும்
உளக்கம்ப னந்தா விளக்கொன்று தந்தான். 38

சடைக்கொள்ளு வேதச் சிரக்கம்பனுரே
சடைக்கள் துளிப்பச் சிரக்கம்பமேவும்
கடைக்கண் வழிக்கோனடத்தும் கவிக்கோப்
புடைக்கம்ப நாடன் புகழ்ப்பாடு வாமே. 39

ஓது மாமறை யோதிம வேதியன்
சோதிவாயுமிழ் செந்தமிழாரணப்
போதமா மடலோடிரு கண்ணிவாய்
ஓதுமோர் திருவாய்மை வழங்குவாம். 40

ஸ்ரீ;

ஸ்ரீதத்துவமே கோதா தத்துவம். 'ஸ்ரீ' என்ற சொல்லுக்கு 'திரு' என்றது பொருள். வேதமே 'ஸ்ரீ' ஆம். ப்ரஹ்ம வித்யையே ஸ்ரீ ஆம். 'ஜவஸ்லாஶாநி யஜூம்ஷி ஸா ஹி ஸ்ரீః ஃஸ்ரூதா ஸதாம்' என்று வேதம் தானே முழங்கும் திரு, 'ஓதியோதி யுணருந்தொறு முணர்ச்சி யுதவும் வேதம்' என்றுர் கம்பநாட்டாழ்வார். அவ்வுணர்ச்சியொன்றே நல்லார் பெறும் நல்லுணர்ச்சி. வேதம் உதவும் உணர்வொழிந்த உணர்வெல்லாம் உணர்வாகா. நல்லார்க்கே வேதம் அவ்வுணர்வை உதவும். உணர்வு உதவும் திருவே வேதம். அவ்வேதவுணர்வு நோக்கு மதே திரு. அத்திருவே ஸ்ரீ. அவளே தாமரைக் கோயிலாள். அவள் தனக்கும் திரு ஸ்ரீயஃபதி. ஆக, வேதவுணர்வுக்கு நோக்கு திருமகளாரும் திருமாலாருமே ஆவார். 'ஒண்டாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு' என்று பொய்கையாழ்வாருக்கும், 'மாதவன் பேர் சொல்லுவதே ஓத்தின் சுருக்கு' என்று பூதத்தாழ்வாருக்கும், வேதம் உணர்ச்சி உதவிற்று. 'தாமரையாள் கேள்வன்', 'மாதவன்' என்றே அவ்வுணர்வு நோக்கும். ஸ்ரீயஃபதி என்றே நோக்கும். விஷ்ணு பத்நீ என்றே நோக்கும். 'திருக்கண்டேன்' 'எந்தை ஒருவல்லித் தாமரையாள் ஒன்றிய சீர்மார்வன்' என்ற பேயாழ்வாரையே 'தமிழ்த் தலைவன்' என்றுர் திருவரங்கத்தமுதனுர், 'திருக்கண்டே னென்றுரைத்த தேவே' என்று போற்றி விளித்தார் வேதாந்த தேசிகனுர். ஜநகஷுதா ஸீதா என்ற நல்லாசிரிய தத்துவமே திருவடி தத்துவமாகும். அத்தத்துவ வடிவனே அநுமன் என்பான். ஶாநிஷாடி என்றே தொடங்கி ராமாயணம் ஸீதாயா: சரிதம் மஹத் என்றே தலைக்கட்டி ஸீதாயாஶ்சரிதம் மஹத் என்ற சரணுகதி வேதத்தைக்கண்டவரே பொய்யில் கேள்விப் புலமையினேர்க்கு ஓர் புகலாயினர். அன்னவரே வாங்கரும் பாதம் நான்கும் வகுத்தவான்மீகி என்னும் தெய்வமாக்

கவிஞராயினர். வான்மீகி என்பார் பூதேவியாரின் செவித்தத்துவமாவார், ஶ்ரோத்ரம் ஶ்ரோத்ரஸ்ய ப்ருதிவ்யா யத்வல்மீக: என்றது வேதம். கோதா (பூ) தேவியாரின் செவிச்செல்வத்துப் பிறந்தாராதலின் வான்மீகி வழங்கும் திருவே கவிச்செல்வமாயிற்று. வல்மீகத: ஶ்ரவணதோ வஸுதாத்மனஸ்தே ஜாதோ பபூவ ஸ முனி: கவிஸார்வபௌம: என்று கோதா ஸ்துதியில் வேதாந்த தேசிகனார் இத்தத்துவத்தை விளக்கிக் காட்டினார். ஆதலின், அவரது புலமையை 'பொய்யில் **கேள்விப்** புலமை' என்றார் கம்பநாடுடைய வள்ளலார். ஈதொன்றுமே கம்பரது பொய்யில் கேள்விப் புலமையை விளக்கும் தக்க சான்றாகும். 'வாங்கரும் பாதம் நான்கும் வகுத்தவான்மீகி என்பான் தீங்கவி' என்று கம்பர் 'வால்மீகி' என்னும் சொல்லின் மெய்ப்பொருளைச் சொல்லளவை நிறக்கவிளக்கினார். வல ஸம்வ்ருதௌ வல்மீக: தத்ர ஜாத: வால்மீகி: என்றது வ்யாகரண ப்ரக்ரியை. வல ஸஞ்சரணே என்றது பாணினி தாது பாடம். நான்கு பாதமும் வகுக்கப்பெற்றே சொல் நன்கு நடையாடும் திருவுடையதாயிற்று, ஆதலின் அவர் வான்மீகி. பாதம் நான்கும் வகுத்தவனே வான்மீகி. வான்மீகி அளித்ததே நான்காம் பாதம். மூன்று பாதங்களோடு திகழா நின்ற காயத்திரி வான்மீகியால் நான்கு பாதங்களும் வகுக்கப்பெற்று 'அநுஷ்டுப்' ஆகத் திகழா நின்றது. காவ்யஸ்ய ஸம்பவவயஸ்திதிஸஞ்ஜீவிகாஸஞ்ஜாவ ஸ்வயம்ப்ராப்யானுபவபரம்பணிதி: வல்மீகஜன்மா கவி: என்றது தேசிகனார் பாதுகா ஸஹஸ்ரம். ராமாயண கவி: தைவீம் வாசமவீவ்ருதத் என்றார் பவபூதி. 'கோ' ஒலிப்பது ஸ்தோபவொலி. ஶாக்தேவதாம் வேதமிவோபஜஜ்ஞு: .... ஸோபஹ்வ்ருதிஸ்தோபநிபேதஹஸ்ஸ்வரௌ: என்று யாதவாப்யுதயத்தில் தேசிகனார் வருணித்தார். இவ்வாறு வால்மீகி தத்துவமும் அநுஷ்டுப் தத்துவமும் நன்கு தெளியலாம். மூன்று பாதமும், நான்கு பாதமும், உடையதாய் விளங்கும் மறைத்திருவே காயத்திரி. காயத்ரீவ த்ரிபதா ஸஹா ஶண்யஸே வாக்ப்ரஸூதேரகேவலு' என்று பாதுகா ஸஹஸ்ரத்தில் ஸஞ்சாரபத்ததியில் தேசிகனார் இப்பொருளை விளக்கியுள்ளார். இது ஸஞ்சாரபத்ததியில் இசைக்கப்பெற்றதை ரஸிகர்கள் பெரிதும் சுவைப்பார். வல ஸஞ்சரணே. வல ஸம்வ்ருதௌ என்ற வான்மீகி தத்துவத்தை ஸஞ்சார பத்ததியில் காயத்திரி வாயிலாகக் குறிக்கொண்டுள்ள நுட்பம் ஆழ்ந்து நோக்கற்பாலது, ஸ்தோபமும், அநுஷ்டுப்பும், விளங்குவது காயத்திரியில் என்றது காண்க. காயத்திரியின் எழுத்தொன்றுக்கு ஓராயிரம் ச்லோகங்களாக இருபத்துநான்கு எழுத்துக்கள் கொண்ட காயத்திரி விளக்கும் திருவின் சரிதையே இருபத்து நாலாயிரம் இராமாயணக் கவிகளாய் விளங்கியது. இராமாயணமே சரணகதி வேதம். விஷ்ணு பத்நீயின் பெருமை ஸ்ரீயஃபதியின் பெருமை,

நன்கு விளங்கும் மறையே இராமாயணம். காயத்திரியும், த்வயமும் சாலத்திகழும் மறையே இராமாயணம். 'ஃஜு ஃஷெ மகிஷ்யாகி ஶ்ரீ ஃபாஃகு' என்று திருமுன் திகழும் தூமறையே இராமாயணம். ஊநிஷாடி என்று திருமுன் விளங்கவே இராமாயணம் அவதரித்தது, திருவிளங்கத் திருமால் விளங்கும் தனிமாண்புடையதே இம்மறை. ஈதே இம்மறையின் தனிச்சிறப்பு. ஶ்ரு திஸிரஸி விதீதே ஸுஹணி ஶ்ரீநிவாஸெ என்ற எதிராசர் ஸ்ரீபாஷ்யத்தாலும், வொ ஃ வாஷெ விதீயெ ஶ்ரு திநிகாஶிரஷ்லெவாஃ ஸ்ரீநிவாஸஃ என்ற தேசிகனுர் அதிகரண ஸாராவளியாலும், வ்யாஸ பகவான் பணித்த பிரம சூத்திரம் பரத்துவத்தை உணர்த்துமாறு நிறம் பெறும் நிலமே 'படிகொண்ட கீர்த்தி இராமாயணம் என்னும் பத்தி வெள்ளம்' என்றது தேறலாம். 'யமா ஃயா ஹி ஸா வ்யாதா ஃயா வ்யாஜெதாடஹ்ரீஃ' 'ஃஸ்யா ஃஃ வஶெஷம் ஹி விஃஷதி ஃஷயா தீகா, என்று ஸ்ரீபகவான் விஷ்வக்ஸேநருக்கு உபதேசம் செய்தருளிய உண்மை சாலப்பொலியும் மறையே இராமாயணம். அப்பொலிவே அதன் உயர்வுக்கு அடி. திருவும் அரியும் மாறிப்புக்கிதய மெய்திய திருவிருத்தமே இராமாயணம். ஃஸ்யா ஜெவ்யா ஃநஷஸ்ரீநு தஸ்ய வாஸ்யாஂ வ்ருதிஷிதஃ என்ற திருக்காட்சி கண்ட அநுமனையே ஃஷா ஸீதா ந ஸஜெஹொ ந வாஜெ்யந ஹநஃதா என்று வான்மீகி போற்றியுகந்தார். ஃநந்யா ஃவவெணாஹஃ, ஃநந்யா ஹி ஃயா ஸீதா, ஃஸ்யா ஜெவ்யா ஃநஷஸ்ரீநு தஸ்ய வாஸ்யாஂ வ்ருதிஷிதஃ, என்றதே அத்திப்பிய தம்பதியாரின் மாலைமாற்று. அஃதையே அவர்களது ஃஜெ்யாந்யாஜெஷதநிஷா என்று பட்டர் கண்களிப்பக் கண்டார். ஆண்டவனும் ஆண்டாளும் மாற்றிக்கொண்டு விளங்கும் மணமாலையின் ஏற்றம் அஃதே. அத்தகைத் தனியேற்றம் விளங்குவது கோதா தத்துவத்தே, அஃதே பரனுக்குச் சூடிக்கொடுக்கும் தத்துவம். சரணுகதி தர்மம் தழைத்தோங்கி ஜீவராசிகள் யாவுமே எவ்வித வாசியுமற மாதவனைச் சரணம் புகுந்து அவன் பொன்னடிக் கடவாதே தொண்டு பூண்டு மீளாத பேரடிமைக்கு அன்பு பெறும் அவ்வுபாயத்தை விளக்குமதே திருவின் அவதாரப் பயன். சரணம் புகுந்து நல்லொழுக்கம் கைவந்தார்க்கே நல்வாழ்ச்சி உறும். அஃதே ஆண்டாள் காட்டித் தந்த "கேசவ நம்பியைக் கால் பிடிக்கும்" (வாரணமாஹணஃ) சாணுகதி என்னும் தூநெறி. 'கேசவ நம்பியைக் கால் பிடிப்பாளென்னும் இப்பேறு எனக்கு அருள் கண்டாய்' என்றவளே கோதை. 'அடிக்கீழமர்ந்து புகுந்தடியீர் வாழ்மினென்றென்றருள் கொடுக்கும். பெருமானே கேசவ நம்பி. ஊஜெகஂ ஶரணஂ வ்ரஜ, ஊஶூவஃ, என்றவனே அவன். சரணம் புகுந்தாரே கால் பிடிக்கும் தகைமைக்கு உரி

யார் ஆவார். புகார் ஆகார். ஸ்வஹாத்பேஷாம் ந விஶதி ஶங்கா ஶேஷா நிஜவச்சு என்றது ஸத்யம். அந்த ஸத்ய மூர்த்தியே ஆண்டவன். அன்னவன் திருவே ஆண்டாள். அஃதே கோதா தத்துவம். வேதம் தரும் தத்துவம், வேதத்தைத் தரும் தத்துவம், வீடியல் வழிய தாக்கும் தத்துவம், நோக்கும் தத்துவம், காக்கும் தத்துவம், அவம் தீர்க்கும் தத்துவம், பவம் தூர்க்கும் தத்துவம், மோக்கம் அருளும் தத்துவம், மங்கலங்கட்கெல்லாம் மங்கலமாய்த் திகழும் தனிப்பெருந்தத்துவம், என்றுமே நெடியோன் திருமார்வத்து அகலகில்லேனிறையுமென்று உறைந்துவாழும் பரதத்துவம், பாடியருளவல்லதோர் தத்துவம். அத்தன் பாடியதே கீதை. அன்னை பாடியதே கோதை. அது கீதோபநிஷத். இது கோதோபநிஷத். அது பக்தியோகத்தை விளக்கும், இது ப்ரபத்தி யோகத்தை விளக்கும். ஆதலின் அவ்வுபநிஷத்திலும் இவ்வுபநிஷத் சீரியதாகும். இது விளங்கும் தத்துவமே கோதா தத்துவம். இது சொற் பிரமாணத்தால் பெறப்படுமொன்றுதலால் சொல்லளவை கொண்டே இதைச் சிறிது எடுத்துக் காட்டுவாம்.

'கோதை' என்பார் இருவர். அவர் அம்சியாம் கோதையும் அம்சமாம் கோதையும் ஆவார். 'ஸ்ரீநாஸ்ரீ ஶக்திரேஶ்வரேய' என்ற பராசர பகவான் வாக்காலும், அம்சாதிகரண ந்யாயத்தாலும், இருவரையும் கோதை என்றே சொல்லவமையும். ஸாக்ஷாதப்யவிரோதம் ஜைமிநி: என்ற ஜைமிநீய வழக்காலும், அம்சத்தைக் கூறும் சொற்களெல்லாம் அம்சியளவும் கூறும் வன்மையுடையனவாம் என்ற வ்யாஸ ஸித்தாந்தத்தாலும், ஜீவகோடிகேஷு ந ப்ரமாணஸித்தா: ஸம்ஸ்கார: ஸமஸ்ததேவ்யாவதாரம் தத்ஶக்திஸம்ஸ்ரீவாஸகேஷு ந யோஜ்யம் என்ற ஸ்ரீ ஸூக்த பாஷ்யத்தாலும், இவ்வுண்மை நன்கு தெளியலாம். அம்சியாம் கோதையே இலக்குமி. அவளது அம்சமாம் கோதையே ஆண்டாள். அவள் சநகன் கோதை. இவள் பட்டர்பிரான் கோதை. திருவின் அம்சமாகிய பூமிப்பிராட்டியாரின் அவதாரமே ஆண்டாள். அத்தனும் அரியே ஆண்டவன். அன்னையாம் திருவே ஆண்டாள். அன்னவள் அம்சமே அன்னவயற்புதுவையாண்டாள். யாஸிஸ்ரீம் ஸநவாஹஜ்ஞஷி ஹிரிவஹாஹி: விர்யம்ஸ்ரீவாம், ஶக்தீம் விஹாரவஸிகாதிவராஜஹம்ஸீம் ஸாயாதிவாஹ்யுதயிநீவநீஞ தஸ்யா:, என்ற பட்டர் வாக்கு இங்கு 'நோக்கத்தக்கது. திருவின் அவதார வைபவமும், அவதாரப் பயனும் நம் நாடு நன்கறிந்துள்ளதென்றதற்கு 'வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனை' என்ற பட்டர்பிரான் கோதைசொன்ன சங்கத் தமிழ் மாலை ஒன்றே போதிய சான்றாகும். 'அல்லிநாட்டாமரைமேலாரணங்கினின் துணைவி மல்லி நாடாண்ட மடமயில்' என்ற தனியனும், கோதைக்கும் லக்ஷ்மிக்கும் உற்றுப்போந்த சரீராத்மபாவ ஸம்பந்த

ப்ரஸித்தியை நன்கு தெரிவிக்கும். அத்தகைக் கோதையின் அவதார வைபவத்தைச் சொல்லளவை கொண்டே விளக்குவாம்.

'கோதை' என்றது பல்பொருளொரு சொல், இருமொழியொரு சொல்லுமாம். இது வடமொழியில் (டாவ் ஆதூய) 'ஆ' காரவீறும், தென் மொழியில் ஐகார வீறும் பெற்று கோதா, கோதை, என்ற உருவம் உடையதாகும். கோதா என்றது வடமொழியில் க்விப் வ என்ற பாணிநி சூத்ரத்தால் ஶாம் ஊஷாதி ஐதி ஶொஷாஃ என்று ஆண்பாலாயும், ஊஜாஷ்ருத ஷாவ் என்ற பாணிநி சூத்ரத்தால் ஶாம் ஊஷாதி ஐதி ஶொஷா என்று 'டாப்' ப்ரத்யயாந்தமாய்ப் பெண் பாலாயும் வரும். எப்பாலிலும் 'கோ' அருளும் தத்துவம் என்றது பொருள். உவநஃ ஸவநா ஶஹி ஸொமஸ்ய ஸொமவாஃ விப । ஶொஷா ஐத்ரேவதொ ஶஷஃ ॥ என்று இருக்குவேதம் (1-4-2) ஶொஷாஃ என்று ஆண்பாலில் ஓதியது. (இதன் பொருள் ;—ரேவதஃ= செல்வம் உடையவனுன உன்னுடைய ஶஷஃ=மகிழ்ச்சி; உள்ளக்களி; ஶொஷா ஐஃ=கோவை அருளும் ஒன்றேயாகும்; (செல்வத்திருமாலால் எங்கும் திருவருள் பெற்றின்புறுவர் என்றதை இங்கு நினைக) ஹெ ஸொமவாஃ= ஸோமத்தை (நோன்பை) க்காப்பவனே; (நோன்பைக் காத்தற் பொருட்டு) நஃ=நாங்கள் நோற்கும்; ஸவநாஃ=நோன்புகளை நோக்கி; உவ ஆ ஶஹி=அருகே வந்தருள்வாய்; (வந்து) ஸொமஸ்ய= ஸோமத்தை விப=பருகுவாயாக. இவ்விருக்கின் ஸ்வாபதேசார்த்தப் பொதிவே திருப்பாவை என்றதை நோக்கிக் கண்டு கொள்க). 'கோதா' என்ற வேத ப்ரயோகம் காட்டப்பெற்றது. காயத்ரி ஸ்வரூபியாகிய 'பெருந்தேவி' என்று ஓதி 'கோதா' என்னும் சொல் பெண்பாலில் வழங்கப்பட்டுள்ளதை தேவீ பாகவதத்தில் காணலாம். 'ஶவலாவஹாரிணி ஶொஷா ஶொகஸ்ரூ ஶஷாயணா' என்றது அங்கு ப்ரயோகம். இப்ரயோகங்களாலும், 'கோதாவரி' யாற்றின் திருநாம ப்ரஸித்தியாலும், ஶொஷா தஸ்யை நமஃ ஐஷமிஷ்டம் ஹூய வனவாஸூஹூயஃ என்ற பட்டர் ஓதிய தனியனுலும், தேசிகனர் 'ஶொஷா ஸ்துதி' ப்ரயோகங்களாலும், கோதா என்ற சொல் வடமொழி என்றது வெள்ளிடை மலையாம். 'கோதை தொங்கல் கொண்டை மாலை' 'மாலையு மாதருங்கைத்தோற்கட்டியுமுடும்புங் குழலுங்காற்றுஞ் சேரனுமொழுங்குமியமும் கோதையென்ப' 'கோதை முன்கைத் தோற்கட்டே குழருர் காற்றெழுங்கு சேரன்' என்ற நிகண்டுகளால் 'கோதை' என்றது தென்மொழியென்றதும் தெளியலாம். கொண்டைமாலைக்கும் கொண்டைமாலை சூடிய மாதர்க்கும் பொதுவாயும், பட்டர்பிரான் கோதைக்குச் சிறந்தும் 'கோதை' என்றது பெயராகும், கோதை என்னும் சொற்பொருள்களுள் சிறந்த சிலவற்றையே இங்கு விளக்கி

அவற்றை வேதாந்த தேசிகரும் கம்பநாட்டாழ்வாரும் உவந்துள்ள வாறு குறிப்பாம்.

'கோதா' என்றதில் 'கோ' என்ற சொல்லுக்கும் 'தா' என்ற சொல்லுக்கும் பல பொருள்கள் உள்ளன. முதன் முதலில் இரு கோதையாரின அவதார வைபவத்தை இச்சொல் உணர்த்துமாற்றை விளக்குவாம். 'பூமி ஈன்றவள்', 'பூமியைப் பிளந்துகொண்டு தோன்றியவள்' என்றது ஓர் பொருள். பூமியினின்றும் தோன்றியதால் திருவும் கோதை, ஆண்டாளும் கோதை. ஶவா தீயதெ (பூமி ஈன்றவள்) ஐதி ஶொஷா (ஆதலால் கோதை), ஶாம் ஷ்ருதீதி ஶொஷா (பூமியைப் பிளந்து கொண்டு தோன்றியதால் கோதை). 'கோ' என்றதற்கு 'பூமி' என்றதொரு பொருள். உத்திதா மெதிநீம் பித்த்வா (பூமியைப் பிளந்துகொண்டு எழுந்தனள்) என்றார் வான்மீகி. ஐந்திர வியாகரண பண்டிதனை அநுமன் கூற்ருக இப்பொருளை வான்மீகி விளக்கியது பெரிதும் பொருந்தும்.

ஸா தா ஜநகராஜஸ்ய ஸீதா ஹஸ்த்ரி ஷ்ரஸவ்யதா ।
உத்திதா மெதிநீம் பித்த்வா க்ஷெத்ரெ ஹலமுகக்ஷதெ ।
வத்மரெணு நிபைஃ கீர்ணா ஶுபைஃ கெதாரவாம்ஸுபிஃ ॥

என்றார் வால்மீகி.

வேள்விப் பூமியில் வேதம் முழங்கிப் பொற்கலப்பை நாட்டவே, வேள்வி வடிவளாயும் வேள்விப் பயனும் திருவே 'ஸீதை' ஆக பூமி பிளக்க வெளிக்கிளம்பினள். பொற்கலப்பை பூமியைப் பிளக்க அவதரித்த தாமரைக்கோயிலாளே ஸீதையும் கோதையும் ஆவள். இப்பொருளை ஆறு செல் படலத்தில் கம்பர் குறிக்கொண்டுள்ளார். கோதாவரித்திறன் கூறப்புகுந்த கவிச்சக்ரவர்த்தி கோதைச் சொற்பொருளைக் குறிக்கும் தொடர் வருமாறு;—'தொழுகின்ற சனகன் வேள்வி தொடங்கிய சுருதிச்சொல்லால், உழுகின்ற பொழுதினீன்ற ஒரு மகள்.' அவ்வொரு மகளே திருமகள். அவளே நாரீணாமுத்தமா வதூஃ, ஆதலின் 'ஒரு மகள்' என்றார். 'ஒரு மகள் தன்னையுடையேன்' என்று பெரியாழ்வார் ஓதினர். 'அவளே கோதா' (ஞாலமீன்றவள்) என்றதை '**ஈன்ற**வொருமகட்கிரங்கி **ஞாலம்**' என்று காட்டினர். கம்பம் சீயத்தை ஈன்றவாறே பூமியும் சீதையை ஈன்றனள் என்றது குறிப்பு. அஃதே அவதாரக் குறிப்பு. 'பிளந்தது தூணு மாங்கே பிறந்தது சீயம்பின்னை' என்ற இரணியன் வதைப்படலச் செய்யுளை இங்கு ஒப்பு நோக்குக. ஆறும் **கோதா**விரி. நாமத்தொடர்பாலும் ஒரு குடல்துவக்காலும் 'இரங்கி ஞாலமழுகின்ற கலுழிமாரியாமெனப் பொலிந்ததன்றே' என்றார். அடுத்துள்ள செய்யுளில் 'அளவை

நூலெனலுமாகி' என்ற தொடரும் இக்கருத்தை வலியுறுத்தா நின்றது. அஃதே தொனி. அவ்வாறே, துய்ய திருத்துழாய் வனத்தில் பட்டர்பிரான் (பெரியாழ்வார்) வேதமோதி வேள்வியுட்சிறந்த துளவப்பணி செய்யா நிற்க பூமியைப் பிளந்துகொண்டு ஆண்டாளும் தோன்றினுள். ஆதலால் ஆண்டாளும் கோதை. சொற்பிரமாணம் கண்டு 'கோதை' என்றது பூமி பிளக்க அவதரித்த திரு (ஸ்ரீ) தத்துவம் என்றது கண்டு கொள்க. இப்பொருள்

> ஸ்ரீவிஷ்ணுசித்தகுலநந்தநகல்பவல்லீம்
> ஸ்ரீரங்கராஜஹரிசந்தநயோகத்ருஶ்யாம் ।
> ஸாக்ஷாத்க்ஷமாம் கருணயா கமலாமிவாந்யாம்
> கோதாமநந்யஶரண: ஶரணம் ப்ரபத்யே ॥
> மாத: ஸமுத்திதவதீமதிவிஷ்ணுசித்தம்
> விஶ்வோபஜீவ்யமம்ருதம் வசஸா துஹாநாம் ।
> தாபச்சிதம் ஹிமருசேரிவ மூர்த்திமந்யாம்
> ஸந்த: பயோதிதுஹிது: ஸஹஜாம் விதுஸ்த்வாம் ॥

என்ற வேதாந்த தேசிகர் கோதா ஸ்துதியால் பின்னும் சாலவிளங்கும். திருப்பாற்கடலையும், சனகன் வேள்விப்பூமியையும், பட்டர்பிரான் திருத்துழாய் நந்தநத்தையும், ஒக்கவே அன்னவளுடைய அவதார நிலம் என்று பொதுவாகக் குறிக்கொண்டுள்ளமையும், மதியுடன் பிறப்பையும், சனகனுடையவும், பட்டர்பிரானுடையவும், உள்ளத்துக் கோயில் கொண்டு விளங்கா நின்றதையும், அரியினுடைய திருமார்வத்தில் உறைந்து அன்னவனேடு ஒன்றிப் பொலிவுற்றதையும் இவ்விரு பாக்களும் நன்கு உணர்த்தும். திருவும் அரியும், கற்பகக் கொடியும் சந்தநத்தருவும்போல் ஒரு தத்துவமென்னலாம் படி ஒன்றி விளங்கும் மாண்புடையார் என்றது இப்பாக்களால் போர விளங்கும். விரிவஞ்சி இப்பாக்களின் சொற்பொருளை விளக்காது குறிப்பையே சுட்டினேம், பாற்கடலிற் பிறந்தது அரியின் திருமார்பை நோக்கி. மிதிலையிற் பிறந்தது சனகன் தூமனத்தை நோக்கி. புதுவையிற்பிறந்தது பட்டர்பிரான் தூமனத்தை நோக்கி. திருப்பாற்கடலில் விஷ்ணுவின் சித்தத்தை (மார்பை) நோக்கி, மிதிலையிலும் புதுவையிலும் விஷ்ணுசித்தர்களை நோக்கி, என்றது ஆங்குப்பொருள். சனகனும் விஷ்ணுசித்தன். பட்டர்பிரானும் விஷ்ணுசித்தன். என் பெருந்தநயை என்றும், உன் பெருந்தேவி என்றும் ஓதிக்கொடுக்கும் தகைமைக்கு உரியர் பாற்கடலில் இல்லாமையால் அங்கு பஶ்யதாம் ஸர்வதேவாநாம் யயௌ வக்ஷஸ்தலம் ஹரே: என்று ஸ்வயம் வரம். இயம் ஸீதா மம ஸுதா, ப்ரதீச்சைநாம் பத்ரம் தே, பிதா மே மிதிலாதிப:, ராஜராஜாந்தரம் ப்ராப்ய, 'ஒரு மகள் தன்னை

யுடையேன் உலகம் நிறைந்த புகழால் திருமகள் போல வளர்த்தேன் செங்கண்மால்தான் கொண்டு போனான்', 'வில்லி புதுவை விட்டுசித்தர் தங்கள் தேவரை வல்லபரிசு வருவிப்பரேல் அது காண்டுமே', என்று ஓதிக்கொடுக்கும் உரிமைக்குத் தலைமை சான்றவர்களே சநகனும்பட்டர் பிரானும் ஆவார். 'ஓதிக்கொடுக்கப்பட்டவள்' என்றதும் 'கோதா' என்ற சொல்லுக்கு ஓர் பொருளாதல் நோக்கத்தக்கது, கா: விதந்வதா இதி என்றது ஸ்ரீய:பதி தத்துவத்தை உணர்த்தும், 'கோதா' என்றது விஷ்ணுபத்நீ தத்துவத்தை உணர்த்தும். 'ராமஜாமாதா' என்ற இராமாயணம் நோக்கியே அரங்கநகரப்பனுக்கு ரம்யஜாமாதா (அழகிய மணவாளன்) என்றது திருநாமம் ஆகியதற்கு அடிகாண்க. ஸ்ரீஸம்ருத்தரம்யஜாமாத்ருமஹோஷ்டி என்று பட்டர் ப்ரயோகத்தில் இக் கருத்து காணக்கிடக்கின்றது. சநகன் பெற்ற அன்னத்தையும், பட்டர்பிரான் பெற்ற அன்னத்தையும் ஜாமாதா (மருமகன், மணவாளன்) என்று தான் பெற்று விளங்கும் ஏற்றத்தை இந்த ஸ்ரீரங்கராஜஸ்தவம் நன்கு விளக்கும். ஆதலால், பட்டர்பிரான் ஸ்வசுரமமரவந்த்யம் ரங்கநாதஸ்ய ஸாக்ஷாத் த்விஜகுலதிலகம் விஷ்ணுசித்தம் நமாமி என்று துதிக்கப்பெற்றார். ஜநகன் பெற்ற அன்னத்தை மணந்து விபவத்தில் பரன் ரம்யஜாமாதா, பட்டர்பிரான் பெற்ற அன்னத்தை மணந்து அர்ச்சையில் பரன் ரம்யஜாமாதா. இவ்விருபெடையையுமடைந்து அவ்வோரன்னம் விளங்கும் அழகே அழகாகும். 'பெடையிரண்டையோரனமடைந்து பிரிந்திடாவகை பேசலாம்' என்ற தேசிகமாலையை (அத்திகிரிமான்மியம்) இங்கு நினைக. 'ராமஜாமாதா' என்ற இராமாயண ப்ரயோகத்தையும், 'ரம்யஜா மாத்ருகர்ப்பம்' என்ற பட்டர் ப்ரயோகத்தையும், பின்னும் அழகுற

> கநகருசிரவர்ணாம் பாதுகே ஸஹ்ய ஸிந்தோ:
> ச்ரியமிவ மஹநீயாம் ஸிந்துராஜஸ்ய புத்ரீம் ।
> ஸ்வயமிஹ ஸவிதஸ்தா ஸௌம்யஜாமாத்ரு யந்தா-
> ஸமவஹதி ரஸேந ஸ்வாமிவத் த்வாமிமாம் நாத: ॥

என்று பாதுகா ஸஹஸ்ரத்தில் காஞ்சந பத்ததியில் மறைமுடித் தேசிகனார் விளக்கினார். '**ஸௌம்ய**' என்று பாதுகா ஸஹஸ்ரத்திற் கூறியது சந்த்ரயோகம் தோற்றற்பொருட்டு. பட்டரது ரம்யத்வமே தேசிகனார் ஸௌம்யத்வமாயிற்று. சந்த்ரயோகத்தில் கோதைக்கு ஸ்ரீரங்கராஜ ஹரிசந்தந யோகம். 'சந்த்ரன்' 'சந்தநம்' என்ற சொற்கள் வழி சதி ஆஹ்லாதநே என்ற தாதுவினின்று தோன்றியவைகள் என்றதை நினைக. சந்த்ரனே த்விஜராஜன், பட்டர்பிரான் த்விஜகுல திலகன். ஜநகனும் சந்த்ர (த்விஜேந்த்ர) குல திலகன். சந்த்ரகுலமே விஷ்ணு

சித்தகுலம், चन्द्रमा मनसो जातः (சந்த்ரன் விஷ்ணுவின் மனத்தினின்று தோன்றினுன்) என்றது வேதம். ஆதலின் சந்த்ரன் விஷ்ணு சித்தன். இவ்வாறு 'ரம்யத்தின்' சுவை முதிர்ந்து 'ஸௌம்யம்' ஆயிற்று. 'ராமஜாமாதா' என்ருர் வான்மீகி. ரம்யஜாமாத்ரு **கர்ப்பம்** என்ருர் பட்டர். 'ஸௌம்யஜாமாத்ருயுக்தாம் த்வாம் **அபத்யாபிமா**நாத்' என்ருர் தேசிகனுர். மதிக்கும் மகவுபேற்றுக்கும் உற்ற ஒற்றுமை நோக்கி 'ஸௌம்யஜாமாத்ரு, என்றும் 'அபத்யாபிமாநாத்' என்றும் கூறினுர். இவ்வாறு பல தொனிப்பொருளை உட்கொண்டு விளங்கும் श्रीविष्णुचित्तकुल, मातः समुत्थितवतीमधिविष्णुचित्तं, என்ற ச்லோகங்களின் கருத்தை ஆய்ந்துணர்க. இவ்வாற்ருல், 'கோதை' என்பாள் காசினியில் அவதரித்த திருமகளார் என்றது கூறப்பெற்றது.

இனி, 'கோதை' என்ற சொல் கூந்தல் வழியும் அழகினள், கூந்தல் சூடிக்கொடுத்தவள் என்றும் பொருள் தரும். 'கோ' என்றதற்கு 'கூந்தல்' என்றதுமோர் பொருள். 'தா' என்றதற்கு 'தருபவள்' என்றது பொருள். 'கோதா' என்றவள் கூந்தலழகு வழிந்தவள் என்றும், கூந்தலணிந்த மாலையைத் தந்தவள் என்றும், இலக்கணையாற் பெறப்படும். दा என்றது दैवी सम्पद என்ற பொருளுடையதுமாகும். தூய்மை, அழகு என்னும் பொருளதோர் சொல்லாகும். கந்தம் கமழும் குழலாள் என்றது கோதா என்றதின் பொருளாகும். இலக்கணமும் இலக்கணையும் ஒன்றப்பெறும் பொருள் ஈதாகும்.

गौर्नादित्ये बलीवर्दे क्रतुभेदर्षिभेदयोः ।
स्त्री तु स्याद्दिशि भारत्यां भूमौ च सुरभावपि ।
नृस्त्रियोः स्वर्गवज्राम्बुरश्मिदृग्बाणलोमसु ॥

என்றது நிகண்டு. '**கோ**தாநவிதி' என்றவிடத்து இப்பொருளதோர் ப்ரயோகம் காணலாம், இவ்விலக்கணையிலக்கணங்கள் ஒன்றிய பொருளைக் கம்பர் ஆறுசெல் படலத்தில் 'சீதை போகின்ருள் கூந்தல் வழீஇவந்து புவனஞ்சேர்ந்த **கோதை**போற்கிடந்த கோதாவிரியினைக் குறுகிச்சென்ருர்' என்று அமைத்துள்ளார். கூந்தல் வழீஇவந்து புவனஞ் சேர்ந்ததால் 'கோதை' என்றும், அது விரியக் 'கோதாவிரி' யென்றும் இச்சொற்பொருள் தந்தாரே கல்வியிற் பெரியவரும் கவிச் சக்ரவர்த்தியுமாவர், இத்தகைச் சான்றுடைத்தாதலின், கம்பர் கவியெனக்கிடந்ததே கோதாவரி என்றே கொள்ளவமையும். அரக்கனுல் சீதை வஞ்சிப்புண்டு பிரிந்ததால் கவிகள் கோதாவிரியைக் குறுகிச் சென்ருர் என்ருர். விரிவஞ்சி யாமும் குறுகிச்செல்வாம். இப்பொருளை வேதாந்த தேசிகர் கோதஸ்துதி முற்றுமே உட்கொண்டுள்ளது.

அஃதோர்ந்துணர்க. கோதை சூடிக்கொடுத்த கூந்தல் மாலையை முடிக் கொண்டேந்தியே அரி முதுமறைமுதல்வன் என முடிசூடப்பெற்ருன் என்றதை கோதா ஸ்துதி விளக்கும்.

ஊாூாஉவிகூஉமெகொாயிவாஸ்ய உத்தாழ
வ்ராயெண ஈஜுவகிரெஷ ஸிஹகில் மொஜெ
ஸௌஹாரு்யஸம்வஉஹிஷெகூஹோயிகாரூழ என்றும்,
ஜௌஷிஜுஜா தவ உ¬கூ¬நுகிரீடிஹாஜா என்றும்,
யத்தே நதெநஶிரஸா தவ ஜௌஷிஊாரூழ ॥ என்றும்,

இப்பொருளைப் பல்காறும் வேதாந்த தேசிகர் பன்னிப் பனித்துள்ளார். துய்யதோர் இன்பச்சுவை முதிர்ந்த நூலே கோதாஸ்துதி. ஶ்ருஜுாரு யதி ஹ்ருஉயம் ஶுரூவஜூீயாஃ என்று இப்பொருளை தேசிகனுர் தாமே விளக்கினர். இம்முறையால் 'கோதா' என்ற தத்துவம், திரு என்னும் சூடிக்கொடுத்த கந்தம் கமழும் திருக்குழல் நாய்ச்சியார் என்றது கூறிற்றுயிற்று.

மேலும், 'கோதை' என்றதற்கு 'சொல் தரும்' தெய்வம் என்றதும் ஒரு பொருள். சொல்லனைத்துக்கும் கோதையே பொருள். சொல்லனைத்தும் அருளும் தேவே கோதை.

ஸவெல் வெஉா யவீஉஊஉநகி
யொ வெ வெஉாஂஶ்வ ஹ்ஹிணொகி தஜெஐ ॥ என்றதுபோல் கூயெஶவிஷ்ணுஶியஂ வாணீ என்ருர் பராசரமுநிவர். 'திருவுரையாய்த் தாம் பொருளாய் நிற்பார் வந்தார்' என்றது வேதாந்த தேசிகர் திருச்சின்னமாலை. 'சான்றோர் கவியெனக்கிடந்த கோதாவரியினை வீரர் கண்டார்' 'பாவருங்கிழமைத் தொன்மைப் பருணிதர் தொடுத்த பத்தி நாவருங்கிளவிச் செவ்வி நடைவரு நடையள்' என்ருர் கம்பர். ஹவதீ வ்யவஜெஶயொமாஜ்ரோஉாவரீ ஜமஹிஂ வயஸா வ¬நீதெ என்றதே கோதாஸ்துதியாகும். 'வ்ருத்த கங்கை' என்றது கோதாவரிக்கு ஒரு பெயராகும். கங்கை வளர்ப்பாள் என்றதும் அதன் பொருள். யஸ்யாம் ஸஜெத்ய ஸஉயெஷ¬ விரூ நிவாஸாகூ ஹாநீரயீஷஹ்ய தயொZவிஹவதி வ¬ண்யாஃ என்று இப்பொருளை தேசிகர் கோதாஸ்துதியில் விளக்கினர், ஶாஂ ஜஸஂ உஉாதி; உாயதி, ஶொயயதி, (நீரைக் கொடுப்பவள், நீரைப் புனிதமாக்குபவள்) ஆதலால் கோதா, மொஉாஸ¬வரீ ஶ்ரேஷ்டா (கோதைகளுள் தலைமை வாய்ந்தவள்) ஆதலால் கோதாவரீ என்ற வ்யுத்பத்தியால் இப்பொருள் பெறலாகும், இம்முறைகள் நோக்கி 'சான்றோர் கவியெனக்கிடந்த கோதாவரி' என்ற உண்மையை உணர்க. தஷிவ்ராஹொ விவந்யவஃ, ய்ரு¬வாஹொ கூஸ்ய கீஈயொ ஜநாஸஃ, யஸ்ய ஸாரஸ்வதஹ்ரோதஃ என்ற வேத வேதாந்ததேசிக

வாக்குகள் இதற்குத் தக்க சான்ருகும். அவையே சான்ரேர் கவி. அவையே வேதம். உபநிடதம் முழங்குவது திருவின் இறைமாட்சியை என்றும், திருவருளே வேதமாகும் என்றும், பட்டர் அறுதியிட்டுள் ளார். உத்³கா³தா²ஸ்ஸாமோபநிஷத³வதா³ஹநேகா நியந்த்ரும் ஶ்ரீமத்³ராமாயணமபி பரம் ப்ராணிதி த்வச்சரித்ரே। ஸ்மர்தவ்யாநோ ஜ்ஞாநமபி யதமே ஸேதிஹாஸை: புராணை: நிர்ணேதவ்யா நவி ச தத³மே த்வத்³விபூ⁴திம் ப்ரமாணம்॥ அதஏவ ஶ்ரீமத்வம் பஹுமாநமபய வாணீவிலஸிதம், தே ஜயாஸ்தரையா காஷ்டா: யே தே ஶ்ரீரங்கராஜ்யராஜகநகமதே ந க்ஷணம் முக்ஷ்யமாஸந்து, ஶ்ருதிஶிரஸி நிகூடம் முக்தம் தே வீக்ஷமாணா நியமிவ மஹிமாநம் பா⁴ஜதே யேஷவி யத்யா: நநா ப⁴க³வதி தை³வீம் ஸம்பத³ம் தே(அ)பி⁴ஜாதா:, என்ற பட்டர் ஸ்ரீகுணரத்நகோசம் கண்டு இத்தத்துவம் ஐயந்திரிபறத் தேறலாம். கிமபி யத்³ரோகே ஸ ஜித்யாப்யதே தகஸவபம் கூடயீநமேவ யத:க: ஶ்ரீஸித்யஹைந வா யபா ஶ்ரீமதீத்யமேந வசஸா தைவிப்ரயாமஸ்த்யதே॥ தேநைதேந ந விஷ்யே மஹி ஜக³ணாயோ஽பி நாராயண: யந்யம் மந்யத ரங்க்ஷணா த்³வ யத:ஸ்தா²மநமோக்ஷர:, யோகே வநஸ்தி ப்³ருஹஸ்தி தாரதத்ய்ம் யஸ்யா: ப்ரஸாத³வஶிணாமஸா²தா⁴ஹரத்தி। ஸாஹாரதீ ப⁴க³வதீ தா யதீ³ய தா³ஸீ தாம் தேவ தேவ மஹிஷீம் ஶ்ரியமாஶ்ரயாம:॥ என்ருர் கூரத்தாழ் வான். ஶ்ரீரிதேவ ச நாம தே ப⁴க³வதி ப்³ரூம: கத²ம் த்வாம் வயம், யஸ்யாஸ்தே மஹிமாநமாத்மந இவ த்வத்³வல்லபோ⁴(அ)பி ப்ரபு⁴: நாலம் மாதும் இயத்தயா நிரவதி⁴ம் நித்யாநுகூலம் ஸ்வத:। யோகேஸ்வரி என்று ஆளவந்தார் திருவின் பரத்துவம் எத்துணேச்சான்றுடைத்தென்று விளக்கினர். வேதம் தரும் தத்துவமும், வேதத்தை அருளும் தத்துவ முமாதலால், 'கோதை' (திரு) நல்லாசிரியர் திருவருளுக்கு சேதனர்களே இலக்காக்குவித்துக் காத்தருளும் தத்துவம் என்றது பெறப்படும். நல் லாசிரியர் அருளேக்குடையார்க்கல்லது பிறர்க்கு திருவின் தத்துவ மும், திருமாலின் தத்துவமும் விளங்காதாதலாலும், அத்திப்பிய தம் பதியாரின் திருவருள் கிட்டாதாதலாலும், நல்லாசிரியரைத்தந்தே கோதை (திரு) வேதத்தையும், வேதம் முடிக்கொண்டுள்ள அன்னவள் பொன்னடியையும் தந்தருள்வாள். அக்கோதையே திரு (ஸ்ரீ:) 'தென் னரங்கனணியாகமன்னும் பங்கயமாமலர்ப்பாவையைப் போற்றதும் பத்தியெல்லாம் தங்கிய தென்னத்தழைத்து நெஞ்சே நந்தலைமிசையே பொங்கிய கீர்த்தியிராமாநுசனடிப் பூமன்னவே' என்றது திருவரங்கத் தமுதனர் திருமொழி. 'கோதை' யின் திருவடி நிலை 'இராமாநுசன்' என்ற நுட்பம் இது கண்டுணர்க. அஃதே கோதையின் தூய்மையும் இனிமையுமாம், ஆதலின் ஸ்ரீ ஆகிய 'கோதா' தத்துவத்தை 'வாணி'

என்றும் 'கோபால' தத்துவத்தை 'அர்த்த;' என்றும் பராசரர் கூறினார். 'கூயெ-லா விஷ்ணுரியம் வாணீ' என்ற முனிவரர் வாக்கால், பரன் தன்னையுமே ஸர்வகந்தனுமாறு சூடிக்கொடுக்கவல்லதோர் துய்ய பரதத்துவமே அவனது ஸ்ரீயாம் 'கோதை' என்றதை 'ஷோஹிஷாயாம் ஸுஜி நிமஷிதம் யா ஸஹாகஃ க்ருத்யஹ்ஷீக்ஷு' என்று பட்டரும், யம் ஸவ-லஸ ஐதி ஸாஷூ உஹஷீ, கூலோடிஉநூஸியிமஹ்தி உாமிகாஹிஃ ஸொடவி கூஷீய கூஷியாஸுகவாஸிதாஹிஃ என்று தேசிகரும், போர விளக்கியுள்ளார்கள்.

> மெளஸவெடிஹ-லவாஷாஸுஉாஸாகாாம் ஸாஸூதீழ ।
> யஸ்ய நித்யம் வூஶம்ஸதி ஸஜ்ஜொஷூஹவெடிநஃ ॥

என்றதின் உண்மைக்கு இங்கு அடி காண்க. 'ஐயம் வாணீ' என்று கூறிய தத்துவத்தையே பராசரர் தாமே ஷிஜிஃ, ஸ்வயா, ஸ்வாஹா, ஸுயா, ஸொகஹாவநீ (வாவநீ) என்று விளக்கினர். சாரீரக சாஸ்த்ரம் நான்கு அத்தியாயப் பொருளையும் பராசரர் நாமங்கொண்டு கூறியதையே, ஆளவந்தார் நான்கு ச்லோகங்களால் (ஸ்ரீசதுச் ச்லோகியால்) தெளிவித்தார். அப்பொருள்கள் முறையே, ஸ்வஶெஷாஶெஷாய-லிஃ, நிரவயிகநிவ-லாயஉஹிஉா, ஹஜா நாம ஊதா, ஹஜுவேி வ ஶாரீரகஜிதஃ; ஸ்ரியழ' என்று ஸ்ரீசதுச்ச்லோகீ ஸ்தோத்ர ரத்நபாஷ்யத்திலும், ஸ்ரீஉாஹா ராயணஃ நஃ வதிஃ, கவிஜுதநுஃ, உபக்ஷிஃ, உபஞஹொஷ்யஃ, என்று அதிகரண ஸாராவளியிலும், வேதாந்த தேசிகர் விளக்கினர். ஸாஹிஸ்ரீஃ கஜூதா ஸதாழ, ஹஜெஷாம் ஜக்ஷீஃ நிஹிதாயிவாஷி என்ற வேதமே ஷிஜிஃ, ஸ்வயா, ஸ்வாஹா. ஸுயா என்ற பராசரர் பணிப்புக்கு அடியாயிற்று. ஜக்ஷீஃ ஜக்ஷணாஹிஸநாகவரிஷூஷா ஹவதி என்ற மஹாபாஷ்யத்தாலும், வூஹெள வரிஷுஸஃ என்ற பாணிநி ஸூத்ரத்தாலும், ஸுஷு வரிஷுஸம் ஸவ-லதஃ என்ற யாஸ்கோக்தியாலும், யயா ஸவ-லஹொ விஷ்ணுஃ தயாவெயழ, கூயெதஷி ஷ்ணுநா வாம்ப ஜமஷ்யாவ்தம் வராவரழ; நாநயொவி-லஜுதெ வரழ, ஷூஹக்ஷாஷ் ஷூம்ஹணகவாஷு என்ற பராசர முனிவரர் வாக்கியங்களாலும், ஸ்ரீபரத்த்வம் சான்றோர்க்குக் கண்கூடேயாம். ஸவ-லஹாவநீ என்றது அப்பொருளதே. அந்த ஸர்வபாவநீயே சாரீரக சாஸ்த்ராயங்கள் நான்குக்கும் முறையே ஸித்தி, ஸ்வதா, ஸ்வாஹா, ஸுதா என்ற பொருளேயாம் திரு. ஷிஜிஃ என்றது ஸமந்வயாதிகாரம் சொல்லும் ஸ்வசேஷாசேஷார்த்தமாம். ஷியு ஶாஸ்த்ரெ உாஜூலெ என்றது பாணிநி தாதுபாடமாதலால் சாரீரக சாஸ்த்ரப்ரதிபாத்ய பரதேவதையும், வெடிஶாஸ்த்ரக வரம்நாக்ஷி என்றபடி சாஸ்த்ர சப்தத்தால் சொல்லப்படும் வேதம் என்னும் சாஸ்த்ரத்துக்கு விஷயமாய் சாஸ்த்ரயோநித்வாதிகரணம் விளக்

கும் பரதேவதையும், மங்கலம் மங்கலாநாம் என்ற பரதேவதையும் திரு மகளோடு வரும் திருமாலென்று தானே தோன்றும். காந்தஸ்தே புருஷோத்தம: பணிபதிஶ்ஶய்யாஸநம் வாஹநம் வேதாத்மா விஹகேஶ்வர: ப்ரஹ்மேஶாதிஸுரவ்ரஜஸ் ஸதயித: த்வத்தாஸதாஸீகண: என்ற ஆளவந் தார் திருவாக்கும், ஶேஷீ சைவ பரம் பராணாம், வஶீகுர்வந்த்யேதே தவ ஸாரேண, ஜநந்யாநகயீம் ப்ராணமந்யம் ஶரணம்। ஜகத்பிதா ந மமம் மமம் வந்தாமஹே மஹ: ॥ என்ற பட்டர் திருவாக்கும் இங்கண் தக்க சான்ருகும். ஶ்ரிஞ் ஸேவாயாம் என்ற சப்தாநுசாஸநமும் இங்கு நோக்கத்தக்கது. ஶ்ரயா என்றதால் அவிரோதாத்யாயத்தில் சொல்லிய நிரவதிக நிரதிஶய மஹிமா சொல்லப்பட்டது. ஶ்ரயம் யதே ஸர்வம், ஶ்ரீயதே ஸர்வம் என்ற வ்யுத்பத்திகளால் ஸர்வாதாரத் வமும், ஆதலால் அவிரோதமும் சொல்லப்பட்டது. ஆநீதவாதம் ஶ்ரயயா ததேகம், ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் என்று வேதமும், யதா ஸர்வகதோ விஷ்ணுஸ் ததைவேயம், நாநயோர்வித்யதே பரம் என்று பராசரரும், உத்ஸாஹஸ்வாமித்வ நிஷ்டஸுவாஹநைகாதியம் தீர்ம் என்று பட்டரும், இப்பொருளை விளக்கியவாறு. ஶ்ரயா என்றதற்கு 'இன்ன முகத் திருமகள்' என்றது தமிழாகும். 'ஶ்ரீ' (இனிமை) என்ற தாது 'ஆ' கார வீறுபெற்று வ்யஞ்ஜநாதிகாஸ 'ஈ' காரத்துக்கு 'ய' காரம் வந்து, 'ஶ்ரயா' என்ற ரூபம் பெறுகிறது. ஆதலால் திரு மால் 'திரு' வே (ஸ்ரீயே) அமுதம். திருமாலே 'அப்பன்'. 'நாராய ணன்' என்ற சொல்லுக்கு 'அப்பன்' என்றது பொருள்.

ஆபோ நாரா இதி ப்ரோக்தா ஆபோ வை நரஸூநவ: ।
தா யதஸ்யாயநம் பூர்வம் தேந நாராயண: ஸ்ம்ருத: ॥

என்றது மநுநூல். ஆதலால் நாராயணனே 'அப்பன்' ஆவான். ஆதலின், அவனே 'தீர்த்தன்'. நாரரயணனே 'அப்பனும்' 'தீர்த்த னும்' ஆவான். அவ்வப்பினுள் அமிர்தமே 'திரு' (லக்ஷ்மீ, ஶ்ரீ:,), 'அப்பனே, அப்பினுள் அமிர்தம் தன்னையே ஒப்பனே, ஒப்பனே உரைக்க வொண்ணுமோ' என்று கம்பர் திருநாரணப் பொருளை விளக்கியபடி. 'ராவணோऽஹம்ஸதி வைதேஹீம் தவைகமம்' 'ஸீதேதி மதுரம் வாணீம் வ்யாஹரந் ப்ரதிபோதயேத்' என்றது அநுமன் அமுதவாக்கு. ஸர்வகந்த:, ஸர்வரஸ: என்ற தத்துவம் திருநாரணனென்றே உணர்க. இவ்வுணர்வுற்ருர்க்கே நல்விடிவு.

ப்ரமயவிது தாராமோகமோஹாய நீசா
ஶ்ரியமநதிஶயஶ்ரீஸ்ஸாந்த்ராநந்தாம் தயாநம் ।
மம ந ஸவிதாராம் ஸம் நாதி ஸ்ரீத்வஸாநே
மாரஸிவபரஸிவ ஜாஸாநேஷ ஹநகோऽபிஸேதே ॥

என்று நல் விடியலே வருணிக்கும் முறையால், ஆநீஃவாதம் ஸுயபா தஷெகலழ என்ற வேதப்பொருளே மாக மஹாகவி சாலவிளக்கினர். இவ்வாறு லோக வேத ஸுப்ரஸித்தியுடைய தத்துவமே 'ஸ்ரீ' தத்துவம். அஃதே 'கோதா' 'ஸ்வதா' தத்துவம். இனி, 'ஸ்வாஹா' என்றதால் ஷஷ்ரநாம ஓாதா, ஊகூிஃ என்ற மூன்றும் அத்தியாயமாகிய ஸாதநாத்யாயப்பொருள் கூறப்பட்டது. ஸ்வாஹா வ ஹூதஹூகூியா என்றது நிகண்டு. 'ஸ்வாஹா ஶகூீஜஃமஹாயொ வாஸூதெவொ ஹூதாஶநஃ' என்றுர் பராசரர். அரியே அக்கினி. திருவே அவனது பத்தினியாகிய ஸ்வாஹா. ஸ்ரீய;பதியே அந்த அக்கினி; விஷ்ணு பத்நியே அந்த ஸ்வாஹா, 'வதூநெஃ யஜ்ஞஸஂயொமெ' என்றது பாணினி ஸூத்ரம். திருமாலின் இன்னருளே உபாயம். அன்னவன் அருள் வடிவளே திரு. ஜெயஸீஂ ஸ்ரீநிவாஸஸ்ய காருணாவிவாபிவிணீழ' என்றது தேசிகர் தயா சதகம். இடப்பெறும் ஆவியாகும் அவிக்கு இலக்கு, 'ஸ்வாஹா தேவி' 'அக்நி தேவன்' ஆகிய இவ்விருவர்களுடைய சேர்த்தியேயாம். அச்சேர்த்தி நிலேயே தாம்பத்ய நிலே. பதியின் முதன்மை(பதிப்ராதாந்யம்)தோற்றத்தன் முதன்மை (ஊமிஷாஃ, கஹ தஷெமஷிஷ்யாநி;) தோன்றும் மறைமுடித் திருவே 'ஸ்ரீ'. அஃதே உபாயத்திரு. அஃதே வினே தீர்க்கும் திரு. ஶ்ருணீ காஶகூகாநு என்ற திரு. அவம் தீர்க்கும் திரு. 'வேரிமாருத பூமேலிருப்பாள் வினே தீர்க்குமே' என்ற இறைமாட்சி தெரிக்கும் திரு. ஸ்வாஹாக்நிகளாய் ஸ்ரீ ஸ்ரீய:பதிகளாய், ஸ்ரீநிவாஸத்வம் என்ற ஏகதத்த்வமாய், கநந்யாஜாவவெணாஹழ, கநந்யா ஹி ஊயா வீதா; கஸ்யா ஐஐ வ ஶெஷஂ ஹி என்றதே அவ்வுபாய நிலேத்திரு. அந்நிலேயே அவர்களது திருநிலே. கவூெயஂ ஹி தஜெஃ என்றது இவ்வுபாய நிலேயை நன்கு விளக்கும். அவமனேத்தும் நீறுபட அழிக்கவல்ல நிலேயே அது. 'போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்' என்றதூஉம் அது. மோக்ஷம் அருள்பவளே 'கோ'தா. விஊகூிஷஶஓாயிநீ என்றது பராசரர் பொய்யா மொழி. ஜெயொ நஹ்யாவிநூயொவநஐநஃகாஷாவுஸாஓாதூதெ என்றுர் ஆளவந்தார். 'வெஸ்யஃஊக்ஷாமதிஂ வாஶஂ வஷஂ வா கஜௌவிஃ ஜூமிஹாஂ வஹஜெ விதீயஃ' என்ற பட்டர் வாக்கால் ஷஷவுஓாதூகூஂ திருவின் ஸ்வரூபம் என்றது நன்கு விளங்கும். 'கோ' என்றது ஸ்வர்க்கம், மோக்ஷம், என்ற பொருளுடையதாதலால், கோதா என்றது மோக்ஷம் அருளும் தத்துவம் என்றதை அச்சொல்லே விளக்கும். 'நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும்' என்றுர் திருவாய்மொழித் தேவர். ஜெயா, ஸ்ரூஷா, ஸாஷூதீ என்ற திருநாமத்தாலும் இவ்வுபாய தத்துவம் நன்கு தெளியலாம். ஜெயா என்றது திருவின் திருநாமம். திருவுக்கு அவியென இடப்பெற்றே அன்னவள் திருவருளுக்கு இலக்

காகும் பொருள் ஜெயும் ஆகும். தூய்மைக்கு இருப்பிடமே 'மேதா' தத்துவம். அவளுக்கு அடிமை பூண்டே ஆத்மாக்கள் சுத்தியடைவார்கள், தூய்மையின் வடிவமே திரு. 'துய்யனும் நீயே செய்யாளுறைதலின்' என்றார் தேசிகனார். 'லோகபாவநீ' என்றார் பராசரர். ஆன்மாக்கள் 'மேத்யர்' களாகியே (திருவுக்கு அவியாகியே) வீடு என்னும் இன்பத்தைப் பெறுவார்கள். 'ஈக்ஷ தர்ஶநாங்கநயோ:' என்ற பாணிநி தாது பாடத்தால், 'நோக்கும் கடவுளே' திரு ஆகும். ஸம்ஸாரார்ணவ விகடாத்ஜாயம் த்வம் தேவி நிரீக்ஷஸே என்றார் பராசரர். திருவருளுக்கே பிறவிக்கடலைக் கடத்தும் என்றதால், மூன்றாவது அத்தியாயப் பொருள் கூறப்பெற்றது. 'ஶ்ரயா' என்றதால் 'ஶ்ருணோதி' 'ஶ்ரேயஸ்ஸு:' என்ற நான்காவது அத்தியாயப் பொருள் கூறப்பட்டது. திருவருள் பெறுவதே உபாயமும் பயனுமாம். திருவுக்கும் திருமாலுக்கும் மீளாத பேரடிமைக்கன்பு பெறுதலே திருவருள் பெறுவதாகும், திருவருள் பெற்றோரே இன்புறுவார்.

ஆணனைத்தும் அரியின் விபூதி. பெண்ணனைத்தும திருவின் விபூதி. திருவும், அரியும் போல், அறநெறிக்கண் நிலையுறுதலே திருமணமாகும். 'கந்யாம் கநகஸம்பந்நாம் ... தாஸ்யாமி விஷ்ணவே துப்யம்' என்று நிகழ்த்தப் பெறுமதே திருமணமாகும். அஃதே மங்கலம். அம்மங்கலம் உலகத்தில் நன்கு தழைத்தோங்கி அனைவரும் நன்மக்களைப் பெற்று இருமையும் வழுவாது அறம் செய்து வாழ்ந்து மகிழுமாறு கோதையார் நோன்பு நோற்று மாதவனுக்குச் சூடிக்கொடுத்த மாலையே திருப்பாவையாகும். உலகினில் நல்லன்பு மேன்மேலும் பெருகுமாறே ஆண்டாளும் ஆண்டவனும் மாலை மாற்றி மகிழ்ந்தார்கள். **மா** (மார்கழி) என்று தொடங்கி 'எங்கும் திருவருள் பெற்றின்புறுவர்' என்று தலைக்கட்டிய மங்கலத்திருவே திருப்பாவை என்னும் மஹோபநிஷத் தாயிற்று. ஈதொன்றே ஒப்புயர்வற்ற சங்கத்தமிழ் மாலையும் ஆயிற்று. இம்மாலையையும், இதன் தூய்மையையும் ஆய்ந்துணர்ந்து அனைவரும் திருவருள் பெறுவாராக. ஸர்வம் சுபம்.

போதவிழ்பூம் பொழில்தழுவு மெழில் பரந்து
புதுப்புதிய மதுப்பெருகும் புதுவை தன்னில்
நாதனடிச் சோதியருள் வளம் தெளிக்கும்
நான்மறையோர்க் கோரிறையாம் பட்டநாதன்
கோதையெனத் துளவவனம் திருத்தழைக்கத்
தோன்றிமறைத் தலைப்பொருளாம் திருவே முன்னம்
ஓதுபுகழ் மாலையுளம்களிக்கச்சூடி
ஒருதிருமாற்குரிய தெனத்தந்தாள் தானே.

அத்திரு வுத்தம மாலையுகந்தே
தத்துவ மும்மையி னன்மை தெரிக்கும்
புத்தெழிலுத்தமன் பூத்தெழு நன்றி
நத்தினன் கேசவனித்தமிழ் நன்றே.

ஸ்ரீ:

ஆண்டாள் வைபவம்.

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலை அய்யங்கார்,
தமிழ்வித்துவான், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.]

"திருப்பாவை யென்னத் திருந்தியற்பாத் தந்த
திருப்பாவை வில்லிபுத்தூர்ச் செல்வி—யருட்பார்வை
வாய்ந்ததனுற் செய்யுள் வழக்கென்றிரண்டிடத்தா
லாய்ந்துரைப்பல் செய்யுளணி."

—மாறனலங்காரம்.

" பாடற்கரும் புழுதுழாய் வாடவெயினின்று பவளவாயீரமாருப்
பச்சைப் பசுஞ்சொற் புதுப்பாடலுஞ் சுருள்பனிக்குழன் முடித்துதிர்க்கும்
வாடற்பழஞ்சருகும் வேட்டரங்கேசனும் மலைகுனிய நின்றமுகிலும்
மாலலங்காரனு மிரப்பவருள் புதுவை வரு வல்லி யிருதாடுதிப்பென்
சேடற்பெரும்பள்ளி விழிதுஞ்சு பாற்கடற் சேர்ப்பற்கு மணிவரன்றிச்
சிலம்பாறு பாயுஞ்சிலம்பற்கு வெள்ளவொளிதேங்கி யலைவைகுந்தவா
டைற்குமுல்லைப் புறத்தா நிரைப்பின்னடந்ததாளண்ணலுக்கு
நான்மறைப் பொருளாயவழகற்குரைக்கு மென்னன்கவிதைவாழவென்றே."

—(அழகர் பிள்ளைத் தமிழ்.)

திருமாலின் அபிநவ தசாவதாரமெனக் கொண்டாடப்பெற்று வரும் ஆழ்வார்கள் பதின்மர் என்ப. இவர்களின் அடைவை,

" பொய்கைமுனி பூதத்தார் பேயாழ்வார்தண்
பொருநல்வருங்குருகேசன் விட்டுசித்தன்
துய்யகுலசேகரனம் பாணநாதன்
தொண்டரடிப் பொடிமழிசைவந்தசோதி
வய்யமெலா மறைவிளங்கவாள் வேலேந்து மங்கையர்கோன் * *"

(அதிகாரச் சுருக்கு. 1)

" பொய்கையார் பூதத்தார்பேயார் புகழ்மழிசை
அய்யன் அருள்மாறன் சேரலர்கோன்—துய்யபட்ட
நாதன் அன்பர் தாள்தூளி நற்பாணன் நற்கலியன்
ஈதிவர் தோற்றத்தடைவாம் இங்கு."

—(உபதேசரத்தினமாலை. 4)

என்ற பாசுரங்களிற் காண்க. ஆண்டாளையும், மதுரகவியாரையும் சேர்த்து ஆழ்வார்கள் பன்னிருவர் என்றும் கூறுப. இதனை,

" வையகமெண்பொய்கை பூதம் பேயாழ்வார்
மழிசை யர்கோன் மகிழ்மாறன் மதுரகவி
பொய்யில் புகழ்க் கோழியர்கோன்விட்டுசித்தன்
பூங்கோதை தொண்டரடிப்பொடி பாணழ்வார்
அய்யனருட்கலியன் * * * ஆறிருவர் "

என்ற தேசிகமாலைப் பாசுரம் (பிரபந்தசாரம். 17) தெளிவிக்கும். ஈண்டு, **ஆண்டாள்** வைபவத்தைச் சுருங்கக் கூறுவாம்.

தென்றமிழ் நாட்டினைக் குறித்துக் கல்வியிற் பெரிய **கம்ப நாடர்.**

“ அத்திருத்தகு நாட்டினை யண்டர்நா
டொத்திருக்கு மென்றுலுரை யொக்குமோ
எத்திறத்தினு மேழுலகும் புகழ்
முத்துமுத்தமிழுந்தந்து முற்றமோ ”

(கிட்கிந்தா காண்டம், ஆறு செல்படலம். 53)

எனப்புகழ்கின்ருர். “பூழியர்கோன் தென்னுடு முத்துடைத்து.” பாண்டி நாட்டுச்சிறப்பு,

“ நல்லம்பர் நல்ல குடியுடைத்துச் சித்தன்வாழ்
வில்லந் தொறு மூன் றெரியுடைத்து—நல்லரவப்
பாட்டுடைத்துச் சோமன் வழிவந்த பாண்டியநின்
நாட்டுடைத்து நல்லதமிழ்.”

(பத்துப்பாட்டு. திருமுரு காற்றுப்படை, நச்சினர்க்கினியருரை.)

“ சந்தனப்பொதியச் செந்தமிழ் முனியுஞ்
சவுந்தரபாண்டிய னெனுந்தமிழ் நாடனும்
சங்கப்புலவருந் தழைத்தினி திருந்த(து)
மங்கலப் பாண்டிவள நாடென்ப.”

(நன் னூல். சங்கரநமச்சிவாயப் புலவர் விருத்தி.)

என்ற அறிஞர் பாடலால் நன்கு அறியலாம்.

அமிசசந்தேசம் என்னும் அரிய நூலில் **திருவேங்கடநாதன்** பின்வருமாறு கூறுகிருர்.

“ தவத்தினுல் விளங்கும் திருவாலவாயுடையரான பரமசிவ னிடத்தினின்றும் தெய்வப்படைகளை யடைந்த பாண்டிய தேசத் தரசர்களுடைய பிரபாவத்தினுல் தாங்கள் சிறையிலிருந்ததை நினைத்து பயமடைந்த மேகங்கள் காலத்தில் வருஷிப்பதால் நிறைந்த பயிர்களையுடையதும், குபரே பட்டணத்தைக் காட்டிலும் அதிக மான செல்வச் சிறப்புடையதும், யாகம், தானம், தவம் முதலிய புண் ணியங்களுக் கிருப்பிடமுமான பட்டணங்களினுலும் கிராமங்களாலும் அலங்கரிக்கப்பெற்றது பாண்டியதேசம். பவழக்காடுகளுடன்கூடிய அந் நாட்டெல்லையிலுள்ள ஆழி காட்டுத்தீயினுற் சூழ்ந்த காடுபோல வும், ஸந்த்யாராகத்தோடு கூடிய ஆகாசம்போலவும், சிந்தூரத்துடன் கூடிய யானைபோலவும், பீதாம்பரத்தினுல் ஸேவிக்கப்பட்ட நாரா யணன்போலவும், மின்னலோடுகூடிய மேகம்போலவும், ஒரு சரீரத் துடன்கூடிய ஆண் பெண் உருவமான மிதுநம் போலவும் தோன்றும். பாண்டியதேசத்துப் பெண்கள் முத்துக்களின் சூர்ணங்களினுல் விளங்குகிற திலகத்தையுடையவர்களாகக் காணப்பெறுவர்.”

“ வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற்றலைப் பிரிதல் இன்று. ”

(பொருட்பால், ஒழிபியல், குடிமை. 5)

என்னும் திருக்குறளுரையில், ஆசிரியர் பரிமேலழகியார், "பழங்குடி" யென்பதற்குத் "தொன்று தொட்டு வருகின்ற குடியின்கட் பிறந்தார்" என்று உரைகூறித் "தொன்று தொட்டு வருதல்—சேரசோழ **பாண்டிய** ரென்றாற் போலப் படைப்புக் காலந்தொடங்கி மேம்பட்டு வருதல்" என விளக்கியுள்ளார். இதனாலும், வான்மீகி பகவான் ஸ்ரீராமாயணத்து, சுக்கிரீவன் வானரசேனையை நாடவிட்டதருணத்துப் பாண்டியர் செல்வச் சிறப்பையும், அவரது கபாடபுரத்தையும், எடுத்தோதுதலானும் பாண்டியரின் பழமை நன்குணரலாம்.

சரணாகதிதர்மம் விளைந்த பெருநிலனாகவும், கருணாகரப் பெருமாள் ஸர்வஜீவர்க்கும் அபயப் பிரதானம் அருளிய திருப்பதியாகவும், தருப்பசயனனாய்த் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் **திருப்புல்லாணியும்**, "கோவையின்றமிழ் பாடுவார் தொழுந் தேவதேவன் **திருக்கோட்டியூர்**" என்று சிறப்பித்தருளப் பெற்றதும், ஸ்ரீவைஷ்ணவ பரமாசாரியராகிய ஸ்ரீ பெரும்பூதூர் வள்ளலின் ஆசாரியர்களுள் ஒருவரான திருக்கோட்டியூர் நம்பிக்கும், "அல்வழக்கொன்று மில்லா அணிகோட்டியர்கோன் அபிமானதுங்கன்" என்று கொண்டாடப் பெற்ற செல்வநம்பிக்கும் அவதாரத்தலமான **திருக்கோட்டியூரும்,** திருவாதவூரடிகளால் "பத்தரெல்லாம் பார்மேற்சிவபுரம் போற் கொண்டாடு, முத்தரகோசமங்கையூர்" என்று போற்றிய **திருவுத்தரகோசமங்கைத்** தலத்தையும், தன்னுட் கொண்டதும், கம்பர் வந்து துதிக்கின்ற நாடாயும் உள்ளது தென்பாண்டி நன்னாடு.

இப் பாண்டி நாட்டுத் திருப்பதிகள் பதினெட்டுள் எட்டாவதாகும் ஸ்ரீவில்லிபுத்தூர், வராக க்ஷேத்திரம், மல்லிநாடு எனப் பெயர்பெறும். மல்லியென்பவளாலாளப்பட்டு வந்ததனாலே இப்பெயர் வந்ததென்ப. இந் நாட்டிலுள்ள வடேச்சுரபுரம் என்னும் புராதன நகரத்தை இம் மல்லிராணியின் மக்களான வில்லி, கண்டர் என்பவர்களில் மூத்தவனான வில்லியென்பவன் ஜீர்ணோத்தாரணஞ்செய்து "ஸ்ரீவில்லிபுத்தூர்" என்ற புதுப்பெயரெய்தும்படி செய்தனன். இது "புதுவை" எனவும் வழங்கப்பெறும். புத்தூர் என்பதன் மரூஉ புதுவை என்க. "பொன்னும், முத்தும், மாணிக்கமும் இட்டுச் செய்த ஆபரணம்போலே, நாச்சியாரும், பெரியாழ்வாரும், வடபெருங் கோயிலுடையானுமான அலங்காரமுள்ள தேசமிறே." என்ற பெரியார் வாக்கு இவண் அநுஸந்தேயம்,

"பேரணிந்த வில்லிபுத்தூரானி தன்னிற்
பெருஞ்சோதி தனிற் றோன்றும் பெருமாளே ! முன்
சிரணிந்த பாண்டியன்றன் னெஞ்சு தன்னில்
துயக்கறமால் பரத்துவத்தைத் திறமாச் செப்பி

வாரணமேல் மதுரைவலம் வரவே வானின்
மால்கருட வாகனனுய்த் தோன்ற வாழ்த்தும்
ஏரணி பல்லாண்டு முதற்பாட்டு நானூற்
றெழுபத்தொன்றிரண்டு மெனக்குதவு நீயே.''

(பிரபந்தசாரம். 9)

என்ற தேசிகமாலைப்பாசுரம் பெரியாழ்வார் வைபவத்தைச் சுருங்கக் கூறி விளங்கவைக்கும் பெற்றியது.

ஸ்ரீவிஷ்ணுசித்தர் என்னும் பெரியாழ்வார், ஸ்ரீவில்லிபுத்தூரில் பெருமாளுக்குத்திருத்துழாய்க் கைங்கர்யமியற்றுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அவர் ஒரு நாள் திரு நந்தன வனத்தில் மண்ணைக் கொத்தும் பொழுது, திருத்துழாயடியில் திவ்யமான தேஜஸ்ஸோடு ஒரு பெண் குழந்தை இருத்தலைக்கண்டு மிகமகிழ்ந்து, அக்குழவியைத் தமது புதல்வியாகவே கொண்டு, ''கோதை'' என்ற திரு நாமஞ்சூட்டி வளர்த்துவருவாராயினர்.

மிதிலைச் செல்வியின் அவதாரத்தைக் குறிப்பிடும்,

'' இரும்பனைய கருநெடுங் கோட்டிணை யேற்றின் பணையேற்ற
பெரும்பியவிற் பளிக்குநு கம்பிணைத் ததனேடணைத் தீர்க்கும்
வரம்பின் மணிப்பொற் கலப்பை வயிரத்தின் கொழுமடுத்திட்
டுரம்பொருவினிலம் வேள்விக்கலகில் பல சாலுழுதேம்.'' (16)

'' உழுகின்ற கொழு முகத்தினுதிக்கின்ற கதிரொளிபோல்
பொழிகின்ற புவிமடந்தை திருவெளிப் பட்டெனப் புணரி
எழுகின்ற தெள்ளமுதோ டெழுந்தவளு மிழிந்தொதுங்கத்
தொழுகின்ற நன்னலத்துப் பெண்ணரசி தோன்றினள்.'' (17)

(பாலகாண்டம். கார்முகப்படலம்.)

என்ற இராமாவதாரப்பாசுரங்களை இங்கு நோக்குக.

''கோதை'' என்பது பல பொருளொரு சொல். மாலை, திருக் குழற் கற்றை, சூடிக் கொடுத்த நாய்ச்சியார், வாக்கை யருளுபவர் முதலிய பொருள்படும் இம்மொழி.

இம்மடந்தையின் அவதார காலம் கலி 98 ஆவதான நள ஞூ ஆடி மீ, சுக்கிலபக்ஷம், சதுர்த்தசி திதி, திருப்பூர நக்ஷத்திரம் கூடிய செவ்வாய்க்கிழமை. இவளை பூதேவியின் அவதாரம் என்பர். இக் காலத்து நவீன முறையில் ஆராய்ச்சி செய்வோர், இவர் பெரியாழ்வா ருடைய திரு மகளாராதலாலும், பெரியாழ்வார் நெடுமாறனென்று ஒருவனைக் குறிப்பிடுதலானும், அவன் கி. பி. ஏழாவது நூற்றுண்டின் பிற்பகுதியிலிருந்தவனென்று சிலாசாசனங்களால் ஏற்படுவதாலும், இவருடைய காலமும் அக்காலமேயாக இருக்கலா மென்பர். அதன் படி பார்ப்பின் இவருடைய காலம் ஏறக்குறைய ஆயிரத்து நூற் றருபது வருடத்துக்கு முந்தினதாகும். காலவாராய்ச்சியிற் காலந் தாழ்த்தாது கவிக்கருத்துக் கண்டு களிப்போரே நலனுறுவர்.

இவரது வரலாற்றைப் பின்வரும் பாக்களால் அறிக:—

"வேயர்புகழ் வில்லிபுத்தூ ராடிப்பூரம்
மேன்மேலு மிகவிளங்க விட்டுசித்தன்
தூயதிருமகளாய் வந்தாரங்கனுர்க்குத்
துழாய்மாலை முடிசூடிக் கொடுத்தமாதே!
நேயமுடன் திருப்பாவைப் பாட்டாறைந்தும்
நீயுரைத்ததை யொருதிங்கட்பா மாலை
ஆயபுகழ் நூற்றுநாற்பத்து மூன்றும்
அன்புடனே யடியேனுக் கருள்செய்நீயே."

(பிரபந்தசாரம். 10)

"அன்னவயல் புதுவையாண்டாள் அரங்கற்குப்
பன்னுதிருப்பாவைப் பல்பதியம்—இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள் நற்பாமாலை பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு."

(திருப்பாவைத்தனியன்)

"சூடிக்கொடுத்த சுடர்க்கொடியே! தொல்பாவை
பாடியருள வல்ல பல்வளையாய்! நாடிநீ
வேங்கடவற்கு என்னை விதி என்ற இம்மாற்றம்
நாம்கடவா வண்ணமே நல்கு." (ஷை)

"அல்லிநாள் தாமரைமேலாரணங்கின் இன்துணைவி
மல்லிநாடாண்ட மடமயில்—மெல்லியலாள்
ஆயர்குல வேந்தனுகத்தாள் தென்புதுவை
வேயர் பயந்த விளக்கு."

(நாச்சியார் திருமொழித் தனியன்)

"ஒளிகொண்ட புத்தூருறை கோதை தீந்தேன்
றுளிகொண்ட பூந்துளபத் தோன்றலாற் கீந்த
தளிகொண்டதை யணிந்த தன்றதனைப் பற்றல்
களிவண்டிமிர் தேங்கமழ் வாசிகை சிகைகை."

(மாறனலங்காரம 777)

விஷ்ணுசித்தர், கோதையை மலர்மேல் மங்கையென்றே எண்ணி அவள் திறத்து அளவற்ற அன்புகொண்டு அனைத்துலகத்துக்கும் அன்னையாய் அவற்றை ஆண்டு வருகின்ற திருமகளின் அவதார விசேடமென்ற காரணத்தால், அவளுக்கு "**ஆண்டாள்**" என்றும், மன்னுபுகழ் மாயனுன மாதவனுக்கு உரியமலர் மாலையைத்தான் சூடிக்கொண்டு பார்த்துப் பின்பு கொடுத்தது காரணமாக "**சூடிக் கொடுத்த நாச்சியார்**" என்றும் திருப்பெயரிட்டு அழைத்து வந்தார். இவளை, 'அல்லி நாள் தாமரைமேலாரணங்கினின் துணைவி; 'மல்லி நாடாண்ட மடமயில்'; 'மெல்லியலாள்'; 'ஆயர்குல வேந்தனுகத்தாள்'; 'தென்புதுவை வேயர் பயந்த விளக்கு'; 'கோலச்சுரி சங்கை மாயன் செவ்வாயின் குணம் வினவும் சீலத்தனள்'; 'தென் திருமல்லி நாடி'; 'செழுங்குழல்மேல் மாலைத்தொடை தென்னரங் கருக்கீயும் மதிப்புடைய சோலைக்கிளி'; 'சூடிக்கொடுத்த சுடர்க் கொடி'; 'சுரும்பார் குழற்கோதை'; 'திருப்பாவை பாடிய செல்வி';

'பட்டர்பிரான் புதல்வி'; 'வேயர்குல விளக்கு'; 'புதுவை நகர் ஆண்டாள்'; 'அரங்கர் மௌலி சூழ்கின்ற மாலையைச் சூடிக்கொடுத்தாள்'; 'மருவரு மளக வசுதை'; 'அன்ன வயல்புதுவை ஆண்டாள்' எனச் சான்றோர் பலபடியாகப் புகழ்ந்துள்ளனர்.

ஆண்டாள் தன் அநுபவ பரீவாஹமாக அருளிச்செய்த பாமாலைகள் திருப்பாவையும், நாச்சியார் திருமொழியும். "திருப்பாவை பாட்டாறைந்து." "சூடிக்கொடுத்த மாதுரைத்த தையொரு திங்கட் பாமாலை ஆய புகழ்நூற்று நாற்பத்து மூன்று." "பார்க்கோதை பாடல் நூற்றெழுபத்து மூன்று."

ஸம்ஸாரிகளிற் காட்டில் நெடுவாசி பெற்றுள்ள முனிவர்களினுஞ் சீரியரெனப் புகழ்பெற்றிருக்கும் ஆழ்வார்கள் ஆறிருவருள் அதிக விலக்ஷணர் பெரியாழ்வார். சீரணிந்த பாண்டியன் நெஞ்சில் திருமால் பரத்துவத்தைத் துயக்கறத்திறமாகச் செப்பி, வாரணமேல் மதுரை நகர் வலம் வர, வானில், 'கருமுகில் தாமரைக்காடு பூத்து நீடு, இரு சுடர் இரு புறத்தேந்தி ஏடவிழ், திருவொடும் பொலியவோர் செம்பொற் குன்றின்மேல், வருவபோற்கலுழன்மேல் வந்து தோன்றினன்' என்றபடி, திருநாரணன் கருடவாகனனுய்த் தோன்ற, பொங்கும் பரிவாலே 'திருப்பல்லாண்டு' பாடிப் பெரியாழ்வாராயினர் பட்டர்பிரான். அவரினும் அவர் திருமகளாரான ஆண்டாள் மிக்க வீறுபாடுடையாள். ஆழ்வார்கள் தாங்கள் ஸம்ஸாரத்திற் கிடந்துறங்காநிற்க, எம்பெருமான் தானாக வந்து அவர்களை உணர்த்த, பிறகு உணர்ந்தனர் அவர்கள் ; ஆண்டாள், அங்ஙனன்றி எம்பெருமான் திறத்து ஆராத காதலுடன் அவதரித்து இவள் தானே அவ்வெம்பெருமான் சந்நிதியிற் சென்று, "உம்பர்கோமானே! உறங்காதெழுந்திராய்" என்று உணர்த்தினளாதலால் ஆழ்வார்களினும் இவள் பேறுடையவள் என்பது பெறலாம். பகவத் விஷயத்தில் ஆழ்வார்களின் காமம் மேட்டு மடையாயிருக்க, இவளது காமம் பள்ளமடையாக இருப்பது தனியேற்றம். இவள், ஸ்ரீவில்லிபுத்தூரே திருவாய்ப்பாடியாகவும், அங்குள்ள பெண்களே இடைப் பெண்களாகவும், தானும் அவர்களிலே ஒருத்தியாகவும், வடபெருங்கோயிலே ஸ்ரீ நந்தகோபர் திருமாளிகையாகவும் உள்ளே நிற்கிறவன் கண்ணபிரானுகவும் அநுஸந்தித்து, தன்னுடைய திருவுள்ளம் திருவாய்ப்பாடியிலே குடிபோய், நினைவின் முதிர்ச்சியாலே அநுகாரம் முற்றி நின்று, அதுவே "**திருப்பாவை**" என்ற சீரிய பிரபந்தமாக மாறியது. இதில், முதல் ஐந்து பாசுரங்களாலே கிருஷ்ணனை அடைதற்கு வேண்டிய உபகரணங்களைச் சொல்லி, மேல் பத்துப் பாசுரங்களால் இவற்றைக் கொண்டு அநுபவிக்கும் இடைப் பெண்களை எழுப்புகிறாள். பிறகு ஐந்து பாக்களால்

கிருஷ்ணனுக்கு அந்தரங்கரானுரை எழுப்பி, அடுத்த ஐங்கவிகளால் அவர்களை முன்னிட்டுக் கொண்டு கண்ணபிரானைத்துயிலெழுப்பித் தாங்கள் வேண்டுவதைப் பிரார்த்திக்கிருள். கடைசியில் தாங்கள் விரும்பும் கிருஷ்ணுநுபவத்தை அவனே கொடுக்கவேண்டும் என்று வேண்டுவதாய் அமைந்துள்ளது. எனவே இந்தச் சங்கத்தமிழ் மாலை யால் பகவத் கைங்கரியமே ஜீவாத்மாக்களுக்கு நிலை நின்ற புருஷார்த்தமென்றும், பகவானுக்கு நல்லனுய் அவனை நம்பி சரண மடைந்து பிரார்த்திப்பாருக்கு அவன் தன்னையும் தன் கைங்கரியத்தை யும் கொடுத்தருளுவன் என்று உள்ளுறை பொருளாகக் கூறப் பெற்றுளது.

" பாதகங்கள் தீர்க்கும் பரமனடிகாட்டும்
வேதமனைத்துக்கும் வித்தாகும்—கோதைதமிழ்
ஐயைந்துமைந்து மறியாதமானிடரை
வையஞ் சுமப்பதும் வம்பு."

ஆழ்வார்கள் மகிழ்ந்து பாடும் செய்ய தமிழ் மாலைகளுள் ஸர்வ சுலபமும் ஸாரமுமாய் " **பாமாலை** " என்கிற சிறப்புப் பெயர் பெற்றது **இத்திருப்பாவை.**

" உந்துமதகளிற்றன் " என்ற திருப்பாவைப் பதினெட்டாம் பாட்டு எம்பெருமானுர் விசேஷித்து உகந்த பாட்டு என்பர் பெரிய வாச்சான் பிள்ளை,

கூரத்தாழ்வான் திருக்குமாரரானபட்டர் இப்பிரபந்தத்தில் உப நிஷத்குஹ்யமான பரமதத்வார்த்தங்கள் உள்ளன என்று மோஹித்துக் கிடப்பராம். பட்டர், தென்னுட்டிலே எழுந்தருளியிருக்க, பெரிய பெருமாளைப் பிரிந்த விசனத்தாலே திருவுள்ளங் கலங்கி யிருக்கிற தசை யிலே திருவுள்ளம் ப்ரஸந்நமாகைக்காக, நஞ்சீயர், "ஆண்டாளைப் பற்றி ஒரு சுலோகமும், ஆழ்வார்களைக் குறித்து ஒரு சுலோகமும் அருளிச் செய்யலாகாதோ ? " என்ன, அதிப்ரீதராய்த் திருப்பாவைக்கு வாக் யார்த்தமாக " நீளாதுங்க " என்ற தனியனை அருளிச்செய்து அதனுல் ஆண்டாளை சரணம் புகுகிருர்.

திருப்பாவைப்பாமாலை, மாதங்களிற் சிறந்த மார்கழித்திங்களில் அநுஷ்டிக்கும் ஓர் நோம்பின் விவரணமாய்க் கிடக்கும். " மேலையார் செய்வனகள் " என்று சிஷ்டாசாரஸித்தமாயுள்ளது. இந்நோன்புக்கு மூலம் ஸ்ரீ பாகவதத்திலுள்ள ஓர் சிறுகதை. கோபகன்னிகைகள் தாங்கள் கண்ணனை நாயகனுகப் பெறவேண்டி மார்கழி மாதத்தில் காத்யாயநிதேவி விரதம் செய்துவர, ஒரு நாள் கண்ணபிரான் அவர் கள் யமுனையில் நீராடும்போது அவர்கள் துகில்களையெல்லாம் வாரிக் கொண்டு போய்ப் பிறகு அவர்கள் பிரார்த்தனையைத் தலைக்கட்டினுர்

என்பது அங்குள்ள வரலாறு. "பாவை" என்பதற்குப் பல பொருள் கள் உள்ளன. "நோன்பு"; "பெண்" என்ற பொருள்களைக்கொண் டால், ஆண்டாள் நோன்பு நோற்பதாகக்கொண்டு அதற்கு இயைந்த அம்சங்களை அருளிச்செய்வதால் இந் நூலுக்குத் திருப்பாவை என்று திருநாமமாயிற்று என்பர். தேவியைக் குறித்துச் செய்யும் நோன்பும் பாவை எனப்படும். கணவனைப் பெறுதற்கேயன்றி மழை இல்லாமற் போய்விடில் இம்மாதத்தில் கன்னிகைகள் மழை பெய்வதற்காக மார் கழி நோன்பை அநுட்டிப்பர் என்றும் கூறுகின்றனர். திருப்பாவை யிலும், சைவசமய குரவர் நால்வருள் ஒருவரான ஸ்ரீமாணிக்கவாசகர் திருவாசகத்தின் கண்ணுள்ள "**திருவெம்பாவை**" (இருபது பாட் டுக்கள்)யிலும் நோன்பிற்கு உபகரணமாக மழை பெய்யவேண்டும் என்று வருணனை வழிபடுதல் "ஆழி மழைக்கண்ணா" (4) என்கிற திருப்பாவைப் பாசுரத்திலும்,

"முன்னிக்கடலைச் சுருக்கி யெழுந்துடையா
ளென்னத்திகழ்ந் தெம்மையாளுடை யாளிட்டிடையின்
மின்னிப்பொலிந் தெம்பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ்சிலம்பிற் சிலம்பித்திருப்புருவ
மென்னச் சிலைகுலவி நந்தம்மையாளுடையா
டன்னிற்பிரிவிலாவெங் கோமானன்பர்க்கு
முன்னியவணமக்கு முன்சுரக்கு மின்னருளே
யென்னப்பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்." (16)

என்கிற திருவெம்பாவைப் பாசுரத்திலும் காணலாம். (இதன் பொழிப் புரை :— மேகமே! எதிரிலுள்ள இந்தக்கடல் நீரை உட்கொண்டு மேலெழுந்து, உமையவள் போல விளங்கி, எம்மை யடிமையாக உடைய வளாகிய பிராட்டியின் சிற்றிடை போல மின்னி விளங்கி, பொற் சிலம்பு போல ஒலித்து, அழகாகிய புருவம் போல வில்லையுடைத்தாகி, எம்மையாளுடையாளாகிய பிராட்டியினின்றும் பிரிதலில்லாத எம் மிறைவன் அன்புடையார்க்கு முந்தி அவ்விடத்தே எம்மீது சுரக்கின்ற இனியதிருவருளே போல நீரைச் சொரிவாயாக.

இவ்விரண்டு நூல்களுக்குள்ள சில ஒற்றுமையைக் காண்பாம். திருப்பாவையில் "எல்லே யிளங்கிளியே" என்ற பதினைந்தாம் பாட் டின் பொருள்நடையும் திருவெம்பாவையில் நான்காம் பாட்டான

"ஒண்ணித்தில நகையாய்! இன்னம் புலர்ந்தின்றோ?
வண்ணக்கிளி மொழியாரெல்லாரும் வந்தாரோ!
எண்ணிக் கொடுள்ளவா சொல்லுகோ மவ்வளவுங்
கண்ணைத்துயின் றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கொரு மருந்தை வேதவிழுப்பொருளைக்
கண்ணுக்கினியானைப் பாடிக்கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோ நீயேவந்
தெண்ணிக்குறை யிற்றுயிலேலோ ரெம்பாவாய்."

என்பதின் நடையும் ஒத்திருத்தல் காண்க. (இதன் பொழிப்புரை :— ஒட்பமாகிய முத்துப்போன்ற நகையினையுடையாளே! இன்னமும் விடிந்ததில்லையோ? அழகிய கிளிமொழியையுடைய பெண்டிரெல்லாம் வந்தனரோ? எண்ணிக்கொண்டு உள்ளபடி செல்வோம். அதுவரையும் தூங்கி வீணே காலங்கழிக்காதே. தேவர்களுக்கு ஒப்பற்ற அமிர்தம் போல்பவனை, பரம் பொருளை, கண்களுக்கு இனிமையாயிருப்பவனைப்பாடி மனங்குழைந்து, உள்நெகிழ்ந்து, நின்று உருகுதற்கு யாம் வல்லே மல்லோம். நீயே வந்திருந்து தொகை செய்து குறைந்தால் நித்திரைசெய்).

திருப்பாவையில் மார்கழி நீராட்டம் என்பது, "மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாளால், நீராடப் போதுவீர்" (1); "நாங்களும் மார்கழி நீராட மகிழ்ந்து" (4); "மார்கழி நீராடுவான் மேலையார் செய்வனகள்" (26) என்று பிரஸ்தாபிக்கப்படுகிறது. இது திருவெம்பாவையில் இறுதிப் பாட்டில் காணப்படுகிறது,

அப்பாட்டு வருமாறு :—

"போற்றியருளுக நின்னாதியாம் பாதமலர்
போற்றியருளுக நின்னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல்லா வுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல்லா வுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல்லா வுயிர்க்கு மீறுமிணையடிகள்
போற்றிமாலுன் முகனுங்காணாத புண்டரிகம்
போற்றியாமுய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியா **மார்கழி நீராடேலோ** ரெம்பாவாய்." (20)

மேலும் இப்பாசுரம் "அன்று இவ்வுலகம் அளந்தாய்! அடிபோற்றி" என்ற திருப்பாவை இருபத்து நான்காம் பாட்டுடனும் ஒப்பிடலாம். நிற்க, திருப்பாவையில் "நீராடல்" என்பது, "நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்" (3); "குள்ளக் குளிரக்குடைந்து நீராடாதே" (13); "இப்போதே எம்மைநீராட்டு" (20) என்று கூறப்படுகிறது. திருவெம்பாவையில், "இருஞ்சுனை நீராட" (12); "பங்கயப் பூம்புனல் பாய்ந்தாட" (13) (17); "சீதப்புனலாடி" (14); "ஏருருவப்பூம்புனல் பாய்ந்தாட" (15); "இப்பூம்புனல் பாய்ந்தாட" (18) என்பனவற்றில் இதனைக் காண்க.

"ஆதியுமந்த மில்லாவரும் பெருஞ்
சோதியையாம் பாடக்கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே! வளருதியோவன் செவியோ நின்செவிதான்" (திருவெம். 1)

என்பதனை,

"நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன்மூர்த்தி
கேசவனைப்பாடவும் நீ கேட்டே கிடத்தியோ
தேசமுடையாய்!" (திருப் 7);

" பள்ளிக்கிடத்தியோ பாவாய் !" (திருப். 13);
" மாமீர் ! அவளை யெழுப்பீரோ ? உன்மகள்தான்
ஊமையோ அன்றிச் செவிடோ அனந்தலோ " (ஷை 9)

என்பனவற்றேடும் ;

" இப்போதாரமளிக்கே, நேசமும் வைத்தனையோ ? நேரிழையாய் !
(திருவெம். 2) என்பதனை,

" தூபம் கமழத்துயிலணை மேல் கண்வளரும்
மாமான்மகளே !" (திருப்9·)

" கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்சசயனம் " (ஷை. 19)

என்பனவற்றேடும் ;

" முத்தன்னவெண்ணகையாய் முன்னம் வந்தெதிரெழுந்தென்
னத்தனானந்தன முதனென்றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன்கடைதிறவாய் " (திருவெம். 3);
" மானே நீ நென்னலை நாளை வந்துங்களை
நானே யெழுப்புவனென்றலு நாணமே
போன திசைப்பகராயின்னம் புலர்ந்தின்றோ ?"
(ஷை 6) என்பனவற்றை,

" எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய் ! எழுந்திராய் நாணாதாய் நாவுடையாய் "
(திருப். 14)

என்பதனேடும் ;

" பாலூறுதேன் வாய்ப்படிநீ ; கடைதிறவாய் " (திருவெம். 5)
" தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய் " (ஷை 3)

என்பனவற்றை,

" தேசமுடையாய் ! திற " (திருப். 7);
" மாமான்மகளே மணிக்கதவம் தாள் திறவாய் " (ஷை 9);
" தேற்றமாய் வந்து திற " ,, (ஷை 10);
" நேயநிலைக் கதவம் நீக்கு ,, (ஷை 16);
" கந்தம் கமழும் குழலீ ! கடைதிறவாய் " (ஷை 18);
" செந்தாமரைக்கையால் சீரார் வளை யொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்து " ,, (ஷை 18)

என்பனவற்றேடும் ;

" தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய் "
(திருவெம். 6);
" அமரருன்னற் கரியா னொருவனிருஞ் சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய் " (ஷை 7);
" வாழியீதென்ன வுறக்கமோ வாய்திறவாய் " (ஷை 8),

என்பனவற்றை,

" சினத்தினல் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும் நீ வாய்திறவாய்
இனித்தானெழுந்திராய் ஈதென்ன பேருறக்கம் !" (திருப். 12)

" கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக்கிடந்த மலர்மார்பா ! வாய்திறவாய் " (திருப். 19)

என்பனவற்றோடும் ;

" உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப்பழஞ் சொற்புதுக்கு மெம்மச்சத்தா
லெங்கள் பெருமானுனக் கொன்றுரைப்போங்கே
ளெங் கொங்கை நின்னன்பரல்லார் தோள் சேரற்க
வெங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
விங்கிப் பரிசே யெமக் கெங்கோ னல்குதியே
லெங்கழிலென் ஞாயிறெமக்கேலோ ரெம்பாவாய்."

—(திருவெம். 19)

என்ற பாசுரத்தை,

" சிற்றஞ்சிறுகாலே வந்து ன்னைச் சேவித்துன்
பொற்றாமரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்திற் பிறந்துநீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமற் போகாது
இற்றைப்பறை கொள்வானன்று காண்கோவிந்தா !
எற்றைக்கும் ஏழேழ்பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்றேலோரெம்பாவாய்."

(திருப். 29)

என்ற பாசுரத்தோடு ஒப்பிட்டும் அறியத்தகும்,

இனி, " புள்ளும் சிலம்பினகாண் " *(6)* என்கிற பாசுரம் முதல் " எல்லே இளங்கிளியே " *(15)* என்கிற பாசுரம் வரையில் பத்துப் பாசுரத்தால் பதின்மரைத்துயிலெழச் செய்கிறாள் ஆண்டாள். இங்குள்ள ஸம்போதனங்கள் வருமாறு:—" பிள்ளாய் " *(6)* ; " பேய்ப் பெண்ணே " *(7)* ; " கோதுகல முடையபாவாய் " *(8)* ; " மாமான் மகளே " *(9)*; " அம்மனாய், அருங்கலமே " *(10)*; " செல்வப் பெண்டாட்டி " *(11)* ; " நற்செல்வன் தங்காய் " *(12)* ; " போதரிக் கண்ணினாய் " *(13)* ; " நாணாதாய் நாவுடையாய் " *(14)* ; " வல்லே " *(15)*. இப்பத்துப்பாட்டால் ஆழ்வார்கள் பதின்மரைத் திருப்பள்ளி யுணர்த்துகிறாள் என்பது பேரறிஞர் பணிப்பு.

திருப்பாவையாம் திவ்வியப் பிரபந்தத்திற்கு திரு நாராயண புரத்து 'ஆய்' என்கிற ஜநந்யாசார்யரது (i) ஈராயிரப்படி (ii) நாலா யிரப்படி, பெரியவாச்சான்பிள்ளையுடைய (iii) மூவாயிரப்படி, அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரது (iv) ஆறாயிரப்படி, உப நிஷத்பாஷ்யகாரராகிய ரங்க ராமாநுஜஜீயரது (v) ஸம்ஸ்க்ருத வியாக்கியானம், பெரிய பரகால ஜீயரது (vi) மணிப்பவள வியாக் கியானம் என்ற நல்லுரைகள் உள.

இச்சீரிய பாமாலை விஷயமாக **பட்டர்** அருளிச் செய்வது பின் வருமாறு:—

"விடிவோரை எழுந்திருந்து முப்பது பாட்டையும் அநுஸந்தித்தல், மாட்டிற்றிலனுகில் 'சிற்றஞ் சிறுகாலே' என்கிற பாட்டை அநுஸந்தித்தல், அதுவும் மாட்டிற்றிலனுகில் நாம் இருந்த இருப்பை நினைப்பது."

தையொருதிங்கட் பாமாலையில் சொல்வதாவது;–திருப்பாவையில் நிஷ்கர்ஷித்த ப்ராப்யம்தானும் அப்போதே அடையப் பெறுமையால் கண்ணஞ் சுழலையிட்டு, காமன் காலிலே விழுந்து, குயில் வார்த்தை கேட்டு, நேரிற் காணவேணும் என்னும் அவா உண்டாகி, அக்கணமே கிடையாமையாலே சொப்பநாநுபவத்தாலே சற்றுத் தரித்தாள். அதுதான் விசதமாயிராமையாலே அவ்வநுபவத்துக்கு தேசிகரான ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வானை வார்த்தை கேட்டு, மேகங்களைத் தூதுவிட்டு, அக்கார்காலத்துப் பதார்த்தங்கள் எம்பெருமானை நினைப்பூட்டி நலிந்தமை சொல்லி, அவன் வார்த்தையிலும் அதிசங்கை பண்ணி, அவனிடம் தானே செல்ல நினைந்து, தனக்கு கால் நடை தளர்ந்தபடியால் அவனிருந்த தேசத்திலே தன்னைக் கொண்டுபோய்ச் சேர்க்கும்படி அயலாரைப் பிரார்த்தித்தாள். அவன் மேலும் கால் தாழ்க்க, ஆற்றாமைகரை புரண்டு நிற்க அவனும் வந்து முகம் காட்டி அங்கீகரிக்க, இவ்விதம் தான் அநுபவித்தவை யனைத்தும் இத்திருமொழியிற் காணலாம்.

ஆண்டாள், 'மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழ கில்லாத' தன்மையளாக இருந்துவந்தாள். இதற்கு,

"வானிடைவாழும் அவ்வானவர்க்கு
மறையவர்வேள்வியில் வகுத்த அவி
கானிடைத்திரிவதோர் நரிபுகுந்து
கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப
ஊனிடையாழிசங்கு உத்தமர்க்கென்று
உன்னித்தெழுந்த என்தடமுலைகள்
மானிடவர்க்கென்று பேச்சுப்படில்
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே!" (1—5)

என்ற பாசுரமே சான்று.

ஸ்ரீரங்கநாதனது மகிமை செவிப்பட்டவுடனே அளவற்ற ஆனந்தமடைந்து நிற்க, அக்காலை ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு எழுந்தருளி இவளது ஞானக் கண்ணுக்கு அவன் விஷயமாக, இவள் அரங்க நகரப்பனிடத்து மனதைச் செலுத்தி அவனுக்கே தன்னை மணமகளாக நிச்சயித்து அவ்வமலனையே அல்லும் பகலும் சிந்தித்திருந்தாள். பின்னர் திருவரங்கச் செல்வனின் நியமனத்தை மேற்கொண்டு பட்டர்பிரான், ஸ்ரீ வல்லப தேவனின் ஏற்பாட்டின் பேரில் ஆண்டாளை அழைத்துச் சென்று பெரிய பெருமாளுடைய முன் மண்டபத்திலே

நிறுத்திப் பெருமாளைச் சேவிக்கப் பண்ணுவிக்கையில், அத்திருமாலின திவ்ய சௌந்தரியத்திலீடுபட்ட கோதை மென்னடை கொண்டு அவனருகிற் சென்று ஆனந்தக்கடலிலாழ்ந்து திருவரங்கன் திருவடி வருடக் கருதி நாகபர்யங்கத்தை மிதித்தேறி, நம் பெருமாளது திரு மேனியிலே அந்தர்ப்பவித்து அவனை என்றும் பிரியாதிருப்பவளாயி னுள். தனது திருமகளார் திருமணத்தைக் குறித்து, புதுவைப் பட்டன்,

"ஒரு மகள் தன்னையுடையேன் உலகம் நிறைந்த புகழால்
திருமகள்போல வளர்த்தேன் செங்கண்மால்தான் கொண்டுபோனுன்"

(3-8-4)

எனக்கூறுவது கவனித்தற்பாலது.

நாச்சியார் திருமொழியில் அரிய சில செந்தமிழ் நடை காண் கலாம். இடைப் பெண்கள் சிற்றில் சிதைக்க வேண்டாவென்று கண் ணனை வேண்டுவதாக ஒரு பதிகமுளது. "சீதை வாயமுதமுண்டாய்! எங்கள் சிற்றில் சிதையேலென்று, வீதிவாய் விளையாடும் ஆயர் சிறுமி யர் மழலைச் சொல்லை ***கோதைவாய்த் தமிழ்" எனப்படுகிறது. கூடலிழைத்தல் என்பது ஒரு விளையாட்டு. (கூடலாவது-வட்டமாகக் கோட்டைக் கீறி, அதுக்குள்ளே சுழி சுழியாகச் சுற்றும் சுழித்து இவ்விரண்டு சுழியாகக் கூட்டினுல், இரட்டைப் பட்டால் கூடுகை. ஒற்றைப்பட்டால் கூடாமை என்று ஸங்கேதம்.)

"பழகு நான் மறையின் பொருளாய்மத
மொழுகுவாரணம் உய்ய அளித்த எம்
அழகனர் அணியாய்ச்சியர் சிந்தையுள்
குழகனர் வரில் கூடிடு கூடலே."

(4-10) **என்பது கூடலிழைத்தற் பாசுரம்.**

எம்பெருமானைக் கூவியழைக்கும்படி குயிலுக்குக் கூறும் பாசுரம் ஒன்று தருதும்.

"மென்னடையன்னம் பரந்து விளையாடும்
வில்லிபுத்தூருறைவான் தன்
பொன்னடி காண்பதோராசையினுல் என்
பொருகயற் கண்ணிணைதுஞ்சா
இன்னடிசிலொடு பாலமுதூட்டி
எடுத்த என் கோலக்கிளியை
உன்னெடு தோழமை கொள்ளுவன் குயிலே!
உலகளந்தான் வரக் கூவாய்."

(5—5)

இவளது மேகவிடுதூதுத்திருப்பாசுரம் ஒன்றும் இவண்தரப் பெறு கின்றது.

"மின்னுகத்தெழுகின்ற மேகங்காள்! வேங்கடத்துத்
தன்னுகத்திருமங்கை தங்கியசீர்மார்வர்க்கு
என்னுகத்திளங்கொங்கை விரும்பித்தாம் நாள்தோறும்
பொன்னுகம் புல்குதற்கு என்புரிவுடைமை செப்புமினே."

(8-4)

ஸ்ரீ வேதாந்த தேசிகர்

கண்ணனை அடையும் வழி அறியாது வாடி நின்றவளவனைக் கண்டாற் செய்யுமாற்றைக் கூறும் பாசுரமிது:—

"உள்ளே யுருகி நைவேனை உளளோ இலளோவென்னாத
கொள்ளை கொள்ளிக்குறும்பனைக் கோவர்த்தனனைக் கண்டக்கால்
கொள்ளும் பயனொன்றில்லாத கொங்கைதன்னைக் கிழங்கோடும்
அள்ளிப்பறித்திட்டு அவன் மார்விலெறிந்து என்னழலைத் தீர்வேனே."

(13–8)

இவளருளிச்செய்த "வாரணமாயிரத் திருப்பதிகம்" இன்றும் திருமணப் பந்தரிலே பாடப்பெற்று வருவது நாடு நன்கறிந்த விஷயம்.

"ஆயனுக்காகத்தான் கண்டகனவினை
வேயர்புகழ் வில்லிபுத்தூர்க்கோன் கோதைசொல்
தூய தமிழ்மாலை ஈரைந்தும் வல்லவர்
வாயும் நன்மக்களைப் பெற்று மகிழ்வரே." (6–11)

ஆண்டாள் சீர்பாட அல்லல்போம், நலனுண்டாம், பேரின்பம் பெறலாம்.

"குருவரங்கொள் பட்டர்பிரான் குலமெனுநந்தனத் தருவின் கொடியாயென்றுந்
திருவரங்கத்தனியரசினரு குறையுங்குணமணியைச் செவ்வி வாய்ந்த
வுருவதனிற் பூமகளைப் பொறுமையினிற் புவிமகளை யொப்பாள் தன்னை
மருவளருங்குழலாளைக் கோதைதனைச் சரணாக வணங்கி வாழ்வாம்."

ஸ்ரீ:

வேதாந்தகுரு விஜயம்.

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலை அய்யங்கார், தமிழ் வித்துவான், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.]

"கொண்டிருக்கலாமே குரைகடல் சூழ்வையகத்தை
விண்டலத்தில் வீற்றிருக்கலாமேதான்—தொண்டுபட்டுத்
தொல்புகழ் சேர் தூப்புல் வந்ததூய் மறையோன் செய்தகலை
அல்லும் பகலுமறிந்து."

—தேசிகர் நூற்றந்தாதி. (89)

"கோதவ மொன்றில்லாத தகவேகொண்ட
கொண்டலெனை வந்துலகிலை வர்ச்கன்றோர்
தூதுவனுயொருகோடி மறைகளெல்லாம்
தொடர்ந்தோடத் தனியோடித் துயரந்தீர்த்த
மாதவனூர் வடகொங்கின் வானியாற்றின்
வண்ணிகை நன்னடங்கண்டு மகிழ்ந்துவாழும்
போதிவை நாம் பொன்னயிந்தை நகரின்முன்னாட்
புணராத பரமதப்போர் பூரித்தோமே."

—தேசிகமாலை. பரமதபங்கம். (53)

திருவேங்கட வரைக்கும் கன்னியாகுமரிக்கு மிடையிலுள்ளதும், வேறு இருபுறமுங் குடகுமலையும் கடலுமெல்லையா யுள்ளதும் நந்தமிழ்

நாடு. இப்பழந் தமிழ்நாட்டில் மண்டலங்கள் பல உள. அவற்றில் சான்றோரிருப்பிடமாயது தொண்டைமண்டலம் என்பர். "தெண்ணீர் வயற்றொண்டை நன்னாடு சான்றோருடைத்து"; "நற்றொண்டை நாடு" என்பன காண்க. **கம்பநாடர்,**

" குன்று சூழ்ந்த கடத்தொடுங் கோவலர்
முன்றில் சூழ்ந்த படப்பையு மொய்புனல்
சென்று சூழ்ந்த கிடக்கையுந் தெண்டிரை
மன்று சூழ்ந்த பரப்பு மருங்கெலாம்".

—கிட்கிந்தா காண்டம், ஆறுசெல் படலம். (39)

* * *

" செல்வரென்றும் வடகலை தென்றமிழ்ச்
சொல்வரம்பினரென்றுஞ் சுளிபடக்
கொல்வரென்றுங் கொடுப்பனரென்றுமவ்
வில்வரம் பிலிறைவனை யேத்துவார்."

—ஷை ஷை (46)

என்ற பாக்களில் தொண்டைநாட்டின்றன்மையை எடுத்தியம்பினர். இம்மண்டலத்துக்குத் திலகம்போல்வது ஸ்ரீ காஞ்சிமா நகரம். இக் கச்சிமாநகரின் சீர்மையைப் புலப்படுத்தும் தமிழ்ப் பாடல்கள் வருமாறு:—

" பூண்டாங்கு கொங்கை பொரவே குழை பொருப்பும்
தூண்டாத தெய்வச் சுடர்விளக்கும்—நாண்டாங்கு
வண்மையாற் சான்ற வருங் காஞ்சி வண்பதியும்
உண்மையாலுண்டிவ்வுலகு." (வீரசோழியம் அலங் : 31)

" மலிதேரான் கச்சியு மாகடலுந்தம்முள்
ஒலியும் பெருமையு மொக்கும்—மலிதேரான்
கச்சிபடுவ கடல்படாகச்சி
கடல்படுவ வெல்லாம்படும்." (தொல்காப்பியம் பொ. 86)

" ஏரியிரண்டுஞ் சிறகாவெயில் வயிறுக்
காருடைய பீலிகடிகாவாச்—சீரிய
அத்தியூர் வாயாவணி மயிலே போன்றதே
பொற்றேரான் கச்சிப் பொலிவு." (தண்டியலங்காரம் 37)

" வையகமெல்லாங் கழனியா வை யகத்துச்
செய்யகமே நாற்றிசையின் றேயங்கள் செய்யகத்து
வான்கரும்பே தொண்டைவளநாடு வான்கரும்பின்
சாறே யந்நாட்டுத்தலையூர்கள் சாறட்ட
கட்டியே கச்சிப்புற மெல்லாங்கச்சியுட்
டானேற்றமான சருக்கரை மாமணியே
ஆனேற்றான் கச்சி யகம்."

(தொண்டைமண்டல சதகம் 7. மேற்கோள்)

" புரவுதருகுடியாகிப் புயல்வண்ணன்
விரும்பியதூஉம் பொழில்சூழ் காஞ்சி
கரியசுடர் வீதிதொறு முலாப்போந்து
கவர்வதூ உங்கலை சூழ்காஞ்சி

நிரைவளை யிவ்வுலகுய்ய நின்றுதவஞ்
　　செய்வதூஉ நிழல் சூழ்காஞ்சி
சுரமகளிர் பாடுவதூஉம் பயில்வதூஉம்
　　சொன்மாலை தொடுத்த காஞ்சி.''

(வீரசோழியம். யாப். 16 மேற்)

'' ஆடவர்களெவ்வா றகல் வரணிவெஃகாவும்
பாடகமு மூரகமும் பஞ்சரமா—நீடியமால்
நின்றானிருந்தான் கிடந்தானிதுவன்றே
மன்றார்மதிற்கச்சி மாண்பு.''

—(யாப்பருங்கல விருத்தி. 94)

'' அன்றயனை யுந்தியினளித்த பரன்மேவுவது மத்திகிரியே
சென்றுகரி கவ்வுமுதலைக் கணிறமேவுவது மத்திகிரியே
வென்றவன் வணக்குவது மேலில கெயிற்றரிய தானவரையே
தன்றெழின் முருக்குவதுதானில கெயிற்றரிய தானவரையே.''

—(வீரசோழி. யாப். 16 உரை.)

முத்திதரு நகரேழில் முக்கியமாகிய கச்சியம்பதியாகிற பெருமாள் கோவிலில் "விளக்கொளியை மரகதத்தை'' என்கின்றபடி விளங்கு கின்ற தீபப்பிரகாசன் ஸந்நிதிக்குச் சமீபத்தில் "**தூப்புல்**'' என்னும் அக்கிரகாரம் உண்டு. இது "திருத்தண்கா''; "ஹிமோபவநம்''; "அம் பூந் தேனிளஞ்சோலை'' எனவும் பெயருடைத்து. இங்கு, தமிழணங்கு நோற்ற நோன்பின் பயனும், தமிழ்நாடு செய்த தவப்பயனும், கலி 4370 ஆன (கி. பி. 1268) விபவஞூ புரட்டாசித் திங்கள் திருவோண நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் ஒரு செந்தமிழ்ச் செல்வர் திருவவதரித் தார். இவரது தந்தையார் ஸ்ரீ அனந்தஸூரி; தாயார் தோத்தாத்திரி யம்மையார். எம்பெருமானார் நியமித்த எழுபத்துநான்கு ஸிம்மாஸன அதிபதிகளில் ஒருவர் "புண்டரீகாக்ஷயஜ்வா.'' இவர்தம் குமாரரே அநந்தசூரி. யதிகட்கிறைவரான ஸ்ரீராமாநுஜ முனிவரது திவ் விய திருமேனிப் பரிவரான கிடாம்பியாச்சானுடைய ப்ரபௌத்ரியாய், ராமாநுஜாசார்யரென்பவருடைய பௌத்ரியாய், ஸ்ரீரங்கராஜப் பிள்ளானென்கிற பத்மநாபாசார்யருடைய புத்ரியாய், வாதிஹம்சாம்பு வாஹாசார்ய ரென்கிற கிடாம்பியப்புள்ளாருடைய ஸஹோதரியாயு முள்ளவரே இத்தோத்தாத்திரி யம்மையார். எனவே, இச்செல்வரது இரு மாமரபும் மிகவும் செவ்வியது என்று கூறல் மிகையாகாது.

இச்செல்வரின் அவதார வைபவத்தைக் குறித்து,

(1) "இவர் திருவேங்கடமுடையானுடைய அவதாரமா யிருப் பரோ? அன்றி அத்திருமலைமால் திருமணியின் அம்சமா யிருப்பரோ? அன்றிக்கே ஸாக்ஷாத் எம்பெருமானருடைய அம்சமாகவேயிருப்பரோ? என்றிப்படியெல்லாம் விகல்பிக்கலாம்படியான தேசிகனுக்குப் பல் லாண்டு'';

(2) '' அன்றிவ்வுலகினை யாக்கி யரும்பொருள் நூல்விரித்து
நின்றுதன்னீள் புகழ்வேங்கடமாமலை மேவிப்பின்னும்

> வென்றிபுகழ்த் திருவேங்கடநாத னெனுங்குருவாய்
> நின்று நிகழ்ந்து மண்மேனின்ற நோய்கள் தவிர்த்தனனே.''

என்று **ஸ்ரீ நயினராசாரியரும்** ;

(3) "வேதங்களுக்குக் கஷ்டம் உண்டானபொழுதும், முனிகளுடைய வசநங்கட்கு நித்யம் அவமானம் ஏற்படுங் காலத்தும், சகல வருணங்களும் கலந்து நின்ற வமயத்தும், அவற்றிற்கு அநுகுணமான புராணங்கள் நிஷ்ப்ரமாணங்களாய் நின்றபோழ்தும், மாயாவாதம் குதூகலத்துடன் தலைதூக்கி ஆடுங்காலத்தும், கலியின் கொடுமையாலே சூந்யவாதமே பதிற் கூறுவாரின்றியே நின்றபொழுதும், தருமத்தைக் காப்பாற்றுவதற்காக எவர் திருமாலின் திருக்கண்டையை வியாஜமாகக்கொண்டு அவதரித்தாரோ அந்த ஸ்ரீ தேசிகன் எல்லாரினும் மேம்பட்டு விளங்குகிறார்.'' என்று, **டிண்டிம கவியும்** ;

(4) "ப்ரும்மத்தை த்வேஷிக்கிறகுத்ருஷ்டிகளால் உண்டாக்கப்பட்ட பலவிதமான சித்தாந்தங்களைத் தலையெடுக்கும்படி செய்கிற துர்வாதங்களினாலே பல துண்டுகளாகப் பிளக்கப்பட்டிருக்கிற முடியையுடைய வேதவாக்கின் தலைவலியைப் போக்குவதற்காக அவைகளை ஒன்று சேர்ப்பதில் அதிக சந்தோஷமுள்ள எந்த ஸ்ரீ தேசிகன் அவனியில் அவதரித்தாரோ, அவர் நமக்கு வேதாந்த ஜ்ஞான சம்பத்தை அருளவேண்டும்.'' என்று, **சண்டமாருத வாசிரியரும்** அநுஸந்தித்துப் போந்தனர்.

திருவேங்கடமுடையானுடைய தீர்த்தோத்ஸவ தினத்தில் திருவவதரித்த காரணம்பற்றி "**வேங்கட நாதன்**'' என்று திருநாமஞ் சாத்தப் பெற்றார்இப்பாவளருந் தமிழ்ச் செல்வர்.

"பகவானைப்போல் எண்ணிறந்த கல்யாண குணங்களுக்கு ஸாகரம் போன்றவராயும், வேங்கடேசன் என்கிற திரு நாமத்தை யுடையவராய் ஆசார்யர்களில் உத்தமரான ஸ்ரீ தேசிகனை வணங்குகிறேன்.'' என்று பெரியோர் அருளிச் செய்தபடி, இத் தூப்புற் பிள்ளையின் ஞானம், பக்தி, வைராக்கியம், பொறுமை முதலியன உவமையற்றனவெனலாம்.

இவருக்கு, "கவிதார்க்கிககேஸரீ''; "வேதாந்தாசாரியர்''; "ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரர்'' என்ற விசேஷ பிருதுகள் உண்டு. இவர் தாமே பல இடங்களில் தம்மை "வேதாந்தாசார்யர்'' என்று நிரூபித்துக் கொண்டும், தாம் அருளிச் செய்த அர்த்தங்களே உபாதேயங்கள் என்று உத்கோஷித்துக்கொண்டு மிருக்கிறார். இது தற்புகழ்ச்சியின் பாற் படாது. கீதாசாரியன் வேதாந்தார்த்தத்தை உபதேசிக்குங்கால் தன்னுடைய ஏற்றத்தைப் பேசியுள்ளதை நோக்குக. நம்தேசிகனும், "இத்தால் வேதாந்தத்தில் சொல்லப்பட்டதான தன் மஹிமையைச்

சொல்லுகிற பகவானுக்கு இவ்விடத்தில் வாஸ்தவத்தில் இருக்கிற அர்த்தத்தைச் சொல்லுகிற நாயகனுக்குத் தன்னுடைய குணங்களைத் தானே ப்ரகாசம் பண்ணுவதாலுண்டான தோஷமானது இல்லை.'' என்கிறபடியே வாஸ்தவமாய் இருப்பதைச் சொல்லும்பொழுது அது ஸ்வ விஷயமா யிருந்தாலும் தோஷமாகாது.'' என்று **ஸ்ரீ தாத்பர்ய சந்திரிகையில்** அருளிச் செய்கிறார்.

ஸ்ரீ சங்கற்ப சூரியோதயம் என்ற அபூர்வமான நாடகத்தில், (i) ''சகல லோகங்களாலும் கொண்டாடத் தகுந்தவராயும், அனைவரினும் மேம்பாடுடையவராயும், விசுவாமித்திரகோத்திரத்திற்குப்பூஷணமாயும், பவித்திரங்களான வித்யைகள் விளையாடுவதற்குப் புண்டரிக மலர்கள் போன்றவராயும், புண்டரீகாக்ஷர் என்று பேர்படைத்த ஸோமயாகம் பண்ணினவரின் திருக்குமாரராகிய எல்லையற்ற குணங்களுக்கு இருப்பிடமாகிய அநந்தஸூரியின் திருமகனாராகியும் ஸ்ரீ ரங்க ராஜனது திவ்யாஜ்ஞையால் அடையப்பெற்ற **வேதாந்தாசார்யர்** என்கிற பெயரை உடையவராயும், **கவிதார்க்கிகஸிம்மம்** என்று ப்ரஸித்தமான குணத்தினாலேற்பட்ட பெயரையுடையவராயும், சிஷ்ய ஜனங்களாகிற கட்டப்பட்ட வெற்றிக்கொடிகளினால் அலங்கரிக்கப் பட்ட தச திக்குக்களாகிய மெத்தைகளை உடையவராயும் சகல சாஸ்திரங்களின் விரோதங்களைப் போக்கடிக்கவல்ல விசாலமான புத்தியை யுடையவராயு மிருக்கிற ஸ்ரீமத் வேங்கடநாதன் என்ற திருநாமங் கொண்ட கவி இருக்கிறாரல்லவா? இந்தக் கவி, 'மன்னுயிர் அடங்கலும் உலகும் வேறு அமைத்துத் தேவரோடு இடங்கொள் நான்முகனையும் படைப்பன் ஈண்டு எனாத் தொடங்கிய **கோசிக முனிவன்**' கோத்திர பரம்பரையினர். ரிஷிகளினால் எந்தக் காயத்திரியினால் இரண்டாவது பிறப்புச் சொல்லப்பட்டதோ அப்படிப்பட்ட விச்வஜநநியாகிய காயத்ரி தேவி எந்தக் கவியின் கோத்திரத்திலேயே பிறந்தவளோ, அமரர்கள் விரோதிகளாகிய அசுரக் கூட்டங்களுக்குப் பயத்தை உண்டுபண்ணக் கூடியதாயும், கமலாஸனனால் எம்பெருமானுக்குத் திருவாராதனங் கண்டருளும் பொழுது கணகணவென சப்திக்கப் பட்டதாயும் இருக்கிற பகவானுடைய கண்டை எந்தக் கவியின் ரூபமாக அவதரித்தது என்று சாஸ்திரஞ்ஞர்களால் ஊகிக்கப்படுகிறதோ அப்படிப்பட்டவர், இருபது வயதிற்குள் விசேஷமாகக் கற்கப்பட்ட நானாவித வித்யைகளை உடையவராயும், முப்பது தடவை ஸச்சிஷ்யர்களுக்கு கேட்பிவிக்கப்பட்ட சாரீரக பாஷ்யத்தை உடையவராயு மிருக்கிற ஸ்ரீமானாகிய வேங்கட நாதகவி செவிக்கினிமையானதும், வேதங்களுக்கு நன்மையை நல்கும் பலார்த்தங்களையுமுடைய இந்த அஸாதாரண நாடகத்தை பகவத் பிரீதிகரமாக உலகோர்க்களித்தவர்,''

என்றும்,

ஸ்ரீ அதிகரணஸாராவளியில்,

(ii) "அந்தப் பகவானால் அளிக்கப்பெற்ற **வேதாந்தாசார்யர்** என்னும் தமக்கேயான பிருதை."

என்றும்,

ஸ்ரீ ரஹஸ்யரக்ஷையில்,

(iii) "தன்னுடையதென்று பகவானால் கொடுக்கப்பட்ட வேதாந்தாசார்யத்வத்தை பெரிய முதலியாருடைய ஸ்ரீ ஸூக்தியை வியாக்யானம் செய்ததினால் பிரகாசம் செய்தார்."

என்றும், இவ்வாசாரிய சிரோமணியே அருளிச்செய்தமை காண்க.

"மன்னுடை மன்றத் தோலைத் தூக்கினுந்
தன்னுடை யாற்ற லுணரா ரிடையினும்
மன்னியவவை யிடை வெல்லுறு பொழுதினுந்
தன்னை மறுதலை பழித்த காலையுந்
தன்னைப் புகழ்தலுந் தகும் புலவோர்க்கே."

என்ற நன்னூற் (சிறப்புப்பாயிரத்திலக்கணம். 53) காண்டிகையை இங்கு நினைக.

"வேண்பெரிய விரிதிரை நீர்வையத்துள்ளே
வேதாந்த வாரியனென்றியம்ப நின்றோம்"

—(அமிருதாசுவாதினி. 37)

"சந்தமிகு தமிழ் மறையோன் தூப்புல் தோன்றும்
வேதாந்தகுரு மொழிந்த ப்ரபந்தசாரம்."

—(பிரபந்தசாரம் 18.)

"தீதற்ற நற்குணப் பாற்கடல் தாமரைச் செம்மலர்மேல்
மாதுற்ற மாயன் பருவ வின் கீதையின் வண்பொருளைக்
கோதற்றநான் மறைமௌலியினாசிரியன் குறித்தான்
காதற்றுணி வுடையார் கற்கும் வண்ணம் கருத்துடனே."

—(கீதைச்சுருக்கு 21)

"மெய்விரத நன்னிலத்து மேன்மையேத்தி
வேதாந்த வாசிரியன் விளங்கினனே."

—(அத்திகிரி மான்மியம் 28.)

என்பன இவ்வாசிரியரின் திருவாக்கு.

"மற்றொருவருக்கும் கிடைக்காத வேதாந்தாசார்யர் என்கிற பிருதை ஸ்ரீரங்கநாதனால் அநுக்ரஹிக்கப்பெற்ற ஸ்வாமி ஸர்வோத்க்ருஷ்டராய் விளங்குகிறார்." (சண்டமாருதம். மங்கள சுலோகம். 7);

"பேசுபய வேதாந்த தேசிகன்" (அழகர் பிள்ளைத் தமிழ்);
"தேசிகனென்னுமாசான்" (புலவர் புராணம்);

என்பன பிற அறிஞர் வாக்கு.

இராமாவதாரத்தில், தவத்தின் மிக்கோனான விசுவாமித்திர முனிவன் தெய்வப் படைக்கலங்களை அண்ணல் இராமபிரானுக்கு

அளிக்க, அவ்வஸ்திராபிமானி தேவதைகள் அவனை உவகையுடன்மேவி, அவனிட்ட வழக்காய் நின்றன என்பதைக், கவிச் சிரேஷ்டர்,

" ஆறியவறிஞன் கூறியளித்தலு மண்ணறன்பால்
ஊறியவுவகையோடு மும்பர்தம் படைகளெல்லாம்
தேறியமனத்தான் செய்தநல்வினைப் பயன்களெல்லாம்
மாறியபிறப் பிற்றேடி வருவபோல் வந்தவன்றே."

—(பாலகாண்டம். வேள்விப்படலம். 2.)

" மேவினம் பிரிதலாற்றேம் வீரநீவிதியினெம்மை
ஏவினசெய்து நிற்றுமிளையவன் போலவென்று
தேவர்தம் படைகள் செப்பச் செவ்விதென்றவனுநேரப்
பூவைபோனிறத்திறைற்குப் புறத்தொழில் புரிந்தவன்றே."

—(ஷை. 3)

எனக் கூறுகின்றார். இதுபோல், பெரிய திருவடி நயினாரால் உபதேசிக்கப் பெற்ற ஸ்ரீ ஹயக்ரீவ மந்திரத்தை வேதாந்த குரு செபித்து நிற்க, வித்யாபிமானி தேவதைகளும், தங்களுடைய திவ்ய ரூபங்களுடன் தோன்றி, தங்களை நியமித்தருளும்படி வேண்ட, நம்மாசாரியனும் வேதாந்த வித்தையை மாத்திரம் தம்முடன்கூட இருக்குமாறும், இதர வித்தைகளைத் தாம் நினைக்கும்போது வரும்படிக்கும் நியமித்தருளினர். இவ்விதமான மஹிமையை இவர்தாமே,

"எவனொருவன் ஞானிகளின் மனதில் ராஜஹம்ஸம்போல விளங்குகிற உம்மைத் தன் மனதில் இருப்பவராகப் பார்க்கிறானோ அவனுக்கு வாக்குகள் தாங்களே 'நான் முன்னே நான்' முன்னே என்று வருவதில் கலகத்தை யுடையனவாய்க் கொண்டு தங்களுக்குத் தக்கபடி ஏவற்றொழில் புரிகின்றன,"

—(ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்திரம். 14)

என்றும் ;

" அமையாவிவை யென்னுமாசை யினாலறுமூன்றுலகில்
சுமையான கல்விகள் சூழவந்தாலும் * * "

—(அதிகாரச் சுருக்கு. 9)

என்றும் குறித்துள்ளார்.

இப் **பேராசிரியர்** பகவானுடைய நியமனத்தின்பேரிற் கவி பாடினார் என்பது,

" அந்தமில் சீரயிந்தை நகரமர்ந்தநாதன்
அடியிணைமேலடியுரை யாலைம்பதேத்திச்
சிந்தை கவர் பிராகிருதநூறு கூறிச்
செந்தமிழ் மும்மணிக் கோவை செறியச் சேர்த்துப்
பந்துகழலம்மானை யூசலேசல்
பரவு நவமணி மாலை யிவையுஞ் சொன்னேன்
முந்தைமறை மொய்யவழி மொழி நீயென்று
முகுந்தனருள் தந்தபயன் பெற்றேனனே."

—(நவமணிமாலை. 10)

என்ற இவர் திருவாக்காலே பெறலாம்.

மேலும் இவர்,

"வெள்ளைப் பரிமுகர் தேசிகராய் விரகாலடியோம்
உள்ளத் தெழுதியதோலையிலிட்டனம் யாமிதற்கென் !
கொள்ளத்துணி யினுங்கோ தென்றிகழினுங் கூர்மதியீர் !
எள்ளத்தனை யுகவாதி கழா தென்னெழின் மதியே."

—(அதிகாரச் சுருக்கு. 56)

என்று இவர் தாமே கூறுதலும் இதனை வலியுறுத்தும்.

ஆழ்வார்களிடத்தும், அவர்கள் அருளிச் செயல்களிடத்தும். **தூப்புற்பிள்ளைக்கு** ஆராத காதல் உண்டு. இதனைப் பல விடங்களில் இவ்வேதாந்த குரு பரக்க நிரூபித்துள்ளார். "**ஸ்ரீத்ரமிடோபநிஷத்தாத்பர்யரத்னவளீ**" என்னும் திவ்ய க்ரந்தத்தில் திருவாய்மொழியின் ஒவ்வொரு பாசுரத்தினுடையவும், தசகத்தினுடையவும், சதகத்தினுடையவும் தாத்பர்யங்கள் சுலோக ரூபமாக அருளிச் செய்யப்பட்டிருக்கின்றன. ஆரம்பத்தில் அவதாரிகா ரூபமாக பத்து சுலோகங்களும், பத்து பாசுரங்கள் அடங்கிய ஒரு திருவாய்மொழியின் ஸாரத்தை ஒரு சுலோகமாக நூறு சுலோகங்களும், ஒவ்வொரு பத்தின் அர்த்த ஸங்க்ரஹமாக பத்து ச்லோகங்களும், 'அஞ்சிறைய மடநாராய்' என்னுந் திருவாய்மொழிக்கு உள்ளுறை பொருளாக ஒரு சுலோகமும், 'நண்ணுதார்' என்னும் திருவாய் மொழிக்கு உலகவ்யாபாராநுபவ பரமாக ஒரு ச்லோகமும், இதற்கு அர்த்தாந்தரமாக ஒரு சுலோகமும், 'சீலமில்லாச் சிறியனேலும்' என்கிற திருவாய் மொழியில் ஆழ்வார் நைச்யாநுஸந்தானம் செய்திருப்பதைச் சுருக்கிக் கூறுகிற ஒரு சுலோகமும், கடைசியில் ஆழ்வாருடைய இதர ஸூக்திகளுடைய அர்த்த ஸங்க்ரஹமாயும் உபஸம்ஹாரரூபமாயும் இருக்கிற ஆறு சுலோகங்களுமாக நூற்று முப்பது சுலோகங்கள் அடங்கியது இது. "**ஸ்ரீத்ரமிடோபநிஷத்ஸாரம்**" என்பது இவரது மற்றொரு அரியநூல். ஆதியில் திருவாய்மொழியின் தாத்பர்ய ஸாரஸங்க்ரஹமாக 3 சுலோகங்களும், ஒவ்வொரு சதகத்தினுடைய ஸங்க்ரஹமாக 10 சுலோகங்களும், ஒவ்வொரு பத்திற்கும் மேற்பத்துடன் சங்கதியை நிரூபிக்கிற 9 சுலோகங்களும், முடிவில் திருவாய்மொழியின் தாத்பர்யத்தையும் இந்நன்னூலின் அவதரணக்ரமத்தையும் நிரூபிக்கிற 4 சுலோகங்களும் ஆக 26 சுலோகங்கள் கொண்டது இத்திவ்யக்ரந்தம். "**ஸ்ரீ பாதுகாஸஹஸ்ரம்**" என்பது ஸ்ரீ ரங்கநாதனுடைய திவ்ய பாதுகைகளின் விஷயமாக 1008 ச்லோகங்கள்கொண்டது. இது முற்றும் ஆழ்வாருடைய விஷயமே என்பது ஆசாரியர்களின் அபிமதம். "**ஸ்ரீ முனிவாஹன போகம்**" என்பது திருப்பாணாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய திருப்பதிகமான '**அமலனாதிபிரான்**' எனும் அருளிச்

செயலுக்கு விஸ்தாரமான மணிப்பவள வியாக்கியானம். "**ஸ்ரீ உபகார ஸங்கிரகம்** " என்பது அமிருதாசுவாதினியில் உள்ள ரஹஸ்யங்களில் ஏழாவது. இது மூன்று அதிகாரங்களடங்கியது. அவற்றில் முறையே, பகவான் நமக்குச் செய்கிற உபகாரங்களில் பூர்வோபகாரம், மத்யோப காரம், உத்தரோபகாரம் என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்து நிரூபிக் கப்பட்டிருப்பதுடன், கடைசி அதிகாரத்தில் நம்மாழ்வார் பிரபந்தங் களின் முதன்மையான "**திருவிருத்தம்**" எனும் அருளிச் செயலின் முதற் பாசுரமான "பொய்ந்நின்றஞானம்" இவ்வர்த்தங்களையெல் லாம் வெளியிடுகிற பிரகாரத்தை அதற்கு வியாக்கியானம் அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. "**ஸ்ரீ கோதாஸ்துதி**" என்பது ஸ்ரீ ஆண் டாள் விஷயமான இருபத்தொன்பது சுலோகங்கள் கொண்டதோர் தோத்திரப் பாமாலை. இதில், ஸ்ரீ கோதை, ஸ்ரீ பூமிப்பிராட்டியாரின் அவதார விசேடம் என்பதும், பெரியாழ்வார் திருமகளாய் அவதரித் தாள் என்பதும், அவளுடைய பாமாலைகளின் பெருமையும், அவள் பகவானுக்குப் பூமாலை சூடிக்கொடுத்த விவரணமும், எம்பெருமான் அநுபவித்த விசேஷ ப்ரகாரங்களும் அருளிச் செய்யப்பட்டிருக்கின் றன. இப்பிரபந்தாவதார விஷயமாக கர்ண பரம்பரையான ஓர் ஐதிஹ்யம் கேட்கப்படுகின்றது. அஃது வருமாறு ;—

கவிவாதி சிங்கமெனப் பெரும் புகழ்படைத்த **வேதாந்தாசாரி யார்** திவ்யதேச யாத்திரையாக ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு எழுந்தருளிய சமயத்தில், அத்திருப்பதியில் ஸ்ரீஆண்டாளுக்கு வைசாக வசந்தோத்ஸ வம்நடந்துகொண்டிருந்ததாகவும், அந்த உத்ஸவங் கண்டருளுவதற் காக கோதை நாச்சியார் நாடகசாலைத் தெருவிலிருக்கும் திரு வேங்கட முடையான் ஸந்நிதிக்கு முன்பாக உள்ள வசந்த மண்ட பத்துக்கு எழுந்தருள வீதி கண்டருளும்போது, பட்டர்பிரான் கோதையை வேதாந்த தேசிகன் மங்களாசாஸனஞ் செய்ததாக வும், அதனால் உண்டாகிய ஆநந்த பரீவாகம் உள்ளடங்காமல் அதிகரித்ததனாலே, அதற்குப் போக்குவீடாக "**கோதாஸ்துதி**" எனும் திவ்யப் பிரபந்தத்தை ஸ்ரீ ஆண்டாள் அந்த மண்டபத்துக்குள் எழுந்தருளுவதற்கு முன்பே செய்தருளியதாகவும், அதனாலே அதுமுதற் கொண்டு ஸ்ரீ ஆண்டாள் வைசாக வசந்தோத்ஸவத்தில் நாடகசாலைத் தெருவீதிகண்டருளும் போது, முன்னே கோயிற்கிரமப்படி பெரி யாழ்வார் திருவம்சஸ்தராகிய வேதப்பிரான்பட்டராலே தொடக்கப் பெற்று ஸ்ரீ வைஷ்ணவர்களனைவரும் இந்தப் பிரபந்தைச் சேவித்து வருகின்றனர்.

இத்துதியை ஓதுமவன் " ஸ்ரீ மாஹனரங்கபர்த்தாவுக்கு ப்ஹுமாங் யனாவான்." திருப்பாவை முப்பதுந் தப்பாமே உரைப்பவர் "ஈரிரண்டு

மால் வரைத்தோள் செங்கட் டிருமுகத்துச் செல்வத்திருமாலால் எங்கும் **திருவருள்** பெற்று இன்புறுவர்'' ஆண்டாளுக்குச் செங்கட் டிருமுகத்துச் செல்வத்திருமால் ஸ்ரீ ரங்கராஜன். 'ஆண்டாளரங்கர்க் குப்பன்னு திருப்பாவை' என்றபடி, ஸ்ரீ ரங்கராஜனே திருப்பாவைக்கு விஷயம். இத்துதி ஸ்ரீரங்கத்தில் அருளிச் செய்யப்பட்டதென்று வைபவ ப்ரகாசிகை கூறும்.

கம்பநாடர் கோதாவரி தீரத்தை யண்மினர் வீரர் என்பதனே,

" புவியினுக் கணியாயான்ற பொருடந்து புலத்திற்ருகி
அவியகத்துறை கடாங்கியைந்திணை நெறியளாவிச்
சவியுறத்தெளிந்து தண்ணென்ெருழுக் கமுந்தழுவிச் சான்ரோர்
கவியெனக்கிடந்த கோதாவரியினை வீரர்கண்டார்.''

—(ஆரணிய காண்டம், சூர்ப்பணகைப் படலம். 1)

எனச்செம்மொழிச்சிலேடை யமைத்த தீங்கவியிற் பாடினர், கோதாஸ்துதியின் 12-ஆஞ்சு லோகம் பின்வருமாறு மொழிபெயர்க் கப்பெற்றுள்ளதை கம்பர் கவியுடன் கூட்டி ஆராய்ந்து களிக்க:—

" கோதையே கோதாவரி நின்றன்பெயரின் கூட்டத்திருலிந்த வுலகைப்
போதவம் புனலாற் புனிதமாகப் புரிந்திடும் புகலுமெந்நதியில்
மேதகுங் கங்கை யாதியவாகும் வியன்னதி பலவும் வந்துவந்தே
ஓதிடும் பருவத்துறைதலாலென்றும் முயர்புண்ய நதிகளாயினவால்.''

(கவிபூஷணம் நரசிம்மாசாரியர்)

" வண்ணமுறுமணிவரன்றி வயங்குங் கோதா
வரியுனது திருப்பெயரை மேவு மாற்ருற்
புண்ணிய நன்னதிகளெலாந் தன் பான்மேவப்
புகலரிய பாவமெலாம் போக்குமன்றி
மண்ணுலகி னீராட வருவோர் கோது
மாற்றி நலனளிக்குமென வகுப்பர் நீலக்
கண்ணனைத் தன்வசமாக்குங் கரியகோலக்
கருணைவிழிப் பெரிய தனக்கனி யன்னளே.''

(அனுமந்தன்பட்டி மதுரகவி ஸ்ரீநிவாஸையங்கார்.)

தெக்கணதிக்கை நூல்கள் சிலாகித்துக் கூறவில்லை, " தென்னாட்ட வரும் சுவர்க்கம் புகுவர்'' எனசைன நூலும் இகழ்ந்துரையாநின்றது. நம்**வேதாந்தகுரு**, " ஆண்டாள் திருவவதரித்தருளுவதற்கு இடமா யிருந்ததொரு சம்பந்தத்தாலே தெற்குத் திக்கும் சர்வோத்தரமாக ஆகியதுமன்றி, அறிதுயிலமர்ந்தருளும் அழகிய மணவாளனது கடா க்ஷத்திற்குப் பாத்திரமாக ஆகியது.'' என இத்துதியின் பதினென்ரு வது சுலோகத்தில் பெருமிதத்துடன் கூறுகிருர்.

திரமிடோப நிஷத்தாத்பர்ய ரத்நாவளியின் உபோத்காதத் தின் சுருக்கத்தைச் சற்றுத் தருவாம் இங்கு.

நம்மாழ்வாருடைய அருளிச்செயல் ஸகலவாக்குக்களுள்ளும் ஸாரமானது, வைத்தமாநிதியாம் மதுசூதனன் திருவாய்மொழியில் எழுத்துத்தோறும் பொதிந்து கிடக்கின்றான். திருவாய்மொழியில் நவரஸங்களும் நிரம்பியிருப்பினும் சாந்திரஸமே பிரதானம். அதனை யோதுவார் சுத்த சாத்விகராய் விளங்குவர். அதனை யோதாதவர் பிற விப் பெருங்கடலை நீந்தார். திருவேங்கடத் தெம்பெருமான் விபுதர் களாகிய தேவர்களாலே வேண்டப்பெற்று, திருப்பாற் கடலைக் கடைந்து, அதில் ஸாரமான அமுதத்தை அவர்களுக்கு அளித்தது போல, வேங்கடேசர் என்று திருநாமம் பூண்ட நாமும், விபுதர்களாகிய பண்டிதர்களாலே பிரார்த்திக்கப்பட்டுத், திருவாய்மொழியாகிற திருப் பாற்கடலைக் கடைந்து அவ்வாயிரம் பாசுரங்களிலுமுள்ள ஸாரார்த் தங்களாகிற ரத்நங்களை ஸர்வாநுபாவ்யமாகச் செய்கிறோம். திருவாய் மொழியில் ஆதியில் இருபத்தொன்று பாசுரங்கள் நான்கு அத்யாயங் கள் கொண்ட ப்ரஹ்மஸூத்ரத்தின் அர்த்தத்தைத் தெளிவாக விவரிப் பதால் ரிக்வேத ஸாரமென்றும், கானத்தோடு சேர்ந்த ஆயிரம் பாசு ரமா யிருப்பதைக்கொண்டு கானப்ரதானமாயும், ஆயிரம் சாகையாயும், இருக்கும் ஸாமவேத ஸாரமென்றும், ஸ்ரீய:பதியே உபாயமும் ப்ராப் யமும் என்று ப்ரதான ப்ரதிபாத்யமான ஓரர்த்தத்தோடு சேர்ந்த நூறு திருவாய்மொழிகளைக் கொண்டு நூறு சாகையான யஜுர்வேத ஸார மென்றும், ச்ருங்காரம் முதலிய ஒன்பது ரஸங்களை ப்ரதிபாதனம் பண் ணும் க்ரமத்தை அநுசரித்து ஒன்பது சாகையான அதர்வணவேத ஸார மென்றும் இத் திருவாய்மொழி தன்னையே நான்கு வேத ஸாரமாக நிர் வகிக்கலாம். ஆரிய பாஷை தவிர இதர பாஷைகளாலே கானம் பண்ணுதல் அந்தணர்கட்கு நிஷித்தம் என்கிறது பகவத் விஷயந்தவிர இதர விஷயங்களுக்கே யாதலால், தமிழ்ப் பாஷையாலே பகவத் ஸ்தோத்திரம் கூடும். அவரவர்களுக்குத் தெரிந்த பாஷையினால் அரச னைத்துதித்து உகப்பித்தல்போல எம்பெருமானையும் எப்பாஷையினு லும் துதித்தல் ஏற்கும். மேலும், தமிழெனும் அளப்பருஞ்சலதி தந்தவன் எனக் கொண்டாடப்பெறும் அகத்திய மகரிஷியினுடைய ஸ்வைர பாஷை யாகையினாலே தமிழ் ஆரிடம் என்னும் ஏற்றத்தை யுடையது. முற்குணத்திற்கு எல்லை நிலமான மாலுகந்தவாசிரியர் அருளிச் செய்ததாகையாலே கேவலம் ஸாத்விகமா யிருக்கின்ற திரு வாய்மொழியாகிற த்ராவிட ப்ரஹ்மஸம்ஹிதையானது வேதோபப் ருஹ்மணங்களிற்றலைசிறந்து விளங்கும். பாஞ்சாலி நீராடும்போது அவளது வடிவழகைக் கண்ட ஸஜாதீயைகளான பெண்டிர், மனத்தில் ஆண்மையை அவாவினர் என்றதுபோல, ஆழ்வாரும் புருஷோத்தம னான எம்பெருமான் திறத்திலே பெண்மையை யடைந்தது பொருந்தும். நாயகன் திறத்தில் நாயகி எங்ஙனம் பரதந்திரப்பட்டவளோ, அங்ங

னமே பகவத் விஷயத்திலே தாம் பாரதந்திரியம் வஹித்தவர் ஆழ்வார். ஆதலால் இவரது நாயகீபாவம் கூடும், பக்திரஸமே ச்ருங்காரரஸ ஸமாதியில் வடிவெடுத்தது. ஸம்ச்லேஷ விச்லேஷங்கள் ஆழ்வாருக்கு மாறி மாறி நடக்கும். கண்ணனைக் காணுதிருப்பதே இவருக்கு விரஹம். அங்கிலேயில் கடகர்களான ஆசார்யர்களே நாரை, அன்னம், பூவை, கிளி முதலான பறவைகளாகத் தூது விடப்படுகின்றனர். முதற்பத்திலே எம்பெருமானுடைய உபாயத்வமும், இரண்டாம்பத்தில் உபேயத்வமும, மூன்ரும் பத்தில் இவ்விரண்டும் திவ்யமங்கள விக்ரஹ விசிஷ்டனுக்கே என்பதும், எம்பெருமானைத் தவிர்த்து வேருெரு உபேயவஸ்து தமக்கில்லை என்பது நான்காம்பத்திலும், ஐந்தாவது முதலாக மேலுள்ள பத்துக்களில் அவன் தவிர வேறு உபாயம் தமக்கில்லை என்றும் விசதமாக வெளியிடப்பெற்றுள்ளன. ஒவ்வொரு சதகத்திற்கும் ப்ரமேயங்களான அர்த்தங்களாவன:—ஸேவ்யத்வம் ; போக்யத்வம் ; சுபாச்ரய திவ்யமங்கள விக்ரஹ சாலித்வம் ; ஸர்வ போக்யாதிகத்வம் ; புருஷார்த்த ததுபாய ஹேதுத்வம் ; ப்ரபத்தி ஸுலபத்வம் ; ஆச்ரிதாநிஷ்ட நிவர்த்தகத்வம ; ஆச்ரிதச் சந்தாநுவர்த்தித்வம் ; நிருபாதிக ஸுஹ்ருதத்வம் ; ஸத்பதவீ ஸஹாயத்வம். முநீந்த்ரராகிய ஆழ்வார் ஆயிரம் பாசுரங்களையும் ஆயிர நாமச்சிங்கனுடைய திருக்கல்யாண குணங்களை உட்கொண்டவனுக அருளிச் செய்திருக்கிருர். கூறியது கூறலென்னுங் குற்றமின்றியே ஒவ்வொரு திருவாய் மொழியினுலும் பிரதி பாதிக்கப் படுகிற பரத்வம் முதலான நூறு குணங்களையும் உடையனவாயுள்ளன. தன்னையே அரணுகக் கொண்ட ஐவர்க்கு ஸ்வேச்சையாலே தீதிலாத தூதனுயும், பார்த்தன்தன் தேர்த்தட்டில் ஸாரதியாயு மிருந்து அதனுலே ஆச்ரித பாரதந்த்ரியமாகிய குணத்தை அனைவரும் நம்பும்படி வெளியிட்டருளின கமலாகாந்தனுன கண்ண பிரான் அருளிச் செய்த கீதையின் அந்தத்துள்ள சுலோக ரத்தினத்தில் ஸித்தித்ததாயும், ஜநககுல விளக்கான பிராட்டியின் சொன்முகத்தால் அநுஷ்டிக்கப்பட்டதாயு மிருக்கிற அநந்யோபாய த்வரூபமான ஆசாரசீலரான பரமை காந்திகள் இந்த ரத்நாவளியை ஹ்ருதயத்திலே தரிக்கக் கடவர்கள்.

ஆழ்வார்கள் அருளிச்செய்த செய்ய தமிழ் மாலைகளைத் தாம் தெளிய வோதித் தெளியாத மறை நிலங்களைத் தெளிந்த படியைத் தெளிவாக நமக்குக் காட்டுவதற்காகவே தூப்புற் குலமணியாம் நம் ஆசார்ய சிகாமணி "**தத்வமாத்ருகா**" எனும் இரகசியத்தில் திரமிடோப நிஷத் வாக்யங்களையே ஸ்வவாக்யச் சாயலாக அநுஸந்தித்திருப்பது கண்டு களிக்க வேண்டுவது. நற்றமிழர் நன்கோதி நல

னுறற்காக அவ்வேதாந்த குருமொழிகள் அங்ஙனே இவண்தரப் பெறுகின்றது.

"ஸதாசார்யோப தேசத்தாலே சாரீரக மூலமந்த்ராதிகளைக் கொண்டு ஸாத்விகருக் கறியவேண்டும் த்த்வம், பரமென்றும், அவர மென்றும் இருவகையாயிருக்கும். **பரதத்வமாவது**:—நினைந்த வெல் லாப் பொருள்களுக்கும் வித்தாய், ஸர்வ வஸ்துக்களிலும் உடன்மிசை யுயிரெனக் கரந்து, நந்தாவிளக்கே யளத்தற் கரியாய் என்றும், உணர் முழு நலமென்றும், அளப்பரிய வாரமுதை என்றும், அமலனென்றும் சொல்லுகிறபடியே அத்யத்புதமாய், குணங்களுக்கும் அதிசயாவஹ மாய் திருவுக்குந் திருவாம்படி நிருபாதிக மங்களமான ஸ்வரூபத்தை யுடையனாய், உயர்வற வுயர்நலமுடையவனெவனவன் என்னும்படி அநவதிகாதிசயாநந்தம் முதலான அநந்தகல்யாண குணங்களையுடை யனாய், ஆச்ரிதர் பல பிறப்பும் பிறவாதபடி தானென்னென்னயோநியு மாய்ப் பிறக்கக் கடவனாய், அவர்கள் நாட்டில் பிறந்துபடுமவை படா மைக்காகத்தான் பிறந்து படாதனபடக் கடவனாய், தான் சொல்லிற் றுச் செய்யும் தேவப்ரகிருதிகளுக்குத் தானுஞ் சொல்லிற்றுச் செய்யக் கடவனாய், விபரீதாசரணம்பண்ணும் ஆஸுரப்ரக்ருதிகளுக்கு தானும் விபரீதாசரணம் பண்ணக் கடவனாய், தன்னை அந்தராத்மா என்று நினைத்திருப்பாரைத் தானுந்தனக்கு அந்தராத்மாவென்று நினைத் திருக்குமவனாய், தனக்கு ஆத்மாத்மீய ஸமர்ப்பணம் பண்ணினாருக்குத் தானும் ஆத்மாத்மீய ஸமர்ப்பணம் பண்ணக்கடவனான ஸ்ரீய: பதி யான புருஷோத்தமன், இவன் பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராமே யாள்கின்ற வெம்பெருமான் செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார் என்கிறபடியே, உபய விபூதி நிர்வாஹகனாய், தன்னொப்பாரில்லப்ப னென்றும், இனனில னெனனுயிர் மிகு நரையிலனே என்றும், ஓத்தாரை மிக்காரையிலை யாயமாமாயா என்றும் சொல்லுகிறபடியே, ஸமாதிகதரித்ரனா யிருக்கும், அப்ராக்ருதமாய் பஞ்சோப நிஷத் ப்ரதிபாத்ய சுத்தஸத்வ பஞ்ச சக்தி மயமாய், அஸ்த்ர பூஷணரூப விசித்ரதத்வாச்ரயமான திவ்ய மங்கள விக்ரஹவிசேஷத்தாலே, விசிஷ்டனாய்க் கொண்டு பரவ்யூஹாதி பஞ்சப்ரகாரனா யிருக்கும். **பரரூபமாவது**:—நித்ய மாய், ஏகரூபமாய், நித்யருக்கும், முக்தருக்கும், ஸேவ்யமாய், குழுமிற்றேவர் குழாங்கள் கைதொழச் சோதிவெள்ளத்தி னுள்ளே என்றும், ஆதியஞ்சோதியுருவென்றுஞ் சொல்லுகிறபடியே, வானுயரின்பம் மன்னுவீற்றிருந்த ரூபம். **வ்யூஹங்களாவன**:—இப் பரரூபமடியாக பூர்வபூர்வத்திற்கு உத்தரோத்தரம் கார்யமாகக் கொண்டு பிறந்து, முன்னை வண்ணம் பாலின் வண்ணம் பாலினீர்மை செம்பொனீர்மை இத்யாதிகளிற்படியே க்ருதத்ரேதாயுகங்கள் தோறும்

மாறிமாறிவரும் நிறங்களை யுடைத்தான ரூபங்கள். அபிமான விசேஷத்தாலே ஜீவமநோஹங்கார சப்த வாச்யங்களான ஸங்கர்ஷண ப்ரத்யும் நாநிருத்த ரூபங்களில் ஜ்ஞாநபலாதிகளில் இவ்விரண்டு குணங்களும் ஸம்ஹார சாஸ்த்ரப்ரவர்த்தநாதிகளில் இவ்விரண்டு தொழில்களும் உடைத்தாயிருக்கும். வாஸுதேவாதிகளான நாலுவ்யூஹங்களிலும் ஓவ்வொரு வ்யூஹத்திலே மும்மூன்றுகப் பிரிந்து கேசவன்றமரில் சொல்லுகிற திருநாமங்களையுடைய ரூபங்கள் பன்னிரண்டும் வ்யூஹாந்தரங்கள். **விபவங்களாவன:**—மீனுயாமையுமாய் இத்யாதிகளிற்படியே விபூதிகளோடு ஸஜாதீயங்களாய்த் தோன்றும் ரூபங்கள், அவைதன்னிலே தோன்றுவன சில ரூபங்கள் விபவாந்தரங்கள். **அந்தர்யாமிரூபமாவது;**—கண்கள் சிவந்து இத்யாகளிற்படியே உள்ளே யோகிகளுக்குக் காணலாவதொரு ஸூக்ஷ்மரூப விசேஷம். **அர்ச்சாவதாரமாவது:**—தமருகந்த தெவ்வுருவ மவ்வுருவந்தானே, தமருகந்த தெப்பேர் மற்றப்பேர், நெஞ்சினுல் நினைப்பானெவனவனுகு நீள்கடல் கண்ணனென்னும்படி ஸ்வயம் வ்யக்ததிவ்யார்ஷ வைஷ்ணவ ஸ்தாநங்களிலே ஸர்வஸஹிஷ்ணுவாய், அர்ச்சகபாரதந்த்ரியத்திற்கு எல்லை நிலமாய் சேஷ சேஷிபாவ சபளமாய் பூமௌகதம் பூஜ்யதாம்ப்ரமேயம் என்று தானே யருளிச்செய்தரூபம். தன்னுளேதிரைத்தெழுந்து இத்யாதிகளிற்படியே நிற்கிற இவ்வஞ்சுரூபமும் அகலகில்லே னிறையுமென்றலர் மேல்மங்கையுறையும்படியான சுபாச்ரயமாயிருக்கும். திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் என்கிறபடியே ஸலக்ஷ்மீகமாக இப்பரதத்வத்தைக் கண்டவன் மற்றிங்கோர் திருவில்லாப் புதுத்தெய்வங்தேருன். இப்படி சுடர்மிகு சுருதியுளனுன ஸ்ரீய:பதிக்குசரீரமென்று ப்ரமாணஸித்தமான அவரதத்வம் சேதநமென்றும் அசேதநமென்றும் இரண்டு வகையாயிருக்கும், **சேதநமான அவரதத்வமாவது:**—ஜீவசப்த வாச்யமாய், ஸ்வரூபத்தாலும், சக்த்யாதி குணங்களாலும், பரிச்சேத்யதமான அஹமர்த்தம். இது ஸ்வயம்ப்ரகாசதையாலும், ஜ்ஞான குணமாச்ரயமாகையாலும், ஜ்ஞாநமென்று பேர் பெற்று இரண்டுபடியாலும், தனக்குத்தான் தோன்றுமதாய், அனுகூல ஸ்வபாவமாய், அதிஸூக்ஷ்மமாய், திலத்தில் தைலம் போலவும், தாருவில் அக்நிபோலவும், ஸர்வாசேதனங்களிலும் அநுப்ரவேசிக்க வற்றுய் நிர்விகாரமாய், குணத்ரயரஹிதமாய், கண்டு கேட்டுற்று மோந்துண்டுழலுங் கருவிகளுக்கும் விஷயமன்றிக்கே நிஷ்க்ருஷ்ட வேஷத்தில் தேவத்வ மநுஷ்யத்வ பேதங்களில்லாமையாலே தேவ மநுஷ்யாதி சப்தகோசர மன்றிக்கே ஸர்வாத்ம ஸாதாரணங்களான 'அஹம்புத்தி சப்தங்களாலே தந்தாமுக்கநுபாவ்யமா யிருக்கும். நானென்கிற வர்த்தந்தானே பரபுத்தி விஷயமாம்போது அவ

னிவ னுவனெவன் என்றும், நீ யென்னுங் தோற்றும். இஜ்ஜீவதத்வம் பத்தரென்றும், பந்தரஹிதரென்றும் இரண்டுபடியா யிருக்கும். **பத்த ராவார்** :—பல செய்வினை வன்கயிற்றால் திண்ணமழுந்தக் கட்டுண்டு, பெருந்துயரிடும்பையிலே மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து, மண்ணும் நீரெரிகால் மஞ்சுலாவு மாகாசமுமாம் புண்ணுருக்கையின் வழி யுழன்று, நானாவித நரகம்புகும் பாவஞ் செய்து, சூழ்ந்தகன்றாழ்ந் துயர்ந்த முடிவில் பெரும் பாழிலே பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கு மழுக்குடம்பும் இந்நின்ற நீர்மை யென்னும்படி தன்னுருக் கொடுத்து வேறுருக்கொண்டு, ஆவாரார் துணை யென்றலை நீர்க்கடலு ளழுந்தும் நாவாய் போற் பிறவிக்கடலுள் நின்று துளங்குகிற சேதநர். இவர்களுக் கநாதியான கர்மப்ரவாஹ வைஷம்யத்தாலே அவ்வோபோ கங்களுக்குப் போலே அவஸர ப்ரதீக்ஷ பகவத்க்ருபா மூலமான மோக்ஷத்திற்கு முற்பாடு பிற்பாடுகளுண்டாம். **பந்தரஹிதர்**,—முக்த ரென்றும், நித்யரென்றும் இரண்டு வகை. **முக்தராவார்**:— எம் மாபாவியற்கும் விதிவாய்க் கின்றுவாய்க்குங் கண்டீரென்றும், படி நடுவே வந்துய்யக் கொள்கின்ற நாதன் திருவருளாலே கருவிலே திரு வுடையராய், பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாகி வந்து பாதவிலச் சினை வைத்து ஜ்ஞாநக்கை தர, யானே யெனதே என்கிற அஹங் காரமமகாரங்களாகிற படுகுழியினின்று மேறி, ஒண்டொடி யாள் திருமகளும் திருமகள் சேர்மார்பனும் நீயுமே நிலா நிற்பக் கண்ட சதிர்க் கண்டு ஐங்கருவி கண்டவின்பந் தெரிவரிய வளவில்லாச் சிற்றின்பம் ஒழிந்து, களைகண் மற்றின்றி, நாகணை மிசை நம்பிரான் சரணே சரண் நமக்கென்று திருநாரணன் தாள் காலம் பெறச் சிந்தித்து, புகலொன் றில்லாவடியே னுன்னடிக் கீழமர்ந்து புகுந்தேனே என்று அடைக்கலம் புகுந்த வென்னை, அஞ்ச லென்ன வேண்டுமென்றும் தொன் மாவல் வினைத்தொடர்களை முதலரிந்து மங்கவொட்டுன் மாமாயை, மாயஞ் செய்யேலென்னை என் றும் வளைத்து ஆக்கை விடும்பொழு தெண்ணிப் பாவமெல்லாம் சும்மெனாதே கைவிட்டோடித் தூறுகள் பாய்ந்து, அமரரோ டுயர்வில் சென்று மன்னுங் கடுங்கதிரோன் மண்டலத்தினன்னடுவுள் அன்ன தோரில்லி யினூடுபோய், இமையோர்வாழ் தனிமுட்டைக் கோட்டை யினிற் கழித்து, வாட்டாற்றான் பணிவகையை வானேறப்பெற்று, ஆண்மின்கள் வானக மாழியான்றமரென்று வாளொண் கண் மடந்தை யர் வாழக், கொடியணி நெடுமதிள் கோபுரங் குறுகி, வாசலில் வான வர் வைகுந்தன்றம ரெமதிடம் புகுதென்று விதிவகை புகுந்தனரென்று நல்வேதியர் பதியினிற் பாங்கினிற் பாதங்கள் கழுவ, நிதியு நற் சுண்ண மும் நிறைகுட விளக்கமும் மதிமுக மடந்தையரேந்தினர் வந்தெதிர் கொள்ள, தன்மை பெறுத்தித் தன் தாளிணைக்கீழ் கொள்ளுமப்பன்

கொழுஞ்சோதி யுயரத்துக் கூட்டரிய திருவடிக்கள் கூட்ட, அவன் தாளிணைக்கீழ் வாழ்ச்சிபெற்று, அடியார்கள் குழாங்களுடன் கூடி, மாமணி மண்டபத்தில் அந்தமில் பேரின்பத்தடியரான நித்யஸூரி களோடு நிரையொக்க விருந்து, அனைத்துலகுமுடைய வரவிந்தலோ சனனைத் தினைத்தனையும் விடாதே யநுபவித்து, ஒழிவில் கால மெல்லா முடனாய் மன்னி வழுவிலா வடிமைசெய்து வாழும்படி வீடு திருத்து வான் பக்கல் வீடுபெற்றவர்கள். **நித்யராவார்:**—நித்யமான பரி பூர்ண பகவ தநுபவத்தை யுடையராய், வடிவுடைவானவ ரென் றும், முடியுடை வானவ ரென்றும், வைகுந்தத்தமர ரென்றும், ஸூரிகளென்றும், ஸாத்ய தேவர்க ளென்றும் சொல்லப்பட்ட அநந்தகருட விஷ்வக்ஸே நாதிகளான அயர்வறு மமரர்கள். பத்தருக்கு கர்மப்ரவாஹம் அநாதியாய் அந்தவத்தா யிருக்கும். முக்தருக்கு கைங்கர்ய ப்ரவாஹம் ஆதிமத்தாய் அந்தரஹிதமா யிருக்கும். நித்யருக்கு பகவதபிமதவிபரீத ருசியில்லாமையாலே ஒருக்காலத்திலும் கர்மஸம்பந்தமன்றிக்கே அதிகாரி நியமத்தோடே கூடின கைங்கர்ய ப்ரவாஹம் அநாத்யந்த மாயிருக்கும். இப்படி ஷட் விம்சனென்றும் பஞ்சவிம்சனென்றும் பிரிக்கப்பட்ட தத்வங்களில் பரமாத்மாவுக்கு ஸர்வாவஸ்தையிலும் ஸ்வாச்ரித விஷயத்திலுள்ள பாரதந்த்ரிய சேஷத்வங்கள் ஸ்வாதந்த்ரிய நிபந்தநங்களாயிருக்கும். ஜீவாத்மாக்களுக்கு ஸர்வாவஸ்தையிலும் ஸ்வவ்யாபாராதிகளிலுள்ள ஸ்வாதந்த்ரிய சேஷித்வங்கள் பாரதந்த்ரிய நிபந்தநங்களாயிருக்கும். இப்படி பரமசேஷியாயும், த்வாரசேஷியாயுமுள்ள பராவராத்மாக் களிருவரிலும் வேறுபட்ட அசேதநதத்வம் த்ரிகுண மென்றும், அத்ரி குணமென்றும் இரண்டுவகையாய் இருக்கும். அசேதநத்ரவ்யமான தர்மபூதஜ்ஞாநத்தோடே நாலுவகை யென்றெண்ணலாயிருக்க இத்தை சரீரமாகக் கொள்ளாமையாலும், ப்ரயோஜநவிசேஷத்தா லும், இவை மூன்றையும் வகுத்து அநுஸந்தித்தார்கள். **த்ரிகுண மாவது** ஸத்வ ரஜஸ்தமஸ்ஸுக்களுக்கு ஆச்ரயமானத்ரவ்யம். **ஸத் வரஜஸ்தமஸ்ஸுக்களாவன :**—அடைவே ஜ்ஞாநஸுகாதிகளுக் கும், ராகதுக்காதிகளுக்கும், ப்ரமாதமோஹாதிகளுக்கும் ஹேதுக் களான குணவிசேஷங்கள். இத் த்ரிகுணத்தினுடைய காரணதசையை யும், கார்யதசையையும் கூட பிரகிருதி மானுங்காரமனங்கள், பொங் கைம்புலனும் பொறியைந்தும் கருமேந்திரியமைம்பூதம் என்றும் பிரித்து சாஸ்த்ரம் சொல்லா நிற்கும்.''

"**தயாசதகம்**'' எனப் பெயரிய அருணூற்றில், பராசரர் முதலிய மஹரிஷிகளுக்கு வணக்கங் கூறுமுன் ஆழ்வார்களைத் தொழுகிறார் நம் வேதாந்தகுரு, "ஸ்ரீநிவாஸனுடைய தயையொன்றையே தஞ்சமாகப் பற்றியவரும், தங்கள் தமிழ் மாலைகள் மூலமாய் வேதங்களனைத்தும்

அனைவருக்கும் யோக்யமாகும்படி செய்வித்த புண்ணிய புருஷர்களு மான ஆழ்வார்களை இடைவிடாமல் பிரியமாகத் தொழுகிறேன்'' என்பது அங்குள்ள சுலோகக் கருத்து. இங்ஙனம் முற்படக் கூறிய தினின்று இவருக்கு ஆழ்வார்களிடமுள்ள பேரபிமானம் வெளிப் படை. ஆழ்வார்கள் ஸ்ரீநிவாசனுடைய தயையே மோக்ஷோபாய மாகக் கைப்பற்றிய சரணுகதி நிஷ்டர்; திருவாய்மொழி முதலிய பொய்யில் பாடல்கள் தீர்க்க சரணுகதியாகும்; பகவானுடைய அருட் குணத்தையே ஆழ்வார்கள் விஷயமாகப் பிரகாசப்படுத்துபவர்கள். பராசரர் போன்ற புராண கவிதைகள் பக்திநிஷ்டர்; தயாகுணத் தோடு வீரியம் முதலிய குணங்களையுங் கொண்டாடுபவர்கள்.

"**ஸ்ரீ ஸம்ப்ரதாய பரிசுத்தி**'' என்பது அமிருத ரஞ்சனீ ரஹஸ் யங்களில் முதலாவது, இதில், "வ்யாஸ போதாயநாதிகளாலே யதாதிகாரம் ப்ரவ்ருத்தமான வேதாந்த ஸம்ப்ரதாயத்திற்கு, இந்தயுகா ரம்பத்திலே ப்ருஹ்மநந்த்யாதிகளுக்குப் பின்பு, **நம்மாழ்வார்** ப்ரவர்த் தகரானுர். "ப்ராப்யம்ஞாநம்'' இத்யாதிப்ரமாண பலத்தாலே 'மிக்க வேதியர் வேதத்தினுட் பொருள், நிற்கப்பாடி யென்னெஞ்சுள் நிறுத்தினுன்' என்கிறது உபபங்ஙம். வேதாந்தார்த்த வைஷத்யஹேது வாகையாலே பாஷாந்தரம் உபஜீவ்யம். தர்மவ்யாத துலாதாராதி வ்ருத்தாந்தங்களையுமிங்கே யநுஸந்திப்பது, இப்பரம்பரையாலும், ப்ராதுர்பாவவிசேஷத்தாலும் நாதமுனிகளுக்கு ஆழ்வாராசாரியரா னுர். இவரை ப்ரபந்ந ஸந்தாந கூடஸ்ததையாலே ஆளவந்தார் 'ஆத் யஸ்ந: குலபதே:' என்றருளிச்செய்தார்'' என ஸ்ரீ வைஷ்ணவ குரு பரம்பரையை விளக்குகிறுர்.

ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்துள்ள குரு பரம்பராசாரத்தில் இவ் வேதாந்த குரு கூறுவதாவது:—

"இவ்வாசார்யர்களில் ஈச்வர முனிகள் பிள்ளை நாதமுநிகள். இவர் ந்யாய தத்வமென்கிற சாஸ்த்ரமும் யோகரஹஸ்யமும் அருளிச் செய் தார். இவருக்கு ஸ்ரீ மதுரகவிகள் முதலாக வுண்டான ஸம்ப்ரதாய பரம்பரையாலும், திருவாய்மொழி முகத்தாலும், யோக தசையிலே ஸாக்ஷாத் க்ருதராயும் நம்மாழ்வார் ஆசார்யரானுர்.''

"**ஸ்ரீ சங்கற்ப சூரியோதயத்தில்**'' விவேகன் கூறுகிறுன்:—

"இந்த ஜனமாகிய நான் மையில்லாத அல்லது ஒருவிதத் தொந்தரவு மில்லாத ஒரு ஞானமாகிற கண்ணை மலரச் செய்ய வேண்டியதற் காக நரகாசுரனை நலிந்த நம்பெருமான் ஜீவித்திருப்பதற்குக் காரண மானவராயும், அன்றிக்கே அப்படிப்பட்ட பகவானைத் தனக்குப் பிராணுதாரமாக உடையவராயும், அகத்திய முனிவர் வசிக்கும் கிரியி னின்றும் வருகிற தண்பொருநையாற்றின் அழகான அலைகளுக் கொப்

பான தம்முடைய (நம்மாழ்வாருடைய) திருநாமத்தை அடையாள மாகவுடைய திருவாக்குகளினுல் வாசனையோடு கூடிய மகிழம்பூ மாலை யினுல் அனைவரும் கொண்டாடத் தகுந்தவராயும் இருக்கிற அன்றிக்கே அப்படிப்பட்ட வகுளமாலையை (நாட்கமழ் மகிழ்மாலை மார்பினன்) தாமே சிலாகித்துக் கொண்டிருப்பவரான நம்மாழ்வாரின் பொருட்டு ஸேவிக்கின்றேன்.''

ஆழ்வார்கள் அருளிச் செயல்களை **தூப்புற்கோமான்** கொண்டா டும் அழகு நன்கு உணரற்பாற்று. அதனைக் கீழ்க் காண்க ;—

'' செந்தமிழ்நூல்'' (அமிருதரஞ்சனி. 23)
'' பாவளருந்தமிழ்மறை'' (அமிருதாசுவாதினி. 35)
'' பாவளருந்தமிழ்ப் பல்லாண்டு'' (பரமபதஸோபா நம். 18)
'' தூயதென்மறை'' (அத்திகிரிமான்மியம். 27)
'' பண்ணமருந்தமிழ்வேதம்'' (அதிகாரச் சுருக்கு. 22)
''வாழ்வான திருமொழிகள்'' (பிரபந்த ஸாரம். 1)
'' நன்பொருள் சேர்திருமொழி'' (ஷை 8)
'' அறிவுதரும் பெரிய திருமொழி'' (ஷை 13)
'' உண்மை மிகுமாறன்மறையாயிரம்'' (ஷை 15)
'' துய்யதமிழிருபத்து நான்கிற்பாட்டின் தொகை நாலாயிரம்'' (ஷை 17)
'' சந்தமிகுதமிழ்மறை'' (ஷை, 18)
'' ஸம்ஸ்க்ருதத்ராவிடச்ருதி'' (தத்வநவநீதம்)
'' போய பிழையும் புகுதருவா நின்றன
வும் தீயினிற்றூசாகும்'' என்று **உபநிஷத்துச் சொன்னபடி**''
(ஸ்ரீ ரஹஸ்ய ஸந்தேச விவரணம்.)

பெரியாழ்வார் திருமொழி முதலாக இராமாநுச நூற்றந்தாதி அளவாக இருபத்து நான்கு பிரபந்தங்களுள் அடங்கிய பாசுரத் தொகை நாலாயிரம் என்பது சந்தமிகு தமிழ்மறையோன் தூப்புல் தோன்றும் வேதாந்த குருவின் செவ்விதான நிர்வாஹம். இதனை அடி யொற்றியே இப்பேராசிரியரும் இருபத்து நான்கு திராவிடப் பிரபந் தங்களில் நானூற்றைம்பது திருப்பாசுரங்கள் திருவாய் மலர்ந்தருளி யுள்ளார். இப்பாசுரத் தொகுதியே ''**தேசிக மாலை**'' என ஆன்றோ ரால் மிகவும் போற்றப்பெற்று வருகின்றது. இதிலுள்ள சில மணிக ளைத் தருவாமிங்கு.

எம்பெருமானே உபாயமும் உபேயமும் என்று குணதசகத்தால் அனுபவிக்கும் அழகு அழியாவழகு. அங்கிலை மண்டிலவாசிரியப்பாவை அங்ஙனே தருகிறோம் இப்பொழுது:—

'' பயின்மதி நீயே பயின்மதி தருதலின்
வெளியுநீயே வெளியுற நிற்றலின்
தாயுநீயே சாயைதந்து கத்தலின்
தந்தையு நீயே முந்தி நின்றளித்தலின்
உறவு நீயே துறவாதொழிதலின்

உற்றது நீயே சிற்றின்பமின்மையின்
ஆறுநீயே யாற்றுக்கருடலின்
அறமும்நீயே மறநிலே மாய்த்தலின்
துணைவனு நீயே யிணையிலேயாதலின்
துய்யனு நீயே செய்யாளுறைதலின்
காரண நீயே நாரணனுதலின்
கற்பக நீயே நற்பதந் தருதலின்
இறைவனு நீயே குறையொன்றிலாமையின்
இன்பமு நீயே துன்பந் துடைத்தலின்
யானும் நீயே யென்னுளுறைதலின்
எனது நீயே யுனதன்றி யின்மையின்
நல்லாய் நீயே பொல்லாங்கிலாமையின்
வல்லாய் நீயே வய்யமுண்டுமிழ்தலின்
எங்கணுமாகுமெய்ய! நின்வியப்பே
அங்ஙனேயொக்க வறிவதாரணமே.''

—(மும்மணிக்கோவை—7.)

"ஸோ அங்க வேத யதிவாஙவேத" என்று கை வாங்கின பழ மறைபோலன்றிக்கே, **மாறன் மறை** அனைத்தையும் அறிவது. "ஸேவாயோக்ய:" (த்ரமிடோபநிஷத்ஸாரம்) இத்யாதியிற்படியே பத்து பத்துக்களிலும் ப்ரதிபாதிதங்களான பத்து அர்த்தங்களும் இப் பாசுரத்தில் அருளிச் செய்யப்பெற்றதிறே, எங்ஙனேயென்னில் ;—

(1) "பயின்மதி நீயே" என்று ஸேவ்யத்வம்,

(2) "வெளியும் நீயே" என்று போக்யத்வம்.

(3) "தாயும் நீயே"; "தந்தையும் நீயே" என்னும் இரண்டிலுமாக சுப ஸுபகவிக்ரஹத்வம்.

(4) "உறவும் நீயே"; "உற்றதும் நீயே" என்று ஸர்வபோக்யாதிகத்வம்.

(5) "ஆறும் நீயே"; "அறமும் நீயே" என்று ச்ரேயஸ்தத்தேதுதாநம்.

(6) "துணைவனும் நீயே"; "துய்யனும் நீயே" என்று ப்ரபதநஸுல பத்வம்.

(7) "காரணம் நீயே"; "கற்பகம் நீயே" என்று அநிஷ்டநிவர்த்தகத்வம்.

(8) "இறைவனும் நீயே"; "இன்பனும் நீயே" என்று ஆச்ரிதேச்சாநுஸாரித்வம்.

(9) "யானும் நீயே"; "எனதும் நீயே" என்று நிருபாதிகஸுஹ்ருத்வம்.

(10) "நல்லாய் நீயே"; "வல்லாய் நீயே" என்று ஸத்பதவீஸஹாயத்வம்.

எம்பெருமானே தொழத்தகுந்தவன் என்பது ஸேவ்யத்வம், எம் பெருமான் பரம போக்யன் என்பது போக்யத்வம். எம்பெருமான் விலக்ஷணமான திவ்யமங்கள விக்ரஹம் படைத்தவன் என் பது சுபஸ்ரூபகவிக்ரஹத்வம். போக்யங்களான ஸகல புருஷார்த்தங் களிற்காட்டிலும் மேம்பட்ட அளவற்ற போக்யதையை யுடையவன் எம்பெருமான் என்பது ஸர்வபோக்யாதிகத்வம். உபாயமான புரு ஷார்த்தத்தையும் அதற்கு உறுப்பான உபாயத்தையும் எம்பெருமான் தானே கொடுத்தருள்பவன் என்பது ச்ரேயஸ்தத்தேதுதாநம். தன்னை யடைக்கலம் புகுகிறவர்களுககு மிகவும் எளியன் எம்பெருமான் என் பது ப்ரபதநஸுலபத்வம். அடியார்களது அல்லல்போக்கும் தன்மை யன் எம்பெருமான் என்பது அநிஷ்டநிவர்த்தகத்வம். அடியார்களு டைய அபிப்பிராயத்தைப் பின்சென்று நடப்பவன் எம்பெருமான் என்பது ஆச்ரிதேச்சாநுஸாரித்வம். இயற்கையாகவே அருள்புரியு மியல்வினன் எம்பெருமான் என்பது நிருபாதிகஸுஹ்ருத்வம், தாளடைந்தோர் தங்கட்குத்தானே நலமந்தமில்லதோர் நாட்டின் வழிக்குத்துணையாமவன் என்பது ஸத்பதவீஸஹாயத்வம்.

ஆச்ரிதரக்ஷணார்த்தமாக அடியவர்க்கு மெய்யன் திருவவதரித் தருளினபடிகளோடு திருவயிந்தை நகரின்கணுள்ள ஸ்ரீதெய்வநாயக னுடைய அர்ச்சாவதார வைபவத்தையும் ஒரு தீங்கவியில் அநுஸந்தித்து இனியராகிறுர் நம் **வேதாந்த தேசிகன்.**

அவ் ஆசிரியச்சந்த விருத்தப்பாசுரம் வருமாறு :—

" மகரம் வளருமளவில் பௌவமடைய வுற்றலைத்தனை
வடிவுகமடமென வமர்ந்து கிரிதனைத்தரித்தனை
மலியுமசுரனுரமிடந்து வசுதை பேர்த்தெடுத்தனை
வலிகொளவுணனுடல் பிளந்துமதலை மெய்க்குதித்தனை
பகருமுலகமடியளந்து வமரர்கட்களித்தனை
பரசுமுனிவன் வடிவுகொண்டு பலவரைத் துணித்தனை
பணியவிசைவில் தசமுகன் தன் முடிகள் பத்தறுத்தனை
படியுமுருவில் வருமிலம்பவசுரனைத் தகர்த்தனை
நகரந்து வரையெனவுகந்து வரைகரத்தெடுத்தனை
நடமொடியலும் பரியில் வந்து நலிவறுக்கவுற்றனை
நலியும் வினைகள் செகு மருந்தினல முறைந்தவெற்பினை
நணுகு கருடநதி கிளர்ந்த புனலுகப்பில் வைத்தனை
அகரமுதல வுரைகொண் மங்கை கணவனுக்களித்தனை
அடையும் வினதை சிறுவனுய்யவருள் கொடுத்துயர்த்தனை
அடியுமணியுமெனு மனந்தனடி தொழக்களித்தனை
அவனிமருவு திருவயிந்தை யடியவர்க்கு மெய்யனே ! "

—(நவமணிமாலை. 2).

எம்பெருமானது திருமேனிசோபையை அநுபவித்து அதை மற வாதேயிருக்கப் பெற்றவர்கள் ஜன்மமில்லாதவர்கள் என்றும்,என்றுமே

பிறப்பறியா நித்யஸூரிகளே அவன் வடிவழகை மறவாதிருக்கும் பாக்கியம் பண்ணினவர்களென்றும், நித்யமுக்தர்களும் வள்ளலான பரந்தாமனின் திருமேனி ஸௌந்தரியத்தை மறக்காதவர்கள் என்றும், பக்தியினால் நிறைந்த மனதையுடையவர்கள் இந்த ஸம்ஸாரமண்டலத்திலிருக்கச் செய்தே அயர்வறும் அமரர்கட்கு சமானமாகின்றனர் என்றும் நற்பொருள் பலவற்றை நல்கும் திருப்பாசுரத்தை யோதியுணர்மின். அச்செஞ் சொற்கவிசுதே.

"வஞ்சனை செய்பூதனையை மலியுஞ்சாட்டை
மல்லரையோர் மதகளிற்றை வானோரஞ்சும்
கஞ்சனை முன் கடிந்தவனி பாரந்தீர்த்த
காவலனே! கோவலனாய் நின்றகோவே!
அஞ்சனமுங்காயாவுமனையமேனி
அடியவர்க்கு மெய்யனே! அயிந்தைவாழும்
அஞ்சலென வருள்பொழியும் வள்ளலே! நின்
வடிவழகு மறவாதார் பிறவாதாரே."
—(நவமணி மாலை. 6).

விலங்காமயல் பெற்று நின்ற இக்குருமணியின் படிகண்டு அயிந்தை நகரமர்ந்த நாதன், 'இனித்தான் முகங் கொடாதொழியில் தனது ரட்சகத்வத்துக்குப் பங்கமேற்படும்' என்று கொண்டு தன்னைக் காட்டி அநுபவித்தான். 'உன் மழலைச் சொல் கேட்க விருப்பமானேன்' என்றான் உம்பர்கோன். 'நான் சொல்லலாவதென்தான்?' என்றார் நம் குருவரர். உடனே அமலன் சங்கு துடைத்தான். மயர்வற மதிநலமருளப் பெற்ற ஆழ்வாரைப்போலே அச்சுதனை அநுபவிக்கிறார் இவ்வாசாரியமணி. அவ்வநுபவபரிவாஹமே அடியிற் கண்ட பாசுரமாய் அனைவராலும் அநுபவிக்கக்கூடிய நிலையில் நிலைத்து நிற்கின்றது.

"பெற்றனை நீயே மற்றுள வெல்லாம்
பெறுவது நின்னையுறுவது கொள்வார்
நின்னலன்றி மன்னரின்பம்
நின்பொருட்டு நீயென் பொருட்டில்லை
நின்னுருநின்று மின்னுருத் தோன்றும்
நின்தனக்கு நிகர் நின்னடியடைவார்
நின்பாலன்றியன் பாலுய்யார்
வாரணமழைக்க வந்த காரணனே!"
—(மும்மணிக்கோவை, 10)

பூமிப்பிராட்டிக்கு அலங்காரமாக ஒரு காஞ்சியைச் சமைத்து அதனெழிற்கண்டு மகிழ்ந்தான் விச்வகர்மா என்பதை இச்செந்தமிழ்ச் செல்வர், ஒரு அழகிய கவியில் சிலேடைப் பொருள் பயக்குமாறு அருளியுள்ளதைக் காண்மின்:—

"திண்மணிகள் பொன்னுடனே சேர்தலாலுஞ்
சிதையாத நூல்வழியிற் சேர்த்தியாலும்
வண்மை யெழுமீரரண்டு வருணத்தாலும்
வானவர்க்கும் வியப்பான வகுப்பினாலும்

உண்மையுடை வாசியொளியோசையாலும்
ஒருகாலும் அழியாத வழகினுலும்
மண் மகளார்க்கு அலங்கார மென்ன மன்னும்
மதிட்கச்சி நகர்கண்டு மகிழ்ந்திட்டானே.'' (அத்திகிரிமான்மியம். 10)

"எட்டு'' எனும் பதம் பன்முறை ஒரு பாட்டில் வரும்படி அமைத்துப் பாடியுள்ள பாசுரம் வருமாறு :—

" எட்டுமா மூர்த்தியெண்கண்ணனெண்டிக்கு
எட்டிறையெண் பிரகிருதி
எட்டு மாவரை களீன்றவெண் குணத்தோன்
எட்டெணுமெண்குணமதியோர்க்கு
எட்டு மாமலரெண்சித்தி எண்பத்தி
எட்டுயோகாங்க மெண்செல்வம்
எட்டுமாகுண மெட்டெட்டெணுங் கலைகள்
எட்டிரதமேலெனவு மெட்டினவே.'' (அதிகாரச் சுருக்கு. 45)

" கோயில்'' எண்முறைவரும் பாசுரம் இது :—

" ஆராதவருளமுதம் பொதிந்த கோயில்
அம்புயத்தோனயோத்தி மன்னர்க்களித்த கோயில்
தோராததனி வீரன் தொழுதகோயில்
துணையான வீடணற்குத்துணையாங்கோயில்
சேராத பயனெல்லாஞ் சேர்க்குங்கோயில்
செழுமறையின் முதலெழுத்துச் சேர்ந்தகோயில்
தீராத வினையனைத்தும் தீர்க்குங்கோயில்
திருவரங்கமெனத்தி கழுங்கோயில்தானே.''

(அதிகாரச் சுருக்கு 42)

அட்ட "வெற்பு''டன் விளங்கும் ஆசிரிய விருத்தம் அழகுடைத்து :—

" கண்ணனடியிணை யெமக்குக் காட்டும் வெற்பு
கடுவினையரிரு வினையுங்கடியும் வெற்பு
திண்ணமிது வீடென்னத்திகழும்வெற்பு
தெளிந்தபெருந் தீர்த்தங்கள் செறிந்த வெற்பு
புண்ணியத்தின் புகலிதென்னப் புகழும்வெற்பு
பொன்னுலகிற் போகமெல்லாம் புணர்க்கும் வெற்பு
விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு
வேங்கட வெற்பென விளங்கும் வேதவெற்பே.'' (ஷை. 43)

எண்முறை "வந்தார்'' ஏற்றுநிற்கும் நன்றிகொள் நற்பாட்டு நற்றமிழர் நன்குணர வேண்டுவது,

" அத்திகிரி யருளாளப் பெருமாள் வந்தார்
ஆனைபரிதேரின் மேலழகர் வந்தார்
கச்சிதனிற் கண்கொடுக்கும் பெருமாள் வந்தார்
கருதவரந்தரு தெய்வப்பெருமாள் வந்தார்
முத்திமழை பொழியுமுகில் வண்ணர் வந்தார்
மூலமென வோலமிடவல்லார் வந்தார்
உத்தர வேதிக்குள்ளே யுதித்தார் வந்தார்
உம்பர் தொழுங்கழலுடையார் வந்தார்தாமே.''

—(திருச்சின்னமாலை 11)

ஏழு "அரி"யுடன் சப்தசித்ரமுடையதாய் முதல் திருவாய்மொழி யின் சந்தத்தோடொத்துக் காணப்பெறும் பாசுரமாவது :—

"வரியிருளழிவதன் முனம்வருமுணர்வொடு
கரிகிரி மருவிய கரிய வரடியிணை
பரிவொடு பரவு நல்லடியவர் பழவுரை
அரியரி யரி யரி யரி யரி யரியே."—(ஸ்ரீ வைஷ்ணவதினசரி 1)

பதினுன்கு "பால்"கொண்ட பாட்டிது :—

"ஒருகுளம்பி யிருகன்றி யொட்டகப்பால்
உப்புடன்பால் மோருடன்பால் மாதர்தம்பால்
கருவுடையவற்றின்பால் கன்றில்லாப்பால்
மறுகன்றூற் கறந்திடும்பால் திரிந்திடும்பால்
திருமகளார் கணவனல்லாத் தெய்வத்தின்பேர்
சின்னமுடையவற்றின் பால் செம்மறிப்பால்
பரிவதிலந்தணர் விலைப்பால் செம்பினிற்பால்
தீதாம்பாலிவை யனைத்தும் பருகாப்பாலே."

—(ஆகாரநியமம், 17)

நான்கு "மறை" பெற்ற பாட்டுக்காண்க ;—

"மறை பொருந்தாதவை வல்லசுரர்க்கு வகுத்தமையும்
மறை பொருந்தும் நிலையின் வன்குணப்படி மூவகையும்
மறைநிலை தன்னை வகுக்குங்குறி மூன்றின் மேன்மையையும்
மறை யுமிழ்ந்தானுரைத்தான் வாசவன்றன் சிறுவனுக்கே."

(கீதைப் பொருட்சுருக்கு 18)

தேசிக மாலையைத் தெளியவோதின் தெளியாதமறை நிலங்கள் தெளியலாம். வேதாந்த குருவின் திருக்கமலபாதஸேவை விண்ண ளிக்கும், திருவேங்கடமுடையான் அருளிச்செயல்களின் திறம் நன்கு அறிதல் வேண்டும். வேதமுடித் தேசிகனுர் மெய்யுரையை நண்ணி ஞல் பாதகங்களோடும் பறந்து, தேசிகமாலை மணங்கமழ்க யெங்க ணும், வாழ்க செந்தமிழ். வாழ்க தமிழ்மறை. வாழ்க உலகெலாம்.

"அடைபவர் தீவினை மாற்றி யருள்தருந்தூப்புலய்யா
இடர்தருமிப்பிறவிக்கடல் தன்னிலமர்ந்தவென்னைக்
கடையறப்பாசங்கழற்றி நின்தாளிணை காணும் வண்ணம்
உடையவனே யருளாயுணர்ந்தார் தங்கள் கற்பகமே."

—(பிள்ளையந்தாதி. 10)

"நின்னருளாங்கதியன்றி மற்றென்றில்லேன்
நெடுங்காலம் பிழைசெய்த நிலைகழிந்தேன்
உன்னருளுக்கினிதான நிலையுகந்தேன்
உன்சரணேசரணென்னுந்துணிவு பூண்டேன்
மன்னிருளாய் நின்ற நிலையெனக்குத் தீர்த்து
வானவர்தம் வாழ்ச்சிதர வரித்தேனுன்னை
இன்னருளாலி னியெனக்கோர் பரமேற்ருமல்
எந்திருமால்! அடைக் கலங்கொளென்னை நீயே."(அமிருதாதவாதினி 31)

ஸ்ரீ:

ஆண்டாள் கவி.

[ஸ்ரீ. ரா. ஸ்ரீநிவாஸதேசிகமய்யங்கார், யம். ஏ]

கீழ்வானம் வெள்ளென்று வெளுத்துக்கொண் டிருந்தது, இரவெல்லாம் ஆகாயத்தில் ஆட்சி புரிந்த அம்புலியும் தேய ஆரம்பித்துவிட்டான். மரக்கிளைகளில் பதுங்கியிருந்த பறவைகள் சிறகுகளை அடித்துக் கொண்டு வெளியிலே கிளம்பும் சத்தங் கேட்டது. மார்கழி மாத வைகறை மாருதம் வீசத் தொடங்கிற்று. அம் மாருதத்தின் மீது பல பொழில்களிலுள்ள மலர்களின் மணம் மெல்ல மிதந்து வந்தது. கோயிலின் தீபதூப கந்தம் இம் மணத்தோடு கலந்தது. உலகத்தின் மேலே விரிந்து கிடந்த அமைதிக் கடலில் முரசும விளி சங்கமும் ஒலி அலைகளை எழுப்பின.

"சுடரொளி பரந்தன சூழ்திசை யெல்லாம்
துன்னிய தாரகை மின்னொளி சுருங்கி
படரொளி பசுத்தனன் பனிமதி இவனோ
பாயிருள கன்றது, பைம்பொழிற்கமுகின்
மடலிடைக்கீறி வண்பாளைகள் நாற
வைகறை கூர்ந்த்து மாருதம் இதுவோ"

என்று தெருவில் பூபாள ராகத்தில் பக்தர்கள் பஜனை செய்து கொண்டு போனார்கள். விடியற்காலம் நீராடப் போகிற பிராம்மணர்களின் அரீயென்ற பேர் அரவம் என் செவியில் விழுந்ததும் என் மனம் எங்கேயோ திரிய ஆரம்பித்தது.

என்னுடைய ஊர்க் கோயில், குளம், குட்டை, ஓடை, ஆறு, கழனி எல்லாம் மறைந்துவிட்டன. என் படுக்கையில் குளிருக்குப் பயந்து 'கம்' என்று படுத்த வண்ணமாய் நான் இருந்தபோதிலும் என் சிந்தை அரங்கில் ஒரு காட்சி எழுந்தது.

என் முன் ஒரு சிறுமியர் கூட்டம் நிற்கக் கண்டேன், அச்சிறுமியர் கூட்டத்தில் அனைவரும் அழகு வாய்ந்தவர்கள். அவர்களுடைய நடுவில் எம்பிரானுக்கு ஏற்றி வைத்த தூய சுடரொளித் தீபத்தைப் போல விளங்குகிருள் ஒருத்தி. அவளுடைய மாசற்ற நோக்கையும், அழுக்கற்ற உள்ளத்தையும் ஆராய்ந்து பார்க்கிறவர்களுக்கு, தன் ஞான சௌந்தரியத்தினுலும், ரூபசௌந்தர்யத்தினுலும் மற்றவர்கள் மனத்தைக் கவர்ந்து அவள் கட்டளையிடுகிறவள் போல காணப்படுகிருள். பூண்ட ஆபரணங்களுக்கே பொலிவு தரும் வனப்பு வாய்ந்த வனிதையர்களுடைய நூபுரங்களின் 'கலீர், கலீர்' என்ற சப்தம் உள்ளத்தில் ஒலிக்கும் இன்னிசை கானத்திற்குத் தாளம் அடித்தது போலேற்பட்டது.

"மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப்போதுவீர் போதுமினோ நேரிழையீர்"

என்று இன்பமாய்ப்பாடி, சிலம்பார்ப்ப அடிபெயர்த்தார்கள் அக்கன்னி கைகள். ஒவ்வொரு வாசலிலும் நின்று, பாடிக் கண்வளர்ந்த பெண் களைத் துயில் எழுப்பினார்கள் அவர்கள்.

"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடினால் நாடெல்லாம் மும் மாரிபெய்து செழிக்கும். கண்ணன் திருமேனி போல வானம் கறுக் கும், அவன் கையில் விளங்கும் ஆழிபோல மின்னல்கள் மின்னும். அவன் சங்குபோல மேகம் முழங்கும், அவன் வில்லிலிருந்து துள்ளி வரும் சரம்போல் மழை கொட்டும். எழுந்திருங்கள், எழுந் திருங்கள். அவன் நாமம் பரவ" என்று பாடிக்கொண்டு நகர்ந்து வரும் கொடிகள் போலப் போனார்கள். அவர்கள் கூட்டத்தில் சிலர் கலந்து கொண்டனர். பொழுது தேய்ந்தது; இன்னும் ஒரு பெண் எழுந்திருக்க வில்லை. "பறவைகள் எழுந்துவிட்டன. கோயிலின் சங்கநாதம் கேட் கிறது. முனிவர்கள் இடுகிற "அரி என்ற பேர் அரவம் செவியில் விழு கிறது" "எழுந்திராய், எழுந்திராய்" என்று அவர்களைக் கூவுகிறார்கள்.

"புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோயில்
வெள் ளைவிளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ
பிள்ளாய்! எழுந்திராய்........."

மற்றொரு வீட்டிற்குச் சிறிது நேரங் கழித்துப் போனார்கள். விளக் கெரிந்துகொண்டிருந்தது, தூபம் கமழ்ந்தது; துயில் அணை மேல் கண்வளர்கிற பெண்ணை ஜன்னல் வழியாக அவர்கள் பார்த்து "ஏன் இன்னும் தூங்குகிறாய்? என்று கேட்டார்கள். அவள் பதில் உரைக்க வில்லை. உள்ளேயிருக்கிற தாயை விளித்தார்கள். எழுப்புங்கள் அவளை. நாங்கள் அவளுக்காக காத்துக்கொண்டு நிற்கிறோம். உன்மகள்தான் ஊமையா? அல்லது செவிடா? அல்லது தூக்க மந்திரத்தில் சிக்கிவிட் டாளா? அல்லது கூற்றத்தின்வாய் விழுந்த கும்பகரணன் தூக் கத்தை உனக்குத் தந்தானா? என்று சிரித்துக்கொண்டே கேட்டார்கள்.

"தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய
தூபம் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே! மணிக்கதவம் தாள் திறவாய்
மாமீர் அவளை யெழுப்பீரோ! உன்மகள்தான்
ஊமையோ! அன்றிச் செவிடோ! அனந்தலோ
ஏமப் பெருந்துயில் மந்திரப்பட்டாளோ!"
".........பண்டு ஒருநாள்
கூற்றத்தின்வாய் வீழ்ந்த கும்பகரணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில் தான் தந்தானோ!"

இன்னொரு வீட்டில் வாயிலில் நின்றுகொண்டு வானத்தில் நிகழ்ந்த ஓர் அற்புதமான காட்சியைக் குறிப்பிட்டுத் துயிலெழுப்புகிறார்கள்.

"பிள்ளைகளெல்லாரும் பாவைக்களம் புக்கார்
வெள்ளி யெழுந்து வியாழ முறங்கிற்று"

மேலும் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள் செங்கழுநீர் மலர்ந்து ஆம்பல்வாய் கூம்பின. நங்காய்! எழுந்திராய். பாடிக்கொண்டும் பரிகசித்துப் பேசிக்கொண்டும் யமுனாநதிக் கரைக்கு அனைவரும் சென்று அங்கே பகவானைப் பரிவுடன் அழைத்தார்கள். அப்பனே! மலையிலிருந்து வரும் சிங்கம்போல நீ வரவேண்டும். வந்து எங்கள் காரியங்களை ஆராயவேண்டும், மேலும் சிற்றஞ் சிறுகாலே வந்து உன்னைச் சேவித்து உன் அடி பணிகின்றோம். ஏழேழ் பிறவிக்கும் உனக்கே நாம் ஆட் செய்வோம். மற்றைக் காமங்களை நீ நீக்க வேண்டும்,

"எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்."

படுக்கையில் படுத்தபடியே என் மனத்தில் ஊர்வலம் போல ஒன்றின் பின் போன காட்சிகளைச் சிந்தித்தேன். வேதாந்த பரமாக இப் பாடல்களுக்கு வியாக்கியானஞ் செய்வோர்களை மனத்திலே வைத்துக்கொண்டு, இவைகளை அனுபவிக்கிற விஷயம் ஒரு புறம் இருக்கட்டும். கலப்பற்ற கவிதை முறையிலே வைத்து இப்பாட்டை நோக்கினும், ஆண்டாள் ஓர் உண்மையான கவி என்பதில் சந்தேகமில்லை. முதல் முதல் காலைச் சூழ்நிலையின் வர்ணனையை நோக்குவோம். அழகிலிருந்தே அலர்ந்த காலையை நம்முன் தன் சொல்மந்திரத்தால் ஆண்டாள் எழுப்பிவிட்டாள் என்ற உண்மை, பாட்டுக்களைப் படிப்போர்களுக்கு நன்கு புலனாகும் "கீழ்வானம் வெள்ளென்று" "புள்ளும் சிலம்பினகாண், செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினகாண், வெள்ளியெழுந்து வியாழ முறங்கிற்று, வாசநறுங்குழலாய்ச்சியர் மத்தினால் ஓசை படுத்த தயிரரவம் கேட்டிலையோ", வெள்ளை விளிசங்கின் பேரரவம்" என்ற செஞ் சொற்களை வைத்துக்கொண்டு காலைச் சூழ்நிலையை மிகவும் அழகுபடச் சித்திரித்திருக்கிறாள் ஆண்டாள்.

மேலும் விரோதத்தில்தான் ஒன்றுக்கு ஒன்று சோபிக்கும். வெளியிலே கொட்டுகிற பனியின் உக்கிரகத்தை அதிகப்படுத்த அதற்கு நேர் விரோதமான ஒரு நிலைவேண்டும். பனித்தலைவீழ நின் வாசல் என்ற தொடரிலே பனியின் சைத்தியத்தை உணர்கிறோம். அக்கடும்பனி வேளையில் ஒருபெண் கதவைச் சாற்றிக்கொண்டு "கம்" என்று கண் வளர்கிறாள்.

"தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய
தூபம் கமழத் துயிலணைமேல் கண் வளரும்"

"குத்து விளக்கெரியக் கோட் டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா!"

இவ்வரிகள் வெளியிலே வீசுகிற கடும்பனியின் கசப்பை எப்படி அதிகப்படுத்துகின்றன பாருங்கள். உள்ளேயிருக்கும் இன்பமான கதகதப்பும் வெளியிலுள்ள சகிக்காத குளிரும் நம் அகத்தே புகுகின்றன.

மேலே குறிப்பிட்ட வரிகளில் துயிலுகின்ற சித்திரம் கீட்ஸ் (Keats) எழுதின "St. Agnes Eve" என்ற பாட்டிற் காணப்படுகிற சித்திரத்திற்கு நம் உள்ளத்தை இழுத்துச் செல்லுகிறது,

இத்திருப்பாவையில் இரண்டு அழிவிலாச் சித்திரங்கள் அடங்கியிருக்கின்றன. மலைக்குகையில் துயின்றுகொண்டிருந்த சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்துப் பிடரிமயிரை உதறிவருகிற காட்சியை எவரும் மறக்கமுடியாது.

"மாரிமலை முழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க எப்பாடும் போந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமாபோலே"

இப்பாட்டின் கமனத்தில் சிங்கத்தின் கமனத்தைப் பார்க்கிறோம். ஓசையில் சிங்கத்தின் கர்ஜனையைக் கேட்கிறோம். மேலும் சிங்கம்போல மனக்குகையில் உறங்கிக் கிடந்த நமது ஆத்மசக்திகள்தான் கிளம்பி விட்டனவா என்று யோசிக்கும்படி யிருக்கிறது—அவ்வளவு வேகத்தில் பாட்டு செல்லுகிறது.

இன்னொரு சித்திரம் மழை வருகிற நிலையைப் பற்றிக் கூறுகிறது,

"ஆழி மழைக்கண்ணா! ஒன்று நீகைகரவேல்
ஆழியுள்புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி
ஊழி முதல்வ னுருவம் போல் மெய்கறுத்து
பாழியந்தோளுடைப் பற்பநாபன் கையில்
ஆழிபோல் மினனி வலம்புரிபொல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்."

மின்னலையும், கறுத்த வானத்தையும், முழங்குகிற மேகத்தையும் சரம்போல விழுகிற மழையையும் நம்முன் எழுப்புகிறது இப்பாட்டு. இப்பாட்டைப் படிக்கிறபொழுது தாகூர் கீதாஞ்சலிக்கு என்மனம் விரைகிறது.

"என்னுடைய உள்ளம் வறண்டு போய்விட்டது. அதில் மழை பெய்து நிரம்ப நாட்கள் ஆகிவிட்டன. அடிவானமோ கோர சூன்னிய மாய் நிற்கிறது. அதைப் போர்த்த ஒரு மெல்லிய பஞ்சு மேகங் கூட இல்லை. எப்பொழுதாவது குளிர்ந்துவிடக்கூடிய தூற்றல் சின் னங்கள் கூடத் தெரியவில்லை. தங்களுடைய சீற்றமிகுந்த புயலை எழுப் புங்கள். அது மரணத்தைப் போல இருண்டு வந்தாலும் பாதகமில்லை. வானத்தில் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைக்கும் விசிறிப் போகும் படி உங்கள் மின்னல் சாட்டைகளை அவிழ்த்துவிட வேண்டும். உள்ளத்தை ஊடுருவி வேகவைக்கிறதாபத்தை தாங்கள், நீக்கிவைக்க வேண்டும். அது உள்ளத்தின் ஆசைகளை யெல்லாம் எரித்து விடும் போலிருக்கிறது. அருஞ்சினத்தால் அப்பன் அடிக்கிறபொழுதும் அழுத கண்ணீர் கடைக்கண்ணில் தேக்கி நின்று நோக்கும் அன்னையின் நோக்கேபோல் உங்கள் அருள்முகில் வரவேண்டும்." என்று உருக்கத்தோடு பாடுகிறார் வெங்காள நாட்டுக் கவி, இங்கே தாகூர் (Tagore) ஒரு கருத்தை உருவாக்கி நமக்குத் தந்துவிட்டார். படிப்போர்களின் கற்பனைக்கு அவர் ஒன்றும் மீதி வைக்கவில்லை. ஆண் டாளோ ஒரு தனி சிருஷ்டி செய்திருக்கிறாள். ஒரு சந்தர்ப்பத்தை சித்தரிக்கிற முறையிலே, வாசிப்போர்களின் கற்பனையைக் கிளறி விட்டு உட்பொருளை அவர்களே நாடும்படி செய்திருக்கிறாள். தன்னறி யாமலேயே உட்கருத்துக்கள் பாட்டுக்களில் குவிந்து விட்டன. தன் னறியாமலேயே ஆவேசத்தில் வருகிற பாட்டுக்களில்தான் கவிதையின் முதிர்ச்சியைக் காணலாம்.

மேலும் ஆண்டாள் கையாளுகிற உவமைகளெல்லாம் நம் கண்ணால் பார்க்கக்கூடியவைகள்தான். இந்த மண்ணிலும் மனத்திலும்தான் அவள் தெய்வ நிலை உணர்கிறாள். வேறு அவளுக்கு வேண்டாம். இந்த உலகமே போதும். இவ்வுலகம் அவன்சரீரமாயிற்றே. உள்ளம் உவந் தது. அவன் அருள் மழை கொட்டவேண்டும்: ஆத்ம சக்திக ளெல்லாம் கிளம்பி விட்டன: இருள் நீங்கி விட்டது: உலகத்தி லும் விடியற்காலம், உள்ளத்திலும் விடியிற்காலம்: என்ற கருத் துக்களெல்லாம் இத் திருப்பாவையில் துயின்று கொண்டிருக்கின்றன. தட்டியெழுப்பினால் அவைகள் பேசும்.

இவ்வமுததாரையைப் பருகுபவர்களுக்குக் காலையின் தூயகாட்சி யும், உலகம் படைப்புக்காலத்தில் காணப்படுகிற நூதன ஒளியும் அழகும் தோன்றும் என்பதில் நிழலாடுகிற சந்தேகங்கூட இல்லை என்று உலகங் கேட்கச் சாற்றிவிடலாம்.

ஸ்ரீ:

"வெள்ளியெழுந்தது."

[ஸ்ரீ. குருச்சி சே. ஸ்ரீநிவாஸ வேதாந்தாசாரியார், எம்.ஏ., எல். எல். பி.]

ஸ்ரீ ஆண்டாள் தமது திருப்பாவையில் "வெள்ளியெழுந்து வியாழமுறங்கிற்று", என்று பாடியிருக்கிருள். இங்கு "உங்களுக்கு நக்ஷத்திரமெல்லாம் வெள்ளியும் வியாழமுமாயிறே யிருப்பதென்ன" என்று ஸ்ரீ பெரிய வாச்சான் பிள்ளையின் விரிவுரை; "பரிசுத்தமான ஜ்ஞானமபிவ்ருத்தமாய், அஜ்ஞானம் தலை மடிந்தது," என்று ஸ்வாபதேச வ்யாக்யானம்; அப்போதைய நிகழ்ச்சி ஒன்றை ஸ்ரீ ஆண்டாள் இங்கு குறிப்பிடுவதாக வானநூல்வல்லுனர் மொழிவர். ஈண்டு வேறு ஒரு பொருளும் புலப்படுவதாக அடியேன் திருத் தந்தையார் வித்வான் குருச்சி ஸ்ரீ சேஷாத்திரியாசார்யஸ்வாமி கூறுவர்; அதாவது, ஸ்ரீ ஆண்டாள் மண்மிசை தோன்றியதே வெள்ளியின் ஓர் எழுச்சி போன்றது. ஏனெனின், அன்ருடம் பின்னிரவில் வெள்ளியின் எழுச்சியைப் பார்த்தவுடனேயே, நாட்டுப்புறங்களிலுள்ள இடையர், உழவர் முதலியோர் தங்கள் தங்கள் வேலையைச் செய்யத்தொடங்குவர். அப்படியே கடையருக்கும் கடைத்தேற்றத்தை அளிக்கக்கூடிய ஸ்ரீ ஆண்டாளின் இனிய பாசுரங்களை ஓதியவுடன் திருமால் வழிபாட்டில் எவரும் மிகுந்த ஊக்கம் காட்டி உழைப்பர். உருவத்தில் வியாழம் வெள்ளியைக் காட்டிலும் பெரியவராயிருந்தாலும், நில மகளுக்கு வெள்ளியைவிட எட்டாக் கையிலிருப்பதால் வெள்ளியைக் காட்டிலும் சிறியவராய்த் தோன்றுகிருர். மேலும், பெயர்ச்சிகளில் பல வீடுகளிலிருந்து நன்மை செய்வது வெள்ளியின் இயல்பு; வியாழமோ சில வீடுகளிலிருந்துதான் நன்மை செய்வர். அப்படியே பெரியாழ்வார் முதலியோர் ஸ்ரீ ஆண்டாளைக் காட்டிலும் பெரியவர்களாயிருந்தபோதிலும், "கூழாட்பட்டு நின்றீர்களை எங்கள் குழுவினில் புகுதலொட்டோம்", "மதியிலா மானிடங்காள்!". "வீண் வாது செய்வீர்", என்று இப்புடைகளிலே சிற்றறிவாளரிடத்தில் சிறிது சினம் காட்டுகின்றனர். ஸ்ரீ ஆண்டாளோ ஒரே கலப்பற்ற அருட்பெருக்காயிருக்கிருள். இது "எல்லே இளங்கிளியே" என்று தொடங்கும் அவளுடைய பாசுரத்தையும், அதற்கு முந்திய பத்துப்பாட்டுக்களையும் ஓதியவர்களுக்கு வெள்ளிடைமலை. "சில்லென்றழையேன் மின்" என்று சீறி விழும் பெரும் துயிலாளரையும், அவர் "வாயிற் கடைபற்றி பனித்தலை வீழ" நின்று மன்ருடி, அவர்களை இவள் எழுப்புகிருள். "அஜிதாஸ்ஸ்யாம", "சதம் ஜீவேம சரத;" என்றபடி ஸ்ரீ வேத புருஷன்

பொதுநல வேண்டுகோள்களை ஓதுவித்தாலும், பல "வைதிக பரமை காந்திகள்'' தங்களுடைய **தனி** வாழ்விலேயே நோக்குடையராய்த் தங்களைச் சிறியோர் தீண்ட விடுவதில்லை. ஸ்ரீ ஆண்டாளோ அப்படி யல்ல; "கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்'' என்பது இவள் பாசுரம். பொதுநலத்தையே இவள் கோரியவள். ஆழ்வார்களின் அருளைவிட இவளருள் மிகப் பெரிது. எனவே வெள்ளிபோன்ற இவ ளருள் மிளிரத் தொடங்கவே, வியாழம் போன்ற ஆழ்வார்களின் தனித் தகவும் உறங்குவதுபோல் ஆயிற்று.

மேலும், வெள்ளிதோறும் திருவேங்கடவன் நீராடுகிறான்; "நாடி நீ, **வேங்கடவற்கு** என்னை விதி'' என்ற இம்மாற்றம் நாம் கடவா வண்ணமே நல்கு,'' என்று இவளை முன்னிட்டுத் திருமாலின் திரு வருளைப் பெறப் பெரியோர் விரும்பியிருக்கின்றனர். ஆகவே, திருவேங்கடவனருளாம் நற்பகலுக்கு, இவள் அருள், வெள்ளி யெழுச்சிபோல், முற்படுகிறது.

"**கோ**தா'' என்றால், வட மொழியில், "சொல்லைக் கொடுப் பவள்'' "(திருமறைச்) சொல்லறிவித்தவள்'' என்று பொருள்; **திருப்பாவை** முதலியவைகளை நமக்கு அளித்த இவளே ஸ்ரீ கோதை. இவளுக்கு ஏற்ற துணைவன் ஸ்ரீ **கோ**பாலனே (அதாவது திருமறை யாம் மொழியைப் பாதுகாத்து வெளியிட்டு வளர்ப்பவன்.) ஆகை யால் தான் இவ்விருவரின் திருமண விழா கொண்டாடப்படுகிறது. "கோதை'' என்றால் "மாலை'' என்றும் பொருள்படும். இவளுடைய திருமொழிகள் கோதிலாக் கோதைகள், அதாவது மாசற்ற செஞ் சொல் மாலைகள். "கண்ணன் என்னும் கருந்தெய்வம் காட்சிப்பழ கிக் கிடப்பேனை''; "மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் வாழகில் லேன்''; "நெய்யுண்ணோம், பாலுண்ணோம்''; "செய்யாதன செய் யோம்'' முதலிய இவளுடைய திருமொழிகளே, இவளுடைய பாட்டுக் களின் உயர் நோக்கத்தை நன்கு அறிவிக்கின்றன. தமிழரைத் திரு மாலின் வழிபாட்டில் ஈடு படுத்தியது தான் ஸ்ரீகோதை முதலி யோரின் **கோதின்மை**. வட மொழியில் "சுக'' என்றால் கிளி என்று பொருள்; ஸ்ரீ கோதையின் வலக்கையில் இலங்கும் கிளி, ஸ்ரீ சுக மஹரிஷியைப்போல், இவளும் பிறவித்துறவி என்பதற்கு அறிகுறி. ஸ்ரீ ஜானகீ தேவியைக் குறித்துப் பாவலர் பிரானும் கம்பரின் அநுமன் கூறியதுபோல்; "உன் பெருந்தேவி.......................என் பெருந் தெய்வம்...'' என்று ஸ்ரீ ஆண்டாளைப் பற்றி என்றும் ஸ்ரீ ஆண்டவ னெதிரில் நாம் கூறுதலே தகும்.

மேலும், வட மறையில் "த்ரஷ்டவ்யோ......நிதித்யாஸிதவ்ய:'' "தேவம் மத்வா தீரோ ஹர்ஷ சோகௌ ஜஹாதி'' என்ற

பக்தியோகக் கட்டளைகளை வெளிப்படுத்தியவர்கள் மாபெரும் மறைய வர்களாகிய ஸ்ரீமைத்ரேயியாம் பெரியாளும் ஸ்ரீ நசிகேதஸாம் இளம் குமரனும் ஆவர்.

"ஓங்கார பஞ்ஜர சுகீ
முபநிஷ துத்யானகேளி கலகண்டீம் |
ஆகம விபின மயூரீ
மார்யா மந்தர் விபாவயே கௌரீம்॥"

என்று ஸ்ரீ கௌரி வணங்கப்படுகிறுள். இது ஸ்ரீ கோதைக்கு இரண்டு வழிகளில் பொருந்தும்; பெரிய பிராட்டியாரே ஸ்ரீ கோதை யாகத் தோன்றிய படியால், இவளே மறையின் உட் பொருள். மேலும் அம் மறையை இவள் நமக்கும் இன் தமிழால் உணர்த்துகிறுள். எனவே "சோலைக்கிளி"; "மயில்"; "மெல்லியலாள்", என்றிப் புடைகளில் நம் பெரியோர் ஸ்ரீ கோதையைப் புகழ்ந்திருக்கின்றனர்.

"கோவிந்த......ரக்ஷமாம் சரணுகதாம்" என்று ப்ரபத்தி செய்த ஸ்ரீ த்ரௌபதியின் வரலாற்றுல் ப்ரபத்தியின் நுட்பங்கள் வெளியா யின. இந்தத் த்ரௌபதியின் மங்கள ஸூத்ரத்தைக் காக்கவே, பாண்டவரிடத்தில் கண்ணன் பெரும் பொறுமை காட்டியதாகப் பெரி யார் ஒருவர் பகர்கிறுர். கோதையோ, மைத்ரேயீ ஸ்ரீத்ரௌபதி இவர்களைப்போல் பெண்பால்; **திருப்பாவையைப்** பாடும்போது அவள் ஸ்ரீ நசிகேதஸைக் காட்டிலும் மிகவும் இளையவள். "தூமலர் தூவித்தொழுது", "உன் தன்னேடுற்றேமே யாவோம்", என்றிப் படிப் பாடியிருக்கிற ஸ்ரீ கோதையின் திருமொழிகள் பக்தருக்கும் ப்ரபன்னர் முதலியோருக்கும் உற்ற "உண்ணும் சோறும், பருகு நீரும்". ஸ்ரீ கோதை தோன்றியிராவிடில், தமிழ் மறைமுழுதும், ஆழ்வார்களாம் வியாழம் அளித்த பரிசாய் இருந்திருக்கும். வியாழம் ஆண்கோள் என்றும் வெள்ளி பெண்கோள் என்றும் கூறுப. திருமக ளுக்கு "பார்கவீ" என்ற திருநாமமும் உண்டு. பெண்களுக்கு இரக்கம் மிகுதியல்லவா? எனவே ஸ்ரீ கோதையாம் "வெள்ளி யெழுந்தது". இதன் பிறகே, ஸ்ரீஎம்பெருமானுராம் பகலவனும் நம் மரபுவானில் தோன்றினுர்.

ஆனுல் "பெரும்பூதூர் மாமுனிக்குப் **பின்** ஆனுள் வாழியே!" என்று ஸ்ரீ கோதை வாழ்த்தப்பட்டு வருகிறுள்; இதற்கு அடி, அவள் விரும்பியபடி ஏராளமான அக்காரவடிசிலைப் பெருமாளுக்கு எம்பெரு மானுர் அமுது செய்வித்தது.

"உந்து மதகளிற்றன்" என்ற பாசுரத்தில் எம்பெருமானுருடைய தனி ஈடுபாடும் இத்துடன் சேர்க்கப் படலாம். இங்கு வேறு ஒன்றை யும் குறிப்பிடலாம் என்று அடியேன் திருத்தந்தை கூறுவர். அதா

வது, "நாய மாத்மா ப்ரவசனேன லப்ய :......" முதலிய வட மறை மொழிகளை மேலெழுந்தவாறு பார்த்தால், திருமறையைக் கேட்டல், அதை ஆராய்தல், திருமாலை உன்னுதல், முதலியன பயன் தரமாட்டா என்று தோன்றும்; பயனற்றவைகளை எவர்தான் பாராட்டுவர்? எனவே, அதைப் பாராட்டுவாரில்லாமல் மறையே மறைந்தும் விட லாம். ஆனால், "ஏரணி கீர்த்தி இராமாநுசன் இன்னுரை சேர் **சீர்**" இது முதலிய விடங்களில் தான் நன்கு வெளியாகிறது. திருமாலை நேரில் காண்பது போன்ற ஒரு நிலைமையைத்தன் முயற்சியால் ஒரு அடியான் அடையாவிடில், அவனுடைய கேள்வி, கல்வி, முதலியன வீணே. "கற்றதனால் ஆயபயன் என் கொல், வாலறிவன் நற்றாள் தொழா அர் எனின்?" 'பேருக்கு'த் திருமாலைத் தொழுது விட்டுச் செல்பவன் மெய்யடியானல்ல; ஆனால் இடையறாது அவனை உன்னிப் பேரன்பு என்னும் வன்கயிற்றால் அத்திருமாலை இறுகக்கட்டி, ஆட் படுத்தி, இவ்வடியானுடைய வேண்டுகோட்களை நிறைவேற்றாத வரை யில், எம்பெருமான் தன்னையே, "கடன் பட்டார் நெஞ்சம் போலும் கலங்"கும்படி எவன் செய்கிறானோ, அவனே மெய்யடியான் என்றுஎம் பெருமானார் திருவுள்ளம். இதை ஸ்ரீத்ரௌபதி செய்ததாக அப்பனே, "கோவிந்தேதி யதாக்ரந்தத் க்ருஷ்ணா மாம் தூரவாஸி நம் | ருணம் ப்ரவ்ருத்த மிவ மே ஹ்ருதயாந் நாபஸர்ப்பதி" என்று ஒப்புக் கொண்டிருக்கிறான். இப்படிச் செய்யாதார் வீணர் என்று மறை காட்டுகிறது. இதுதான் ஸ்ரீ கோதையின் கொள்கை. "க்ரியாவானேஷ ப்ரஹ்மவிதாம் வரிஷ்ட்ட:" முதலிய எம்பெரு மானாரின் வெற்றி முழக்கமெல்லாம், ஸ்ரீ கோதையின் "வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்குச் செய்யும் கிரிசைகள் கேளீரோ!" முதலிய திருமொழிகளின் எதிரொலியே.

'முயற்சி திருவினை ஆக்கும்' என்பது பொதுமறை; பக்தி அல்லது ப்ரபத்தி ஆகிய பெரும் முயற்சியே, "செய்ய தாமரைக் கண்ண"னும் "திருவின் திரு"வினை ஆக்கும் என்பது எம்பெருமானா ரின் தனி உரை. இதற்கேற்ப **ஸ்ரீ** கோதையின் பின்வரும் செஞ் சொற் கள் அமைந்திருக்கின்றன:—

"**நோற்றுச்** சுவர்க்கம் புகுகின்ற வம்மனாய்!", "**போற்றப்** பறைதரும் புண்ணியனார்", "**பாடிப்** பறை கொண்டு யாம் பெருசம்மானம்"; "உன் பொற்றாமரையடியே **போற்றும்** பொருள் கேளாய்!"; "**ஏத்திப்** பறை கொள்வான் இன்று யாம் வந் தோம் இரங்கு!". ஸ்ரீ கோதையின் துறக்கத்தில்—அது இந்திர வுலகமானாலும் சரி, திருவைகுந்தமாகிய உபேந்த்ரவுலகமானாலும் சரி—**நோற்றே** புகுதல் வேண்டும். இப்பெரு முயற்சியால்

அதைச் செய்வோருக்கு அகம்பாவம் கிளம்பாமலிருக்க, "இற்றைப் பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா! எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு உற்றோமே யாவோம்; **உனக்கே நாம் ஆட்செய்வோம்** மற்றை நங்காமங்கள் மாற்று!" என்ற சொற்களில் இவளே அருந்திய ஓர் அருமருந்தை நமக்கும் அளித்திருக்கிறாள். "வீடு மின்" என்ற திருவாய்மொழியில் திருமாறன் கட்டளை யிட்டபடி, ஸ்ரீ தேசிகனும் தூப்புல் வள்ளலார், "எத்திசையுமுழன்றோடி இளைத்து விழும் காகம்போல்", பெருந்தேவித்தாயார் பேரருளாளன் திருவடிகளில் தம்முயிரை "வீடுசெய்" கையில் (அதாவது, தூமலர் தூவித் தொழுகையில், திருமாலின் திருவடிகளையே விரும்பும் தம்முடைய எல்லா பரத்தையும் அவன் திருவடிகளில் அர்ப்பணம் செய்கையில்) "ஸ்வதத்த ஸ்வதியா ஸ்வார்த்தம் ஸ்வஸ்மின் ந்யஸஸி மாம் ஸ்வயம்" என்று இறைஞ்சுகிறார். எல்லாம் திருமாலுடையதே, "நீர் நுமது என்றிவை வேர்முதல் மாய்த்திறை பற்றல்", ஆழ்வார் கூறியபடி, இது தான்; இதுவே திருமாலின் மெய்யடியாருடைய **தற்செயலழிந்ததகைமை.** இதற்கு வழிகாட்டிய ஸ்ரீ கோதையின் திருவடிகளில் நன்றி பாராட்டுவான் வேண்டி, ஸ்ரீ தூப்புல் வள்ளலார் "கருணயா கமலா மிவான்யாம் **கோதா** மநந்ய சரண: சரணம் ப்ரபத்யே" என்று அடைக்கலம் புகுகிறார்.

அப்பனுக்குப் பூத்தொண்டாற்றும் பரபரப்பில் "அணிபுதுவைப் பைங் கமலத்தண் தெரியல் **பட்டர் பிரான்,**" "தத்த்வமஸி," "விதுஷோ யஞஸ்ய" முதலிய மறைமொழிகளைச் சிறிது மறந்தார் போலும். இவள் சூடிக் கொடுத்த பூமாலையையே விரும்பிய வட பெரும் கோயிலுடையானும் இவளும் சேர்ந்து அம் மொழிகளின் நுட்பத்தைப் பெரியாழ்வாருக்கு நினைப்பூட்ட வேண்டியிருந்தது. திருமாலும் "பெண்ணுடைணாகிய பெம்மா" னுதலின், திருமகளாம் இவளுடைய இன்பத்தையே தன் பேறுகக் கொண்டவன்; எனினும் சிறு குழவியாம் இவளைத் திருத்துழாய் அடியில் "பெற்று எடுத்த" படியால், பெரியாழ்வார் இவள் மலர் மகளின் ஒருமுழுத் தோற்றம் என்பதை மறந்திருக்கலாம்; ஆனுல் பொதுவாக எவர் எந்த இன்பத்தை நுகர்னுலும், அதன் பயன் அவ்வவ் உயிர்களையும் உடலாக உடைய திருமாலையே போய்ச் சேருகிறது என்பதையும், தனித்து, ஐந்தாண்டில் **திருப்பாவை**யைப் பாடியருளிய இவ்வணங்கு அப்பூமாலைகளை அணியும்போதே, அதன் இன்பத்தை, இவளறிய, அடைந்தவன் இவளுளிலங்கிய வட பெரும் கோயிலுடையானே—திருவேங்கடம் வடக்கே உள்ள பெரும் கோயிலாகையால், திருவேங்கடவனும் ஒரு "வட (வடக்கு, ஆலிலை) பெரும் கோயிலுடையான்"—என்பதையும் பெரி

யாழ்வார் மறந்ததுதான் அவர் பரபரப்பின் விந்தை. இவளும்வடபெருங் கோயிலுடையானும் ஒன்றே. இவள் "வாசஞ் செய் பூங்குழலா" ளாத லின், இவள் சூடிக் களைந்த பூமாலையை வருவித்து அணிந்து திருமால் மகிழ்ந்தான். திருமாலிருஞ் சோலையில் ம்லேச்சரிடையே அழகர் திருமு கம் காட்டிக் கொண்டிருக்கும் நீர்மையை நம்மாழ்வாரும் நம்பிள்ளையும் புகழ்கின்றனர். ஒருக்கால், ம்லேச்சரிடத்து பகவத் பக்தியிருந்தாலும் இருக்கலாம்; ஆனல் "ஐம்பெரும் பாதகர்க"ளிடையே அவன் "மாசூ ணுச்சுடர் உடம்பு," "திருவிளையாடு திண் தோள்" முதலியன திகழ் வதை ஸ்ரீகோதை தான் குறிப்பால் உணர்த்தியிருக்கிருள். பாரதப் போர்க்களத்தில் அப்பனைச் சுற்றி ஐம்பெரும் பாதகங்களைச் செய்தவர் பலர் சண்டையிட்டாலும், அவன் சுடருடம்பின் தனியழகு ஸ்ரீ பீஷ்மர் முதலியோரின் கண்களையும் உள்ளங்களையும் கவர்ந்தது, "விபவ" த்திற்கு "அர்ச்சை" கீழ்ப்பட்டதல்ல. "ஐம்பெரும் பாதகர் காள்!" என்ற விவள் சொல்லிலுள்ள பொருட் சுவையும், தென் மொழி வடமொழிப் புலமையும், இதுபோன்ற இவள் திருமொழி களும், இவளே ஸ்ரீ கோதை யென்று இவளுக்கு முடிசூட்டுகின்றன.

திருப்பாவை முதற் பாசுரத்திலேயே ஆரண நூல்களின் ஆழ் பொருள்கள் மிகச் சுருக்கமாய் விளக்கப்பட்டிருக்கின்றன; அவை யாவன:— திருமாலே முழு முதற் பொருள்; மற்றப் பொருள் களெல்லாம் அவனுடைய தனி உடம்பு; அக்"கார்மேனிச் செங் கண்"ணே தீயோர்களுக்குக் கதிரவனைப் போலும் நல்லோர்களுக்கு மதியைப் போலும் இருக்கும் "உபயலிங்கமான பரப்ரஹ்மம்," அவனே "கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன், ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ் சிங்கம்"; (நேரிலும், வர்ஷதேவன் முதலி யோர் வாயிலாகவும், "குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்" முதலிய) எல்லாப் பறைகளையும் தருபவன் அவனே; அவனுக்குப் படிவதே சீர், அவனே திரு வைகுந்தத்தில் திகழும் ப்ராப்யமான பேரின்பம் என்பவை முதலியன. இவையும் ஸ்ரீ கோதையின் நல் லுணர்ச்சிகளும் மற்றைப் பாசுரங்களிலும் **தையொரு திங்கட் பாமாலை**யிலும் விரித்துக் கூறப்பட்டிருக்கின்றன.

ஆராய ஆராய, இன்பம் பெருக்குவது இவள் அருண்மொழிகளின் தனிச்சிறப்பு. ஆகவே, "ஸக்ருதேவ" முதலிய திருவாணைகளை மீறி, இவள் திருவடிகளில், பகவான் ஸ்ரீ கூரத்தாழ்வானின் திருமிகு புதல் வராகிய ஸ்ரீ பராசர பட்டர்பிரான் மீண்டும் மீண்டும் அடைக்கலம் புக்கு, "கோதா தஸ்யை நம இதமிதம் பூய ஏவாஸ்துபூய:" என்று கூறுகிருர்.

"ஸர்வ மஷ்டாக்ஷராந்தஸ்த்தம்"; பக்தி, ப்ரபத்தி முதலிய வெல்லாம் திருவெட்டெழுத்தில் அடங்கியிருக்கிறது; "நம:" என்பது அத் திருவெட்டெழுத்தின் உயிர்போன்றது; எனவே "நம:" என்ருல் "அடைக்கலம் புகுகிறேன்" என்று, இங்கு, தனிப்பொருள்; ப்ரபன்ன ச்ரேஷ்டரான திருக்கண்ணமங்கையாண்டானும் ஸ்ரீ ஆண்டாளின் "தூய நற்பாதம் துணை நமக்கே" என்று துணிந்தார். "வண் புதுவை நகர்க்கோதை மலர்ப்பதங்கள் (மலர்போன்றழகிய செஞ் சொற்களும், திருவடிகளும்) வாழியே!".

ஸ்ரீ:

கோதையாரும் ஸ்ரீபாஞ்சசன்னியமும்.

[ஸ்ரீ. வியாகரண வித்யாப்ரவீணர் பாதூர் புராணம் ராகவாசாரியார்.]

"உண்பது சொல்லில் உலகளந்தான் வாயமுதம்
கண்படை கொள்ளில் கடல் வண்ணன் கைத்தலத்தே
பெண்படையார் உன்மேல் பெரும் பூசல் சாற்றுகின்ருர்
பண்பல செய்கின்ருய் பாஞ்ச சன்னியமே."

பகவதனுபவம் முதிர்ந்த தத்வதர்சினியான கோதையார் ஸர்வ வஸ்துவிலும் பகவத் ஸம்பந்தம் பிரிக்க வொண்ணு நிலேயுடைத்து என்பதை உணர்ந்து மேகம் முதலிய அவ்வோ வஸ்துக்களேயும் தனக்கு பகவத் ஸம்பந்தம் கிட்டுகைக்காக, துதிக்கலாயினள். பின்பு தாம் கோரிய ப்ராப்யதசாபந்நபகவத் ஸம்பந்தம் இவைகட்கில்லாமை கண்டு அச்சம்பந்த முற்றவைகளில் சிறந்த பாஞ்ச சன்னியத்தை 'கர்ப்பூரம் நாறுமோ' என்று தொடங்கித் துதி செய்கிருள். ஸர்வேச்வரனுக்கு 𑌅𑌖𑌿𑌲𑌹𑍇𑌯𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌨𑍀𑌕𑌤𑍍𑌵𑌂, 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑍈𑌕𑌤𑌾𑌨𑌤𑍍𑌵𑌂 என்று இருலிங்கங்கள் உண்டு, இவ்விரண்டை யும்முறையே குற்றம் தவிர்க்கும் தன்மை, கல்யாணகுணபூர்த்தியென்று பெரியோர் பேசுவர். இவற்றையே மறையும் '𑌅𑌪𑌹𑌤𑌪𑌾𑌪𑍍𑌮𑌾' என்று தொடங்கி '𑌸𑌤𑍍𑌯-𑌕𑌾𑌮𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑌂' என்று முறையே அறையா நிற்கும். இவ்விலிங்கத் துவயத்தின் அவதாரமே போன்றவை 𑌸𑍁தர்சன பாஞ்சசன்னியங்கள், சுதர்சனம் ஹேய நிவர்த்தகம் என்பது '𑌬𑌹𑌿𑌰𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑌮𑍋𑌜𑍍𑌯𑍋𑌤𑌿' என்ற சுலோகத்தில் ஸ்பஷ்டம், பாஞ்ச சன்னியம் பகவதனுபவ ரஸிகோத்தமமாய் குண பூர்ணமாயிற்று. பகவத் அதர ரஸாஸ்வாத காமுகையான கோதையார் எக்காலத்தும் அப்பேறு பெற்றுடைய பாஞ்ச சன்னியத்தைத் துதிக்க முற்பட்டது மிக்க உசிதமிறே.

'பாஞ்ச சன்னியமே நீ உணவு கொள்வது உலகளந்தான் வாயமுதம். கண் வளர்வது நீலக்கடல் நிறத்த அப்பரமனின் கைத்தலத்தே.

இத்தகைச் சிறப்புற்ற நீ எம்போன்ற பெண்களுக்கு அப்பகவததர ரஸம் கிடைக்கவொண்ணுதபடி ஸர்வதா ஆஸ்வாதம் செய்வது ஸஹிக்க முடியாததாகும், என்றது இப்பாசுரத்தின் தூலப் பொருள்,

'உண்பது சொல்லில் உலகளந்தான் வாயமுதம்' சர்வேச்வரன் உகந்த அன்னத்தின் சேஷமே பாகவதபோக்யான்னமாகும். அன்றிக்கே பாகவத சித்தத்துக்கு உற்ற உணவு பகவத்வதனுமிருதமான கீதையாகும்.

'கண்படை கொள்ளில் கடல் வண்ணன் கைத்தலத்தே' பாகவ தோத்தமன் 'உவிக்ஷா உஹீத வூாணாஃ' என்றபடியே தன் இந்திரியக் குழாத்துக்கு இலக்காகக் கொள்ளுமது கடல் நிறத்த கண்ணனுருவமே யாம். இவ்வீரடியானும் 'வாசாஂஸி யொஷெஷாவிஷெஷாஃவாசாஂஸி' என்ற பாகவத நிலையுணர்த்தப் பெற்றது, மற்றையடிகளால் 'ஸகூஸ்ரீாஃ-நஹஂஜீத' என்றபடியே ஹமவஃநாஹவம் தன்னேடொக்க ஸஹுாஃயஹொமூ மாம்படி செய்வது ஹாமவதகூுதூ மென்பது ஸூசிதம். இங்கு 'உலகளந்தான்' என்பதால் ஸர்வேச்வரன் உலகளந்த உருவத்தாலுத்தமனுயினன் என்ற அர்த்தத்தை ஸூசிக்கிருள். 'உலகளந்த உத்தமன்' என்ருறிறே இவர். 'யஸாக்ஷராதீதொஃஹஂகூஷரா ஃவி வொகூஃ। அதொஃஹிலொகெவெஷெவ வூயிதஃ வுாஷொகூஃ' என்ற கீதா வசனமும் இவ்வுலகளந்த நிலைபற்றியே உத்தமத்துவம் என்ற பொருளுணர்த்தும் என்பது ஆண்டாள் துணிபு போலும். 'விஷாவிலவகுஉெ தெயா நிஃயெவஃ' விவகுஊணஹெ யா' யஹெூாஷாஂதிஷா' என்று வேத புருஷனும் உலகளந்தான் பெருமையை யனுபவித்துப் பேசுவது குறிக் கொளத்தக்கது. மேலும் 'பொலிக பொலிக' என்று தொடங்கி எம்பெருமானுரைக் கண்ட ஸ்ரீ சடகோபனைப் போல் கோதையாரும் ஹாவிஸ்ரீஜெஸிகஃ ஸ்வரூப ஸாக்ஷாத்காரம் பண்ணி அதன் பயனுய் 'கர்ப்பூரம் நாறுமோ' என்று தொடங்கிப்பேசலுற்ருள் என்பது சான்ருேர் துணிபு. 'அசுரர்நடலைப் பட முழங்கும் தோற்றத்தாய்' என்ற ஆண்டாள் ஸூக்தியும் 'விதூாஷிநீ விவாயவெஸிவாஷியி நீநாஃ' வாஜஜநூகுஉெண' ஹாஃதஂ ஈஜநாயஃ' என்ற ஸ்ரீ தேசிகன் ஸ்ரீ ஸூக்தியும் இவ் வர்த்தத்துக்கு அனுகுணமாய் நிற்றலைக் காணற் பாலது.

ஹொஃாஷஷெஷாஸயஂ கூஷிஃகூஂ
வூாவக்ஷாணொ ஈாவவொ வஜஜா ।
ஸஜீஸ்ரீஉவிஷா விஷாஃாஹொஃ
ஜெயஷாஜெஸிகூுதாஊஃரெண ॥

ஸ்ரீ:

ஆண்டாள் திருமணம்.

காப்பு.

சீரார்நல வாண்டாள்நலச் சீர்மாமணம் சொல்ல
சீரார்நலத் தூப்புல்நகர் சீர்தேசிகன் தாளே
சீரார்நல மேன்மையுடன் சீராகவே வாழ்த்தி
சீரார்நலப் பத்தியுடன் சீராகவே தொழுவாம்.

நூல்.

சீரார்விலிப் புத்தூர்நகர் சீர்விண்டுவின் சித்தர்
சீராருயர் திருநந்தனச் சீர்குல்லேயி னடியில்
சீரார்திரு பூமாமகள் சீரார்நல வடிவாய்
ஏரார்நல வழகேகொடு வின்பாமென வேவோர் 1

சீரேயுயர் ஞானம்மிகு சீரார்சிசு வேயாய்
சீரேபெற விளங்கும்மதை சீராகவே தெரிந்தே
சீரேபெற நேரேயதை சீராகவே வளர்த்தார்
சீரேய்நலக் கோதாவெனச் சீர்நாமமே யிட்டார். 2

சீராருயர் நளவாடியில் திருப்பூரமே பிறந்தார்
ஏரார்நல யோகத்தின ளிவளேயென வுணர்ந்தார்
பேரார்மிடி யன்மாநிதி பெற்ருனென மகிழ்ந்தார்
ஏரார்வர கவியாம்வண மின்கல்விபோ தித்தார். 3

ஏரார்திரு மாலுக்கென வேறேபெறத் தொடுத்தே
ஏரார்திருப் பூக்கூடையி லிவர்வைத்திடு மாலே
ஏரேபெற வெடுத்தேயவ ளெழிலாருயர் குழன்மேல்
ஏரேபெற வணிந்தாளவ ரில்லாதபோ தொருநாள் 4

சீராய்ப்பினர்ப் பூண்டேபணி சீர்ப்பட்டுடுத் தன்னுள்
சீரார்நலக் கண்ணுடியே சீராகவே கண்டே
சீராருயர் சீரொப்பனே சீர்சேர்திரு மாலே
சீராகவே வுகக்கும்மென சீர்நேருட னேர்ந்து 5

சீராகவே களைந்தேயதை சீர்கூடையில் வைத்தாள்
சீராரவள் தந்தையுமே சீர்நேரவண் வந்தே
சீரார்திரு மாலுக்கதை தேர்ந்தேகொடு போவான்
சீராரதை சோதிக்கவே சீர்கேசமே கண்டார். 6

சீர்மாதினை யழைத்தேயவர் சீராகவே கேட்டார்
சீர்சேர்நல மாதும்முயர் செய்கைதனைச் சொற்றாள்
சீர்சேரது வுதவாதென சீர்மாலையே தொடுத்தார்
சீர்சேரதை சீரேபெற திருமால்தனக் கிட்டார். 7

சீர்மாலுமே நீர்சாத்தின சீர்மாலையில் மணமே
சீர்நேரிலை சீராருயர் சீரார்மக ளணிந்த
சீர்மாலையே தாரும்மென சீர்மாலுமே பணிக்க
சீர்நேரவ ரவ்வண்ணமே செய்தேயருள் பெற்றார். 8

தூயள்ளவ ளதனாலுயர் சூடிக்கொடுத் தாளாம்
தூயப்பெரு நாமந்தனைத் தொடர்ந்தேயுறப் பெற்றாள்
தூயள்ளவள் நாடோறுமே சொலும்பத்தியி லுயர்ந்தே
தூயப்பெருங் கண்ணன்றனைத் தொடர்ந்தேமணம் புரிவான் 9

சீர்மார்கழி நீராடியும் சீர்நோன்பினை நோற்றும்
சீர்காமனைத் தைத்திங்களில் சீரேபெறத் தொழுதும்
சீர்சிற்றிலைச் சிதையேலெனச் சீர்கண்ணனைத் துதித்தும்
சீர்பட்டினை பணித்தேயருள் திருமாலெனக் கேட்டும் 10

சீரார்நலத் திருக்கூடலே சீரேபெற விழைத்தும்
சீரார்நலக் குயிற்றாதினைச் சீராகவே விடுத்தும்
ஏரார்நல வுயர்வார்கனா வெழிலேபெறக் கண்டும்
சீரார்நலச் சீர்நாரணன் சீர்சங்கினைப் புகழ்ந்தும் 11

சீரார்நல மேகம்மதைச் சீர்தூதென விடுத்தும்
சீரார்நலத் திருமாலிருஞ் சீர்சோலையே யடைந்தே
சீரார்நலச் சரண்சாற்றவே சீர்தாமரை மலரை
சீரார்நலம் வேண்டியவண் சேர்சீர்மலர் நலமார் 12

சீரார்குயில் சீரார்மயில் சீரார்மழை கடலே
சீரார்நலம் கேட்டேயுயர் சீரங்கனை யுகந்தும்
சீராருய ரவன்றன்னையே சீரார்மணஞ் செயவே
சீராருயிர்த் தோழித்தனை சீராரவ னுறையும் 13

சீராரிடந் தனிலேதனைச் சீரேபெற வுய்ப்ப
சீராகவே கேட்டும்முயர் சீராயவ னணியும்
சீரார்நலப் பொருள்கொண்டுமே சீரார்நல வவலம்
சீரார்தரத் தணிமின்னென சீராகவே வடுத்தும் 14

சீரேபெற வவனேயுறை சீராரிடம் வினவி
சீரேபெற வவன்சேரிடம் சீராருயர் விருந்தை
சீரேய்வன மெனவேமொழி சீர்வார்த்தையைக் கேட்டே
சீரேபெற வவன்றன்னையே சீர்நேருடன் நாட 15

சீரார்நலக் கருத்துக்கொளும் சீராருயர் மகளின்
சீராரெணம் நற்றந்தையும் சீராகவே வோர்ந்து
சீராகவே தன்புத்ரியை சீரங்கமே கொடுபோய்
சீரார்திரு மணமேசெய சீராகவே வெணினர். 16

சீராகவே மன்னுதனும் சீர்சித்தரின் கருத்தை
சீராகவே வோர்ந்தேயுயர் சீர்தொண்டரை யேவ
சீராகவே நற்கோதையை சீரேபெறக் கொணர
சீராகவே வவர்தாமுமே சீராருயர் வரிசை 17

சீர்சேர்விலிப் புத்தூர் நகர் சீரேபெற வனுப்ப
சீர்சேருயர் சீர்சித்தரும் சீர்புத்ரியைப் பலக்கில்
சீர்நேருட னழைத்துச்செல சீரங்கமே மேவி
சீர்நேருடன் விருதேயுயர் சீர்சின்னமே வூத 18

சீரார்நலக் கல்யாணமார் சீர்மண்டப மிருந்து
சீராருயர் நற்பட்டினைச் சீரேபெற வுடுத்து
சீராகவே திருநெற்றியில் சீர்மாமணம் கமழும்
சீரார்தரு திலகம்முயர் சீரேபெறத் தரித்து 19

சீரார்நல மணமாலையே சீரேபெறத் தரித்து
சீராருய ரரங்கார்மனர் சீர்கைத்தலம் பற்ற
சீர்வாத்தியம் முழங்கார்தர சீர்தீவலம் செய்ய
சீராகவே நலவம்மியே சீராயவள் மிதிக்க 20

சீராகவே பொரிநன்முகம் சீரேபெறத் தட்ட
சீராகவே வுயர்மஞ்சனம் சீரேபெற வாட்ட
சீராகவே விபவத்தொடு சீர்மாமணம் செயவே
சீராகவே நற்கோதையும் சீர்வாழ்வினை யடைந்தாள். 21

சீராகவே நற்சித்தரும் சீரேபெற வுலகில்
சீரார்பெரி யாழ்வாரென சீர்நாமமே பெற்ஞர்
சீராகவே கோதையுமே சீரேபெற வாண்டாள்
சீரார்திரு நாமந்தனை சீரேபெறப் பெற்ருள். 22

சீராகவே நற்பூமியும் சீரேபெறத் தமிழில்
சீராகவே சிந்தாமணி சீர்கோவலன் சொற்ருன்
சீராகவே நற்கோதையின் சீரார்திரு மணத்தை
சீராகவே வன்னுளுயர் சீர்பேரருள் பெறுவான். 23

ஸ்ரீ அழகியசிங்கர் அநுக்ரஹித்த ஸ்ரீமுகம்.

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே ஶ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

நமோ ராமாநுஜார்யாய தஸ்மை நிஸ்ஸீமதேஜஸே ।
விஶ்வத்ராணாய யஸ்யாஸீத் அவதாரோ மஹீதலே ॥ 1॥

பஞ்சாஶம் யஸ்ய மாஸாந் ஸுதேபவிஹாநா ஸ்ருஸ்ய ப்ரதாரோத்பிக:
ப்ராப்த: ஶ்ரீபாதுகாத்வம் ரவிதபாநு ஸக்த ப்ரதிஷ்டாபநம் ।
ஶய்வா ஆஷ்திதாஜ்ஞாஜ்ஞ ஶிபிகா ஸ்ருத்ரஞ்ஜி பாரோ-
ஞ்சாஹீநி யயௌ பாதுஸ்த்ரு விஜயீ கமலாடப்ஸிம்ஹாஸநம் ॥ 2॥

க்ருஸீத்யாஸஸ்யவீஷா ஶாகமாநியதகம் பாஞ்ஜீகஞ்சிராத்தி:
ப்ரஹ்மாதஸ்யாநுபாத: ப்ரயிததரதப: ப்ராகு ணீபர்ணஶாரி: ।
ப்ராஜ்ஞாநாம் யஸ்ய ராஜ்ஞாம் பதவிநதி க்ருதாமேஷ பணோவத்தேஶாக
கமைஷேஶ்யர்யாஷ ஹோமாநஶித ஸமயிகாமேஷ திக்வ்யாததாஜ 3॥

ஸ்ரீ ராமாநுஜ ஸம்ப்ரதாய பதவீஹாஜாம் பதாப்ஜஸ்துதி-
ஶ்ரீமத்வைஷ்ணவபாதுஹ்ருதாம் மாணஹ்ருதாம் ஸிம்ஹாஸநஸ்யாயிநாம் ।
கல்யாணகபமாவேயிவாம்ஸமதாமும் ஶ்ரீமந்ருஸிம்ஹாஜ்ஞயா
ப்ராஜம் பண்ஶடகோப ஸம்யமி யராயெளரேய தீமஹி ॥ 4॥

ஹாடகாநாமஹாஸ:ஸணிவதி ஸணிதேபர்மமயேயம் கணாத-
வ்யாஹாரப்ராணநாஸீ கவிமதஸமம் நமர் யமர்மமா நாம் ।
யோऽஸௌ ஶ்ரீவண்ஶடாரி ஜகதி விஜயதே கிஞ்ச வேதாந்தயுக்மா-
சார்யோ வேதமார்க்கப்ரதிஷ்டிஜநகுரு: ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ர: 5॥

ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ ஸந்நிதியில் 41வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தரான ஸ்ரீமத்வேதமார்க்கப்ரதிஷ்டாபநாசார்ய பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்ய ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரோபயவேதாந்தாசார்ய ஸ்ரீபகவத்ராமாநுஜஸித்தாந்தநிர்தாரணஸார்வபௌம-ஸ்ரீவண்

ஸம்ரக்ஷண ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ ஸம்ரக்ஷணஸூரி 'உபாஸநாஶேஷாணாம் ஸாயுஜ்யநாம ய:' என்கிறபடியே நிரவதிகலக்ஷ்மீந்ருஸிம்ஹ பக்திபரிதரான நம்முடைய **பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலை அய்யங்காருக்கு—**

நிஶ்யாஸஸ்தீர்த்தவர் ஶாயாஸ்யநவஸிஷ்டம் ஜ்ஞானவார்ஷிம் வஸிஷ்டாம்
வார்த்தா நிக்ருத்தாணி ஶாஸ்த்ர நவிலஸத்வயந்தா நாயிவ த்ருஷ்ணு ஹரேஷ: ।
உத்யத்ஸ்ருங்கார்த்தநாஹ்வானதி: வரிவயவிகஸத்தாண்டீகருபாஜா:
ஸ்ரீமல்லக்ஷ்மீந்ருஸிம்ஹப்ரஸ்யஶாகாரணாவஷ்ய வஷ்ணார்: கடாக்ஷா: ॥

ஸந்தானஸம்பதம் லக்ஷ்மீஶாயாரோக்ய வர்த்திகாம் ।
ஸ்ரீந்ருஸிம்ஹபதத்வந்த்வம் உத்யாதத்வந்த்வமைவ ஹவ ॥

இத்யாத்யுக்தப்ரகாரேண இதோऽப்யதிகாயுராரோக்யைஶ்வர்ய- யஶோபிவ்ருத்திகள் உண்டாகும்படி அநுக்ரஹித்து அனுப்பிய ஶாஸன ஶாஸந ஸ்ரீமுகம்.

ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனு ஸந்நிதி நித்ய ததீயாராதந ஸமாஶ்ரயணாதி- காலக்ஷேபாதிஶயங்களும் ஸ்ரீமல்லக்ஷ்மீந்ருஸிம்ஹ நித்யாராதநாதிகளும் ஸ்ரீரெங்கம் தெசாவதாரஸன்னிதியில் ஸர்வமாக நடந்துகொண்டு வருகிறது.

பரமனைப்பாடும் பரமகவிகளின் பாடல்களையும், சந்தமிகுதமிழ்மறையோனின் பாசுரங்களையும், செந்தமிழ்ப்புலவர்களின் இலக்கியங்களையும் நன்குணர்ந்து, உலகின்புறுமாறு பிரவசனம் செய்துவரும்—பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலை அய்யங்காருக்கு, "*தமிழ் வித்வான்*" என்ற பிருது அளித்து அநுக்ரஹித்திருக்கிறோம்.

விக்ரம ஹு மார்கழி மீ 14உ — ஸ்ரீ ஸம்ரக்ஷணஸ்ரீ:

ஸ்ரீ:

சங்கமாலைப் புகழுரை.

Mr. R. N. Subramania Pillai, Author of Notes on Kandaranubuthi etc., Government Pensioner, 16, Pillayar Koil Street, Saidapet.

I thank you for giving me a copy of **Stotra malai**, your Sangam Publication No. 7. The splendid and excellent get up of the book by the Kabeer Press is so pleasing that one is invited to go through the book from page to page.

Though I do not know Sanskrit the poetical translations of Sri R. Kesava Iyengar are so enchanting and mellifluous that I went through the poems with great pleasure. One may be scholar in one language but he appears to be a scholar and a master of two languages—a great achievement. I pray the Almighty to bless him with long life and strength, both physical and mental, to continue the work which he has taken up to do voluntarily.

The book is a very useful one and should be in the hands of one and all of the Tamil public for the valuable matter it contains.

25—3—41.

——(:)——

ஸ்ரீமான் N. சடகோபாசாரியார் அவர்கள், பம்பாய் :—

மிகுந்த கிருபையுடன் அனுப்பியருளிய "தோத்திரமாலை**" கிடைத்தது. ** இந்த வெளியீடு எல்லாவிதத்தாலும் மிகவும் உயர்ந்ததா யிருக்கிறது. ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு நிரம்பவும் பிரயோஜன முள்ளதாயிருக்கும் படியாய் அழகான ரீதியில் அமைந்திருக்கிறது. இது போல் வனப்பான இன்னும் அநேக புஸ்தகங்கள் வெளியிடப்பட்டு நம் ஸம்ப்ரதாயம் தழைத்தோங்கும்படி ஸங்கல்பிக்க வேண்டுமாய் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனைப் பிரார்த்திக்கிறேன்.

28—3—41

——(:)——

Sir S. Varadachariar, Judge, Federal Court. 10, Albuquerque Road, New Delhi :—

Dear Mr. Thirumalai Iyengar,

Just a line to thank you for the copy which you have kindly sent to me of the Tamil "**Sthothramala**" published by the Triplicane Tamil Sangham.

I remain,

8—4—41. Yours truly,

S. VARADACHARIAR.

——(:)——

ஸ்ரீமான் கூபப்பாக்கம் சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள், பி. ஏ.

"ஆக்குமாறயனு முதலாக்கிய வுலகங்
காக்குமாறு செங்கண்ணிறை கருணையங் கடலாம்
வீக்குமாற ரனுமவை வீந்தநாண் மீளப்
பூக்குமாமுத லெவனவன் பொன்னடி போற்றி."

அகாரவாச்சியனாகிய ஆண்டவன் மீது ஆழ்வார்கள் முதலியோர் இயற்றியருளிய ஈரிரண்டாயிரம் பனுவல்களிலிருந்து உலகத்தவர் தினந்தோறும் ஊக்கத்

துடன் அநுஸந்தித்து ஊனடைந்த உடம்பின் பயனைப் பெற்றுய்வான் வேண்டி எல்லாம் வல்ல இறைவன்றன்னின் னருளால் வெளிவந்த ஏழாவது வெளியீடாகிய இத்தோத்திரமாலை தமிழ் உலகிற்குப் பெரு நன்மை பயக்கும் என்பதில் ஐயம் ஒரு சிறிது மில்லை யென்று சொல்வது ஒற்றன் அமையும்.

"அரனிருந்த கயிலை" யனைய மயிலையினில் திகழும் "பக்திக்கு வரம்பாகிய பார்த்தன் தன் சாரதி" யனைய பிரம்ம ஸ்ரீ. எஸ் ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்களும் அவரது திருத்தேவியாராகிய அருந்ததி யனைய அரங்கநாயகி அம்மையார் அவர்களும் கருத்தொருமித்து வடமொழியிலும் அமிழ்தினு மினிய நம் செந்தமிழ் மொழியிலும் திருமாலைக் குறித்துப் பெரியார்கள் அருளிச் செய்துள்ள பல்லாயிரக்கணக்கான பாசுரங்களை அநுஸந்தித்துவந்தார்கள். இவற்றுள் ஒரு சிலவற்றைத் தெரிந்து எடுத்து ஓர் தோத்திரமாலை யாக்கி எம்பெருமானுக்குச் சமர்ப்பிக்க வேண்டு மென்றெண்ணினர். இது தமக்கும் ஏனையோர்க்கும் பயன்பட எண்ணினர் போலும். "யான் பெற்ற வின்பம் பெறுக வவ்வையகம்" என்பதன்றோ ஆன்றோர் அநுபவ மொழி. மேற்படி தோத்திர மாலைக்கு வேண்டிய மலர்களைத் தேடினர். தோன்றி அழியும் ஏனைய மலர்கள் போல் அல்லாமல், என்றும் வாடாதவைகளாகவும், என்றும் நறுமணம் வீசுபவைகளாகவும், என்றும் மாறுத நிறமுடையவைகளாகவும் இருக்கவேண்டு மென்று பல நந்தவனங்களுக்குள் சென்று தேடினர். எங்கும் காணவில்லை. கடைசியாகத் திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கமாகிய பூஞ்சோலையுள் புகுந்தனர். அங்கு இலக்கிய இலக்கணங்களும், வடமொழி நூல்களும் முறையே செடிகளாகவும், கொடிகளாகவும் நறுமலர்களை யீன்று கொண்டிருப்பதைப் பார்த்தார்கள். மகிழ்ச்சி யடைந்தார்கள். இவற்றைப் பரிபாலித்து வரும் "வடமொழியைப் பாணினிக்கும், அதற்கிணையாந் தென்மொழியைக் குடமுனிக்கும்" என்பார் போல விளங்கும் பிரம்ம ஸ்ரீ. கேசவய்யங்கார் ஸ்வாமிகளையும். திருமலை அய்யங்கார் ஸ்வாமிகளையும் கண்டு நறுமலர்கள் சிலவற்றை வேண்டினர். அன்னாரும் மேற்படி தம்பதிகள் வேண்டுகோளுக் கிணங்கி "பதினெட்டு வித்தைகளுக் கதிபதி பரந்தாமன்" என்பதை விளக்கவே போலும் 18 நறுமலர்களை—(18 தோத்திரப் பகுதிகளை) பக்தியுடன் பறித்து, வேண்டினவரது அன்பை நாராகக் கொண்டு ஓர் மாலை தொடுத்துக் கொடுத்தார்கள். அது இப்போது எம்பெருமானுக்குச் சாத்தப் பெற்று விளங்குகிறது. இம்மாலையை அன்பர்கள் அனைவரும் பெற்றுத் தினந் தோறும் பக்தியுடன் கிரமப்படி அநுசந்தித்துப் பயன்பெற வேண்டு மென்பது அத்தம்பதிகளின் கோரிக்கை. இதை நிறைவேற்றுதலே நாம் அன்னாருக்குச் செய்யும் நன்றியறிதலாகும். இன்னுமிது போன்ற பல அரிய பெரிய கார்யங்களை இச்சங்கத்தார் செய்யவேண்டி எல்லாம் வல்ல இறைவன் "விளவார் கனிபட நூறிய கடல் வண்ணன்" திருவருள் பாலிப்பானாக! இச்சங்கத்தைப் பரிபாலித்து வரும் இருபெருங் குரவர்களும் ஓங்கி யுலகளந்த மாயவன் தன்னின்னருளால் நீடூழி வாழ்க!! நம் செந்தமிழ் என்று முளதாகுக!!!

21—4—41.

—(:)—

Rao Bahadur V.S. Chengalvarayapillai M.A., Retired Personal Assistant to the Inspector-General of Registration. (292, Linga Chetty Street, Madras),

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்க வெளியீடுகளில் ஏழாவதாகிய '**தோத்திர மாலை**' என்னும் பிரபந்தத்திரட்டைக் கண்டு மகிழ்ந்தேன். இறைவன் திருவருட் கடலிற்றிளைத்து விளையாடிய ஞானகரர்களாகிய ஆழ்வார்களின் பாமாலைகளிலிருந்தும், பிறபெரியார்கள் அருளிய பத்திச் சுவைதரு பாமாலைகளிலிருந்தும் ஆய்ந்து எடுத்த மாலையாகும் இத் "**தோத்திரமாலை**" என்னும் நூல். நித்திய பாராயணத்துக்குப் பயன்படக்கூடிய அரிய இனிய பாக்கள் இம்மாலையில் அடங்கியுள்ளன. இறைவன் அடியார் இந்நூலைக் கண்டு மகிழ்ந்து உய்யுநெறி பற்றிக் களிப்புடன்

பாராயணஞ் செய்து, "சகஸ்ரநாம கோபாலன், சங்கு சக்ர கதாபாணி, தசரத குமார ரகுகுலபுங்கவன், ஜெயதுங்கமுகுந்தன்" எனத் திருப்புகழாசிரியராற் பாராட்டப்பட்ட பெருமாள் திருவருளுக்குப் பாத்திரராகி நற்பதம் பெறுவார்களாக. இந் நன்முயற்சி வெளியீட்டுக்குக் காரணமாயிருந்த பெரியோர்களும், நூலைத் தொகுத்து வெளியிட்ட திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்துக் காரியதரிசி **ஸ்ரீமான் ப. ரெ. திருமலை ஐயங்கார் அவர்களும்** நீடூழி வாழ்க.

பொருமலை யேதரு வாழ்வு தொலைக்கும் பொருளாகுந்
திருமலை வாழ்வுறு மால்புக ழென்று தெரிந்தேநங்
கருமலை "தோத்திர மாலை" யளித்துக் களிகூர்ந்தார்
திருமலை ஐயங் காரெனு மன்பு சிறந்தாரே.

23—4—41.

——(:)——

Diwan Bahadur C. V. Venkataramana Iyengar, B.A., B.L., F.R.S.A., Dharma Vilas, Coimbatore.

I am in receipt of your kind letter of the 24th instant with a copy of the "**Tothiramala**" and I am very grateful to you for the same.

29—4—41.

——(:)——

"**Sivakkavi Mani**" **C. K. Subramania Mudaliar Avl.** B.A., Vakil Sekkilar Nilayam, Vysial Street, Coimbatore.

அன்புடைய ஐயா,

வணக்கம் பல. நீங்கள் அன்புடன் இவிடம் ஸ்ரீ. சீநிவாஸய்யங்கார்ஸ்வாமி மூலம் விடுத்த "**தோத்திரமாலை**" என்னும் வெளியீடு பிரதிபெற்று மிக மகிழ்ச்சி யடைந்தேன். எனது தமிழ்ச் சிறுபணியையும் நினைந்து கொண்டு சுவாமிகள் அளித்த பேறுபற்றி நன்றி செலுத்துகின்றேன்.

"**தோத்திரமாலை**" திருவாலும் உருவாலும் பொலிந்து விளங்குகின்றது. ஆழ்வாராதிகளது திருமொழிகளுடன் தேசிகரது சிறந்த சந்தமிகு செந்தமிழ்களையும் திரட்டிச் சேர்த்தது மேன்மையாகும். இவற்றுடன் தேசிகனரது வடமொழித் தோத்திரங்களையும் **ஸ்ரீமான் R. கேசவய்யங்கார் சுவாமிகளா**ற்றமிழ் செய்து முன்னவர் மொழிகளோடொப்பச் சேர்த்துத் திரட்டிக்கொண்டது பசுமையும் புதுமையும் பயப்பதாகும்.

வண்ணச்சரபம் ஸ்ரீலஸ்ரீதண்டபாணி சுவாமிகள் செய்த பாக்களையும் இவற்றுடன் சேர்த்து மாலை செய்தது பெருமை தருவதாம். இத் தோத்திரமாலையினை அழகுற அச்சிடுவித்து உபகரித்த எமது **திருமயிலை எஸ். ஸ்ரீநிவாசய்யங்கார் சுவாமி**களின் திருத்தேவியார் **ஸ்ரீரங்கநாயகி அம்மாளவர்களின் உதாரத்துவமும், உபகார சீலமும், திருமால் பத்தியில் வைத்ததிண்மையும், "தாமின் புறுவதுலகின் புறக்கண்டு" களிக்கும் மேன்மைப்பாடும் தமிழுலகம் போற்றத் தகுந்தது.**

இந்நூலை வெளியிட்ட ஸ்வாமிகளாகிய தாமுட்பட்ட **திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தார்களுடை**யவும், அதற்குத் துணைபுரிந்த பல நல்லன்பர்களுடையவும் கேண்மை என்னிடத்துப் பொருந்தி வளர்வதாக. **கோவைத் தமிழ்ச் சங்கம்** என்ற எமது சங்கம் தங்கள் சங்கத்தின் மூத்த சகோதரம் என்ற உரிமையும் அன்பும் நண்பும் கூடி மேன்மை பூண்ட தமிழ்த் தொண்டு புரிந்து வளர எம்பெருமானருள் புரிவாராக.

17—5—41.

——(:)——

ஸ்ரீ திருப்புகழ்த் தண்டபாணி சுவாமி சந்நிதானம், சதுர்வேத சித்தாந்த சண் மதசமயாதீத அத்துவித கௌமார சபை, கௌமார மடாலயம், திருவாமாத்தூர்,

விஷு ஞு, சித்திரை மீ", 30 உ.

வெண்பா

ஒருமலைகொண் டாப்புரந்தா னேங்குமல்லிக் கேணி
மருவுதமிழ்ச் சங்கம் வளர்க்கும்—பெருமைத்
திருமலையை யங்காரென் சீலமறை யோய்நின்
திருவளரு நற்சமுகத் திற்கு.

மிக்க அன்புடன் எழுதிக்கொள்வது. உபய க்ஷேமம். தாங்கள் சென்ற மீ" அனுப்பிய **தோத்திரமாலையும்** கடிதமும் கிடைத்தது.

* * * * *

"தோத்திரமாலை" நூலின்கண் எழுந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்து முறையில் அடியேனலியற்றப்பட்ட 5 கவிகளும் இத்துடன் தங்கள் பார்வைக் கனுப்பி யிருக்கிறேன்.

தி. செ. முருகதாச பிள்ளை.

குருவே துணை.

ஸ்ரீ திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம், காரியதரிசி, பந்தல்குடி

பாரத்வாஜ மாடபூசி

பிரம்மஸ்ரீ

ரெ. திருமலையையங்காரவர்கள் வெளியிட்ட

தோத்திரமாலையின்

பதிப்பு மதிப்பு.

திருமருவு திருவல்லிக்கேணி யிடைதமிழ்ச் சங்கத்தினிலேழென்ன
வருவெளியீடாகப் பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி
திருமலைப்பேர் பெறுமறையோன் றிருமயிலைச்சீனி வாசன்றன்றேவி
பெருகெழிற் சீரங்கநாயகிப் பேரம்மைக்குவகைபிறங்குமாறே. 1

திருமறை நாலாயிரத்தின் விவரமுயர் ஜபக்கிரமங் திருப்பல்லாண்டு
மருவு திருப்பாவை திருவாய்மொழியோ டடைக்கலமா வாய்ந்த பத்து
வருபரம பதசோபானங் திருமந்திரச் சுருக்கு த்வயச் சுருக்கு
சருவுசரமச் சுலோகச் சுருக்கு பிரபந்த சாரத்தோடு. 2

சுவைகொள் கலம்பகம் பிள்ளையந்தாதி திருத்திகழ் பாசுரங்கள் கூட்டி
நவைதவிர் ஸ்ரீதோத்ர ரத்நம் கோதாஸ்துதியுங் கோபால விம்சதிப்பா
சவைபுகழ் ஸ்ரீதுதி பகவத்யான சோபானமெனச் சாற்று பாடல்
குவைபடுத்தித் திருமகளந்தாதியிற் சிலபாக்களையுங் குலவக் கோத்து. 3

விலையேறுங் கனத்த வெண்மைக் காகிதத்திற் பிழைசிறிது மேவாவாறு
கலைமீறுங் கவிஞர்களும் பக்தர்களுங் கண்டுவக்கக் கவினுரச்சில்
நிலையாகும்படி பதித்து வெளியிட்டானச் செயலை நிகழ்த்தில் மேனுள்
அலைவேலை கடைந்தமரர்க் கரியமுத மளித்ததை நேரறையலாமால். 4

குருமலையாதிய தலங்தோறவிர் குமரன் றிருவருட் சீர்குறித்து மேலாங்
திருமலைமீதேறி யுருண்டுய்ந்த தண்டபாணி தெரிந்து போற்றும்
திருமலைநே ரரங்கனுக்காம் ஆயிரம்பா முதலிய நூல் கருதியாய்ந்தோன்
கருமலை வேதிய னெடுமாலருள் பெற்றோன் றமிழ்கற்றோன் றெருளுற்றோனே. 5

இங்ஙனம் :

திரு. - தி. மு. செந்திநாயகம் பிள்ளையவர்கள் குமாரன்
தி. சே. முருகதாச பிள்ளை.

——(:)——

குருவே துணை.
திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்
பிரம்மஸ்ரீ. ப. ரெ. திருமலை அய்யங்கார் அவர்கட்கு

வாழ்த்துப் பாக்கள்.

வெண்பா.

திருவல்லிக் கேணியிடை சேர்தமிழ்ச்சங் கத்தின்
மருவிப்பெரிதும்வளர்ப்போன்—பொருவில்புகழ்
நாராய ணன்றெழும்பே நாடுந் திருமலைப்பேர்ச்
சீரார் பிரமகுலச் சேய். 1

கட்டளைக் கலித்துறை.

வென்றிகொள் பார்த்தன் வியன்றேர் செலுத்தும் விறற்றிருமால்
நன்றினிதாளு நகர்ச் செல்வமாகி நலம்பலசெய்
குன்றினையா மெந்திருமலை நாமக்குரிசில் பன்னாள்
மன்றினிற் றொண்டர்கள் பாவலர் வாழ்த்த வயங்குகவே. 2

அறுசீர் விருத்தம்.

கருணைத் திருமால் கழல்பரவிக் கருதிப்பணியுங் கருத்தாளர்
உருகிப் பயின்று பயனடைதற் குரியதமிழ் மாமறை முதலாம்
அருமைத் துதிப்பா வகைதிரட்டி அரங்கப்பெயர் நாயகி யம்மை
தெருளைத் தரணியுணர் பதிப்புச்செயுஞ் சீர்பலரு முயுஞ்சீரே. 3

இங்ஙனம் :

தி. மு. செந்திநாயகம் பிள்ளை,
கௌமார மடாலயம், திருவாமாத்தூர்.

தெய்வமே துணை.

விஷு ௵ வைகாசி௴ 29௳

——(:)——

ஸ்ரீ உபயவேதாந்த பாஷ்ய ஆசார்ய ஸிம்ஹாஸநாதிபதி வித்வான் அபிநவ ஸரஸ்வதீ வாங்முகரத்நகோச : வித்வச் சிரோமணி : பண்டிதராஜ: குருவர்ய நடாதூர் கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி, லக்ஷ்மீமந்திரம், நாச்சியார் கோயில் :—

தோத்திரமாலை; தொண்டர்மாலை; கம்பர் மாலை என்று மகுடஞ்சூட்டப் பட்ட மூன்னூல்கள் முத்தமிழைச் சிறப்பிக்க வந்த முதல்நூல்களே. ஒவ்வொரு நூலின் பெருமையும் ஓதியுணரத்தக்கது. ஸ்ரீ எம்பெருமானது கல்யாண குணங்களைக் கண்டும், கேட்டு மறிதற்குச்சாதன மானவை இப்பாமாலைகளே. பரம

பாகவதர்களும் அநுஸந்தித்து ஆனந்திக்குமாறு இந்நூல்களை வெளியிட முன்வந்த ஸ்ரீ உ. வே. வித்வான் ப. ரெ. திருமலை அய்யங்கார் ஸ்வாமியினுடையவும், ஸ்ரீ உ. வே. பண்டித கேசவய்யங்கார் ஸ்வாமியினுடையவும் முயற்சி பெரிதும் போற்றத்தக்கது.

இவற்றுள் உத்தம ஸ்திரீரத்னங்களும் பேறும், பெருவாழ்வும் எய்துமாறு, தோத்திரமாலை யைப் பிரகாசிக்கும்படி செய்த எஸ். ஸ்ரீரங்கநாயகி அம்மாள் அவர்களுடைய கைம்மாறு கருதாப் பேருதவிக்கு யாவருமே கடப்பாடுடையவர்.

இவ்விதமாலைகளை அவ்வப்பொழுது நிலவுமாறு செய்யப்போதிய ஊக்கமும், திறனும் மேற்கூறப்பட்ட ஆசிரியர்கட்கு எம்பெருமான் கிருபை செய்யப் பிரார்த்திக்கின்றேன்.

15—6—41

——(:)——

சென்னை,
292, லிங்க செட்டித்தெரு
14-6-41.

அன்பர் அவர்களுக்கு,

தாங்கள் வெளியிட்ட "கம்பர்மாலை" வரப்பெற்று மனமகிழ்ந்தேன். நல்ல வழியில் உழைத்து வரும் தங்கள் சங்கம் வாழி; சங்கந்தழைக்கப்பாடு படும்தாங்களும், தங்கள் முயற்சியில் ஈடுபடும் சகல அன்பர்களும் வாழிய!

கருவெல்லக் காட்டும் பெருவழி கூட்டுங்கருணைநிறை
திருவல்லிக் கேற்ற அழகன் தசமுகற்செற்ற திறல்
ஒருவில்லிக் குற்ற புகழே பெருக உழைத்துவருந்
திருவல்லிக் கேணித் தமிழ்ச் சங்க மென்றுந்திகழுகவே.

ம. சு. செங்கல்வராயபிள்ளை.

——(:)——

Mr. T. C. Sreenivasa Ayyangar, B.A., B.L., M.L.C. Advocate, Madura.

My dear Thirumalai Iyengar,

I received the copy of "Kambarmalai" you kindly sent to me. It is a fine collection of extracts and *the introductions are very interesting and instructive.*

I hope you will continue to do the useful work of popularising the Tamil literature.

18—6—41.

——(:)——

இந்துநேசன். [புஸ்தகம் 40, இலக்கம். 14, 5-4-41.]

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கத்தின் நற்றொண்டுகள் "நேசன்" நண்பர்கள் நன்கறிகுவர். அச்சங்கம் செந்தமிழபிவிருத்திக்காக செயற்கரிய செயல்களைச் செய்து வருவதும் தமிழ் நல்லுலகு அறிந்ததே.

இருமொழியும் ஆன்றவரே தழீஇயினரென்றபடி கண்ணிரண்டு மொன்றையே காண் என்ற கணக்கிலே உலகில் வழங்கி வரும் பாஷைகளுள் மிகப்பழமையான வடமொழி யுந்தமிழும் நந்தமிழகத்தே தொன்று தொட்டு செவ்வனே போற்றப்பெற்று வருவது சாலவும் கொண்டாடற்குரியது. அதிலும் ஸ்ரீவைஷ்ணவர்கள் இவ்விருமொழியினிடத்தும் ஒரேவிதமான ஆர்வம் உடைத்தானவர்களாக இருந்து வருவது அனைவரும் அறிகுவர். திருக்கோயில் எம்பெருமான்கள் வீதிப்புறப்பாடு

காலங்களில் ஆழ்வார்களருளிச் செயல் பாராயண கோஷ்டி முன்னும், வேதபாராயண கோஷ்டி பின்னும் வருவதே இதற்குத்தக்கசான்று.

> "பழமறைகள் முறையிடப்பைந்தமிழ்ப்பின் சென்ற
> பச்சைப்பசுங் கொண்டலே"

என்ற குமரகுருபர சுவாமிகள் திருவாக்கை இங்கு நோக்குக.

ஆழ்வார்கள், தூப்புல் வேதாந்த குரு, கம்பநாடர், திருமுருகதாச சுவாமிகள், இவர்களின் மாலைகளிலிருந்தும், ஸ்ரீ ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்நம், கோதாஸ்துதி, கோபால விம்சதி, ஸ்ரீஸ்துதி, ஸ்ரீபகவத் த்யாநஸோபாநம் இவற்றின் தமிழ் நூல்களும் தொடுத்து தோத்திரமாலை என்ற பெயருடன் திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கவெளியீடாக மிக்க வனப்புடன் வந்துள்ளது நமக்கு வரப்பெற்றோம்.

உலகம் போற்றும் பெற்றியராய்த்திகழும் திருமயிலை ஸ்ரீமான். எஸ். ஸ்ரீநிவாஸய்யங்காரவர்களின் திருத் தேவியார் ரங்க நாயகி அம்மாளுக்காக இவ்வெளியீடு தோன்றியுள்ளது. இத் தம்பதிகளின் நற்குண நற்செய்கைள் உலகு நன்கறியுமாகலின், இச் சீரிய தொண்டு அவர்களுக்குற்றதே. இதுகாறும் இவ்விதமான வெளியீடு தோன்ற வில்லை என்பதே எமது துணிபு. "நல்லா ரொருவருளரேல் அவர்பொருட்டெல்லார்க்கும் பெய்யுமழை" என்பதும் மெய்ப்பித்ததாயிற்று. தமிழ் நல்லுலகு இவ்வெளியீட்டாற் பெரிதும் பயனடையும் என்பதே எம்மனோர் உறுதி.

இதிலுள்ள "முன்னுரை", ஸ்ரீ ரங்கநாயகி அம்மாளின் பரந்த நோக்கத்தையும், நல்லுறுதியையும், பெருந்தன்மையையும், செந்தமிழார்வத்தையும் நன்கு புலப்படுத்துகிறது. "முகவுரை", தூப்புற்குலமணிக்குச் "சந்தமிகு தமிழ்மறையோன்" என்று பிருது அமைந்துள்ளது முழுமுற்றும் பொருத்தமுள்ள தென்பதைத் தெற்றெனக் காட்டி மிளிர்கின்றது. அதிலுள்ள நன்றி கூறும் வாக்கியங்கள் ஒப்பற்றவை. "நாலாயிரத்தின் விவரம்", ஸ்ரீ வேதாந்த தேசிகரின் பிரபந்த சாரக் கணக்கைக் கண்ணாடிபோலக் காட்டுகின்றது. இவ்விவரமே தொன்றுதொட்டு வருவதென்பது சான்றோர் அபிமதம். "ஜபக்ரமாதிகளின்" அத்யாவசியகத்தைக் கூறவேண்டுவதில்லை. அனைவரும் அறிந்துய்வதற்குற்றவழி ஈதே. "பரமபதஸோபாநம்", மிகவும் இன்றியமையாதது. இதிலுள்ள பாசுரங்களின காம்பீர்யம் இணையற்றது. இது "பர்வத்துடன்" விளங்குவது ஒரு தனியேற்றம். "திருமந்திரச் சுருக்கு"; "துவயச்சுருக்கு"; "சரம சுலோகச் சுருக்கு" என்ற இம்மூன்றும் இம்மாலையிலடக்கியிருப்பது ஒரு தனிச்சிறப்பு. இவ்விரகசியத்திரயத்தின் உட்பொருள்களனைத்தையும் தமிழ்ப்பாக்களில் வெளியிட்டுதவியவர் உபய வேதாந்த தேசிகரேயாவர். இவருக்கு முன்னுளோர் இவ்வித பணி இயற்றவில்லை இதனாலும் இவ்வாசிரியரின் உத்தம குணம் வெளிப்படை. "கலம்பகம்" நல்ல சேர்த்தி. கல்வியிற் பெரிய கம்ப நாடரின் இராமாவதாரம், சடகோபரந்தாதி இவற்றினின்றும் பொறுக்கு மணிகள் இதனை அழகுறச் செய்கின்றன. ஸ்ரீ நயினராசாரியரின் "பிள்ளையந்தாதி" இணையற்ற தமிழ் மாலையாகலின் அஃதும் இதிற் சேர்த்திணைத்திருப்பது மிகவும் செவ்வியதே. "திருத்திகழும் திருப்பாசுரங்கள்" தென்மொழி பிராட்டி பாஷை என்பதனை வலியுறுத்துகின்றது. "கோதாஸ்துதி" யின் ஆசிரியர் செந்தமிழ்க் கவி. அவர் மதுரகவியே. சங்கத் தலைவரின் மூன்று தமிழ் நூல்களும் தமிழிலக்கியக் கடலுக்கு அமுது என்னலாம். இவற்றைச் சிறுவர் சிறுமியர் மனனஞ் செய்வரேல் தெய்வ வழிபாட்டுக்கு அது பெருத்த உதவியாகும். ஸ்ரீ பகவத்தியாநஸோபாநத்திலுள்ள தியானப் பாட்டொன்று ஸ்தாலிபுலாக நியாயத்திற்றருவோம்.

> "அணவு மருளரங்க நகரப்பன்பாத
> மலர்சேரு மவன் சங்கமதன்மேலூரு
> விணையினிடைப் பிணைத்தலுறும் நிலையேமன்னும்
> பின்னுமெழு மென்னடை யாலடையுமுந்தி

இணையு மெழின்மார்வமிரு புயமும்தாவும்
இன்னினிய முகப்பதும மதுக்குடிக்கும்
அணையுமவன் முடியின்மண மிருக்குமென்றே
அடியன் மனத்திருவவனைத் தியானம்செய்யும்.''

இம்மாலைத் திருப்பணியிலேவியுல குய்யப்பண்ணிய தம்பதியார் இது போன்ற பிறநூல்களும் வெளிவருமாறு செய்விப்பார்களென நம்புகிறோம்.

''வடமொழி ஸ்தோத்திரங்களுக்குச் சரியான பாடல்களை உபயோகிப்பதே என் நோக்கத்திற்குப் பொருந்துவதாகும்.''

என்ற பேருரை பொன்னே போற்போற்ற வேண்டுவ தொன்று.

தமிழ் நல்லுலகு இம்மாலையை வாங்கித்தரித்துச் சூடிக்கொள்வதே இதற்குரிய கைம்மாறாகும். பைந்தமிழ் வாழ்க. செந்தமிழோங்குக. வாழ்க வய்யமெலாம்.

——(:)——

திருவிளக்கு. (ஒளி3, சுடர். 2, விக்கிரமமாசி. பிப்ரவரி ' நக்கீரன் ' 1941)

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்க 7-ம் வெளியீடு **''தோத்திரமாலை''** என்னும் புத்தகம் வரப்பெற்றேன். வைணவர்களின் தனி உபயோகத்திற்கென்று தோத்திரப்பாக்களைப் பொறுக்கி பொன்போன்ற எழுத்துக்களில் கண்ணைக்கவரும்படி அச்சுப் பொரிக்கப்பட்டிருக்கிறது. ''நாவளரும் பெரு நான்மறை யோதிய கீதமெல்லாம் பாவளருந்தமிழ்ப்பல்லாண்டிசையுடன்பாடுவமே'' என்பதற் கிணங்க வடமொழித் தோத்திரங்கள் சில அழகிய தமிழ்ப்பாக்களில் தொகுக்கப்பட்டிருக்கின்றன. இதுபோன்ற நம்பண்ணமரும் துய்ய தமிழ் நூல்களை நம் நாட்டின் தற்போதைய நிலையில் தெள்ளென ஓதித் தெளிவுறப் பயிலல்வேண்டுமெனின் மிகையாகாது. இந்நூலில் நாலாயிரப் பிரபந்தத்தின் பாசுரத் தொகையை ix-ம் பக்கத்தில் விவரித்திருப்பது சாலப் பொருத்த முடைத்தே.

* * * *

இந்நூலை வெளியிட்டவர்க்கு—தமிழ் மக்களின்—சிறப்பாக வைணவர்களின் மனமார்ந்த நன்றி உரியது. இச்சங்கத்தின் தொண்டு பாராட்டற்பாலது.

* * * *

——(:)——

சிவநேசன் :—(1941 மே ௴)

தோத்திரமாலை, இது திருவல்லிக்கேணித் தமிழ்சங்கத்தின் 7-வது வெளியீடாகும். திருமயிலை ஸ்ரீமான் S. ஸ்ரீநிவாசய்யங்காரவர்களின் திருத் தேவியார் ஸ்ரீ ரங்கநாயகி அம்மாளின் விருப்பத்துக்கிணங்கத் தொகுத்து வெளியிடப்பெற்றுள்ளது.

திருப்பல்லாண்டை முதலிலும் திருமகளந்தாதியை யீற்றிலும் வைத்து நல்ல முறையில் திரட்டி வகைப்படுத்தி பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலை அய்யங்காரவர்களால் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. * * * சுத்தப்பதிப்பு. நித்திய பாராயணஞ் செய்து திருவருள் பெறுதற்குரியது.

——(:)——

தமிழ்ப்பொழில். (துணை 17. மலர் 1. விசு - சித்திரை 1941 ஏப்பிரல்)

தோத்திரமாலை. இந்நூல், நாலாயிரப் பிரபந்தத்திலிருந்தும் வடமொழிப் பாக்களின் மொழிபெயர்ப்பிலிருந்தும், திருமயிலை திரு. சீனிவாசய்யங்கார் மனைவியார், திரு. அரங்கநாயகி அம்மையார் தம் கருத்துக்குப் பொருத்தமாகத் தேர்ந்து கொண்ட திருப்பாடல்களைக் கொண்டுள்ளது. படிப்போர்க்குப் பயனளிக்கும்.

வடமொழிப் பாட்டுக்களைப் பொருளுணராது கண்மூடிக் கதறுவதிலும், அவற்றுக்குச் சரியான தமிழ்ப்பாடல்களைப் பாடம் பண்ணுதலே பொருந்தும் என்னும் திரு. அம்மையாரது கருத்தினை யாம் பாராட்டுகின்றேம்.

——(:)——

The Hindu: (*1-6-41*)

[Thothiramalai: Edited by R. Thirumalai Iyengar, The Triplicane Tamil Sangham.]

The idea of Ubhaya Vedanta so well worked out by Sri Vedanta Desika involves the equal validity of all stotras in Sanskrit and in Tamil. The 4,000 stanzas of the Alwars come foremost among the Tamil scriptures, which the Vaishnavites venerate. No less important to the followers of Sri Vedanta Desika are the Tamil verses of Sri Desika himself which are grouped together as "Desika Prabanda." This book contains a collection of certain important stanzas in the Nalayira (4,000) Prabandas of the Alwars and the Desika Prabanda of Sri Desika especially those of them which every devout Sri Vaishnava recites as part of his or her daily worship and routine. Thiruppallandu of Periyalwar, Thiruppavai of Sri Andal, and the Dasakam beginning with "உலகமுண்ட பெருவாயா" of Nammalwar in which he surrenders himself to Sri Venkatesa of Tirupati are printed first. Then comes the Adaikalapattu of Sri Vedanta Desika wherein he performs Prapatti at the feet of Sri Devarajaswamy (Varada) of Conjeevaram, a prabanda by which every Sri Vaishnava daily consigns his or her soul to the keeping of God. Paramapada Sopana and the three works on the three mantras called "திருமந்திரச் சுருக்கு; துவயச்சுருக்கு and சரமச்லோகச் சுருக்கு" respectively are also works for daily contemplation. Prabanda Saram and Pillay Andadi are of course in the collection and in between the two is given a கலம்பகம் collection from several of the Desika Prabandas—stanzas well worth remembering and enjoying.

The next part consists of well known Sanskrit works rendered into Tamil verse so that those who cannot read the Sanskrit original can get by heart, these Tamil equivalents. Sri Alavandar's Stotra Ratna and Sri Desika's Goda-Sthuthi are old renderings. For the purpose of this book and at the request of Mrs. S. Srinivasa Iyengar whose idea it was to publish a book like this—Sri R. Kesava Iyengar, Advocate of Madras, has rendered three stotras of Sri Desika. "Gopala Vimsati, Sri Stuti and Bhagavad Dhyana Sopana" into Tamil Verse. The deep erudition and mastery of Sanskrit and Tamil languages for which Sri R. Kesava Iyengar is so well known evince themselves in each Tamil stanza. It

is a beautiful work of art to render a great masterpiece in Sanskrit into Tamil verse and Sri R Kesava Iyengar has done it very well indeed.

From Mrs. Ranganayaki Srinivasa Iyengar's short foreward to the book it appears that she got this book published in pursuance of her ideal that Sanskrit works should be enjoyed through Tamil renderings. Her ideal has been well realised in this publication.

D. R.

——(:)——

செந்தமிழ் (தொகுதி 38—பகுதி—6. பக்கம் 272. விஷு ௵ சித்திரை ௴ April—May 1941)

தொண்டர் மாலை:—இது. சென்னை **திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தின் எட்டாவது வெளியீடாகும்** இதில் தென்னரங்கமேய திருமால் பக்கல் ஈடுபாடு மிக்கமன்னிய சீர்த் தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த **திருமாலை**, **திருப்பள்ளியெழுச்சி** யென்னும் திவ்யப்ரபந்தங்களும், தமிழ்ப்பண்டிதர் **ஸ்ரீ கோபாலாசாரியார்** 100 தமிழ்க் கவிகளாக இயற்றிய தொண்டரடிப்பொடியாழ்வார் சரிதமாகிய **திருத்தொண்டர் காதையும்**, இவற்றுக்கு அங்கமாக ஷை தமிழ்ச்சங்கக் காரியதரிசி **ஸ்ரீ ப. ரெ. திருமலை ஐயங்காரவர்கள்** எழுதிய **முகவுரையும்**, ஷை சங்கத் தலைவர் **ஸ்ரீ R. கேசவய்யங்காரவர்கள்** எழுதியுதவிய அரிய **முன்னுரையும்** நல்ல காகிதத்தில் அழகாக அச்சிடப்பெற்றுள்ளன. இத் திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம் தன் வெளியீடுகளால் செந்தமிழ் மொழியும் திருமால் சமயமும் இனிது தழைய முயல்வதாகுக. இது கிடைக்குமிடம்:—காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம், 42 - ஏ. வெங்கடரங்கம்பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

——(:)——

தென் திருப்பேரை மஹா வித்வான் ஸ்ரீ அனந்த கிருஷ்ணய்யங்காரவர்கள், வகுள மாலை யிற் கண்ட பாமாலைப் பாக்களுக்கும் கண்ணனுக்கும் சிலேடை

வெண்பா.

அங்கங்கருமையதால் அற்பக்கலையோர்க்கும்
துங்கப் பொருளீ துறையுறலால்—சங்கமுமே
அண்டிடலாற் கண்ணனிகர் ஆம்வகுளமாலை யிற்காண்
கண்டனைய பன்மாலைகள்.

(அற்பக்கலையோர் - குசேலர்; அற்பப்படிப்பாளர்.)

20—6—41.

——(:)——

Mahamahopadhyaya
Dakshinatya Kalanidhi
Dr. V. SWAMINATHAIYAR,
Madras.

Tyagaraja Vilas.
Tiruvatteeswaranpet,
Triplicane.

21-6-41.

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தாருடைய வெளியீடுகளாகிய **'தோத்திரமாலை'**யையும், **'கம்பர் மாலை'**யையும் படித்துப் பார்த்தேன். ஸ்ரீ வைஷ்ணவர்கள் தினந்தோறும் அநுஸந்தித்துப் பயன்பெறுவதற்குரிய பாசுரங்களைத் தொகுத்து வெளியிட்டிருப்பதே **தோத்திரமாலை.** திவ்ய ப்ரபந்தத்திலிருந்தும், ஸ்ரீ வேதாந்த தேசிகருடைய திருவாக்கிலிருந்தும், வேறு நூல்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பெற்ற பொருத்தமான இனிய தோத்திரங்கள் இதில் உள்ளன. இவ்வெளியீடு ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு இன்றியமையாததாகுமென்று கருதுகிறேன்.

'கம்பர் மாலை' என்பதில் **கம்பர்** திருவாக்கிலிருந்து தேர்ந்தெடுத்த இனிய தோத்திரச் செய்யுட்களும் வேறு சில பாக்களும் இதில் உள்ளன. கம்பராமாயணத்திலுள்ள துதிகளையெல்லாம் ஒருங்கே தொடர்ச்சியாகப் பதிப்பித்திருக்கின்றார்கள். அவற்றைத் தனியே படித்துப்பார்க்கையில் கம்பரது உள்ளத்தில் மலிந்து பொங்கிய பக்தி தெளிவாக விளங்குகின்றது. **இந்தத் தொகுப்பு பக்தர்களுக்கும் தமிழ் நயமுணர்வாருக்கும் பேருவகையைத் தருவதாகும்.**

தக்காரைக்கொண்டு இத்தகைய வெளியீடுகளைப் பதிப்பித்துவரும் இச் சங்கக் காரியதரிசியாகிய **ஸ்ரீமான் பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலை ஐயங்காருடைய ஊக்கமும் தமிழன்பும்** பாராட்டற்குரியன. இவருடைய முயற்சிகளுக்கு ஆதரவு மேன்மேலும் கிடைக்குமென நம்புகிறேன்.

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்.

——(:)——

செந்தமிழ். (தொகுதி 38—பகுதி 7-பக்கம் 350-352. விஷு ஞு வைகாசி மீ°. May—June 1941.)

கம்பர்மாலை:—இது, இராமபிரானையும் சடகோபரையும் கம்பரையும் விஷயமாகக்கொண்டு, கம்பரும் பிறரும் இயற்றிய செய்யுட்களால் தொடுக்கப்பட்டது; திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கத்தின் ஒன்பதாவது வெளியீடாகப் பதிக்கப்பெற்றுக் கச்சியம்பதியில் நிகழும் விஷுவருஷ வைகாசித்திருநாளில் கருடஸேவையன்று பேரருளாளப்பெருமாள் திருவடிவாரத்திற் காணிக்கையாக ஸமர்ப்பிக்கப் பெற்றது; தோத்திரம், இராமாவதாரச்சுருக்கு, பெருமாள் புறப்பாடு, கலம்பகம், இராமாவதாரத்திரு, சடகோபரந்தாதி, கம்பர்சீர்ப்பதிகம், கம்பரிருபது: என்னும் எட்டுப்பகுப்புடையது. திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கக்காரியதரிசியான பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி. ஸ்ரீ. **ரெ. திருமலை ஐயங்காரவர்கள்** இதன் பதிப்பாசிரியராவர்.

இதனுள், முதலில் திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கத்தின் உபதலைவர் **ராவ் ஸாஹிப் ஸ்ரீ. R. ராமஸ்வாமி ஐயங்காரவர்கள்** எழுதிய முன்னுரையும், அதனையடுத்து, இதன் பதிப்பாசிரியர் எழுதிய விரிந்த முகவுரையும் அமைந்துள்ளன.

பின்னர்த் **தோத்திரம்** என்ற முதற்பகுப்பில் 98 செய்யுட்கள் உள்ளன. இவற்றுள் முதற் பன்னிரண்டு செய்யுட்கள் இராமாயணத்தின் ஒவ்வொரு காண்டத்தின் தொடக்கத்திலும் கடவுள் வாழ்த்தாக அமைந்தவை; ஏனையவை விராதனும் இந்திரனும் கவந்தனும் சுக்கிரீவனும் வாலியும் பிரகலாதாழ்வானும் பிரமனும் வருணனும் கருடனும் விண்ணவரும் சதுமுகனும் ஆங்காங்கு இராமபிரானையும் திருமாலையும் துதித்தனவாக இயன்றவை.

இராமாவதாரச்சுருக்கு என்னும் இரண்டாம் பகுப்பினுள் உத்தரகாண்டத்து அசுவமேதயாகப்படலத்துள்ள 100 கவிகள் எடுத்துச் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்ருல் இராமாவதாரம் முதல் இராவணவதாநந்தரம் இராமபிரான் முடிசூடியது வரையுள்ள சரிதங்களை அறியலாம்.

பெருமாள் புறப்பாடு என்ற மூன்ரும் பகுப்பினுள் உள்ள ஆறு கவிகளும் அசுவமேதயாகப்படலத்துள்ளனவே; அயோத்திநகர அரசமாளிகையினின்று கோமதி நதிக்கரையிலுள்ள அசுவமேதயாகசாலைக்கு இராமபிரான் சென்றவாறு கூறும் இக்கவிகளுள்ளும் இராமாயண கதாசங்கிரகம் அமைந்திருத்தல் நோக்கத்தகும்.

கலம்பகம் என்ற நான்காம்பகுப்பினுள், பரதத்துவம் என்ற தலைப்பின்கீழ், இராமபிரான் பரம்பொருளே என்றும் சீதாபிராட்டி திருமகளே என்றும் அறுதியிடும் 23 கவிகளும், திருமந்திரம் என்ற தலைப்பின்கீழ்த் திருமால் திருவெட்டெழுத்தின் பெருமையை விரிக்கும் 5 செய்யுள்களும், கருடஸேவை என்ற தலைப்பின் கீழ்த் தேவர்களுக்குத் திருமால் கருடாரூடராய்க் காட்சியளித்தவாறு கூறும் 2 கவிகளும், நாதன்பாதுகம் என்ற தலைப்பின்கீழ் இராமபிரானுடைய திருவடிகளைத் தாங்கும் பாதுகத்தின் பிரபாவம் கூறும் 7 கவிகளும், அபயப்ரதானம் என்ற தலைப்பின்கீழ் இராமபிரான் விபீடணுழ்வானுக்கு அபயப்ரதானம் பண்ணியவாறு கூறும் 6 கவிகளும், திருவடிப்பிரபாவம் என்ற தலைப்பின்கீழ் இராமபிரானுடைய சரணரவிந்தங்களின் பெருமைபேசும் 5 கவிகளும், சரணகதிவைபவம் என்ற தலைப்பின் கீழ் எவ்வகையான பேற்றுக்கும் சரணகதியே சிறந்த உபாயமென்று தெரிக்கும் 1 கவியும் தொகுக்கப்பெற்றுள்ளன.

இராமாவதாரத்திரு என்ற ஐந்தாம்பகுப்பினுள், திருவவதாரமென்ற தலைப்பின் கீழ், இராமபிரானும் இளையோரும் பிராட்டியும் அவதரித்த நாளும் கோளும் முதலியனகூறும் கவிகளும், திருமணம் என்ற தலைப்பின்கீழ் இராமபிரானுக்கும் இளையோர்க்கும் திருமணம் நிகழ்ந்தவாறு கூறும் கவிகளும், திருவபிடேகம் என்ற தலைப்பின்கீழ், வசிட்டன் முதலியோர் இராமபிரானை மந்திரநன்னீராட்டியவாறு கூறும் கவிகளும், திருமுடிசூடல் என்ற தலைப்பின்கீழ் வசிட்ட முனிவன் இராமபிரானுக்கு முடிசூட்டியவாறு கூறும் கவிகளும், பயன் என்ற தலைப்பின்கீழ் இராமாயண பாராயணஞ் செய்வாரெய்தும் பயனியம்பும் கவிகளும் தொகுக்கப்பட்டுள்ளன.

சடகோபரந்தாதி என்னும் ஆரும் பகுப்பினுள், கம்பரியற்றிய சடகோபரந்தாதியிலிருந்து 12 செய்யுட்கள் எடுத்துச்சேர்க்கப்பட்டுள்ளன. இவற்ருல் கம்பர்க்குச் சடகோபரிடத்தும் அவரியற்றிய திருவாய்மொழியினிடத்தும் உள்ள ஈடுபாட்டினை நன்கறியலாம்

ஸ்ரீ. **கோபாலாசாரியாரவர்கள் இயற்றிய கம்பர்சீர்ப்பதிகமும்**, திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கத் தலைவர் ஸ்ரீ. R. **கேசவையங்காரவர்கள் இயற்றிய கம்பரிருபதும்** முறையே 7, 8-ஆம் பகுப்புக்களாக அமைந்துள்ளன.

இம்மாலை, விரிந்து பரந்து ஆழ்ந்துள்ள கம்பர் காவியமுழுதும் முறையே கற்க அவகாசமில்லாதவர்க்கும், சிறுபொழுதில் அவர் தம் கவிச்சுவைநுகர்தற் குதவுவது.

இம்மாலைக்கு இதன் பதிப்பாசிரியரெழுதிய முகவுரையுள், திருவாய்மொழி திருக்குறள் முதலிய திவ்யப்ரபந்தங்களின் கருத்துக்களும் சொற்களும் சொற்ருெடர்களும் கம்பர்காவியத்துப் பயின்றுள்ளமை விரிக்கப்பட்டிருக்கிறது.

கல்வியிற்பெரிய கம்பரைப் பாராட்டியொழுகும் கடப்பாடு தமிழரெல்லார்க்கும் உரியதே. அவரை யார் யார் எத்தனை யெத்தனைவகையாற் பாராட்டினும் தகும், மிகையாகாது. அம்முறையில், **திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கக் காரியதரிசியவர்கள் இம்மாலையை வெளியிட்டுக் கம்பர் திறத்துத் தமக்குள்ள அன்பினை ஒருவாறு வெளியிட்டுள்ளார்.**

இது வேண்டுவோர், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம், 42–A, வெங்கடரங்கம்பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி, சென்னை : என்ற விலாசத்திற் பெறலாம்.

——(:)——